# மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின்

# கம்யூனிஸ்ட் சமூகம்

B10

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

ML 22

மார்க்ஸ்
எங்கெல்ஸ்
லெனின்

# கம்யூனிஸ்ட் சமூகம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்கள்: ரா. கிருஷ்ணையா,
நா. தர்மராஜன், எம். ஏ.,
கே. ராமநாதன்

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1983

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭЛ $\frac{0101010000—010102000—277}{014(01)—83}$ 368—83

## பொருளடக்கம்

### கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்

கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ். **புனிதக் குடும்பம்** என்ற நூலிலிருந்து . . . . . . 9

பிரெடெரிக் எங்கெல்ஸ். **எல்பெர்பெல்ட் சொற்பொழிவுகளிலிருந்து** . . . . . . . . 11

பிரெடெரிக் எங்கெல்ஸ். **கம்யூனிசத்தின் கொள்கைகள்** என்ற நூலிலிருந்து. . . . . 24

கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ். **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** என்ற நூலிலிருந்து. . . . . . . . . . . . . . 30

கார்ல் மார்க்ஸ். **கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** என்ற நூலிலிருந்து. . . . . . 46

பிரெடெரிக் எங்கெல்ஸ். **டூரிங்குக்கு மறுப்பு** என்ற நூலிலிருந்து. . . . . . . . . . . 60

பிரெடெரிக் எங்கெல்ஸ். **இயற்கையின் இயக்க இயல்** என்ற நூலிலிருந்து. . . . . . . . 81

பிரெடெரிக் எங்கெல்ஸ். **பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை** என்ற நூலிலிருந்து . . . . . . . . . . . . . 84

## கடிதங்களிலிருந்து

நியூயார்க் நகரத்திலிருந்த யோசிப் வெய்டமையருக்கு கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து. மார்ச் 5, 1852. . . . 97

வியென்னுவிலிருந்த கார்ல் காவுத்ஸ்கிக்கு பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து. பிப்ரவரி 1, 1881. . . . . 99

நியூயார்க் நகரத்திலிருந்த பிலீப் வான் பாட்டெனுக்கு பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து. ஏப்ரல் 18, 1883 . 102

பிரெஸ்லாவிலிருந்த ஓட்டோ வான் போனிக்கிற்கு பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து. ஆகஸ்டு 21, 1890 . . . . 103

## விளதீமிர் லெனின்

மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் . . . 109

கார்ல் மார்க்ஸ் என்ற கட்டுரையிலிருந்து . . 119

சுய நிர்ணயம் பற்றிய விவாதத்தைத் தொகுத்துரைத்தல் என்ற கட்டுரையிலிருந்து. . . . . . . . . . . . . . . 126

அரசும் புரட்சியும் என்ற நூலிலிருந்து . . 133

அரசு பற்றி மார்க்சியம் என்ற கட்டுரையிலிருந்து. . . . . . . . . . . . . . 163

போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? 165

தேசியப் பொருளாதார தலைமைக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை. மே 26, 1918 . . . . . . . . . . . . . . 181

மாபெரும் தொடக்கம் என்ற கட்டுரையிலிருந்து . . . . . . . . . . . . . 194

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும் என்ற கட்டுரையிலிருந்து . . . . . . . . . 209
ரு.க.க.(போ.) மாஸ்கோ நகரக் கிளையின் மாநாட்டில் சுபோத்னிக்குகளைப் பற்றி நிகழ்த்திய உரையிலிருந்து. டிசம்பர் 20, 1919. . . . . . . . . . . . 213
பழைய சமூக அமைப்பை அழிப்பதிலிருந்து புதிய சமூக அமைப்பை உருவாக்கும் வரை . . . . . . . . . . . . . 218
மாஸ்கோ-கஸான் ரயில்வேயில் முதல் சுபோத்னிக்கிலிருந்து அகில ருஷ்ய மே தின சுபோத்னிக்கு வரை . . . . . . 222
கூட்டுறவு குறித்து . . . . . . . . . . . 226
சொற்பமாயினும் சிறந்ததே நன்று . . . . 238
குறிப்புகள் . . . . . . . . . . . . . 264

கார்ல் மார்க்ஸ்
பிரெடெரிக் எங்கெல்ஸ்

## புனிதக் குடும்பம்
### என்ற நூலிலிருந்து

தொடக்க காலத்தில் மனிதனின் நற்பண்புகள், எல்லா மனிதர்களுக்கும் சம அளவில் கொடுக்கப்பட்ட அறிவு, அனுபவம், பழக்கவழக்கம், கல்வியின் சர்வவல்லமை, புறச் சூழல் மனிதன் மீது செலுத்துகிறதாக்கம், தொழி லின் மாபெரும் முக்கியத்துவம், ஆனந்தமாக இருப்பதை நியாயப்படுத்துதல் இதரவை பற்றிய பொருள்முதல் வாதத்தின்[1] போதனைகளிலிருந்து, அது கம்யூனிசத்தோடும் சோஷலிசத்தோடும் எவ்வாறு கட்டாயமாக இணைக்கப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு மிகச் சிறந்த நுண்ணறிவு தேவைப்படாது. மனிதன் தன் னுடைய அறிவு, புலனுணர்வு இதரவை அனைத்தையும் புலன்களின் உலகத்திலிருந்தும் அதிலிருந்து பெறப்பட்ட அனுபவத்திலிருந்தும் அடைகிறுனென்றுல் இனி செய்ய வேண்டியது என்னவென்றுல் அனுபவ உலகத்தை— அதில் உண்மையிலேயே மனிதப் பண்புடையவற்றை மனிதன் அனுபவிப்பதற்கும் அதனுடன் நெருக்கமேற் படுத்திக் கொள்வதற்கும், அவன் தன்னை மனிதனுக உணர்ந்து கொள்ளக் கூடிய வகையிலும்—மாற்றிய மைக்க வேண்டும். சரியான முறையில் புரிந்து கொள்ளப் பட்டால் நலன்களே எல்லா ஒழுக்க நெறிகளுக்கும் இலட் சியம் என்பதால், மனிதனின் தனிப்பட்ட நலன் மனித குலத்தின் நலனேடு பொருந்துமாறு செய்ய வேண்டும். பொருள்முதல்வாதக் கருத்தின் படி மனிதன் சுதந்திரம் இல்லாதவன் என்றுல்—அதாவது ஏதாவது ஒன்றை

ஒதுக்குகிற எதிர்மறைச் சக்தியின் மூலமாக இன்றி, தனது உண்மையான தனித்தன்மையை உறுதியாகக் காட்டு கின்ற நேரடியான சக்தியின் மூலமாகவே மனிதன் சுதந் திரம் உடையவனுகக் கருதப்படுகிருன்—குற்றங்களுக்காக, தனி மனிதனே தண்டிக்கக் கூடாது; குற்றங்களின் சமூக-விரோதப் பிறப்பிடங்கள் அழிக்கப்பட வேண்டும்; ஒவ் வொரு மனிதனுக்கும் அவனுடைய உயிராற்றலின் இன்றியமையாத வெளிப்பாட்டுக்குரிய சமூக வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். மனிதன் புறச்சூழலால் உரு வாக்கப்படுகிருன் என்ருல் அந்தப் புறச்சூழல் மனிதப் பண்புடையதாக்கப்பட வேண்டும். மனிதன் இயற்கை யாகவே கூடி வாழ்பவன் என்ருல் அவன் தன்னுடைய உண்மையான இயல்பை சமூகத்தில் மட்டுமே வளர்த்துக் கொள்ள முடியும்; அந்த இயல்பின் சக்தியை தனிப்பட்ட தனிநபரின் சக்தியால் அளக்கக் கூடாது; சமூகத்தின் சக்தியினுல் அளக்க வேண்டும்.

*1844 செப்டம்பர்—நவம்பரில்*
*எழுதப்பட்டது*

பிரெடெரிக் எங்கெல்ஸ்

## எல்பெர்பெல்ட் சொற்பொழிவுகளிலிருந்து

கம்யூனிஸ்ட் சமூகத்தில் தனிநபர்களுடைய நலன்கள் ஒன்றுக்கொன்று எதிராக இருப்பதில்லை; அதற்கு மாருக அவை இணைந்திருக்கும். அப்படிப்பட்ட சமூகத்தில் போட்டி என்பது அகற்றப்பட்டு விடுகிறது. அங்கே சில குறிப்பிட்ட வர்க்கங்களை ஒழிப்பது என்ற பிரச்சினை இனிமேல் ஏற்படாது; அது போலவே இன்றுள்ள பணக்காரர்கள், ஏழைகள் என்ற வர்க்கங்கள் நீடிப்பதும் அங்கே இருக்காது என்பது தானுகவே புலப்படும். தனிநபர் தன்னுடைய முயற்சியினுல் பணம் சேர்ப்பதை நோக்கமாகக் கொண்ட தனிப்பட்ட லாபம் என்பது வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களின் உற்பத்தி, வினியோகத்திலிருந்து மறைந்துவிட்ட உடனே, வர்த்தக நெருக்கடிகளும் தாமாகவே மறைந்துவிடும். கம்யூனிஸ்ட் சமூகத்தில் உற்பத்தி, நுகர்வு ஆகிய இரண்டையும் பற்றித் தெரிந்து கொள்வது சுலபமாக இருக்கும். ஒரு நபருடைய சராசரித் தேவைகள் என்ன என்பது நமக்குத் தெரியுமாதலால், ஒரு குறிப்பிட்ட அளவிலிருக்கும் தனி நபர்களுக்கு எவ்வளவு தேவைப்படும் என்று கணக்கிடுவது சுலபமாகும். மேலும் உற்பத்தி தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் கைகளில் இனியும் இல்லாமல், சமூகத்திலும் அதனுடைய நிர்வாக அமைப்புக்களிலுமே இருக்குமாதலால், தேவைகளுக்குத் தகுந்தாற்போல உற்பத்தியை ஒழுங்குபடுத்துவது மிகச் சாதாரண விஷயமாகும்.

இன்றைய சமூக நிலைமையின் பிரதான தீமைகள் கம்யூனிஸ்ட் அமைப்பின் கீழ் எவ்வாறு மறைந்துவிடும் என்

பதை நாம் காண முடியும். எனினும் இதை மேலும் நுணுக்கமாக ஆராய்ந்தால், அப்படிப்பட்ட சமூக அமைப்பினுல் ஏற்படக் கூடிய சாதகம்—இது மட்டுமல்லாமல்—ஏராளமான பல தீமைகளை அகற்றுவதையும் கொண்டிருக்கிறது. இத்தகைய பொருளாதாரத் தீமைகளில் சிலவற்றைப் பற்றி மட்டுமே நான் இன்று பேச விரும்புகிறேன். பொருளாதாரக் கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது, பகுத்தறிவுக்குப் புறம்பானதும் நடைமுறைக்கு எதிரானதுமான பயனில்லாததுமான ஒன்றை நம்மால் கற்பனை செய்ய முடியுமாஞல் அதுவே இன்றைய சமூக அமைப்பு என்பது உறுதியாகும். நலன்கள் ஒன்றுக்கொன்று எதிராகப் போட்டியிடுவதால் ஏராளமான அளவு உழைப்புச் சக்தி—அதனுல் சமூகம் எவ்விதத்திலும் பயனடையாத வகையில்—செலவிடப்படுகிறது; கணிசமான அளவு மூலதனம் தன்னைப் புனருற்பத்தி செய்து கொள்ளாது, அதை அவசியமில்லாமலே நாம் இழக்க நேரிடுகிறது. நாம் இதை வர்த்தக நெருக்கடிகளில் முன்பே பார்க்கிறேம்; மனிதர்கள் தம்முடைய அதிகமான உழைப்பினுல் உற்பத்தி செய்த ஏராளமான பொருள்கள் வியாபாரிகளுக்கு இழப்பு ஏற்படக் கூடிய வகையில் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதைப் பார்க்கிறேம்; அதிகமான முயற்சியின் விளைவாகத் திரட்டப்பட்ட அதிக அளவிலுள்ள மூலதனம், வர்த்தக முறிவுகளின் விளைவாக அந்த உடைமையாளர்களின் கண்களுக்கு முன்பாகவே மறைந்துவிடுவதையும் பார்க்கிறேம். எனினும் நாம் இன்றைய வர்த்தகத்தை மேலும் நுணுக்கமாக விவாதிப்போம். ஒவ்வொரு பொருளும் அதை உண்மையாகப் பயன்படுத்துகிற நுகர்பவரை அடைவதற்குள் எத்தனை கைகள் மாற வேண்டியிருக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள், நண்பர்களே! உற்பத்தி செய்பவருக்கும் நுகர்பவருக்கும் இடையே இன்று எத்தனை இடைத்தரகர்கள்—சூதாடுகிற, மோசடி செய்கிற, அவசியமில்லாத இடைத்தரகர்கள்—தங்களை பலவந்தமாக நுழைத்துக் கொள்கிறர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். வட அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பஞ்சுப் பொதியை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

அந்தப் பஞ்சுப் பொதி உற்பத்தியாளரின் கைகளிலிருந்து மிஸிஸிப்பி நதியோரத்திலுள்ள ஏதாவதொரு நகரத்திலிருக்கும் தரகரின் கைக்கு மாறி நதிவழியே நியூ ஆர்லியானுக்குக் கொண்டுபோகப்படுகிறது. இங்கே அது ஒரு வர்த்தகச் சூதாடியிடம் இரண்டாம் முறையாக விற்பனை செய்யப்படுகிறது, ஏனென்றால் அதை உற்பத்தியாளரிடமிருந்து முதலில் விலைக்கு வாங்கியவர் தரகர். அந்த வர்த்தகச் சூதாடி அதை ஒரு ஏற்றுமதியாளரிடம் மறுபடியும் விற்பனை செய்கிறார். பஞ்சுப் பொதி இப்பொழுது லிவர்பூல் நகரத்துக்கு அனுப்பப்படுகிறது. அங்கே மறுபடியும் பேராசை மிக்க வர்த்தகச் சூதாடி ஒருவர் தம்முடைய கைகளை நீட்டி அதைக் கைப்பற்றுகிறார். இவர் அதை மற்றொரு பங்குத் தரகரிடம் விற்பனை செய்கிறார். இந்தத் தரகர் அதை ஒரு ஜெர்மானிய நிறுவனத்துக்காக விலைக்கு வாங்குவதாக வைத்துக் கொள்வோம். எனவே அந்தப் பொதி இப்பொழுது இராட்டர்டாமுக்கு வந்து சேருகிறது. பிறகு ரைன் நதி வழியாக இன்னும் ஒரு டஜன் தரகர்கள் மூலமாக—ஒவ்வொரு இடத்திலும் அது ஒரு டஜன் தடவைகள் இறக்கி வைக்கப்பட்டு ஏற்றியனுப்பப்படுகிறது—அதன் பிறகு மட்டுமே உற்பத்தியாளரிடம் வந்து சேர்கிறது. அங்கும் அது நுகர்வோரிடம் வந்து சேரவில்லை. உற்பத்தியாளர் முதலில் இதை நுகர்வுப் பொருளாக, நூலாக மாற்றுகிறார். அவர் நூலை ஒரு நெசவாளியிடம் விற்பனை செய்கிறார்; அவர் தான் நெசவு செய்த துணியை துணியில் வர்ணமும் வரை படமும் அச்சிடுபவரிடம் விற்பனை செய்கிறார். அவர் தன்னுடைய வேலை முடிந்தபிறகு மொத்த வியாபாரியிடம் விற்பனை செய்ய, அவர் சில்லறை வியாபாரிக்குக் கொடுக்கிறார். கடைசியில் அவர் அந்தப் பண்டத்தை நுகர்வோரிடம் விற்பனை செய்கிறார். உற்பத்தி செய்பவருக்கும் நுகர்பவருக்கும் இடையில் இலட்சக் கணக்கில் மோசடிக்காரர்கள், வர்த்தகச் சூதாடிகள், தரகர்கள், ஏற்றுமதியாளர்கள், பங்குத் தரகர்கள், வாங்கியனுப்புகிற தரகர்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் என்ற இடைத்தரகர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் உண்மையில் பண்டத்துக்குத்

தருவது ஒன்றுமில்லை; ஆனால் அவர்கள் வாழ்வதற்கும் லாபம் அடைவதற்கும் ஆசைப்படுகிறார்கள்—சராசரியாகப் பார்த்தால் அவர்கள் அதை அடைந்துவிடுகிறார்கள்; இல்லையென்றால் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாது. நண்பர்களே! ஒரு பஞ்சுப் பொதியை அமெரிக்காவிலிருந்து ஜெர்மனிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் அதைக் கொண்டு உற்பத்தி செய்த பொருளை உண்மையான நுகர்வோனின் கைகளில் சேர்ப்பதற்கும், அதைப் பத்துத் தடவைகள் விற்பனை செய்து, நூறு தடவைகள் ஒரு கிட்டங்கியிலிருந்து மற்றொரு கிட்டங்கிக்கு ஏற்றுவதும் இறக்குவதும் வண்டியில் அனுப்புவதுமான சிக்கலான காரியத்தைத் தவிர வேறு சுலபமான, சிக்கனமான வழி கிடையாதா? பல்வேறு நலன்கள் வேறுபட்டிருப்பதால் உழைப்புச் சக்தி பன்மடங்கு வீணாகிப் போவதற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் அல்லவா? பகுத்தறிவுக்குப் பொருந்துகிற முறையில் அமைக்கப்பட்ட சமூகத்தில் இந்த அளவுக்குச் சிக்கலான போக்குவரத்து என்ற பேச்சுக்கு இடமிருக்காது. நமது உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு தனிப்பட்ட குடியமைப்புக்குப் பஞ்சு அல்லது பஞ்சினால் நெய்யப்பட்ட துணிகள் எவ்வளவு தேவைப்படும் என்பதைத் தெரிந்து கொள்வது எவ்வளவு சுலபமானதோ, அது போலவே நாட்டில் இருக்கிற எல்லா நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் எவ்வளவு தேவைப்படும் என்பதை நிர்ணயிப்பது மத்திய அதிகாரத்துக்குச் சுலபமானதாகும். இந்தப் புள்ளிவிவரங்களை ஒரு தடவை கணக்கிட்டுவிட்டால்—அதை ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில் சுலபமாகக் கணக்கிட்டுவிடலாம்—அதிகரிக்கும் மக்கள் தொகையின் விகிதாச்சார அளவில் சராசரி வருடாந்தர நுகர்வு மட்டுமே மாற்றத்துக்குள்ளாகும். எனவே ஒவ்வொரு குறிப்பிட்ட பொருளும் மக்களுக்கு எவ்வளவு தேவைப்படும் என்பதை உரிய நேரத்தில் நிர்ணயிப்பது சுலபமாகிவிடும். அந்தப் பொருள் உற்பத்தியாகும் தோற்றுவாயிலிருந்தே தேவைப்படுகிற பொருளின் மொத்த அளவுக்கும் நேரடியாகவே அனுப்பாணை கொடுக்க முடியும். இடைத்தரகர்கள் இல்லா

மலேயே சரக்கு வருகிற பாதையின் தன்மையினுல் உண்மையில் தேவைப்படுவதற்கும் அதிகமான இறக்கிவைப்பதும் காலதாமதமும் இல்லாமல், அதாவது உழைப்புச் சக்தியை மிகப் பெரும் அளவுக்குச் சேமித்து, அதைக் கொள்முதல் செய்ய முடியும்; வர்த்தகச் சூதாடிகளுக்கும், பெரிதும் சிறிதுமான வணிகர்களுக்கும் அவர்களுடைய ஆதாயப் பங்கைத் தர வேண்டிய அவசியமில்லை. ஆனுல் இதோடு முடிந்துவிடவில்லை. இந்த முறையின் மூலமாக இடைத்தரகர்களால் சமூகத்துக்குத் தீங்கு ஏற்படாமல் செய்வது மட்டுமல்லாது, அவர்கள் உண்மையிலேயே சமூகத்துக்கு உபயோகமுள்ளவர்களாகச் செய்யப்படுகிறுர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பாதகமான வகையில் இப்பொழுது செய்துகொண்டிருக்கும் வேலையை எவ்வளவு மேன்மையானதாகச் சொல்லிக் கொண்ட போதிலும் அது மிகையானதுதான். எனினும் அதுதான் அவர்களுக்கு ஜீவனேபாயமாக இருக்கிறது, பலருக்கு அது அதிகமான செல்வத்தையும் திரட்டிக் கொடுத்திருக்கிறது. அவர்கள் இப்பொழுது பொது நன்மைக்கு நேரடியாகக் குந்தகம் விளைவித்த போதிலும், அவர்கள் பயனுள்ள உழைப்பில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் அப்பொழுது அவர்களுக்குக் கிடைக்கும். மனித சமூகத்தில் பெயரளவில் மட்டும் உறுப்பினர்களாக, போலியான உறுப்பினர்களாக இல்லாமல் உண்மையான உறுப்பினர்கள், சமூகத்தின் மொத்த நடவடிக்கையிலும் பங்குகொள்பவர்கள் என்பதை நிரூபிக்கக் கூடிய வகையில் ஒரு வேலையை மேற்கொள்வதற்கான சுதந்திரம் அப்பொழுது அவர்களுக்குக் கிடைக்கும்.

இன்றைய சமூகம் தனிப்பட்ட மனிதருக்கும் மற்ற ஒவ்வொருவருக்கும் இடையே பகைமையை ஏற்படுத்துவதால் எல்லோருக்கும் எதிராக எல்லோரும் என்ற சமூக யுத்தத்தை உற்பத்தி செய்கிறது. இது சில தனிப்பட்ட உதாரணங்களில்—குறிப்பாகக் கல்வியறிவில்லாத மக்களிடம்—ஒரு மூர்க்கமான, காட்டுமிராண்டித்தனமான பலாத்கார வடிவத்தை, அதாவது குற்றம் என்ற வடிவத்தைத் தவிர்க்க முடியாத வகையில் அடைகிறது. குற்றங்கள், நேரடியான பலாத்கார நடவடிக்கைகள்

ஆகியவற்றிலிருந்து சமூகம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிக விரிவான, மிகவும் சிக்கலான நிர்வாக அமைப்பும் நீதி இயல் அமைப்பும் தேவைப்படுகின்றன; இந்த அமைப்புக்களுக்கு அதிகமான எண்ணிக்கையுள்ள உழைக்கும் அணி தேவைப்படுகிறது. கம்யூனிஸ்ட் சமூகத்தில் இந்த நிர்வாக அமைப்பு சமூகத்தின் தனிப்பட்ட அம்சங்களை ஒழுங்குபடுத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல், அதன் எல்லா நடவடிக்கைகளையும் அதன் எல்லா அம்சங்களிலும் நிர்வகிப்பதால் இந்தக் காரணத்துக்காகவே— இந்தக் காரணம் விநோதமாகத் தோன்றினாலும்—இந்த நிர்வாக அமைப்பு மிகவும் எளிமையாக்கப்பட்டுவிடும். தனிப்பட்ட மனிதனுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளை நாம் அகற்றிவிடுகிறோம்; சமூக யுத்தத்துக்கு பதிலாக சமூக அமைதியை நாம் ஏற்படுத்துகிறோம்; குற்றத்தின் மூலவேரை நாம் வெட்டிவிடுகிறோம். இவற்றின் மூலமாக நிர்வாக, நீதி இயல் அமைப்புகளின் நடவடிக்கையில் பெரும்பகுதியை, இன்றைய நடவடிக்கைகளில் மிகப் பெரும் பகுதியை மிகையானதாகச் செய்துவிடுகிறோம். இப்பொழுது கூட திட்டமிட்டுச் செய்யப்படுகிற குற்றங்களோடு, நலவுரிமைகளை அடிப்படையாகக் கொண்ட குற்றங்களோடு ஒப்பிடுகிறபொழுது உணர்ச்சி வேகத்தில் செய்யப்படும் குற்றங்கள் எண்ணிக்கையில் மென்மேலும் குறைந்து வருகின்றன; மனிதர்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்து வருகின்றன; சொத்துக்களை அடைவதற்காக நடைபெறும் குற்றங்கள் அதிகரித்துவருகின்றன. யுத்த தோரணையில் இன்றைய சமூகம் இருந்தாலும் கூட நாகரிக முன்னேற்றம் பலாத்கார உணர்ச்சிகள் வெடிக்காதபடி நிதானத்தை ஏற்படுத்துகிறது. எனவே சமாதான பூர்வமான சமூகத்தில், கம்யூனிஸ்ட் சமூகத்தில் இது மேலும் எவ்வளவு அதிகமாக இருக்கும்! ஒருவருடைய இயற்கையான தேவைகளையும் ஆத்மிக உந்துதல்களையும் பூர்த்தி செய்யத் தேவையானது ஒருவருக்கு எங்கே கிடைக்குமோ, எங்கே சமூக வேறுபாடுகளும் அந்தஸ்து வரிசைகளும் மறைந்து விடுகின்றனவோ, அங்கே சொத்துக்களுக்காக நடைபெறும் குற்றங்கள் தாமாகவே மறைந்து விடுகின்றன.

கிரிமினல் குற்றங்களை விசாரணை செய்கிற நீதி தானாகவே முடிந்து விடுகிறது. சொத்து உறவுகளில் அல்லது குறைந்த பட்சம் சமூக யுத்தம் என்ற நிலைமையிலிருந்து உருவாகின்ற அப்படிப்பட்ட உறவுகளில் வேரூன்றியிருக்கும் சிவில் குற்றங்களை விசாரணை செய்கிற நீதியும் அது போலவே மறைந்து விடுகிறது. இப்பொழுது பொதுவாகவே இருக்கின்ற பகைமையுணர்ச்சியின் இயற்கையான விளைவாக இருக்கின்ற மோதல்கள் அப்பொழுது அபூர்வமாக, விதிவிலக்காக மட்டுமே இருக்க முடியும். இத்தகைய மோதல்களை மத்தியஸ்தர்கள் சுலபமாகத் தீர்த்து விடுவார்கள். இதைப் போலவே இன்றுள்ள நிர்வாக அமைப்புக்களின் நடவடிக்கைகளும் இந்தத் தொடர்ச்சியான சமூக யுத்தத்திலிருந்து தோன்றுகின்றன—இந்த யுத்தம் நேரடியாக இல்லாதபடி மறைவாகவும் இருக்க வேண்டும்; வெளிப்படையான பலாத்காரமாக, குற்றங்களைச் செய்வதாக வெடித்து விடக் கூடாது என்று பார்த்துக் கொள்வதைத் தவிர போலீசும் நிர்வாக அமைப்பும் வேறு ஒரு வேலையையும் செய்வது இல்லை. யுத்தத்தை சில எல்லைகளுக்குள் கட்டுப்படுத்த முயற்சிப்பதைக் காட்டிலும் சமாதானத்தை ஏற்படுத்துவது மிகவும் சுலபமானது என்பதைப் போலவே போட்டியை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை நிர்வகிப்பதைக் காட்டிலும் கம்யூனிஸ்ட் சமூகத்தை நிர்வகிப்பது மிகவும் சுலபமாகும். மனிதர்கள் தங்களுடைய நலன்களைப் பொது அமைதியில், பொதுப் பாதுகாப்பில், பொது நன்மையில் தேடிப்பெற வேண்டும்; அதன் மூலமாக, போலீஸ், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றை முடிந்தவரையிலும் அவசியம் இல்லாததாகச் செய்ய வேண்டும் என்று நாகரிகம் நமக்கு முன்பே கற்றுக் கொடுத்திருக்கிறதென்றால், ஒன்றுபட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில், பொது நன்மை என்பது ஒவ்வொரு தனி நபருடைய நன்மையிலிருந்தும் இனியும் வேறுபட்டிராத ஒரு சமூகத்தில், இவை இன்னும் எவ்வளவு அதிகமாக அவசியமில்லாததாகிவிடும்! சமூக அமைப்பை மீறிக் கொண்டு இன்றைய நிலையிலும் இவ்வாறிருக்கும் பொழுது, அது சமூக அமைப்புக்களால்

இனியும் ஊறு செய்யப்படாமல், உதவி செய்யப்படுகிற பொழுது, எவ்வளவு அதிகமாக இருக்கும்! இதைப் பொறுத்தவரை, இன்றைய சமூக நிலைமையின் காரணமாக சமூகம் இழந்திருக்கிற உழைப்பாளர் அணியின் ஒரு பகுதியின் மூலமாக உழைப்பாளர் அணி கணிசமாக அதிகரிப்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

இன்றைய சமூகத்துக்கு மிகவும் அதிகமான செலவை ஏற்படுத்தும் அமைப்புக்களில் நிரந்தரமான இராணுவம்—அதை இன்றைய சமூகத்தால் ஒழிக்க முடியாது—ஒன்றாகும்; இந்த இராணுவத்தினால் நாடு தன்னுடைய மக்கள் தொகையில் மிகச் சுறுசுறுப்பான, வலிமையான, மிகவும் பயனுள்ள பகுதியை இழந்துவிடுகிறது; அந்தப் பகுதி ஆக்கவளமில்லாது போய்விடுவதால் அதற்கு உணவளித்துப் பாதுகாக்குமாறு நாடு நிர்ப்பந்திக்கப்படுகிறது. நிரந்தரமான இராணுவத்தை வைத்திருப்பதால் ஏற்படும் செலவு எவ்வளவு என்பது நமது அரசு வரவு-செலவு கணக்கின் மூலம் தெரியவரும்: வருடத்துக்கு இருபத்து நான்கு மில்லியன் செலவழிக்கப்படுகிறது; நாட்டிலேயே அதிகமான வலுவுள்ள இரண்டு லட்சம் உருண்டு திரண்ட கரங்கள் உற்பத்தி நிகழ்விலிருந்து எடுக்கப்படுகின்றன. கம்யூனிஸ்ட் சமூகத்தில் ஒரு நிரந்தரமான இராணுவம் தேவையென்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள். எதற்காக வேண்டும்? நாட்டிலே சமாதானம் ஏற்படுத்துவதற்காகவா? நாம் முன்னர் பார்த்தது போல, உள்நாட்டு அமைதியைக் குலைக்க வேண்டும் என்று ஒருவருக்கும் தோன்றாது. நலவுரிமைகள் ஒன்றுக்கொன்று எதிர்ப்பாக இருப்பதன் விளைவாகத்தான் புரட்சிகளைப் பற்றிய பயம் ஏற்படுகிறது; எல்லோருடைய நலவுரிமைகளும் ஒன்று சேர்ந்திருக்கும் பொழுது அத்தகைய அச்சங்களுக்கே இடமில்லை.—ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்காகவா? ஆனால் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பிப்பதென்ற எண்ணம் ஒரு கம்யூனிஸ்ட் சமூகத்துக்கு எப்படி ஏற்படும்? யுத்தத்தின் மூலம் மனிதர்களையும் மூலதனத்தையும் இழக்க வேண்டியிருக்கும். அதிகபட்சமாக ஏதேனும் கிடைக்குமானால், கீழ்ப்படியாத இரண்டொரு மாநிலங்களைக் கைப்பற்றலாம். அதன் விளைவாகச் சமூக ஒழுங்கு

மேலும் சீர்குலைக்கப்படும். — தற்காப்பு யுத்தத்துக் காகவா? அதற்கு ஒரு நிரந்தரமான இராணுவம் அவசிய மில்லை. ஏனென்றால் சமூகத்தின் ஆரோக்கிய மிக்க ஒவ் வொரு உறுப்பினருக்கும், அவருடைய மற்ற வேலைகளோடு சேர்த்தே, நாட்டின் பாதுகாப்புக்குத் தேவைப்படும் அளவுக்கு உண்மையான பயிற்சி—பாசறையில் ஆயுதப் பயிற்சி தருவது போன்றதல்ல—கொடுப்பது சுலபமாக இருக்கும். அன்பர்களே! இதை எண்ணிப் பாருங்கள். ஒரு யுத்தம் ஏற்படுமானால்—அது **கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நாடு களுக்கு எதிராக மட்டுமே** நடத்தப்படுகிற யுத்தமாக இருக்கும்—அந்த சமூகத்தின் உறுப்பினர் பாதுகாப்பதற் கென்று **உண்மையான** தந்தைநாடு, **உண்மையான** வீடு, வாசல் இருக்கும்; அவர் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு உற்சாகத்தோடும் வீரத்தோடும் போரிடும் பொழுது, நவீன இராணுவத்தின் இயந்திர ரீதியாகப் பயிற்சி கொடுக்கப்பட்ட படைவீரர்கள் பதரைப் போல சிதறிப் போய்விடுவார்கள். 1792 முதல் 1799 முடிய உள்ள ஆண்டுகளின் போது, புரட்சிகரமான இராணுவங்கள் தங்களுடைய உற்சாகத்தால் எத்தகைய அற்புதங்களைச் சாதித்தன என்பதை நினைத்துப் பாருங்கள்.[2] இவைகூட ஒரு **கற்பனைக் கருத்துக்காக, தந்தையர் நாடு என்ற போலித் தோற்றத்துக்காகவே** போரிட்டன என்பதை மனதில் கொண்டால், கற்பனைக்காக அன்றி உறுதியான யதார்த்தத்துக்காகப் போரிடுகிற இராணுவம் எவ்வளவு வலிமைமிக்கதாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே நாகரிகமடைந்த நாடுகள் இராணுவத் தின் காரணமாக இப்போது இழந்து விடுகிற ஏராளமான உழைப்புச் சக்தி கம்யூனிஸ்ட் சமூகத்தில் உழைக்கும் அணிக்குத் திரும்பக் கிடைக்கும்; அவர்கள் தாங்கள் நுகர்கிற அளவுக்கு உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லா மல் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருள் களைத் தவிர ஏராளமான பல பொருள்களை உற்பத்தி செய்து பொதுப் பண்டகசாலைகளுக்குக் கொடுப்பதற்கு அவர்களால் இயலும்.

நமது சமூகத்தில் பணக்காரர்கள் தங்களுடைய சமூக அந்தஸ்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதில்

உழைப்புச் சக்தி இன்னும் மோசமான அளவில் வீணுக்கப் படுவதை நாம் காண முடியும். பகட்டாக அலங் கரித்துக் காட்சியளிக்க வேண்டும் என்ற ஆசையிலிருந்து மட்டுமே ஏற்படுகிற அதிகமான உழைப்புச் சக்தியைக் கொண்டுள்ள பயனற்ற, நகைப்புக்குரிய எல்லா வசதிப் பொருள்களேயும் பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவ தில்லே. அன்பர்களே! ஒரு பணக்காரரின் மாளிகைக் குள், அதனுள்ளே இருக்கிற தனியான புனிதமான அறைக்குள் நுழையுங்கள். அங்கே ஒரு தனி நபருக்குப் பணிவிடை செய்வதற்காகப் பலர் வேலேயில்லாமல் நின்று கொண்டு—அல்லது எவ்வளவு சிறப்பானதாகக் கருதிய போதிலும் அது தன்னுடைய நான்கு சுவர்களுக்குள்ளாகத் தன்னே தனிமைப்படுத்திக் கொள்கிற ஒரு தனிமனிதனுக்குச் சேவை செய்வதில்—நேரத்தைப் போக்கிக் கொண்டிருப்பதையும் நினேத்துப் பாருங்கள்! இது உழைப்புச் சக்தியை மிகவும் அறிவில்லாத முறையில் வீணுக்குவதா இல்லேயா என்று சொல்லுங்கள். பணிப் பெண்கள், சமையற்காரர்கள், பணியாட்கள், வண்டி ஓட்டுபவர்கள், வீட்டு வேலேக்காரர்கள், தோட்ட வேலேக் காரர்கள்—இன்னும் எந்தப் பெயரை வேண்டுமாஞலும் சொல்லிக் கொள்ளட்டும்—அவர்கள் உண்மையாக என்ன செய்கிருர்கள்? அவர்கள் தங்களுடைய எசமானர்களின் வாழ்க்கைகளே **உண்மையிலேயே** மகிழ்ச்சியுண்டாக்குவது, அவர்களுடைய உள்ளார்ந்த திறமைகளேயும், இயல்பான ஆற்றலேயும் சுதந்திரமான முறையில் வளர்த்துக் கொள்ள உதவுவது ஆகியவற்றுக்குச் செலவிடும் நேரம் ஒரு நாளில் **எத்தனே விஞடிகள்** கணங்கள்? வண்டிக்குப் பின்னுல் நின்று கொண்டிருப்பது, எசமானர்களின் திடீர் ஆசைகள் ஒவ்வொன்றையும் திருப்தி செய்வது, அவர்களுடைய நாய்க்குட்டிகளேத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பது, இன்னும் இவை போன்ற பொருளற்ற காரியங்களே —நம் சமூக உறவுகள் மோசமான முறையில் அமைக்கப் பட்டிருப்பதனுல் மட்டுமே இவை ஏற்படுகின்றன— நிறைவேற்றுவதில் ஒரு நாளில் **எத்தனே மணி** நேரம் செலவிடுகிருர்கள்? பகுத்தறிவுக்குப் பொருத்தமான வகையில் அமைக்கப்பட்ட சமூகத்தில் பணக்காரர்களின்

திடீர் ஆசைகளைத் திருப்தி செய்ய வேண்டிய அவசிய மில்லாமலும் தாங்களும் அத்தகைய ஆசைகளைப் பெரு மலும் ஒவ்வொருவரும் வாழக் கூடிய வழி ஏற்படும். இன்று வசதிப் பொருள்களைத் தயாரிப்பதில் வீணுக்கப்படு கிற உழைப்புச் சக்தியானது அத்தகைய சமூகத்தில் இயற் கையாகவே ஒவ்வொருடைய நன்மைக்காகவும் அந்த சமூகத்தின் சொந்த நன்மைக்காகவும் செலவிடப்படும்.

நமது இன்றைய சமூகத்தில் நிலவுகின்ற போட்டி முறையினுல் ஏற்படுகிற நேரடியான விளைவு உழைப்புச் சக்தி மேலும் வீணுவதே. ஏனென்ருல் இந்தப் போட்டி வேலை செய்யத் தயாராகவுள்ள, ஆனுல் ஒரு வேலையும் கிடைக்காத வகையற்ற தொழிலாளர்களை ஏராளமான எண்ணிக்கையில் ஏற்படுத்துகிறது. சமூகம் உழைக்கும் அணியை உண்மையான வகையில் பயன்படுத்திக் கொள் வது பற்றி கவனிக்கக் கூடிய வகையில் எவ்விதத்திலும் அமைக்கப்படாததால், ஒவ்வொரு தனிநபரும் தனக்கு லாபம் கிடைக்கக் கூடிய வழியைத் தேடிக்கொள்ளுமாறு விடப்படுவதால், உண்மையாக அல்லது பார்வைக்கு மட் டும் பயனுள்ள வேலை பங்கிட்டுத்தரப்படுகிற பொழுது அதிகமான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களுக்கு ஒரு வேலையும் கிடைக்கர்து போவது மிகவும் இயற்கையானதே. மேலும் இந்த மூர்க்கத்தனமான போட்டி ஒவ்வொருவரை யும் தன்னுடைய முழு சக்தியையும் தீவிரமாகப் பயன் படுத்துமாறு, சாதகமான எல்லா வழிகளையும் கையாளு மாறு அதிக விலையுள்ள உழைப்புக்குப் பதிலாகக் குறைந்த விலையுள்ள உழைப்பைப் பயன்படுத்துமாறு—நாகரிக முன்னேற்றம் இதற்கு மேலும் மேலும் அதிகமான வாய்ப் புக்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது—நிர்ப்பந்திப்பதால், வேறு வார்த்தைகளில் சொல்வதென்ருல், ஒவ்வொருவரும் மற்றவர்களை வகையற்றவராகச் செய்வதற்கு, மற்ற வர்களின் உழைப்பை ஏதாவதொரு வழியில் அகற்று வதற்குப் பாடுபட வேண்டியிருப்பதால், இது மேலும் நிச்சயமாக நடக்கும். ஒவ்வொரு நாகரிக சமூகத்திலும் வேலை செய்வதற்குத் தயாராகவுள்ள ஆனுல் வேலை கிடைக்காதவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் இருக் கிருர்கள்; அவர்களுடைய எண்ணிக்கை சாதாரணமாகச்

சொல்லப்படுவதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும். எனவே இவர்கள் ஏதாவதொரு வழியில் தங்களைத் தவறுகப் பயன்படுத்துவதை, பிச்சையெடுப்பதை, தெருக்களைக் கூட்டுவதை, தெருமுனைகளில் நின்று கொண்டிருப்பதை, ஏதாவது சில்லறை வேலைகளைச் செய்து தங்கள் உடலில் உயிரை மட்டுமே ஒட்டிவைத்துக் கொண்டிருப்பதை, பலவிதமான சாதாரணப் பொருள்களை விலை கூவி விற்பனை செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அல்லது இன்று மாலையில் நாம் பார்த்த ஏழைப் பெண்களைப் போல கையில் ஒரு வாத்தியத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு இடமாகச் சென்று, பணத்துக்காக ஆடிப் பாடி ஏதோ சில சில்லறைக் காசுகளுக்காக எல்லா வகையான வெட்கமற்ற பேச்சுக்களையும் கேட்டுக் கொள்வதும், அவமானமுண்டாக்கும் தூண்டுதல்கள் ஒவ்வொன்றையும் சகித்துக் கொள்வதுமாக இருக்கிறார்கள். இவர்களில் எத்தனை பேர்கள் கடைசியாக விபசாரப் படுகுழியிலே விழுந்து அழிந்து போகிறார்கள்! அன்பர்களே! ஏதாவதொரு வழியில் விபசாரத்திலே ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லாத இந்த வகையற்றவர்களின் எண்ணிக்கை ஏராளமாகும். நமது ஏழைகள் நிவாரண இலாகாவின் அதிகாரிகள் இதைப் பற்றி உங்களிடம் இன்னும் அதிகமாகச் சொல்ல முடியும். எனினும் இவர்களால் எந்தப் பயனும் இல்லை என்றாலும் கூட, சமூகம் ஏதாவதொரு வழியில் இவர்களுக்கு உணவு கொடுக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். இவர்கள் வாழ்வதற்கான செலவைச் சமூகம் ஏற்றுக்கொள்ளுமானால், வேலையில்லாதவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருளை கௌரவமாகச் சம்பாதிப்பதற்குரிய வழியைச் சமூகம் காட்ட வேண்டும். ஆனால் இன்றுள்ள போட்டி முறைச் சமூகத்தால் இதைச் செய்ய முடியாது.

அன்பர்களே! நீங்கள் இவற்றைப் பற்றிச் சிந்தித்தால்—நமது இன்றைய சமூகம் அதனுடைய உழைப்பு அணியை எப்படி வீணாக்குகிறது என்பதற்கு மேலும் பல உதாரணங்களை நான் கொடுக்க முடியும்—இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தால் மனித சமூகம் அபரிமிதமான உற்பத்திச் சக்திகளைத் தன் கையில் வைத்திருக்கிறது;

அவற்றைப் பகுத்தறிவுக்கேற்ற வகையில் திருத்திய மைத்து, வினியோகத்தை ஒழுங்குபடுத்திவிட்டால், எல்லோருக்கும் மிகவும் அதிகமான நன்மை கிடைக்கக் கூடிய வகையில் அது பயன்பட முடியும் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். சமூக நடவடிக்கைகளை நியாயமான முறையில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பொழுது, தனிநபர்கள் வேறு எந்த விதமான நடவடிக்கையிலும் ஈடுபட முடியாத அளவுக்கு அதிகமான உழைப்புச் சுமையைத் தாங்க வேண்டியிருக்கும் என்ற அச்சம் எந்த அளவுக்கு ஆதாரமற்றது என்பதைப் பற்றி நீங்களே இதிலிருந்து முடிவு செய்யலாம். இதற்கு மாறாக, இப்படிப்பட்ட ஒரு அமைப்பு ஏற்பட்டால் ஒரு தனிநபரின் இப்போதைய உழைப்பு நேரம், இதுவரை உபயோகப் படுத்தப்படாதிருக்கும் அல்லது பயனில்லாத வகையில் உபயோகப்படுத்தப்படுகின்ற உழைப்பைப் பயன்படுத்தி பாதியாகக் குறைத்து விடலாம் என்று கூற முடியும்.

இப்பொழுது வீணாகின்ற உழைப்புச் சக்தியைப் பயன் படுத்திக் கொள்வதன் மூலமாக பல நன்மைகள் விளையும் என்று கம்யூனிஸ்டு அமைப்பு சொல்கிறது. எனினும் இதுவே மிக முக்கியமானதல்ல. தனிப்பட்ட உழைப்புச் சக்திகளை சமூக சக்தியாக, கூட்டுச் சக்தியாக இணைப்பதிலும், இதுவரை ஒன்றையொன்று எதிர்த்து நின்ற சக்திகளை ஒன்று சேர்ப்பதும், அதை அடிப்படையாகக் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதிலேதான் உழைப்புச் சக்தியின் மிக அதிகமான சேமிப்பு அடங்கியிருக்கிறது.

*1845 பிப்ரவரி 8ந் தேதியன்று*
*நிகழ்த்திய சொற்பொழிவு*

## கம்யூனிசத்தின் கொள்கைகள்
### என்ற நூலிலிருந்து

**கேள்வி 14:** இந்தப் புதிய சமூக அமைப்பு எப்படிப் பட்டதாக இருக்கும்?

**பதில்:** எல்லாவற்றுக்கும் மேலாக, பொதுவாக உற்பத்தியின் எல்லாப் பிரிவுகளையும், தொழில்களை நடத்துவதையும் ஒருவரோடொருவர் போட்டி போடுகின்ற தனி நபர்களின் கைகளிலிருந்து எடுத்து விட வேண்டியிருக்கும். அதற்குப் பதிலாக, உற்பத்தியின் எல்லாப் பிரிவுகளும் மொத்தத்தில் சமூகத்தால்,—அதாவது ஒரு குறிப்பிட்ட சமூகத் திட்டத்தின்படி, சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் பங்கு கொள்ளும் வகையில் சமூக நன்மைக்காக—நடத்தப்படுவதை உறுதிப்படுத்தும். எனவே அது போட்டி போடுகிற முறையை ஒழித்து அதனிடத்தில் ஒன்றுகூடிப் பாடுபடுகிற முறையை ஏற்படுத்தும். தொழிற்சாலைகளைத் தனிநபர்கள் நடத்துகிற பொழுது அதன் அவசியமான விளைவாகத் தனிச் சொத்துரிமை ஏற்பட்டபடியால், போட்டிமுறை என்பது ஒவ்வொரு தொழிலின் தனிப்பட்ட உரிமையாளரும் தன்னுடைய தொழிலை நடத்துகிற முறையைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதாலும், தனிச் சொத்துரிமையைத் தொழில்களைத் தனிப்பட்டவர்கள் நடத்துவதிலிருந்தும் அதன் போட்டியிலிருந்தும் பிரிப்பதென்பது முடியாது. எனவே தனிச் சொத்துரிமையும் ஒழிக்கப்பட்டாக வேண்டும்; அதற்குப் பதிலாக எல்லா உற்பத்திக் கருவிகளையும் பொதுமுறையில் உபயோகித்தலும், எல்லா உற்பத்திகளையும் பொது

வான உடன்பாட்டின் அடிப்படையில் விநியோகித்தலும் அல்லது பொதுச் சொத்து எனப்படுவதும் ஏற்படும். தொழில் வளர்ச்சியிலே தவிர்க்க முடியாத வகையில் தோன்றிய சமூக அமைப்பு முழுமையுமே மாற்றமடைவதன் குறிப்பிடத்தக்க, செறிவான சாரம் தனிச் சொத்துரிமையை ஒழிப்பதாகும். எனவே கம்யூனிஸ்டுகள் இதைத் தங்களுடைய முக்கியமான கோரிக்கையாக முன்வைப்பது சரியானதாகும்.

**கேள்வி 20:** தனிச் சொத்துரிமை கடைசியில் ஒழிக்கப்படும் பொழுது எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும்?

**பதில்:** எல்லா உற்பத்திச் சக்திகளையும் செய்தித் தொடர்புச் சாதனங்களையும் அவற்றின் உபயோகத்தையும், பொருள்களின் பரிவர்த்தனையையும் விநியோகத்தையும் தனிப்பட்ட முதலாளிகளின் கைகளிலிருந்து எடுத்து, இருக்கின்ற சாதனங்களுக்கும் மொத்த சமூகத்தின் தேவைகளுக்கும் பொருந்திவருகின்ற திட்டத்தின்படி அவற்றை நிர்வகிப்பதன் மூலம் இன்றுள்ள பெருந்தொழில்களை நடத்துவதில் ஏற்படுகின்ற தீய விளைவுகளை ஒழித்துவிட முடியும். நெருக்கடிகளுக்கு முடிவு ஏற்பட்டுவிடும். இன்றைய சமூக அமைப்பில் விரிவாக்கப்பட்ட உற்பத்தி மிகை உற்பத்தி என்று பொருளாவதோடு துன்பங்களுக்கு மூல காரணமாகவும் இருக்கிறது. ஆனால் அங்கே அது போதுமானதாக இல்லாமல் மேலும் அதிகமான அளவுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டியிருக்கும். சமூகத்தின் உடனடித் தேவைகளுக்கும் அதிகமான அளவில் உள்ள மிகை உற்பத்தியினால் துன்பம் ஏற்படாது; அது எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும்; புதிய தேவைகளை ஏற்படுத்தி அதே சமயத்தில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான சாதனங்களையும் கொடுக்கும். அது புதிய முன்னேற்றத்தின் காரணமாகவும் அதன் நிபந்தனையாகவும் இருக்கும். இது வரையிலும் தவறாமல் நடைபெற்றதைப் போல சமூகத்தின் ஒழுங்கில் குழப்பத்தை உண்டாக்காதபடி அது இந்த முன்னேற்றங்களைச் சாதிக்கும். தனிச் சொத்துரிமை என்ற சுமையிலிருந்து விடுதலையடைந்ததும் பெரிய அளவு தொழில் மிகப் பெரும்

அளவில் வளர்ச்சி அடைகிற பொழுது—இன்றைய பெரிய அளவு தொழிலோடு ஒப்பிடுகிற பொழுது சென்ற காலத்திய பட்டறைத் தொழில் முறை அற்பமாகத் தோன்றுவதைப் போல—அதோடு ஒப்பிடும் பொழுது இன்றைய வளர்ச்சி நிலேயும் தோன்றும். தொழிலின் இத்தகைய வளர்ச்சி எல்லோருடைய தேவைகளேயும் பூர்த்தி செய்வதற்குப் போதுமான அளவு பொருள்களே சமூகத்துக்குக் கொடுக்கும். அது போல தனிச் சொத்துரிமையின் சுமையாலும் நிலங்கள் தனித்தனியாகத் துண்டு போடப்பட்டிருப்பதாலும் முன்பே ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகளேயும் விஞ்ஞான முன்னேற்றங்களேயும் பயன்படுத்த முடியாதபடி பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயம் ஒரு புதிய வேகத்தைப் பெறும்; அது சமூகத்திடம் விருப்பப்படி பகிர்ந்து கொடுக்குமாறு ஏராளமான பொருள்களே ஒப்படைக்கும். இவ்விதம் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களின் தேவைகளேயும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் விநியோகத்தை அமைக்கக் கூடிய முறையில் போதுமான பொருள்களே சமூகம் உற்பத்தி செய்யும். இதன் மூலம் பல்வேறு முரணியல் வர்க்கங்களாக சமூகம் பிரிக்கப்பட்டிருப்பது அவசியமற்றதாகிவிடும். அது அவசியமற்றதாக இருப்பது மட்டுமல்ல, புதிய சமூக அமைப்புக்கு அது முரணுனதாகவும் இருக்கும். உழைப்புப் பிரிவினேயின் மூலமாகவே வர்க்கங்கள் தோன்றின; உழைப்புப் பிரிவினே, அது இது வரை இருந்து வந்திருக்கும் வடிவத்தில், முழுவதுமாக மறைந்துவிடும். ஏனென்றுல் தொழில் உற்பத்தியையும் விவசாய உற்பத்தியையும், நாம் முன்னர் குறிப்பிட்ட அளவுக்குக் கொண்டு வருவதற்கு, இயந்திர, இரசாயன சாதனங்கள் மட்டுமே போதுமானவை அல்ல. இந்த சாதனங்களேப் பயன்படுத்துகிற மக்களின் திறமைகளும் அதற்கு ஏற்ற அளவுக்கு வளர்க்கப்பட வேண்டும். சென்ற நூற்றுண்டில் விவசாயிகளும் பட்டறைத் தொழிலாளர்களும் தங்களுடைய வாழ்க்கை முறை முழுவதையுமே மாற்றிக் கொண்டது போல, பெரிய அளவு தொழில்களுக்கு இழுக்கப்பட்டவுடன் முற்றிலும் புதிய மனிதர்களாக மாறிவிட்டதைப் போல, சமூகம் முழுவதுமே உற்பத்தியைக் கூட்டாக நிர்வகிப்பதும் அதன்

மூலமாக ஏற்படுகின்ற உற்பத்தியின் புதிய வளர்ச்சியும் முற்றிலும் புதிய வகையான மனிதர்களை அவசியமான தாக்குவதோடு அவர்களை உற்பத்தியும் செய்கின்றன. இன்றைய நிலையில் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனி உற்பத்திப் பிரிவுக்கு ஒதுக்கப்படுகிறார்கள்; ஒவ்வொரு வரும் மற்ற எல்லாத் திறமைகளையும் அழித்துக் கொண்டு ஒரே ஒரு திறமையை மட்டுமே வளர்த்துக் கொள்வதால், ஒரே ஒரு பிரிவை மட்டுமே அல்லது மொத்த உற்பத்தியின் ஒரு பிரிவின் ஒரு உட்பிரிவை மட்டுமே தெரிந்திருப்ப தால் அவர்கள் அதனோடு சேர்த்து விலங்கிடப்பட்டுச் சுரண்டப்படுகிறார்கள். இன்றைய தொழிலில் கூட இத்தகைய மனிதர்களின் உபயோகம் மேலும் மேலும் குறைந்து கொண்டிருக்கிறது. கூட்டாக நடைபெறும் தொழில், சமூகம் முழுவதும் சேர்ந்து தயாரித்த திட்டத் தின்படி நடைபெறும் தொழில் உற்பத்தியின் மொத்த அமைப்பையும் மேற்பார்வை செய்யும் தகுதிபடைத்த, எல்லா அம்சங்களிலும் வளர்ச்சியடைந்த மனிதர்களை முன்னூகிக்கிறது. ஒரு மனிதரை விவசாயியாகவும், இன்னொருவரை செருப்புத்தைப்பவராகவும், மூன்றாவது நபரை ஆலைத் தொழிலாளியாகவும், நான்காவது நபரை பங்குத் தரகராகவும் ஆக்குகின்ற உழைப்புப் பிரிவினை—இது முன்பே இயந்திரங்களால் தகர்க்கப்பட்டுவிட்டது—முழு வதும் மறைந்து போய்விடும். இளைஞர்கள் உற்பத்தியின் மொத்த அமைப்பு முழுவதையும் வேகமாகப் புரிந்து கொள்வதற்குக் கல்வி துணை செய்யும்; அவர்கள் சமூகத் தின் தேவைகளுக்கு அல்லது தங்களுடைய விருப்பங் களுக்கு ஏற்ற வகையில் தொழிலின் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்குப் போவதற்கும் அது துணை செய்யும். எனவே அது இன்றுள்ள உழைப்புப் பிரிவினை அவர்கள் ஒவ்வொருவர் மீதும் முத்திரை குத்தும் ஒரு தரப்புத் தன்மையிலிருந்து அவர்களை விடுதலை செய்யும். இவ்விதத் தில் கம்யூனிஸ்ட் சமூக அமைப்பு அதன் ஒவ்வொரு உறுப்பினருக்கும், பல்துறைகளிலும் வளர்ச்சியடைந்திருக் கும் அவர்களுடைய திறமைகளை எல்லா வகைகளிலும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொடுக்கும். ஆனால் இதனோடு சேர்ந்து பல்வேறு வர்க்கங்கள் என்பது

கட்டாயமாக மறைந்து போய்விடும். எனவே சமூகம் கம்யூனிசத்தின்படி அமைக்கப்படும் பொழுது, ஒரு பக்கத்தில், அது வர்க்கங்கள் நீடிப்பதற்குப் பொருந்தாததாக இருக்கிறது; மறுபக்கத்தில் இந்த சமூகம் ஏற்படுவதே இந்த வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்கான சாதனங்களைக் கொடுக்கிறது.

நகரத்துக்கும் கிராமப் பகுதிக்கும் உள்ள முரணியலும் இது போலவே மறைந்து விடும் என்பதும் இதிலிருந்து தொடர்கிறது. விவசாய, தொழில் உற்பத்தியை இரண்டு வெவ்வேறான வர்க்கங்கள் செய்வதற்கு பதில் ஒரே நபர்கள் செய்வது கலப்பற்ற பொருளாயதக் காரணங்களுக்கு என்ற போதிலும் அது முன்னதாகவே கம்யூனிச அமைப்பின் முக்கியமான நிபந்தனையைப் பூர்த்தி செய்வதாகிறது. கிராமப் புறங்களில் விவசாய மக்கள் தொகை முழுவதும் சிதறிக் கிடப்பதும், தொழிலில் பங்கு கொண்டுள்ள மக்கள் தொகை பெரும் நகரங்களில் கூட்டமாகத் திரண்டிருப்பதோடு சேர்த்துப் பார்க்கும் பொழுது அந்த நிலை—விவசாயம், தொழில் இரண்டின் வளர்ச்சி அடையாத நிலைக்குப் பொருந்துவதாகும்; இது எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சி அடைவதற்கு ஒரு தடையாகும். அது இப்பொழுதே தன்னை உன்னிப்பாக உணர்த்திக் கொண்டிருக்கிறது.

உற்பத்திச் சக்திகளைத் திட்டமிட்ட வகையிலும் பொதுவான முறையிலும் பயன்படுத்துவதற்காக சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் பொதுவாக ஒன்று சேர்ந்திருப்பது; எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு உற்பத்தியை விஸ்தரித்தல்; பலரை பாதித்து சிலருடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற நிலைமையை ஒழித்தல்; வர்க்கங்களையும் அவற்றின் முரண்பாடுகளையும் முழுமையாக ஒழித்தல்; இது வரை இருந்துள்ள உழைப்புப் பிரிவினையை ஒழிப்பதன் மூலம், தொழிற்கல்வியின் மூலம், வேலையை மாற்றுவதன் மூலம், எல்லோராலும் ஏற்படுத்தப்படும் வசதிகளில் எல்லோருமே பங்கு கொள்வதன் மூலம், நகரத்தையும் கிராமப் பகுதிகளையும் இணைப்பதன் மூலம் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களின் திறமைகளை எல்லாத் துறைகளிலும்

வளர்ப்பது—இவை தனிச் சொத்துரிமையை ஒழிப்பதன் விளைவாகக் கிடைக்கின்ற முக்கியமான பலன்களாகும்.

**கேள்வி 21:** கம்யூனிஸ்ட் சமூக அமைப்பு குடும்பத்தின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்?

**பதில்:** அது இரு பாலாருக்குமிடையே உள்ள உறவை அந்த நபர்கள் மட்டுமே சம்பந்தப்படுகிற, கலப்பற்ற சொந்த உறவாக ஆக்கும்; அதில் சமூகம் தலையிடுவதற்கு ஒரு அதிகாரமும் இருக்காது. அது தனிச் சொத்துரிமையை ஒழித்து விடுவதாலும் குழந்தைகளுக்கு சமுதாயப் பொறுப்பில் கல்வி பயிற்றுவிக்கப்படுமாதலாலும் அதன் மூலம் இது வரையிலுமுள்ள திருமண முறையின் இரட்டை அடிப்படையை (தனிச் சொத்துரிமையின் மூலமாக மனைவி கணவனைச் சார்ந்திருப்பதும் குழந்தைகள் பெற்றோர்களைச் சார்ந்திருப்பதும்) அழித்துவிடுவதாலும் இதைச் செய்ய முடிகிறது. கம்யூனிஸ்டுகள் பெண்களைப் பொதுமைப்படுத்துவார்கள் என்று பிலிஸ்தினியர்கள் ஒழுக்கத்தைப் பற்றி எழுப்பும் கூக்குரலுக்கு இங்கே பதில் இருக்கிறது. பெண்களைப் பொதுமைப்படுத்துவது என்பது முதலாளித்துவ சமூகத்துக்கே உரிய உறவாகும். இன்று விபசாரத்தில் இது முழுமையாகக் காணப்படுகிறது. ஆனால் விபசாரம் தனிச் சொத்துரிமையில் வேரூன்றியிருக்கிறது; அது அழிகிற பொழுது, விபசாரமும் அழிந்துவிடும். எனவே கம்யூனிஸ்ட் அமைப்பு பெண்களைப் பொதுமைப்படுத்தும் வழக்கத்தைப் புகுத்தவில்லை; அதற்கு மாறாக இந்த வழக்கத்துக்கு முடிவு கட்டிவிடும்.

*1847 அக்டோபர் கடைசியிலும்*
*நவம்பரிலும் எழுதப்பட்டது*

## கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்

# கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை
## என்ற நூலிலிருந்து

### 2

### பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும்

*ஒட்டுமொத்தமாய்ப் பாட்டாளிகளுடன் கம்யூனிஸ்டு களுக்கு இருக்கும் உறவு என்ன?*

*கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சி களுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாய் இருக்கவில்லை.*

*அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்களை அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்.*

*பாட்டாளி வர்க்க இயக்கத்தை வடிவமைக்க அவர் கள் தமக்கெனத் தனிக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை.*

*ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளிடமிருந்து கம் யூனிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறவை பின்வருவன மட்டுமேதான்: 1. வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன் னிலைக்குக் கொண்டு வருகிறார்கள். 2. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட் டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.*

*ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடு களிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன் னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய*

எல்லோரையும் முன்னேக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்கிறார்கள்; தத்துவார்த்தத்தில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதிவிளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத்தின் பெருந் திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக் கிறார்கள்.

கம்யூனிஸ்டுகளுடைய உடனடி நோக்கம் ஏனைய எல் லாப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது உடனடி நோக்கம் என்னவோ அதுவேதான்: பாட்டாளிகளை ஒரு வர்க்கமாய் உருப்பெறச் செய்வதும், முதலாளித்துவ மேலாதிக்கத் தை வீழ்த்துவதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி யதிகாரம் வென்று கொள்வதும்தான்.

கம்யூனிஸ்டுகளுடைய தத்துவார்த்த முடிவுகள் உலகைப் புத்தமைக்க நினைக்கும் இந்த அல்லது அந்தச் சீர்திருத்தாளர் புனைந்தமைத்தோ, கண்டுபிடித்தோ கூறிய கருத்துக்களை அல்லது கோட்பாடுகளை எவ்வகையிலும் அடிப்படையாய்க் கொண்டவையல்ல.

நடப்பிலுள்ள வர்க்கப் போராட்டத்திலிருந்து, நம் கண்ணெதிரே நடைபெற்று வரும் வரலாற்று இயக்கத் திலிருந்து உதிக்கும் மெய்யான உறவுகளையே இந்த முடிவுகள் பொதுப்பட எடுத்துரைக்கின்றன. நடப்பிலுள்ள சொத்துடைமை உறவுகளை ஒழிப்பது எவ்விதத்திலும் கம் யூனிசத்துக்கு உரித்தான ஒரு தனிச் சிறப்பல்ல.

வரலாற்று நிலைமைகளில் ஏற்படும் மாற்றத்தின் விளை வாய்ச் சொத்துடைமை உறவுகள் யாவும் கடந்த காலத் தில் தொடர்ந்தாற்போல் வரலாற்று வழியில் மாற்ற மடைந்தே வந்திருக்கின்றன.

எடுத்துக் காட்டாய் பிரெஞ்சுப் புரட்சியானது[3] பிரபுத்துவச் சொத்துடைமையை ஒழித்து அதனிடத்தில் முதலாளித்துவச் சொத்துடைமையை நிலைநாட்டிற்று.

பொதுப்பட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, முத லாளித்துவச் சொத்துடைமையை ஒழிப்பதே கம்யூனிசத் திற்குரிய சிறப்பியல்பு.

ஆனல் நவீன முதலாளித்துவத் தனிச் சொத்துடை மையானது வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில்,

ஒருசிலர் மிகப் பலரைச் சுரண்டுவதன் அடிப்படையில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் சுவீகரிப்பதற்கு மான அமைப்பின் இறுதியான, மிகவும் நிறைவான வெளிப்பாடாகும்.

இந்த அர்த்தத்தில் கம்யூனிஸ்டுகளுடைய தத்து வத்தை இரத்தினச் சுருக்கமாய், தனிச் சொத்துடை மையை ஒழித்தல் என்பதாய்க் கூறலாம்.

ஒருவர் தமது சொந்த உழைப்பின் பயனைப் பெறு வதைத் தமது தனிச் சொத்தாக்கிக் கொள்ளும் உரிமை யைக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஒழிக்க விரும்புவதாய் எங்களை ஏசுகிறார்கள்; இந்தத் தனிச் சொத்துதான் தனியாளின் சுதந்திரம், செயற்பாடு, சுயேச்சை வாழ்வு ஆகியவற்றுக்கு எல்லாம் அடிநிலை என்கிறார்கள்.

பாடுபட்டுப் பெற்ற, சொந்த முயற்சியால் சேர்த்த, சுயமாய்ச் சம்பாதித்த சொத்தாம் இது! இங்கே நீங்கள் குறிப்பிடுவது எந்தச் சொத்து? சிறு கைவினைஞர், சிறு விவசாயி ஆகியோரது சொத்தா? அதாவது முதலாளித் துவச் சொத்து வடிவத்துக்கு முற்பட்டதாகிய சொத்து வடிவமா? இம்மாதிரியான சொத்தை ஒழிக்கத் தேவை இல்லை; தொழில் வளர்ச்சியானது இதை ஏற்கெனவே பெருமளவுக்கு அழித்து விட்டது, இனியும் தொடர்ந்து நாள்தோறும் அழித்து வருகிறது.

அல்லது நவீன கால முதலாளித்துவத் தனிச் சொத் தையா குறிப்பிடுகிறீர்கள்?

ஆனால் கூலியுழைப்பானது பாட்டாளிக்குச் சொத் தையா படைத்தளிக்கிறது? இல்லவே இல்லை. அது படைப்பது மூலதனம்தான்; அதாவது கூலியுழைப்பைச் சுரண்டுவதும், புதிதாய்ச் சுரண்டுவதற்குப் புதிதாய்க் கூலி யுழைப்பு கிடைக்காவிடில் அதிகரிக்க முடியாததுமாகிய சொத்து வகைதான். சொத்தானது அதன் தற்கால வடி வில் மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்கும் இடையிலான பகைமையை அடிப்படையாய்க் கொண்டதாகும். இந்தப் பகைமையின் இரு தரப்புகளையும் பரிசீலிப்போம்.

முதலாளியாய் இருப்பதற்கு அர்த்தம் பொருளுற் பத்தியில் தனியாள் வழியில் மட்டுமின்றி சமூக வழியிலு மான அந்தஸ்து வகிப்பதாகும். மூலதனமானது கூட்டுச்

செயற்பாட்டினுல் விளைவதாகும்; சமுதாயத்தின் பல உறுப்பினர்களது ஒன்றுபட்ட செயலால் மட்டுமே, இறுதியாய்ப் பார்க்குமிடத்து சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது ஒன்றுபட்ட செயலால் மட்டுமே அதை இயங்க வைக்க முடியும்.

எனவே மூலதனம் தனியாளின் சக்தியல்ல, சமூகச் சக்தி.

ஆகவே மூலதனமானது பொதுச் சொத்தாய், சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்குமான சொத்தாய் மாற்றப்படும் போது, தனியாளின் சொத்து அதன் மூலம் சமூகச் சொத்தாய் மாற்றப்படவில்லை. சொத்தின் சமூகத் தன்மை தான் மாற்றப்படுகிறது. சொத்தானது அதன் வர்க்கத் தன்மையை இழந்துவிடுகிறது.

இனி கூலியுழைப்பைப் பரிசீலிப்போம்.

கூலியுழைப்பின் சராசரி விலைதான் குறைந்தபட்சக் கூலி, அதாவது தொழிலாளி தொழிலாளியாய்த் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படும் பிழைப்புச் சாதனங்களின் மொத்த அளவு. ஆகவே கூலித் தொழிலாளி தமது உழைப்பின் மூலம் சுவீகரித்துக் கொள்வது எல்லாம், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கும் இவ்வாழ்வினைப் புனருற்பத்தி செய்வதற்கும் மட்டும்தான் போதுமானது. உழைப்பின் உற்பத்திப் பொருள்களிலான இந்தத் தனியாள் சுவீகரிப்பை, மனித உயிர் வாழ்வின் பராமரிப்புக்காகவும் புனருற்பத்திக்காகவும் வேண்டியதை மட்டும் அளித்து, ஏனையோரது உழைப்பின் மீது ஆண்மை செலுத்த உபரியாய் எதையும் விட்டு வைக்காத இந்தச் சுவீகரிப்பை ஒழிக்க வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்குக் கிஞ்சித்தும் இல்லை. இந்தச் சுவீகரிப்பின் இழிவான தன்மையைத்தான், மூலதனத்தைப் பெருகச் செய்வதற்கு மட்டுமே தொழிலாளி வாழ்கிறுன், ஆளும் வர்க்கத்தின் நலனுக்குத் தேவைப்படும் வரை மட்டுமே தொழிலாளிக்கு வாழ அனுமதி உண்டு என்ற இந்த இழிவான தன்மையைத்தான் நாங்கள் ஒழித்திட விரும்புகிறோம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் உயிருள்ள உழைப்பு சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பைப் பெருகச் செய்

வதற்குரிய ஒரு சாதனமாகவே இருந்து வருகிறது. கம்யூனிச சமுதாயத்தில் சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பானது தொழிலாளியின் வாழ்வை விரிவுபெற்று வளமடைந்து ஓங்கச் செய்வதற்கான ஒரு சாதனமாகவே இருக்கும்.

ஆகவே முதலாளித்துவ சமுதாயத்தில் கடந்த காலம் நிகழ் காலத்தின் மீது ஆதிக்கம் புரிகிறது; கம்யூனிச சமுதாயத்தில் நிகழ் காலம் கடந்த காலத்தின் மீது ஆதிக்கம் புரியும். முதலாளித்துவ சமுதாயத்தில் மூலதனம் சுயேச்சையானதாய், தனித்தன்மை கொண்டதாய் இருக்கிறது; அதேபோது உழைக்கும் தனிநபர் சுயேச்சையற்றவனுய், தனித்தன்மை இல்லாதவனுய் இருக்கின்ருர்.

இப்படிப்பட்ட உறவுகளை ஒழிப்பதைத்தான் தனியாளது தனித்தன்மையின் ஒழிப்பாய், சுதந்திரத்தின் ஒழிப்பாய்க் கூறுகிருர்கள் முதலாளிகள்! சந்தேகமே வேண்டாம், முதலாளித்துவத் தனித்தன்மையையும் முதலாளித்துவ சுயேச்சையையும் முதலாளித்துவ சுதந்திரத்தையும் ஒழிப்பதுதான் குறிக்கோள்.

தற்போதுள்ள முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளில், சுதந்திரம் என்பதற்கு சுதந்திரமான வாணிபம், சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் என்றே அர்த்தம்.

ஆனுல் விற்பனையும் வாங்குதலும் மறையும் போது சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் கூடவே மறைந்து போகும். சுதந்திரமான விற்பனை, வாங்குதல் என்ற பேச்சுக்கும் பொதுப்பட சுதந்திரத்தைப் பற்றிய நமது முதலாளித்துவ வர்க்கத்தாரது ஏனைய எல்லாத் ''தீரச் சொல்வீச்சுகளுக்கும்'' ஏதாவது அர்த்தம் இருக்குமாயின், அது மத்திய காலத்திய கட்டுண்ட விற்பனையுடனும் வாங்குதலுடனும் வணிகர்களுடனும் ஒப்பிடும் போது மட்டும் தான். ஆனுல் விற்பனையும் வாங்குதலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளும், இவற்ருேடு முதலாளித்துவ வர்க்கமுங்கூட கம்யூனிசத்தின் மூலம் ஒழிக்கப்படுவதற்கு எதிராய் முன்வைக்கப்படுகையில் இந்தப் பேச்சுகள் யாவும் அர்த்தமற்றுப் போகின்றன.

தனிச் சொத்தை நாங்கள் ஒழித்துக் கட்ட விரும்பு

கிறேம் என்று நீங்கள் கிலி கொண்டு பதறுகிறீர்கள். ஆனல் தற்போதுள்ள உங்களுடைய சமுதாயத்தில் பத்தில் ஒன்பது பங்கு மக்களுக்குத் தனிச் சொத்து ஏற்கெனவே இல்லாமல் ஒழிக்கப்பட்டுவிட்டது; ஒரு சிலரிடத்தே தனிச் சொத்து இருப்பதற்கே காரணம் இந்தப் பத்தில் ஒன்பது பங்காளேரிடத்தே அது இல்லாது ஒழிந்ததுதான். ஆக சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோரிடம் எந்தச் சொத்தும் இல்லாமற்போவதையே தனக்குரிய அவசிய நிபந்தனையாய்க் கொண்ட ஒரு சொத்து வடிவத்தை ஒழிக்க விரும்புகிறேம் என்று எங்களை ஏசுகிறீர்கள்.

சுருங்கச் சொல்வதெனில், உங்களுடைய சொத்தை ஒழிக்க விரும்புகிறேம் என்று ஏசுகிறீர்கள். ஆம், உண்மையில் அதுவேதான் நாங்கள் செய்ய விரும்பும் காரியம்.

எத்தருணம் முதல் உழைப்பை மூலதனமாய், பணமாய், நிலவாடகையாய்—ஏகபோகமாக்கிக் கொண்டு விடுவதற்கு ஏற்ற ஒரு சமூகச் சக்தியாய்—மாற்ற முடியாமல் போகிறதோ, அதாவது எத்தருணம் முதல் தனியாளின் சொத்தினை முதலாளித்துவச் சொத்தாய், மூலதனமாய் மாற்ற முடியாமல் போகிறதோ, அத்தருணம் முதற்கொண்டே தனியாளின் தனித்தன்மை மறைந்து விடுவதாய் நீங்கள் கூறுகிறீர்கள்.

ஆதலால் ''தனியாள்'' என்னும் போது நீங்கள் முதலாளியையே தவிர, முதலாளி வர்க்கச் சொத்துடைமையாளரையே தவிர, வேறு யாரையும் குறிப்பிடவில்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டாக வேண்டும். இம்மாதிரியான தனியாள் மெய்யாகவே மறையத்தான் வேண்டும், இருக்க முடியாதபடிச் செய்யப்படத்தான் வேண்டும்.

சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்களைச் சுவீகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கம்யூனிசம் எம்மனிதனிடமிருந்தும் பறிக்கவில்லை; இப்படிச் சுவீகரி துக் கொள்வதன் மூலம் அவன் ஏனையோரது உழைப்பை அடிமைப்படுத்துகிறவனுகும் வாய்ப்பைத்தான் அது அவனிடமிருந்து பறிக்கிறது.

தனிச் சொத்தை ஒழித்ததும் எல்லாச் செயற்பாடுகளும் நின்று போய்விடும், அனைத்து மக்களும் சோம்பேறித்தனத்தால் பீடிக்கப்படுவர் என்பதாய் ஆட்சேபம் கூறப்படுகிறது.

இது மெய்யானல், முதலாளித்துவ சமுதாயம் நெடு நாட்களுக்கு முன்பே முழுச் சோம்பேறித்தனத்தில் மூழ்கிமடிந்திருக்க வேண்டும். ஏனெனில் முதலாளித்துவ சமுதாயத்தின் உறுப்பினர்களில் உழைப்போர் சொத்து ஏதும் சேர்ப்பதில்லை, சொத்து சேர்ப்போர் உழைப்பதில்லை. மூலதனம் இல்லாமல் போகும் போது கூலியுழைப்பு இருக்க முடியாதென்று ஒருண்மையையே திருப்பித் திருப்பிப் பலவாறாய்ச் சொல்லும் கூற்றே ஆகும் இந்த ஆட்சேபம் அனைத்தும்.

பொருளாயதப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராய் எழுப்பப்படும் எல்லா ஆட்சேபங்களும், அறிவுத் துறைப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராகவும் எழுப்பப்படுகின்றன. எப்படி வர்க்கச் சொத்துடைமையின் மறைவு முதலாளிக்குப் பொருளுற்பத்தியே மறைந்து போவதைக் குறிப்பதாகின்றதோ, அதே போல வர்க்கக் கலாசாரத்தின் மறைவு அவருக்கு எல்லாக் கலாசாரமுமே மறைவதற்கு ஒப்பானதாகின்றது.

அழிந்து விடுமென அவர் அழுது புலம்பும் அந்தக் கலாசாரம் மிகப் பெருவாரியான மக்களுக்கு இயந்திரத்தின் ஓட்டுப்பகுதியாகச் செயல்படுவதற்கு வேண்டிய பயிற்சியாகவே இருந்து வருகிறது.

ஆனல் முதலாளித்துவச் சொத்துடைமையின் ஒழிப்பை நீங்கள் சுதந்திரத்தையும் கலாசாரத்தையும் சட்டநெறியையும் இன்ன பிறவற்றையும் பற்றிய உங்களது முதலாளித்துவக் கருத்துக்களைப் பிரமாணமாய்க் கொண்டு மதிப்பீடு செய்யும் வரை எங்களுடன் சர்ச்சைக்கு வர வேண்டாம். உங்களுடைய சட்டநெறி உங்கள் வர்க்கத்தின் சித்தத்தை எல்லோருக்குமான சட்டமாய் விதித்திடுவதுதான்; உங்களது இந்தச் சித்தத்தின் சாரத்தன்மையும் போக்கும் உங்களது வர்க்கம் நிலவு

வதற்கு வேண்டிய பொருளாதார நிலைமைகளால் தீர் மானிக்கப்படுகிறவைதாம். இதே போல் உங்கள் கருத் துக்கள் எல்லாமே உங்களது முதலாளித்துவப் பொருளுற் பத்திக்கும் முதலாளித்துவச் சொத்துடைமைக்கும் வேண்டிய நிலைமைகளிலிருந்து பிறந்தெழுகிறவைதாம்.

தற்போதுள்ள உங்களுடைய பொருளுற்பத்தி முறை யிலிருந்தும் சொத்துடைமை வடிவிலிருந்தும் உதித் தெழும் சமூக அமைப்பு வடிவங்களை, பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தின் போது வரலாற்று வழியில் தோன்றி மறைந்து போகும் உறவுகளாகிய இவற்றை, என்றும் நிலையான சாசுவத இயற்கை விதிகளாகவும் பகுத்தறிவு விதிகளாகவும் மாற்றும்படி உங்களது தவறான தன்னலக் கருத்தோட்டம் உங்களைத் தூண்டுகிறது. இந்தத் தவறான கருத்தோட்டம் உங்களுக்கு மட்டும் உரியதன்று, உங்களுக்கு முன்பிருந்த ஆளும் வர்க்கங்கள் யாவற்றுக் குமே உரியதாய் இருந்தது தான். பண்டைக்காலத்துச் சொத்துடைமையைப் பொறுத்தவரை நீங்கள் தெட்டத் தெளிவாய் காண்பதை, பிரபுத்துவச் சொத்துடைமை சம்பந்தமாய் நீங்கள் ஒத்துக் கொள்வதை உங்களுடைய முதலாளித்துவச் சொத்துடைமை குறித்து உங்களால் ஒத்துக் கொள்ள முடிவதே இல்லை, நீங்கள் தடுக்கப்பட்டு விடுகிறீர்கள்.

குடும்பத்தை ஒழிப்பதாவது! கம்யூனிஸ்டுகளுடைய இந்தக் கேடுகெட்ட முன்மொழிவை எதிர்த்து அதி தீவிரவாதிகளுங்கூட கொதித்தெழுகிறார்கள்.

இக்காலத்து குடும்பத்துக்கு, முதலாளித்துவக் குடும்பத்துக்கு அடிப்படையாய் அமைவது எது? மூல தனம் தான், தனியார் இலாபம்தான். இந்தக் குடும்பம் அதன் முழு வளர்ச்சியிலுமான வடிவில் முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே மட்டும் தான் இருந்து வருகிறது. ஆனால் இந்நிலைமையின் உடன்நிகழ்வாய் குடும்பவாழ்வு பாட்டாளிகளிடத்தே அனேகமாய் அற்றுப் போயிருப் பதையும், பொது நிலையிலான விபசாரத்தையும் காண் கிறோம்.

முதலாளித்துவக் குடும்பத்தின் உடன்நிகழ்வு மறை யும் போது கூடவே முதலாளித்துவக் குடும்பமும் இயல்

பாகவே மறைந்து போகும், மூலதனம் மறையும் போது இரண்டும் மறைந்துவிடும்.

குழந்தைகள் அவர்களுடைய பெற்ரேரால் சுரண்டப் படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிரேம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுகிறீர்கள்? நாங்கள் இந்தக் குற்றத்தைப் புரிகிறவர்கள் தான், ஒப்புக் கொள்கிரேம்.

ஆனுல் வீட்டுக் கல்விக்குப் பதிலாய் நாங்கள் சமூக முறையிலான கல்வியைப் புகுத்தி மனிதர்களிடையிலான உறவுகளிலேயே மிகப் புனிதமானவற்றை நாசமாக்க விரும்புகிரேம் என்பீர்கள்.

உங்களுடைய கல்வி இருக்கிறதே, அது மட்டும் என்னவாம்? அதுவும் சமூக முறையிலான கல்விதானே? எந்தச் சமூக நிலைமைகளில் நீங்கள் கல்வி போதிக்கிறீர்களோ அந்த நிலைமைகளாலும், பள்ளிக்கூடங்கள் மூலமும் இன்ன பிறவற்றின் மூலமும் சமுதாயத்தின் நேரடியான அல்லது மறைமுகமான தலையீட்டாலும் தீர்மானிக்கப் பட்டதுதானே அது? கல்வியில் சமுதாயம் தலையிடுதல் என்பது கம்யூனிஸ்டுகளுடைய கண்டு பிடிப்பு அல்ல; இந்தத் தலையீட்டின் இயல்பினை மாற்றவும், ஆளும் வர்க்கத்தினுடைய செல்வாக்கிலிருந்து கல்வியை விடுவிக்கவுமே கம்யூனிஸ்டுகள் முயலுகிருர்கள்.

குடும்பம், கல்வி என்றும், பெற்ரேருக்கும் குழந்தைக்குமுள்ள புனித உறவு என்றும் பேசப்படும் முதலாளித்துவப் பகட்டுப் பேச்சுகள் மேலும் மேலும் அருவருக்கத்தக்கனவாகி வருகின்றன; ஏனெனில் நவீனத் தொழில் துறையின் செயலால் பாட்டாளிகளிடையே குடும்பப் பந்தங்கள் மேலும் மேலும் துண்டிக்கப்பட்டு, பாட்டாளிகளது குழந்தைகள் சாதாரண வாணிபச் சரக்குகளாகவும் உழைப்புக் கருவிகளாகவும் மாற்றப்படுகிருர்கள்.

ஆனுல் கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் பெண்களை எல்லார்க்கும் பொதுவாக்கிவிடுவீர்களே என்று முதலாளித்துவ வர்க்கம் அனைத்துமாய்ச் சேர்ந்து கூக்குரலிடுகிறது.

முதலாளியாய் இருப்பவர் தனது மனைவியை வெறும் உற்பத்திக் கருவியாகவே பாவிக்கிருர். உற்பத்திக் கருவிகள் எல்லார்க்கும் பொதுவாக்கப்பட்டுப் பயன்படுத்தப் படப் போவதாய்க் கேள்விப்பட்டதும், உடனே அவர்

எல்லார்க்கும் பொதுவாகிவிடும் இதே கதிதான் பெண்களுக்கும் ஏற்படப் போகிறதென்று இயற்கையாகவே முடிவு செய்து கொண்டுவிடுகிருர்.

பெண்கள் வெறும் உற்பத்திக் கருவிகளின் நிலையில் இருத்தப்பட்டிருப்பதை ஒழிக்க வேண்டும், உண்மையில் இது தான் நோக்கம் என்பது அவருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்ருகும்.

இருப்பினும், பெண்களைக் கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாகவும் அதிகாரபூர்வமாகவும் எல்லார்க்கும் பொதுவாக்கப் போகிருர்களென நமது முதலாளிகள் புரளி பண்ணி நல்லொழுக்கச் சீலர்களாய் சீற்றம் கொள்கிருர்களே, அதைக் காட்டிலும் நகைக்கத்தக்கது எதுவும் இருக்க முடியாது. பெண்களை எல்லார்க்கும் பொதுவாக்கும் கைங்கர்யத்தைக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தேவையில்லை, நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இது செய்யப்பட்டு வருகிறது.

நமது முதலாளிகள் சாதாரண விபசாரிகளிடம் செல்வதைச் சொல்லவே வேண்டாம், அதோடு அவர்கள் தமது பிடியிலுள்ள பாட்டாளிகளது மனைவியரும் புதல்வியரும் போதாமல் தமக்குள் ஒருவர் மனைவியை ஒருவர் வசப்படுத்திக் களவொழுக்கம் கொள்வதில் ஆகப் பெரிய இன்பம் காண்கிருர்கள்.

முதலாளித்துவத் திருமணமானது உண்மையில் மனைவியரைப் பொதுவாக்கிக் கொள்ளும் ஒரு முறையே ஆகும் ஆகவே கள்ளத்தனமாய்த் திரைமறைவில் பெண்களை எல்லார்க்கும் பொதுவாக்கி வைக்கும் முறைக்குப் பதில், ஒளிவு மறைவற்ற சட்டபூர்வ முறையைக் கொண்டுவர விரும்புகிருர்கள் கம்யூனிஸ்டுகள் என்று இவர்கள் கண்டிக்கலாமே தவிர அதிகமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. எப்படியும், இன்றைய பொருளுற்பத்தி அமைப்பு ஒழிக்கப்படும் போது, இந்த அமைப்பிலிருந்து எழும் பொதுப் பெண்டிர் முறையும்—அதாவது பகிரங்கப் பொது விபசாரமும் இரகசியத் தனி விபசாரமும்—கூடவே ஒழிந்தே ஆக வேண்டும் என்பது தெளிவு.

மேலும் தாய்நாட்டையும் தேசியத் தன்மையையும் இல்லாதொழிக்க விரும்புவதாகவும் கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டப்படுகிருர்கள்.

தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை. அவர்களிடம் இல்லாத ஒன்றை அவர்களிடமிருந்து பிடுங்குவது முடியாத காரியம். பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அரசியல் மேலாண்மை பெற்றாக வேண்டும், தேசத்தின் தலைமையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும், தன்னையே தேசமாக்கிக் கொண்டாக வேண்டும். அதுவரை பாட்டாளி வர்க்கம் தேசியத் தன்மை கொண்டாகவே இருக்கிறது, ஆனால் இச்சொல்லுக்குரிய முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல.

முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி, வாணிபச் சுதந்திரம், அனைத்துலகச் சந்தை, பொருளுற்பத்தி முறையிலும் இம்முறைக்கு உரித்தான வாழ்க்கை நிலைமைகளிலும் நாடுகள் ஒருபடித்தானவை ஆதல்—இவற்றின் காரணமாய் வெவ்வேறு நாடுகளது மக்களுக்கும் இடையிலுள்ள தேசிய வேறுபாடுகளும் பகைமைகளும் நாள் தோறும் மேலும் மேலும் மறைந்து வருகின்றன.

பாட்டாளி வர்க்க மேலாண்மையானது இவற்றை மேலும் துரிதமாய் மறையச் செய்யும். குறைந்தது தலைமையான நாகரிக நாடுகளின் அளவிலாவது அமைந்த செயல் ஒற்றுமை, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய தலையாய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும்.

தேசத்தினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலை எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்குத் தேசங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்.

சமயத்தின், தத்துவவியலின், பொதுவாய்ச் சித்தாந்தத்தின் நோக்கு நிலையிலிருந்து கம்யூனிசத்துக்கு எதிராய்க் கூறப்படும் குற்றச்சாட்டுகள் விவரமாய்ப் பரிசீலிக்கத் தக்கவையல்ல.

மனிதனது கருத்துக்களும் நினைப்புகளும் கண்ணோட்டங்களும்—சுருங்கச் சொன்னால் மனிதனது உணர்வானது—அவனது பொருளாயத வாழ்நிலைமைகளிலும் சமூக உறவுகளிலும் சமூக வாழ்விலும் ஏற்படும் ஒவ்

வொரு மாறுதலுடனும் சேர்ந்து மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ள ஆழ்ந்த ஞானம் வேண்டுமா, என்ன?

பொருள் உற்பத்தியில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப, அறிவுத் துறை உற்பத்தியின் தன்மையிலும் மாற்றம் ஏற்படுகிறது — கருத்துக்களின் வரலாறு நிரூபிப்பது இதன்றி வேறு என்னவாம்? ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்கள் அந்தச் சகாப்தத்தின் ஆளும் வர்க்கத்தினுடைய கருத்துக்களாகத்தானே எப்போதுமே இருந்திருக்கின்றன.

சமுதாயத்தைப் புரட்சிகர முறையில் மாற்றிடும் கருத்துக்கள் என்பதாய்ச் சொல்கிறார்களே, அவர்கள் உண்மையில் குறிப்பிடுவது என்ன? பழைய சமுதாயத்தினுள் புதியதன் கூறுகள் படைத்துருவாக்கப்பட்டுவிட்டன, பழைய வாழ்நிலைமைகள் சிதைவதற்கு ஒத்தபடி பழைய கருத்துக்களும் கூடவே சிதைகின்றன என்ற உண்மையைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பண்டைய உலகு அதன் அந்தியக் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது பண்டைய சமயங்களை கிறிஸ்தவ சமயம் வெற்றி கொண்டது. பிறகு 18ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயக் கருத்துக்கள் அறிவொளி இயக்கக் கருத்துக்களுக்கு[4] அடிபணிந்து அரங்கை விட்டகன்ற போது அக்காலத்திய புரட்சி வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்துடன் பிரபுத்துவ சமுதாயம் தனது மரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. சமயத் துறை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம் ஆகிய கருத்துக்கள் கட்டற்ற சுதந்திரப் போட்டியின் ஆதிக்கத்தினது அறிவு உலகப் பிரதிமைகளே ஆகும்.

''வரலாற்று வளர்ச்சியின் போது சமயம், ஒழுக்க நெறி, தத்துவவியல், சட்டநெறி இவை சம்பந்தமான கருத்துக்கள் உருத்திரிந்தது மெய்தான். ஆனால் சமயமும் ஒழுக்கநெறியும் தத்துவவியலும் அரசியல் விஞ்ஞானமும் சட்டமும் இந்த மாற்றங்களால் அழிந்துபடாது எப்போதுமே இவற்றைச் சமாளித்து வந்திருக்கின்றன'' என்று நம்மிடம் கூறுவார்கள்.

''இதன்றி சுதந்திரம், நீதி என்பன போன்ற சாசுவத உண்மைகள் இருக்கின்றன, இவை சமுதாயத்தின்

எல்லாக் கட்டங்களுக்கும் பொதுவானவை. ஆனல் கம்யூனிசமானது சாசுவத உண்மைகளை இல்லாதொழியச் செய்கிறது; சமயம், ஒழுக்கநெறி ஆகிய அனைத்தையும் புதிய அடிப்படையில் அமைப்பதற்குப் பதில் இவற்றை ஒழித்துக் கட்டிவிடுகிறது. ஆகவே கம்யூனிசம் கடந்த கால வரலாற்று அனுபவம் அனைத்துக்கும் முரணுய்ச் செயல்படுகிறது.''

இந்தக் குற்றச்சாட்டில் அடங்கியுள்ள சாரப்பொருள் என்ன? கடந்த கால சமுதாயம் அனைத்தின் வரலாறும் வர்க்கப் பகைமைகளின் இயக்கமாய் இருந்திருக்கிறது, இந்தப் பகைமைகள் வெவ்வேறு சகாப்தங்களில் வெவ்வேறு வடிவங்களை ஏற்று வந்திருக்கின்றன.

ஆனல் இந்த வர்க்கப் பகைமைகள் ஏற்ற வடிவம் எதுவானுலும், சமுதாயத்தின் ஒரு பகுதி மற்ருெரு பகுதியால் சுரண்டப்பட்டு வந்தது என்பது கடந்த சகாப்தங்கள் யாவற்றுக்கும் பொதுவான உண்மையாகும். எனவே, கடந்த சகாப்தங்களது சமூக உணர்வு எவ்வளவு தான் பல்வேறுபட்டதாகவும் பலவிதமானதாகவும் இருந்திருப்பினும், வர்க்கப் பகைமைகள் அறவே மறைந்தாலொழிய முற்றிலும் கரைந்துவிட முடியாத குறிப்பிட்ட சில பொது வடிவங்கள் அல்லது பொதுவான கருத்துக்களின் வட்டத்தினுள்ளே தான் அந்த சமூக உணர்வு இயங்கி வந்திருக்கிறது, இதில் வியப்பு ஏதுமில்லை.

கம்யூனிசப் புரட்சி பாரம்பரியச் சொத்துடைமை உறவுகளிலிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொண்டு விடும் புரட்சியாகும், ஆகவே இந்தப் புரட்சியினது வளர்ச்சியின் போது பாரம்பரியக் கருத்துக்களிடமிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொள்ளும்படி நேர்வதில் வியப்புக்கு இடமில்லை.

போதும், கம்யூனிசத்தை எதிர்த்து எழுப்பப்படும் முதலாளித்துவ ஆட்சேபங்களை இத்துடன் முடித்துக் கொள்வோம்.

பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச் செய்வது தான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவது தான் தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சியின் முதலாவது படி என்பதை மேலே கண்டோம்.

பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மை யைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்திச் சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழுவேகத்தில் அதிகமாக்கும்.

ஆரம்பத்தில் இந்தப் பணியினைச் சொத்துடைமை உரிமைகளிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவு களிலும் எதேச்சாதிகார முறையில் குறுக்கிட்டுச் செயல் படுவதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். அதாவது, பொருளாதார வழியில் போதாமலும் வலுக் குறைவாக வும் தோன்றும் நடவடிக்கைகளாய் இருப்பினும், இயக்கப் போக்கின் போது தம்மை மிஞ்சிச் சென்றுவிடுகிறவை யும் பழைய சமூக அமைப்பினுள் மேலும் குறுக்கிடும் படியான அவசியத்தை உண்டாக்குகிறவையுமாகிய நட வடிக்கைகள் மூலம்தான், பொருளுற்பத்தி முறையைப் புரட்சிகரமாய் அடியோடு மாற்றியமைத்திடும் பாதை யில் தவிர்க்க முடியாதவையாகிய இந்நடவடிக்கைகள் மூலம்தான், இந்தப் பணியினை நிறைவேற்ற முடியும்.

இந்த நடவடிக்கைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ் வேறானவையாகவே இருக்கும்.

ஆயினும் மிகவும் வளர்ந்து முன்னேறிய நாடுகளுக்குப் பொதுவாய்ப் பெருமளவுக்குப் பொருந்தக் கூடிய நட வடிக்கைகள் வருமாறு:

1. நிலத்தில் சொத்துடைமையை ஒழித்தலும் நில வாடகைகள் அனைத்தையும் பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தலும்.

2. கடுமையான வளர்வீத அல்லது படித்தர வரு மான வரி.

3. பரம்பரை வாரிசாய்ச் சொத்துடைமை பெறும் உரிமை அனைத்தையும் ஒழித்தல்.

4. நாட்டைவிட்டு வெளியேறிவிடுவோர், கலகக்காரர் கள் ஆகியோர் எல்லோரது சொத்தையும் பறிமுதல் செய்தல்.

5. அரசு மூலதனத்துடன் தனியுரிமையான ஏகபோகம் கொண்ட தேசிய வங்கியின் மூலமாய் கடன் செலாவணியை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

6. செய்தித் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

7. பொதுத் திட்டத்தின் பிரகாரம் ஆலைகளையும் உற்பத்திக் கருவிகளையும் விரிவாக்குதலும், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதலும், பொதுவாய் மண்வளத்தை உயர்த்தலும்.

8. உழைப்பைச் சரிசமமாய் எல்லோருக்கும் உரிய கடமையாக்குதல், முக்கியமாய் விவசாயத் துறைக்காகத் தொழில் பட்டாளங்களை நிறுவுதல்.

9. விவசாயத்தைத் தொழில் துறையுடன் இணைத்தல், தேச மக்களை மேலும் சீரான முறையில் நாடெங்கும் பரவியமையச் செய்வதன் மூலம் நகரத்துக்கும் கிராமப் புறத்துக்கும் இடையிலான பாகுபாட்டைப் படிப்படியாய் அகற்றுதல்.

10. எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுப் பள்ளிக் கூடங்களில் இலவசக் கல்வி அளித்தல். ஆலைகளில் குழந்தைகளது உழைப்பின் தற்போதைய வடிவை ஒழித்திடல். கல்வியைப் பொருள் உற்பத்தியுடன் இணைத்தல், இன்ன பிற.

வளர்ச்சியின் போது வர்க்க பேதங்கள் மறைந்து விடும் போதும், தேச மக்கள் அனைவராலுமான மாபெரும் கூட்டமைப்பின் கைகளில் பொருளுற்பத்தி அனைத்தும் ஒரு சேரமையமுற்றுவிடும் போதும், பொது ஆட்சியதிகாரம் அதன் அரசியல் தன்மையை இழந்துவிடும். அரசியல் ஆட்சியதிகாரம் என்பது அதன் சரியான பொருளில், ஒரு வர்க்கத்தின் ஒழுங்கமைந்த பலவந்த அதிகாரத்தையே, பிறிதொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக அமைந்த பலவந்த அதிகாரத்தையே குறிக்கின்றது. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் சந்தர்ப்பங்களது நிர்ப்பந்தம் காரணமாய்த் தன்னை ஒரு வர்க்கமாய் ஒழுங்கமைத்துக் கொள்கிறதெனில், புரட்சியின் மூலம் தன்னை ஆளும் வர்க்கமாக்கிக் கொள்கிறதெனில், ஆளும் வர்க்கம் என்ற முறை

யில் பழைய பொருளுற்பத்தி உறவுகளைப் பலவந்தமாய் ஒழித்திடுகிறதெனில், அப்போது அது இந்தப் பழைய பொருளுற்பத்தி உறவுகளுடன் கூடவே வர்க்கப் பகைமைகளும் பொதுவாய் வர்க்கங்களும் நிலவுவதற்குரிய நிலைமைகளையும் ஒழித்திடுவதாகிறது, அதன் மூலம் அது ஒரு வர்க்கமாய்த் தனக்குள்ள மேலாண்மையையும் ஒழித்திடுவதாகிறது.

வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டிருந்த பழைய முதலாளித்துவ சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதையே எல்லாரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனையாய்க் கொண்ட மக்கட்கூட்டு ஒன்று எழுந்துவிடும்.

*1847 டிசம்பர்—1848 ஜனவரியில்*
*எழுதப்பட்டது*

## கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்
### என்ற நூலிலிருந்து

3. ''உழைப்புக் கருவிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாக மேம்பாடடைவதும் உழைப்பின் பலன்களை எல்லா உழைப்பாளிகளுக்கும் நியாயமாக வினியோகிப்பதும் அவர்கள் எல்லோரையும் கூட்டுறவு முறையில் ஒழுங்குபடுத்துவதும் உழைப்பின் விடுதலைக்கு அத்தியாவசியமாகும்.''[5]

''உழைப்புக் கருவிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாக மேம்பாடடைவது'' என்று எழுதப்பட்டிருப்பது ''பொதுச் சொத்தாக மாற்றப்படுவது'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு—எனினும் இது முக்கியமல்ல.

''உழைப்பின் பலன்கள்'' என்றால் எது? உழைப்பால் ஏற்பட்ட பொருளா அல்லது அதன் மதிப்பா? பின்னால் சொல்லப்பட்டதாக இருக்குமானால் அந்தப் பொருளின் மொத்த மதிப்பா அல்லது நுகர்வு செய்யப்பட்ட உற்பத்திச் சாதனத்தின் மதிப்போடு உழைப்பு புதிதாகச் சேர்த்திருக்கிற மதிப்பின் அந்தப் பகுதி மட்டும்தானா?

''உழைப்பின் பலன்கள்'' என்பது லஸ்ஸால்[6] உபயோகிக்கிற தெளிவில்லாத கருத்தாகும்; திட்டவட்டமான பொருளாதாரக் கருதுகோள்களுக்குப் பதிலாக அவர் இதைப் பயன்படுத்துகிறார்.

''நியாயமாக'' வினியோகிப்பது என்றால் என்ன?

இன்றைக்கிருக்கும் வினியோகம் ''நியாயமானது'' என்று முதலாளிகள் ஆணித்தரமாகப் பேசுவதில்லையா? மேலும் இன்றைய உற்பத்தி முறையின் அடிப்படையில் இது ஒன்று மட்டுமே ''நியாயமான'' வினியோகம் என்பது

உண்மை இல்லையா? பொருளாதார உறவுகள் சட்டக் கருதுகோள்களால் ஒழுங்குபடுத்தப்படவில்லையா அல்லது, இதற்கு மாருக, சட்ட உறவுகள் பொருளாதார உறவுகளிலிருந்து தோன்றவில்லையா? ''நியாயமான'' வினியோகத்தைப் பற்றி சோஷலிஸ்டுக் குறுங்குழுவாதிகளும் அதிகமான அளவுக்கு வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லையா?

இங்கே ''நியாயமான'' வினியோகம் என்ற வார்த்தைகளில் அடங்கியிருப்பது என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு நாம் முதல் பாராவையும் இந்தப் பகுதியையும் சேர்த்துப் படிக்க வேண்டும். பிந்தியது ''உழைப்புக் கருவிகள் பொதுச் சொத்தாகவும் எல்லா உழைப்பாளிகளும் கூட்டுறவு முறையில் ஒழுங்குபடுத்தப் படுகிற'' சமூகத்தை முன்னூகிக்கிறது; ''உழைப்பின் பலன்கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையோடு சொந்தமானவை'' என்று முதல் பாராவிலிருந்து நாம் தெரிந்து கொள்கிருேம்.

''சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும்''? வேலை செய்யாது இருப்பவர்களுக்கும் சேர்த்தா? ''உழைப்பின் பலன்கள் குறையாத அளவில்'' என்று சொல்லப்பட்டதே, அதில் மிஞ்சுவது என்ன? சமூகத்தில் உழைக்கின்ற உறுப்பினர்களுக்கு மட்டுமா? அப்படியானுல் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் தரப்பட்டிருக்கும் ''சம உரிமை'' என்னவாகும்?

ஆனுல் ''சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும்'' மற்றும் ''சம உரிமை'' என்பவையெல்லாம் வெறும் வார்த்தைகளே. இந்தக் கம்யூனிஸ்டு சமூகத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் லஸ்ஸாலின் ''உழைப்பின் பலன்களைக் குறையாத அளவில்'' பெற வேண்டும் என்பதே மூலப் பகுதி.

முதலாவதாக ''உழைப்பின் பலன்கள்'' என்ற வார்த்தைகளை உழைப்பின் உற்பத்தி என்ற அர்த்தத்தில் நாம் எடுத்துக் கொள்வோம்; அப்படியானுல் கூட்டான உழைப்பின் பலன்கள் **மொத்த சமூக உற்பத்தியாகும்.**

இதிலிருந்து நாம் பின்வருவனவற்றைக் கழிக்க வேண்டும்:

முதலாவதாக, உபயோகிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களுக்கு பதிலாக வேறு ஏற்படுத்துவதற்கான ஒதுக்கீடு.

இரண்டாவதாக, உற்பத்தியின் விஸ்தரிப்புக்கான கூடுதல் ஒதுக்கீடு.

மூன்ருவதாக, விபத்துக்கள், இயற்கையால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து காத்துக் கொள்வதற்குத் தேவையான சேம ஒதுக்கீடு அல்லது இன்ஷுரன்ஸ் ஒதுக்கீடு.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்களிலிருந்து'' இவற்றைக் கழித்துவிடுவது ஒரு பொருளாதார அவசியமாகும். இவற்றின் அளவு இருக்கின்ற சக்திகள், சாதனங்களினுலும், பகுதியளவுக்குச் சாத்தியமானவை பற்றிய கொள்கையினுலும் நிர்ணயிக்கப்படுகிறது; எனினும் அடிப்படை இயற்கை நீதியைக் கொண்டு ஒரு போதும் இதைக் கணக்கிட முடியாது.

மொத்தப் பொருளில் இனி மிஞ்சுவது, நுகர்வுச் சாதனமாக உபயோகிக்க, உத்தேசிக்கப்படுகிற அடுத்த பகுதியே.

இதைத் தனி நபர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு முன்பு இதிலிருந்து பின்வருவனவற்றை மறுபடியும் கழிக்க வேண்டும்:

முதலாவதாக, உற்பத்தியோடு சேராத பொது நிர்வாகச் செலவுகள்.

ஆரம்பத்திலிருந்தே இந்தப் பகுதி — இன்றைய சமூகத்தோடு ஒப்பிடுகின்ற பொழுது—மிகவும் அதிகமான அளவுக்குக் குறைந்து விடும்; புதிய சமூகம் வளர்ச்சி அடைகிற பொழுது அதன் விகிதாச்சாரம் குறைந்து விடும்.

இரண்டாவதாக, பொதுவான தேவைகளை—உதாரணமாக, பள்ளிக்கூடம், மருத்துவ வசதிகள் போன்றவை—பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது.

ஆரம்பத்திலிருந்தே இந்தப் பகுதி—இன்றைய சமூகத்தோடு ஒப்பிடுகின்ற பொழுது—கணிசமான அளவில் அதிகரிக்கும்; புதிய சமூகம் வளர்ச்சி அடைகிற பொழுது அதன் விகிதாச்சாரம் அதிகரிக்கும்.

மூன்றாவதாக, வேலை செய்ய இயலாதவர்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, இதரவை, சுருக்கமாகச் சொல்வதென்றால்— இன்று ஏழைகள் நிவாரணம் என்ற பிரிவின் கீழ் சேர்க்கப்படுவது.

லஸ்ஸாலின் செல்வாக்கின் காரணமாக இந்த வேலைத் திட்டம் ஒரு குறுகிய பார்வையில் ''வினியோகத்தை'' மட்டுமே மனதில் கொண்டிருக்கிறது. அதாவது கூட்டுறவுச் சங்கத்தின் தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடையே பிரித்துக் கொடுக்கப்படுகிற நுகர்வுச் சாதனத்தின் பகுதியை மட்டுமே குறிக்கிறது. இதை நாம் இப்பொழுது எடுத்துக் கொள்வோம்.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' முன்பே யாருக்கும் தெரியாமலே ''குறைவடைந்த'' பலன்களாக மாற்றப்படுகின்றன. ஆனால் தனிப்பட்ட நபர் என்ற முறையில் ஒரு உற்பத்தியாளர் எதை இழந்து விடுகிறாரோ அதை சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அடைந்துவிடுகிறார்.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடர் மறைந்து விடுவதைப் போல ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடரும் முழுமையாக மறைந்து விடுகிறது.

உற்பத்தி சாதனங்களைப் பொது உடைமையாகக் கொண்டிருக்கிற கூட்டுறவுச்சமூகத்துக்குள்உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்களைப் பரிவர்த்தனை செய்வதில்லை. இப்பொழுது முதலாளித்துவ சமூகத்துக்கு மாறுபட்ட வகையில் தனிப்பட்ட உழைப்பு மறைமுகமான வழியில் இனிமேலும் இருக்காமல் மொத்த உழைப்பின் பிரிக்க முடியாத அங்கமாக இருப்பதால் இந்தப் பொருள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உழைப்பு இந்தப் பொருள்களின் **மதிப்பு என்ற வகையில்**, அவற்றில் அடங்கியிருக்கும் பொருளாயதத் தன்மையாகக் குறைவான அளவில் தோன்றுகிறது. இவ்விதத்தில் ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடர்—அது தெளிவற்றதாக இருப்பதால் இன்று ஆட்சேபத்துக்குரியதாக இருக்கிறது —அதன் எல்லா அர்த்தத்தையும் இழந்து விடுகிறது.

இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது தனது சொந்த அடித்தளங்களின் மீது வளர்ந்தெழுந்துள்ள ஒரு கம்யூனிச சமுதாயமல்ல; மாருக, முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றுவதும், ஆகவே தான் உதித்த அந்தப் பழைய சமுதாயத்தினிடமிருந்து பெறப்பட்ட பிறவிக்குறிகள் ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும், தார்மிக வழியிலும், அறிவு வழியிலும்—இன்னமும் பதிந்திருப்பதுமான கம்யூனிச சமுதாயத்தையே இங்கு நாம் ஆராய்கிரும். எனவே தனிப்பட்ட உற்பத்தியாளர் சமூகத்துக்குத் தான் என்ன கொடுத்தாரோ, அதையே—எல்லாக் கழித்தல்களும் செய்யப்பட்ட பிறகு—மிகத் துல்லியமாக அவர் திரும்பப் பெறுகிருர். அவர் சமூகத்துக்குக் கொடுத்தது உழைப்பின் அவருக்குரிய பகுதியாகும். உதாரணமாக, ஒரு சமூக உழைப்பு நேரம் தனிப்பட்டவர்களுடைய உழைப்பு மணி நேரங்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறது; தனிப்பட்ட உற்பத்தியாளரின் தனிப்பட்ட உழைப்பு நேரம் அவர் பங்கு கொண்டிருக்கும் சமூக உழைப்பு நாளின் பகுதி; அதில் அவருடைய பங்கு எனலாம். அவர் இந்த எண்ணிக்கையுள்ள உழைப்பைக் (பொது நிதிகளுக்கு அவருடைய உழைப்பைக் கழித்துக் கொண்ட பிறகு) கொடுத்திருக்கிருர் என்ற சான்றிதழைச் சமூகத்திலிருந்து பெறுகிருர்; இதைக் கொண்டு நுகர்வுச் சாதனங்களின் சமூக இருப்பிலிருந்து தனது உழைப்பின் அளவுக்குப் பெறுமானமுள்ள நுகர்வுச் சாதனங்களை வாங்கிக் கொள்கிருர். அவர் ஒரு வடிவத்தில் சமூகத்துக்குக் கொடுத்த உழைப்பின் அதே அளவை வேருெரு வடிவத்தில் திரும்ப வாங்கிக் கொள்கிருர்.

இங்கே பண்டங்களின் பரிவர்த்தனையை—இது சம மதிப்புக்களின் பரிவர்த்தனையாக இருக்கும் அளவில்—ஒழுங்குபடுத்துகிற அதே கோட்பாடு நிலவுகிறது என்பது தெளிவு. உள்ளடக்கமும் உருவமும் மாறிவிட்டன; ஏனென்ருல் மாறிவிட்ட நிலைமைகளின் கீழ் ஒருவர் தன்னுடைய உழைப்பைத் தவிர வேறு ஒன்றையும் கொடுக்க முடியாது; மேலும் தனிப்பட்ட நுகர்வுச் சாதனங்களைத் தவிர வேறு ஒன்றும் தனி நபர்களின் உடைமைப் பொரு

ளாக முடியாது. ஆனால் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் மத்தியில் பிந்தியதை வினியோகிப்பதைப் பொறுத்த வரையில் பண்ட சம மதிப்புக்களைப் பரிவர்த்தனை செய்வதிலுள்ள கோட்பாடு தான் நிலவுகிறது: ஒரு வடிவத்தில் உள்ள குறிப்பிட்ட அளவு உழைப்பு வேறொரு வடிவத்திலுள்ள சம அளவு உழைப்புக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

எனவே தத்துவமும் நடைமுறையும் இனிமேல் மோதிக் கொள்வதில்லை என்ற போதிலும் சம உரிமை என்பது இன்னும் கோட்பாட்டளவில் முதலாளித்துவ உரிமையாகவே இருக்கிறது; பண்டங்களின் பரிவர்த்தனையில் சம மதிப்புக்களின் பரிவர்த்தனை தனிப்பட்ட இனத்தில் இருப்பதில்லை—சராசரியில் மட்டுமே உண்டு.

இவ்விதத்தில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், இந்தச் சம உரிமை இன்னும் முதலாளித்துவ கட்டுப்படுத்தல் என்னும் பழியைத் தொடர்ச்சியாகத் தாங்கியிருக்கிறது. உற்பத்தியாளர்களின் உரிமை அவர்கள் கொடுக்கிற உழைப்பின் விகிதாச்சாரத்தில் இருக்கிறது. சமமான ஆதார அளவு, அதாவது உழைப்பு, அளவுகோலாகப் பயன்படுவதில் தான் சமத்தன்மை அடங்கியிருக்கிறது.

ஆனால் ஒரு நபர் மற்றொரு நபரைக் காட்டிலும் உடலமைப்பிலோ, அறிவாற்றலிலோ உயர்ந்தவராக இருக்கிறார். எனவே அவர் ஒரே அளவுள்ள நேரத்தில் அதிக உழைப்பைக் கொடுக்கிறார் அல்லது அவர் அதிகமான நேரம் உழைக்க முடிகிறது. உழைப்பை அளவுகோலாக வைத்துக் கொள்வதென்றால் அது கால அளவின் மூலம் அல்லது தீவிரத்தன்மையின் மூலம் வரையறுக்கப்பட வேண்டும்; இல்லாவிட்டால் அது ஆதார அளவுகோலாக இருக்க முடியாது. இந்த சம உரிமையானது சமமாக இல்லாத உழைப்புக்கு சமமில்லாத உரிமையாகும். ஒவ்வொருவரும் அடுத்தவரைப் போலவே ஒரு தொழிலாளி என்பதால் அது வர்க்க வேறுபாடுகளை அங்கீகரிப்பதில்லை; ஆனால் அது தனிப்பட்ட தகுதிகள் சமமில்லாதபடி இருப்பதை, அதன் மூலம் உற்பத்தித் திறன் வேறுபடுவதை இயல்பான சிறப்புத் தகுதிகள் என்று மௌனமாக

அங்கீகரிக்கிறது. எனவே இது ஒவ்வொரு உரிமையையும் போல, அதன் உள்ளடக்கத்தில் சமத்துவம் இல்லாத உரிமை யாகும். உரிமை என்பது இயற்கையாகவே ஒரு சமமான அளவுகோலைப் பயன்படுத்துவதாக மட்டுமே இருக்க முடியும். ஆனுல் சமமாக இல்லாத தனி நபர்கள் (அவர்கள் சமமாக இல்லாதிருக்கவில்லையென்ருல் அவர் கள் வெவ்வேறு தனிநபர்களாக இருக்கமாட்டார்கள்) ஒரு சமமான கருத்து நிலையின் கீழ் கொண்டுவரப்படும் அளவுக்கு ஒரு சமத்துவமான ஆதார அளவுகோலால் மட்டுமே அளக்கப்பட முடியும், ஒரு திட்டவட்டமான பகுதியிலிருந்து மட்டுமே எடுக்கப்படுகிருர்கள். இங்கே யுள்ள உதாரணத்தின் படி, தொழிலாளர்களாக மட்டுமே கருதப்படுகிருர்கள்; அவர்கள் சம்பந்தமாக மற்ற எல் லாமே புறக்கணிக்கப்படுவதால் வேறு ஒன்றையும் பார்ப் பதில்லை. மேலும் ஒரு தொழிலாளிக்குத் திருமணமாகி யிருக்கிறது, இன்னெரு தொழிலாளிக்குத் திருமணம் ஆகவில்லை; ஒரு தொழிலாளிக்கு இன்னெரு தொழி லாளியைக் காட்டிலும் அதிகமான குழந்தைகள் இருக் கின்றன, இதரவை. சமமான உழைப்பை அளித்து, ஆகவே சமுதாய நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறு வதன் மூலம், உண்மையில் ஒருவர் பிறிதொருவரைவிட அதிகம் பெறவும், ஒருவர் பிறிதொருவரைவிடச் செல் வந்தராய் இருக்கவும், இன்ன பலவாருகவும் நேர்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க, உரிமை சமமாய் இருப் பதற்கும் பதில் சமமின்றி இருத்தல் வேண்டும்.

இந்தக் குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் தவிர்க்க முடியாதவை, ஏனெனில் இச்சமுதா யம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளி வந்திருக்கிறது. உரிமையானது ஒருபோதும் சமுதாயத் தின் பொருளாதாரக் கட்டமைப்பையும் இதனுல் நெறிப் படுத்தப்பட்ட அதன் கலாசார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உயர்வானதாகிவிட முடியாது.

கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனி நபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன்கூட கருத்து உழைப்புக்கும்

உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்த பின், உழைப்பானது பிழைப்புக்கான சாதனமாய் மட்டு மின்றி வாழ்வின் முதற்பெரும் தேவையுமாகியபின், தனி நபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடுகூட உற்பத்திச் சக்திகளும் அதிகரித்துவிட்டபின், பொதுச் சமுதாயச் செல்வத்தின் அருவிகள் எல்லாம் மேலும் அபரிமித மாய்ப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமை யாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகையில் 'ஒவ் வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப!' என்பதாய்ப் பொறித்துக்கொள்ளும்.

ஒரு பக்கத்தில் ''குறையாத அளவில் உழைப்பின் பயன்கள்'' என்பதையும் மறு பக்கத்தில் ''சம உரிமை'', ''நியாயமான வினியோகம்'' என்பதையும் பற்றி நான் இங்கே சற்று அதிகமாக எழுதியிருக்கிறேன். ஒரு பக்கத் தில், ஒரு காலத்தில் ஏதோ அர்த்தத்தைக் கொண்டிருந்து இப்பொழுது காலாவதியாகிப்போன வார்த்தைக் கூளமாக மாறியிருக்கிற கருத்துக்களைக் கோட்பாடுகளாக நமது கட்சியின் மீது மறுபடியும் திணிக்க முயற்சிப் பதும், மறு பக்கத்தில், மிக அதிகமான உழைப்பிற்குப் பிறகு கட்சியில் ஏற்படுத்தியிருக்கிற — இப்பொழுது வேரூன்றிவிட்ட — யதார்த்தவாதப் பார்வையை, ஜன நாயகவாதிகளிடமும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடமும் சாதாரணமாகப் புழங்குகிற சித்தாந்த, சட்ட, இன்னும் மற்ற குப்பை கூளங்களைப் பற்றிய பிதற்றலின் மூலமாகக் கெடுப்பதற்குச் செய்யும் முயற்சியும் எவ் வளவு பெரிய குற்றம் என்பதைக் காட்டவே இப்படி எழுதியிருக்கிறேன்.

மேலே தரப்பட்டிருக்கும் விமரிசனத்தைத் தவிர, **வினியோகம்** என்று சொல்லப்படுவதைப் பற்றி அதிக மான பரபரப்பை ஏற்படுத்துவதும் அதற்குத் தலைமை யான அழுத்தம் கொடுப்பதும் பொதுவாகத் தவறாகும்.

நுகர்வுச் சாதனங்களின் வினியோகம் எவ்வகையிலி ருந்த போதிலும் அது உற்பத்தி நிலைமைகளின் வினியோ கத்தின் விளைவுதான். எனினும் இரண்டாவதாகச் சொல்

லப்படுகிற வினியோகம் உற்பத்தி முறையின் ஒரு அம்சமே கூறு ஆகும். உதாரணமாக முதலாளித்துவ உற்பத்தி முறையை எடுத்துக்கொள்வோம். இதில் உற்பத்தியின் பொருளாயத நிலைமைகள் மூலதனம், நிலம் ஆகிய சொத்துக்களின் வடிவத்தில் தொழிலாளர் அல்லாதவர்களின் கைகளில் இருக்கின்றன; ஆனால் வெகுஜனங்கள் உற்பத்தியின் தனிப்பட்ட நிலைமைக்கு, உழைப்புச் சக்திக்கு உடைமையாளர்களாக இருக்கிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி முறை இவ்வாறு அமைந்திருக்கிறது. உற்பத்திக் கூறுகள் இப்படி வினியோகிக்கப்பட்டால் தானாகவே ஏற்படுகிற விளைவுதான் இன்றைய தினத்தில் இருக்கிற நுகர்வுச் சாதனங்கள் வினியோகம். உற்பத்தியின் பொருளாயத நிலைமைகள் தொழிலாளர்களின் கூட்டுச் சொத்தாக இருந்தால் நுகர்வுச் சாதனங்களின் வினியோகம் இன்றைக்கு இருப்பதிலிருந்து வித்தியாசமானதாக ஏற்படும். வினியோகத்தை உற்பத்தி முறையிலிருந்து தனியானதாக நினைப்பதும் அவ்வாறு அதை ஆராய்வதையும் முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களிடமிருந்து கொச்சையான சோஷலிசம் (அதனிடமிருந்து ஜனநாயகத்தின் ஒரு பகுதியும்) எடுத்துக் கொண்டுவிட்டது. எனவேதான் சோஷலிசமானது வினியோகத்தையே தலைமையாகச் சுற்றிச் சுழல்வதாகக் காட்டப்படுகிறது. உண்மையான உறவைத் தெளிவாக எடுத்துக் காட்டி எவ்வளவோ காலமான பிறகு, மறுபடியும் பின்னால் போவது அவசியமா?...

## 4

நான் இப்பொழுது ஜனநாயகப் பகுதிக்கு வருகிறேன்.

### A. ''அரசின் சுதந்திரமான அடிப்படை.''

முதலாவதாக, ஜெர்மன் தொழிலாளர் கட்சி ''சுதந்திரமான அரசுக்காகப்'' பாடுபடுகிறதென்று, இரண்டாம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

''சுதந்திரமான அரசு''—இதன் பொருள் என்ன?

அரசாங்கத்தை ''சுதந்திரமான''தாக்க வேண்டுமென்பது, பணிவுமிக்க குடிமக்கள் என்ற குறுகிய எண்ணத்தை அகற்றிவிட்ட தொழிலாளர்களின் நோக்கமாக ஒரு போதும் இருக்காது. ஜெர்மானிய சாம்ராஜ்யத்தில் ருஷ்யாவைப் போலவே, ''அரசு'' அநேகமாக ''சுதந்திரமானதாகவே'' இருக்கிறது. அரசு என்பது சமூகத்தின் மேலே திணிக்கப்பட்ட உறுப்பு என்ற நிலையிலிருந்து சமூகத்துக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த நிலைக்கு அதை மாற்றுவதில் தான் சுதந்திரம் அடங்கியிருக்கிறது. இன்றும் கூட அரசு வடிவங்கள் ''அரசின் சுதந்திரத்தைக்'' குறைப்பதைப் பொறுத்தவரை அதிகச் சுதந்திரமாக அல்லது சற்றுக் குறைவான சுதந்திரமாக நடந்து கொள்கின்றன.

ஜெர்மன் தொழிலாளர் கட்சியில்—இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றுகிற அளவுக்கு—சோஷலிஸ்ட் கருத்துக்கள் மேலெழுந்த வாரியாகக் கூட பிரபலமடையவில்லை என்பதை அக்கட்சி காட்டுகிறது. இன்றைக்கு இருக்கும் சமூகத்தை (எதிர்காலத்தில் ஏற்படுகிற எந்த சமூகத்துக்கும் இது பொருந்தும்) இன்றைக்கிருக்கும் **அரசின்** (அல்லது எதிர்கால சமூகம் என்றால் எதிர்கால அரசின்) **''அடிப்படை''** என்று எடுத்துக் கொள்ளாமல், அது அரசை ஒரு சுதந்திரமான அமைப்பாக, தனக்கென்று சொந்தமான **''அறிவுத்துறை, அறவியல், சுதந்திர ஆதரவு அடிப்படைகளைக்''** கொண்ட அமைப்பாக எடுத்துக் கொள்கிறது.

இந்த வேலைத்திட்டத்தில் **''இன்றைய அரசு''**, **''இன்றைய சமுதாயம்''** என்ற வார்த்தைகள் எவ்வளவு ஆரவாரத்தோடு தவறாக உபயோகிக்கப்படுவதையும், அது தன்னுடைய கோரிக்கைகளைக் கொடுக்கப் போகிற அரசைப் பற்றியும் எவ்வளவு தப்பபிப்பிராயங்களை ஆரவாரத்தோடு ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றியும் என்ன சொல்வது?

''இன்றைய சமுதாயம்'' முதலாளித்துவச் சமுதாயம். நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச்சமுதாயம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறைவாகவோ மத்தியக் காலக் கூறுகளின் கலப்படத்திலிருந்து விடப்பட்ட

தாகவும், அந்தந்த நாட்டின் தனிப்பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறைவாகவோ பாதிக்கப் பட்டதாகவும், அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சி யுற்றதாகவும் இருந்து வருகிறது. மறு புறத்தில் ''இன் றைய அரசு'' அந்தந்த நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறிவிடுகிறது. இது ஸ்விட்சர்லாந்தில் இருப்பதிலிருந்து பிரஷ்ய-ஜெர்மானிய சாம்ராஜ்யத்தில் மாறுபட்டதா யும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருப்பதிலிருந்து இங் கிலாந்தில் மாறுபட்டதாயும் உள்ளது. ஆகவே ''இன்றைய அரசு'' என்பது ஒரு கற்பனையே ஆகும்.

எனினும், நாகரிகமடைந்த பல்வேறு நாடுகளிலும் இருந்துவரும் பல்வேறு அரசுகளும் வடிவில் வெவ்வேறு வகைப்பட்டதாய் இருப்பினும், இவை யாவற்றுக்கும் பொதுவானது என்னவெனில், ஒன்று இன்னொன்றைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ முதலாளித் துவ வழியில் வளர்ச்சி பெற்றிருக்கிறதே தவிர இவை நவீன முதலாளித்துவச் சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்தவையே. ஆதலால் இவை சில முக்கிய பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் ''இன்றைய அரசு'' என்பதாய், இவ்வரசின் தற்போதைய மூலவேரான முதலாளித்துவச் சமுதாயம் மடிந்து மறைந்துவிடும் அந்த வருங்கால அரசிலிருந்து வேறு படுத்திப் பேசுவது சாத்தியமே.

ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிச சமுதாயத் தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறு விதமாய்க் கூறினால், தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்தச் சமுதாயப் பணிகள் அப்பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியில் மட்டுமே பதிலளிக்க முடியும். ''மக்கள்'' என்னும் சொல்லை ''அரசு'' என்னும் சொல்லுடன் ஆயிரம் வழியில் இணைப்பதன் மூலம் சாண் அளவுகூட இந்தப் பிரச்சினைக் குரிய தீர்வினை நெருங்கி வந்துவிட முடியாது.

முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதா யத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது; இந்த

இடைக்காலத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் என்பதை தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

ஆனால் இந்த வேலைத்திட்டம் இதைப் பற்றியோ அல்லது கம்யூனிச சமுதாயத்தின் எதிர்கால அரசைப் பற்றியோ எடுத்துக் கூறவில்லை.

எல்லோருக்கும் வாக்குரிமை, நேரடியாகச் சட்டமியற்றல், பொதுஜன உரிமைகள், மக்கள் இராணுவம், இதரவைகளைக் கொண்ட எல்லோருக்கும் நன்கு தெரிந்த ஜனநாயகப் பல்லவிக்கு அப்பால் அதற்கு வேறு அரசியல் கோரிக்கைகள் எதுவும் இல்லை. முதலாளிகளின் மக்கள் கட்சி,[7] சமாதானம் மற்றும் சுதந்திரத்துக்கான கழகம்[8] ஆகியவற்றின் எதிரொலி என்ற அளவிலேதான் அவை இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் அனைத்துமே— அவற்றை மகத்தான அற்புதங்களைப் போல மிகைப்படுத்திச் சொல்லவில்லை என்றால்—முன்பே அடைந்துவிட்டவையே. ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் அரசில் இவை இல்லாமலிருக்கலாம்; ஆனால் ஸ்விட்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இதர நாடுகளில் உள்ள அரசுகள் இவற்றைத் தந்துவிட்டன. இப்படிப்பட்ட ''எதிர்கால அரசு'' என்பது ஜெர்மானியப் பேரரசின் ''எல்லைக் கோடுகளுக்கு'' வெளியே இருந்த போதிலும் அது இன்றைக்கு உள்ள அரசுதான்.

ஆனால் ஒரு விஷயம் மறக்கப்பட்டு விட்டது. ஜெர்மன் தொழிலாளர் கட்சியானது ''இன்றைக்கிருக்கும் தேசிய அரசுக்குள்'' இயங்குவதாக வெளிப்படையாகவே தெரிவிப்பதால், அதன் சொந்த அரசுக்குள், பிரஷ்ய-ஜெர்மானிய சாம்ராஜ்யத்துக்குள் அது இயங்குவதால்— வேறுவிதமாக இருக்குமானால் அதன் கோரிக்கைகள் பெருமளவுக்கு அர்த்தமற்றவையாக இருக்கும்; ஏனென்றால் ஒருவர் தனக்குக் கிடைக்காதவற்றை மட்டுமே கோரிக்கைகளாக எழுப்புகிறார் — அது முக்கியமான ஒன்றை மறந்திருக்கக் கூடாது. அதாவது இந்த அழகான சிறிய ஆடம்பரப் பொருள்கள் எல்லாமே மக்களின் அரசுரிமை என்று சொல்லப்படுவதை அங்கீகரிப்பதை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. எனவே ஒரு

ஜனநாயகக் குடியரசுக்கு மட்டுமே அவை பொருத்தமாக இருப்பவையாகும்.

எனவே லுயீ பிலீப், அதற்குப்பிறகு லுயீ நெப்போலியன்[9] ஆகியோரின் ஆட்சியின் போது பிரெஞ்சுத் தொழிலாளர்களின் வேலைத்திட்டத்தைப் போல ஒரு ஜன நாயகக் குடியரசைக் கோருவதற்கு துணிச்சல் இல்லாதிருப்பதால்—கவனமாக நடந்து கொள்வதை சந்தர்ப்பங்கள் வற்புறுத்துவதால் அதுவும் புத்திசாலித்தனமே—பார்லிமெண்டரி வடிவங்களால் அலங்காரம் செய்யப்படும் நிலப்பிரபுத்துவச் சேர்க்கைகளைக் கொண்ட கலப்பாகவும், ஏற்கெனவே முதலாளிகளின் தாக்கத்துக்கு உள்ளாகி அதிகாரவர்க்கத்தினுல் செப்பனிடப்பட்டு போலீஸ் பாதுகாவலோடு கூடிய இராணுவ சர்வாதிகாரம் என்பதைத் தவிர வேறுவிதமாக இல்லாத ஒரு அரசிடம் ஒரு ஜனநாயகக் குடியரசில் மட்டுமே பொருளுடையதாக இருக்கக் கூடிய உரிமைகளைக் கோருகிற தந்திரத்தை—இது கண்ணியமுமல்ல, ''கௌரவமானதும்'' அல்ல—கையாண்டிருக்கக் கூடாது. அதன் பிறகு இவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அரசைச் ''சட்ட பூர்வமான வழிகளின் மூலம்'' நிர்ப்பந்திக்க முடியும் என்ற கற்பனையை அதே அரசிடம் உறுதிமொழியாகக் சொல்லியிருக்கக் கூடாது.

கொச்சையான ஜனநாயகம் ஜனநாயகக் குடியரசில் ஒரு பொற் காலத்தைக் காணுகிறது; முதலாளித்துவ சமூகத்தின் அரசின் இந்தக் கடைசி வடிவத்தில் இறுதி முடிவு ஏற்படும் வரை வர்க்கப் போராட்டம் நடக்கப் போகிறது என்று அது ஒரு போதும் சந்தேகித்ததில்லை. அப்படிப்பட்ட கொச்சையான ஜனநாயகம் கூட போலீசால் அனுமதிக்கப்பட்ட—ஆனுல் தர்க்கத்தால் அனுமதிக்கப் படாத—எல்லைகளுக்குள் மட்டுமே நின்றுவிடுகிற இந்த ஜனநாயகவாதத்தைக் காட்டிலும் மலையைப் போல உயர்ந்து நிற்கிறது.

''அரசு'' என்ற வார்த்தை அரசாங்க இயந்திரத்தை அல்லது அரசை—சமூகத்திலிருந்து உழைப்புப் பிரிவினையின் மூலம் பிரிக்கப்பட்ட விசேஷமான உயிரினமாக அது இருக்கின்ற அளவுக்கு—குறிக்கிறது என்பது பின்வரும்

வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது: ''படிப்படியாக முன்னேக்கிச் செல்கிற ஒரு முனை வருமானவரி **அரசின் பொருளாதார அடிப்படையாக** இருக்க வேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர் கட்சி கோருகிறது'', இதரவை. அரசாங்க இயந்திரத்துக்குப் பொருளாதார அடிப்படை வரிகள்—மற்றவை எதுவுமல்ல. ஸ்விட்சர்லாந்தில் இருக்கிற ''எதிர்கால அரசில்'' இந்தக் கோரிக்கை மிக நன்ருகவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வெவ்வேறு சமூக வர்க்கங்களின் வெவ்வேருன வருமான மூலங்களை வருமானவரி முன்னூகிக்கிறது; இதன் மூலம் முதலாளித்துவ சமூகத்தையும் முன்னூகிக்கிறது. எனவே லிவர்பூல் நகரத்தைச் சேர்ந்த நிதித்துறைச் சீர்திருத்தவாதிகள், கிளாட்ஸ்தனின்[10] தம்பியின் தலைமையின் கீழ் திரண்டிருக்கும் முதலாளிகள், இந்த வேலைத்திட்டத்தில் இருக்கும் இதே கோரிக்கையை முன்வைப்பதில் அதிசயமில்லை.

*1875 ஏப்ரலிலும்*
*மே ஆரம்பத்திலும்*
*எழுதப்பட்டது*

## டூரிங்குக்கு மறுப்பு
### என்ற நூலிலிருந்து

செயல் வன்மை வாய்ந்த சமூக சக்திகள் நாம் அவற்றைப் புரிந்து கொள்ளாமலும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் இருக்கும் வரை இயற்கை சக்திகளைப் போலவே கண் மூடித்தனமாகவும், பலவந்தமாகவும், நாசகரமாகவும் செயல்படுகின்றன. ஆனால் அவற்றை நாம் புரிந்து கொண்டும், அவற்றின் செயலையும் திசை வழியையும் பலன்களையும் மனத்தால் பற்றிக் கொண்டும் விட்டோமானால் பிறகு அவற்றை மேலும் மேலும் நமது சித்தத்துக்குக் கீழ்ப்படியச் செய்து, அவற்றைக் கொண்டு நமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வது முற்றிலும் நம்மையே பொறுத்ததாகும். முக்கியமாய் இது, பேராற்றல் கொண்ட இன்றைய உற்பத்திச் சக்திகளுக்கு மிகவும் பொருந்துவதாகும். இந்த உற்பத்திச் சக்திகளின் இயல்பையும் தன்மையையும் புரிந்து கொள்ள நாம் பிடிவாதமாய் மறுக்கும் வரையில்—இவற்றைப் புரிந்து கொள்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் மற்றும் அதன் காவலர்களின் பண்புக்கு முரணானது—இந்தச் சக்திகள் நம்மை மீறி, நமக்கு எதிராய் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கும், மேலே நாம் விவரமாய் எடுத்துக் காட்டியுள்ளது போல நம் மீது ஆதிக்கம் புரிந்து கொண்டுதான் இருக்கும்.

ஆனால் அவற்றின் இயல்பு புரிந்து கொள்ளப்பட்டதும், ஒன்று சேர்ந்து வேலை செய்யும் உற்பத்தியாளர்களுடைய கரங்களில் ஆட்டிப் படைக்கும் பூதங்களாக அல்லாமல் மனமுவந்து பணி புரியும் பணியாட்களாய் அவற்றை

மாற்றிவிடலாம். இந்த வேறுபாடு புயலின் போதான மின்னலிலான மின்விசையின் அழிவுச் சக்திக்கும் தந்தியிலும் வோல்டா மின் வளைவிலும் பணிந்து செயல்படும் மின்விசைக்கும் இடையிலுள்ளது போன்றதாகும்; நாசம் விளைக்கும் பெருந்தீயிற்கும் மனிதனுக்குச் சேவை புரியும் நெருப்புக்கும் இடையிலான வேறுபாடு போன்றதாகும். இன்றைய உற்பத்திச் சக்திகளுடைய மெய்யான தன்மை முடிவாய் இவ்விதம் புரிந்து கொள்ளப்பட்டதும், பொருளுற்பத்தியின் சமூக அளவிலான அராஜகம் ஒழிந்து அதனிடத்தில் சமுதாயத்தின் தேவைகளுக்கும் ஒவ்வொரு தனி மனிதனின் தேவைகளுக்கும் ஏற்ப வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பொருளுற்பத்தியின் சமூக அளவிலான ஒழுங்கியக்கம் கோலோச்சும். உற்பத்திப் பொருள் முதலில் உற்பத்தியாளரையும் பிறகு சுவீகரிப்பாளரையும் அடிமை செய்யும்படியான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மறைந்து, அதனிடத்தில் நவீன உற்பத்தி சாதனங்களது இயல்பின் அடிப்படையில் உற்பத்திப் பொருள்களை சுவீகரித்துக் கொள்ளப்படும் முறை அப்பொழுது உதித்தெழும். அதாவது, ஒரு புறத்தில் பொருளுற்பத்தியின் பராமரிப்பு மற்றும் விரிவாக்கத்துக்கான சாதனங்கள் என்ற முறையில், நேரடியான சமூக சுவீகரிப்பையும், மறு புறத்தில் பிழைப்புக்கும் சுகானுபோகத்துக்குமான சாதனங்கள் என்ற முறையில் நேரடியான தனி மனித சுவீகரிப்பையும் அடிப்படையாய்க் கொண்ட சுவீகரிப்பு முறை ஏற்படும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மக்கள் தொகையில் மிகப் பெரும்பாலோரை மேலும் மேலும் முழுமையாய்ப் பாட்டாளி வர்க்கத்தோராய் மாற்றும் அதே பொழுதில், தானே அழியாதிருக்க வேண்டுமாயின், இந்தப் பெருமாற்றத்தைச் செய்து முடிக்கும்படியான கட்டாயத்துக்கு உள்ளாகும் ஒரு சக்தியையும் அது தோற்றுவிக்கிறது. ஏற்கெனவே சமூகமயமாகி விட்ட பிரம்மாண்டமான பொருளுற்பத்தி சாதனங்களை மேலும் மேலும் அரசின் சொத்தாக மாற்றமடையும்படி நிர்ப்பந்தம் செய்யும் அதே போதில் இந்தப் பெருமாற்றத்தினைச் செய்து முடிப்பதற்கான வழியையும் முதலாளித்

துவப் பொருளுற்பத்தி முறை தானே சுட்டிக் காட்டு கிறது. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு உற்பத்தி சாதனங்களை முதலாவதாக அரசுச் சொத்தாய் மாற்றுகிறது.

ஆனால் இதைச் செய்வதன் மூலம் அது பாட்டாளி வர்க்கம் என்ற தனது நிலைக்கே முடிவு கட்டிக் கொள் கிறது, எல்லா வர்க்க வேறுபாடுகளுக்கும் வர்க்கப் பகைமைகளுக்கும் முடிவு கட்டுகிறது, அரசு அரசாய் இருப்பதற்கும் முடிவு கட்டுகிறது. இது வரை சமுதாயம் வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில் அமைந்திருந்த தால் அதற்கு அரசு தேவைப்பட்டது, அதாவது அந் தந்தக் காலத்தில் சுரண்டும் வர்க்கமாய் இருக்கும் குறிப் பிட்ட வர்க்கத்துக்கான ஒழுங்கமைப்பு ஒன்று தேவைப் பட்டது; அதன் பொருளுற்பத்தியின் புற நிலைமைகளைப் பராமரிக்கவும், இன்னும் முக்கியமாய் சுரண்டப்படும் வர்க்கங்களை அந்தந்தப் பொருளுற்பத்தி அமைப்புக்கு (அடிமை முறை, பண்ணையடிமை முறை, கூலி உழைப்பு முறை) பொருத்தமான ஒடுக்கு முறை நிலையில் பலவந்த மாக வைத்திருப்பதற்கும் ஓர் ஒழுங்கமைப்பு தேவைப் பட்டது. இந்த அரசு சமுதாயம் முழுவதன் அதிகார பூர்வமான பிரதிநிதியாக, கண்கூடான அதன் உருவகத் திரட்சியாக விளங்கிற்று. ஆனால் எந்த வர்க்கம் தன் னுடைய காலத்தில் சமுதாயம் முழுவதற்கும் தானே பிரதிநிதியாக இருந்ததோ அந்த வர்க்கத்தின் அரசாய் இருந்த அளவுக்குத்தான், அதாவது புராதன காலத்தில் அடிமையுடைமைக் குடிகளின் அரசாகவும், மத்திய காலத் தில் பிரபுக்களின் அரசாகவும், நாம் வாழும் இக்காலத் தில் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாகவும் இருந்த அளவுக்குத்தான், அரசால் இவ்வாறு விளங்க முடிந்தது. இறுதியில் அரசானது சமுதாயம் முழுமைக்கும் மெய் யான பிரதிநிதியாகும் போது, அது தன்னைத் தானே அவசியமற்றதாக்கிக் கொள்கிறது. இனி கீழ்ப்படுத்தி வைக்க வேண்டிய சமூக வர்க்கம் எதுவும் இல்லாமல் போனதும் வர்க்க ஆதிக்கமும், பொருளுற்பத்தியில் தற்போதுள்ள அராஜகத்தின் அடிப்படையில் நடை பெறும் தனியார் வாழ்வுப் போராட்டமும், இந்தப்

போராட்டம் காரணமாய் எழும் மோதல்களும், மட்டுமீறிய செயல்களும் நீக்கப்பட்டதும் அடக்கி வைப்பதற்கு எதுவும் இல்லாமல் போகிறது, ஆதலால் தனிவகை அடக்கு முறை சக்தியான அரசு இனிமேல் அவசியமில்லை என்ருகிறது. எந்த முதல் செய்கையிலே அரசானது உண்மையிலே சமுதாயம் முழுவதின் பிரதி நிதியாகத் தன்னைத்தானே அமைத்துக் கொள்கிறதோ— அதாவது, சமுதாயத்தின் சார்பில் உற்பத்தி சாதனங் களைப் பறிமுதல் செய்கிறதோ—அதே முதல் செய்கை தான் அரசு என்ற முறையில் அது சுதந்திரமாகச் செய் யும் கடைசிச் செய்கையுமாகும். ஒரு துறைக்குப் பின் ஒரு துறையாக, சமுதாய உறவுகளில் அரசாட்சி தலை யிடுவது அனுவசியம் என்று ஆகிக் கொண்டு வந்து, பிறகு அது தாளுகவே அற்றுப் போகிறது. மனிதர்களை ஆளு வது என்பது போய் அதன் இடத்தில் விவகாரங்களை நிர்வகிப்பது, உற்பத்தி இயக்கப் போக்குகளை நடத்து வது என்பது ஏற்படுகிறது. அரசு ''ஒழிக்கப்படவில்லை'', அது தாளுகவே உலர்ந்து உதிர்ந்து போகிறது. ''சுதந்திர மக்கள் அரசு''[11] என்னும் தொடர்—கிளர்ச்சியாளர்கள் சில சமயம் அதை நியாயமாகவே பயன்படுத்துவதிலும், முடிவில் விஞ்ஞான வழியில் குறைபாடானதாய் இருந்ததையும், மற்றும் அக்கணமே அரசு ஒழிக்கப்பட வேண்டும் என்னும் அராஜகவாதிகளின் கோரிக்கை எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும் மேற்கூறியது புலப்படுத்துகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வரலாற்றில் உதித்தெழுந்தது முதலாகவே, உற்பத்தி சாதனங்கள் யாவும் சமுதாயத்தால் சுவீகரிக்கப்பட வேண்டும் என்பதை வருங்காலத்துக்குரிய ஒரு இலட்சியமாகத் தனி மனிதர்களும் குழுவினர்களும் தெளிவற்ற முறையில் கனவு கண்டு வந்துள்ளனர். ஆளுல் இது சித்தி பெறு வதற்கு வேண்டிய எதார்த்த நிலைமைகள் தோன்றிய பிறகே இது சாத்தியமாக முடியும், வரலாற்று அவசிய மாக முடியும். ஏனைய எந்த ஒரு சமூக முன்னேற்றத்தை யும் போலவே இது வர்க்கங்கள் இருப்பது நீதிக்கும் சமத்துவத்துக்கும் இன்ன பிறவற்றுக்கும் முரணுகும்

என்று மனிதர்கள் உணர்வதாலோ, அல்லது இந்த வர்க்கங்களை ஒழிக்க வேண்டும் என்று வெறுமனே விரும்புவதாலோ நடைமுறை சாத்தியமாகவில்லை, மாறாக சில குறிப்பிட்ட புதிய பொருளாதார நிலைமைகளின் காரணமாகவே நடைமுறை சாத்தியமாகிறது. சுரண்டும் வர்க்கமாகவும் சுரண்டப்படும் வர்க்கமாகவும், ஆளும் வர்க்கமாகவும் ஒடுக்கப்படும் வர்க்கமாகவும் சமுதாயம் பிளவுண்டதானது முற்காலங்களில் பொருளுற்பத்தியின் வளர்ச்சி பற்றாக்குறையாகவும் குறுகிய வரம்புக்குட்பட்டதாகவும் நிலவியதால் ஏற்பட்டதன் தவிர்க்க முடியாத விளைவாகும். மொத்த சமூக உழைப்பால் கிடைக்கும் உற்பத்திப் பொருட்கள் எல்லோருடைய உயிர் வாழ்வுக்கும் வேண்டிய அத்தியாவசிய அளவைக் காட்டிலும் சொற்ப அளவே அதிகமாய் இருக்கும் வரை, இதன் காரணமாய்ச் சமுதாயத்தின் உறுப்பினர்களில் மிகப் பெருவாரியானோரின் முழுநேரமும் அல்லது அனேகமாய் முழுநேரமும் உழைப்புக்காக ஈடுபடுத்த வேண்டியிருக்கும் வரையில் இந்தச் சமுதாயம் தவிர்க்க முடியாதவாறு வர்க்கங்களாய்ப் பிளவுற்றிருக்க வேண்டியதாகிறது. முற்றிலும் உழைப்பிலே மட்டும் ஈடுபட வேண்டிய கொத்தடிமைகளான மிகப் பெருவாரியுடன் கூடவே நேரடியான பொருளுற்பத்திக்குரிய உழைப்பில் இருந்து விடுபட்ட ஒரு வர்க்கம் தோன்றி உழைப்பை நெறிப்படுத்தல், அரசு, சட்டம், விஞ்ஞானம், கலை விவகாரங்கள் போன்ற சமுதாயத்தின் பொது அலுவல்களைக் கவனித்து வருகிறது. ஆகவே உழைப்புப் பிரிவினை விதிதான் வர்க்கப் பிரிவினைக்கு அடிப்படையாய் அமைகிறது. ஆனால் இந்த வர்க்கப் பிரிவினை பலாத்காரம், கொள்ளை, சூழ்ச்சி மற்றும் மோசடி மூலம் செயல்படுத்தப்படுவதை இது தடுக்கவில்லை. ஆதிக்க நிலை பெற்றதும் ஆளும் வர்க்கம் தொழிலாளி வர்க்கத்துக்குப் பிரதி கூலமாகத் தனது ஆதிக்கத்தை உறுதியாக வலுப்படுத்திக் கொள்வதையோ, சமுதாயத்தில் தனக்கிருந்த தலைமையினைப் பெருந்திரளான மக்களை [மேலும் கடுமையாக] சுரண்டுவதற்காக மாற்றிக் கொள்வதையோ இது தடுக்கவில்லை.

ஆனால் வர்க்கப் பிரிவினைக்கு இந்த விதத்தில் வர

லாற்றுவழியில் ஓரளவு நியாயம் உண்டெனில், இது குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே குறிப்பிட்ட சமூக நிலைமைகளின் கீழ் மட்டுமே உள்ளதாகும். இதற்குப் பொருளுற்பத்தியின் போதாமையே அடிப்படையாக இருந்தது. இது நவீன உற்பத்திச் சக்திகளுடைய முழு வளர்ச்சியால் துடைத்தெறியப்பட்டுவிடும். உண்மையில் சமுதாயத்தில் வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு வரலாற்று வழியிலான பரிணும வளர்ச்சி குறிப்பிட்ட ஓர் அளவுக்கு இருப்பது முன்நிபந்தனையாகும். இந்தப் பரிணும வளர்ச்சி ஏற்பட்டதும், குறிப்பிட்ட இந்த அல்லது அந்த ஆளும் வர்க்கம் மட்டுமன்றி, ஆளும் வர்க்கம் என்பதாய் எதுவும் இருப்பதும், ஆகவே வர்க்கப் பாகுபாடு இருப்பதும் காலங் கடந்து போய்ச் சிறிதும் ஒவ்வாதனவாகிவிடும். சமுதாயத்தின் எந்த வர்க்கமும் உற்பத்தி சாதனங்களையும் உற்பத்திப் பொருள்களையும் சுவீகரித்துக் கொள்வதும், அதோடு கூட அரசியல் ஆதிக்கம் செலுத்துவதும், கலாசார ஏகபோகமும் அறிவுத்துறை தலைமையும் வகிப்பதும் தேவையற்றதாவதுடன் வளர்ச்சிக்குப் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் அறிவுத்துறை வழியிலும் இடையூருகி விடும்படியான கட்டத்துக்குப் பொருளுற்பத்தி வளர்ச்சியுறுவது வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்குரிய முன்நிபந்தனையாகும்.

இந்த வளர்ச்சிக் கட்டம் தற்போது எய்தப்பட்டுவிட்டது. அரசியல் துறையிலும் அறிவுத்துறையிலும் முதலாளித்துவ வர்க்கம் வக்கிழந்து வகையிழந்து விட்டது என்பது முதலாளித்துவ வர்க்கத்துக்கே இனி ஓர் இரகசியமாய் இருப்பதாய்க் கூற முடியாது. இவ்வர்க்கத்தாரின் பொருளாதார ரீதியில் திவாலாகின்ற நிலை பத்தாண்டுக்கு ஒரு தரம் முறையாய் மீண்டும் வெளிப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தரமும் நெருக்கடியின் போது சமுதாயம் அதனுடைய உற்பத்திச் சக்திகள், உற்பத்திப் பொருள்களது சுமையின் கீழ் திணறித் திக்குமுக்காடுகிறது. இந்த உற்பத்திச் சக்திகளையும் உற்பத்திப் பொருட்களையும் சமுதாயத்தால் உபயோகித்துக் கொள்ள முடியவில்லை; உற்பத்தியாளர்களுக்கு நுகர ஏதுமில்லை, ஏனென்ருல் நுகருவோர் போதியளவு இல்லை என்னும் இந்த அபத்த முரண்பாட்டின்

முன்னால் சமுதாயம் ஒன்றும் செய்ய இயலாததாய் நிற்கிறது. உற்பத்தி சாதனங்களுடைய விரிவகற்சியின் வலிமை முதலாளித்துவ உற்பத்தி முறை அவற்றின் மீது திணித்துள்ள கட்டுக்களை உடைத்தெறிகிறது. இந்தக் கட்டுக்களிலிருந்து உற்பத்தி சாதனங்கள் விடுதலை பெறுவது உற்பத்திச் சக்திகள் இடைமுறிவு இன்றி இடையறாது துரித வேகத்தில் வளர்ச்சி பெறுவதற்கும் இவ்விதம் பொருளுற்பத்தி அனேகமாய் வரம்பின்றிப் பெருகிச் செல்வதற்குமான ஒரேயொரு முன்நிபந்தனையாகும். இது மட்டுமல்ல. உற்பத்தி சாதனங்களைச் சமுதாயம் சுவீகரித்துக் கொள்வதானது தற்போது பொருளுற்பத்திமீது இருந்து வரும் செயற்கையான தடைகளை ஒழித்துக் கட்டுவதோடு கூட இன்று பொருளுற்பத்தியின் தவிர்க்க முடியாத உடனிணைவுகளாகி நெருக்கடிகளின் போது உச்ச நிலைக்கு உக்கிரமாகிவிடும் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்திப் பொருள்களின் அப்பட்டமான விரயத்துக்கும் அழிவுக்கும் முடிவு கட்டிவிடும். தவிரவும் இன்றைய ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசியல் பிரதிநிதிகளும் புரிந்து வரும் அர்த்தமற்ற ஊதாரித்தனத்துக்கு முடிவு கட்டுவது மூலம் அது பொதுவில் சமுதாயத்துக்குப் பெரிய அளவில் உற்பத்தி சாதனங்களையும் உற்பத்திப் பொருள்களையும் விடுவித்துக் கொடுக்கும். சமூகமயமான பொருளுற்பத்தி மூலம் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொருளாயத நிலையில் முற்றிலும் போதுமானதும் நாளுக்கு நாள் மேலும் பூரணமாகி வருவதுமான வாழ்வை மட்டுமன்றி எல்லோருக்கும் தமது உடல் ஆற்றல்களும் உள்ளத்து ஆற்றல்களும் தங்கு தடையின்றி வளர்ச்சியடைவதற்கும் செயல்படுவதற்கும் உத்தரவாதம் செய்யும் வாழ்வையும் கிடைக்கச் செய்வதற்கான சாத்தியப்பாடு இப்பொழுது இருப்பதோடு, கைவரப் பெறவும் செய்கிறது.*

---

* முதலாளித்துவ ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தும் கூட நவீன உற்பத்தி சாதனங்களின் அபாரமான விரிவகற்சி வலிமையைத் தோராயமாக உணர்த்துவதற்கு ஒரு சில புள்ளிவிவரங்களைக் குறிப்பிடலாம். திரு ஜிஃபன் தரும் மதிப்பீடுகளின் படி கிரேட் பிரிட்டன், அயர்

உற்பத்தி சாதனங்களைச் சமுதாயம் கைப்பற்றிக் கொண்டதும், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கு முடிவு கட்டப்பட்டு விடுகிறது; இதனுடன் கூடவே உற்பத்தியாளரை உற்பத்திப் பொருள் அடக்கி ஆண்மை செலுத்துவதும் ஒழிந்து விடுகிறது. சமூகப் பொருளுற்பத்தியில் அராஜகம் ஒழிக்கப்பட்டு, திட்டப் பொருத்தமுடைய, உணர்வு பூர்வமான ஒழுங்கமைப்பு உண்டாக்கப்படுகிறது. தனி மனிதனின் பிழைப்புப் போராட்டம் மறைகிறது. இதன்பின் முதல் முதலாய் மனிதன் ஒரு வகை அர்த்தத்தில் விலங்கின உலகிலிருந்து முடிவாய்த் துண்டித்துக் கொண்டு விலங்கின வாழ் நிலைமைகளிலிருந்து வெளிப்பட்டு மெய்யான மனித வாழ் நிலைமைகளினுள் பிரவேசிக்கிறான். மனிதனது சுற்றுச் சார்பாய் அமைந்து, இதுகாறும் மனிதனை ஆட்சி செய்து வந்த வாழ் நிலைமைகள் இப்பொழுது மனிதனுடைய ஆதிக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு விடுகின்றன; முதன் முதலாய் மனிதன் இயற்கையின் மெய்யான உணர்வு பூர்வமான அதிபதி ஆகின்றான். ஏனெனில் இப்பொழுது அவன் தனது சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி புரியும் எஜமானன் ஆகி விடுகிறான். அவனுடைய சமூகச் செயற்பாடுகளின் விதிகள், இது காறும் இயற்கை விதிகளாய் அவனுக்கு அன்னியமாய் இருந்து ஆதிக்கம் செலுத்தி அவனை ஆட்டிப் படைத்த இந்த விதிகள், இனி அவனால் பூரணமாய்

---

லாந்து இவற்றின் மொத்தச் செல்வம் முழுத் தொகைகளில்,

*1814ல்—2,20,00,00,000* பவுனாகவும்
*1865ல்—6,10,00,00,000* ,,
*1875ல்—8,50,00,00,000* ,,

இருந்தது.

நெருக்கடியின் போது உற்பத்தி சாதனங்களும் உற்பத்திப் பொருள்களும் விரயமாக்கப்படுவதற்கு ஓர் உதாரணம்: கடைசி நெருக்கடியின் போது ஜெர்மன் இரும்புத் தொழிலில் மட்டும் இரண்டாவது ஜெர்மன் தொழில் துறைக் காங்கிரசில் (பெர்லின், 1878, பிப்ரவரி 21) தரப்பட்ட விவரங்களின் படி 2,27,50,000 பவுன் மொத்த நஷ்டம் உண்டாயிற்று. **[எங்கெல்சின் குறிப்பு.]**

உணரப்பட்டுப் பயன்படுத்திக் கொள்ளப்படும்; ஆகவே மனிதன் இவற்றின் மீது ஆண்மை செலுத்துகிறவன் ஆகி விடுவான். இது காறும் இயற்கை மற்றும் வரலாற்றுல் தவிர்க்க முடியாதது என்று மனிதனுக்கு எதிராக திணிக் கப்பட்டு வந்த மனிதனது சொந்த சமூக ஒழுங்கமைப் பானது இப்போது அவனது கட்டற்ற செயல்பாட்டின் விளைவாகிறது. இது வரை வரலாற்றை ஆளுமை செய்த அயலான புறநிலை சக்திகள் நேரடியாய் மனிதனது கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. அது முதல்தான் மனிதன் முழு உணர்வுடன் தனது சொந்த வரலாற்றைத் தானே படைப்பவனுவான்; அது முதல்தான் அவனுல் இயக்கு விக்கப்பட்ட சமுதாய நோக்கங்கள் பிரதானமாயும் இடையருத அதிகரித்த அளவிலும் அவன் உத்தேசித்த விளைவுகளை அடையும். அவசியத்தின் ஆட்சியிலிருந்து சுதந்திரத்தின் ஆட்சிக்கு மனிதகுலத்தின் பாய்ச்சலை இது குறிப்பதாகும்.

உலகளாவிய இந்த விடுதலைப் பணியினைச் செய்து முடிப்பது நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையாகும். இந்தச் செயலுக்கான வரலாற்று நிலைமை களையும் அதோடு கூடவே இதன் தன்மையையும் தீர்க்க மாய்ப் புரிந்து கொண்டு, தற்போது ஒடுக்கப்பட்டதாய் இருக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்த நிலைமைகளை யும் அது செய்து முடிக்க வேண்டிய சகாப்தகரச் சிறப் புடைத்த இந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் முழு அளவில் தெரியப்படுத்துவது தான் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தத்துவார்த்த வெளியீடாகிய விஞ்ஞான சோஷலிசத்தின் கடமை.

...உற்பத்தி தானுகவே வளர்ச்சியடைந்துள்ள ஒவ் வொரு சமுதாய அமைப்பிலும்—நமது நிகழ்கால சமூகம் இந்த மாதிரியானதே—இருக்கும் நிலைமையில் உற்பத்தி யாளர்கள் உற்பத்தி சாதனங்கள் மீது ஆதிக்கம் செலுத்த வில்லை; மாருக உற்பத்தி சாதனங்கள் உற்பத்தியாளர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. இத்தகைய சமுதாய அமைப்பில் உற்பத்தியின் ஒவ்வொரு புதிய நெம்பு கோலும் உற்பத்தி சாதனங்களிடம் உற்பத்தியாளர்களை

ஆட்படுத்தும் புதிய வழிமுறைகளாகத் தவிர்க்க முடியாதபடி உருமாற்றப்படுகிறது. நவீனத் தொழில் துறை புகுத்தப்படுவதற்கு முன்னுல் ஆக வலிமை வாய்ந்ததாக விளங்கிய உற்பத்தியின் நெம்புகோலான உழைப்புப் பிரிவினை விஷயத்தில் இது மிகப் பெருமளவு மெய்யாகியுள்ளது. முதல் மாபெரும் உழைப்புப் பிரிவினை—நகரத்தையும் நாட்டுப்புறத்தையும் தனியே பிரித்த பிரிவினை—நாட்டுப்புற மக்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் படுமந்தமான மனப்போக்கில் ஆழ்த்தியது, நகர மக்களை அவர் தம் சொந்த தனிப்பட்ட தொழிலுக்கு அடிப்படுத்தியது. இது முந்திய பகுதியினரின் அறிவுத்துறை வளர்ச்சிக்கும் பிந்திய பகுதியினரின் உடல் வளர்ச்சிக்குமான அடித்தளத்தை அழித்தது. விவசாயி தனது நிலத்தையும் நகரவாசி தன் தொழிலையும் கைப்பற்றிக் கொள்ளும் பொழுது நிலம் விவசாயியையும், தொழில் நகரவாசியையும் அதே அளவுக்குப் பற்றிக் கொள்கின்றன. உழைப்புப் பிரிவினையில் மனிதனும் பிரிவுறுகிருன். தனி ஒரு செயல்பாட்டின் வளர்ச்சிக்காக அனைத்து உடல் மற்றும் மனம் சார்ந்த திறன்களும் தியாகம் செய்யப்படுகின்றன. இவ்வாறு மனிதனது வளர்ச்சி தடைப்படுத்தப் படுதல் உழைப்புப் பிரிவினை போன்று அதே அளவில் பெருக்கமடைகிறது, உழைப்புப் பிரிவினை பட்டறைத் தொழிலில் தன் ஆக உயர் வளர்ச்சியை அடைகிறது. பட்டறைத் தொழில் ஒவ்வொரு தொழிலையும் அதன் தனிப்பட்ட பகுதி இயங்குமுறைகளாகப் பிரிக்கிறது; இவை ஒவ்வொன்றையும் ஒரு தனிப்பட்ட தொழிலாளியிடம் அவனது வாழ்க்கைத் தொழில் என்ற முறையில் ஒப்படைக்கிறது; இவ்வாருக அவனை வாழ்க்கை முழுவதும் ஒரு குறிப்பிட்ட தனிவகைச் செயலுடன், ஒரு குறிப்பிட்ட கருவியுடன் பிணைத்து விடுகிறது. ''பெருமளவிலான உற்பத்தி ஆற்றல்களையும் இயல்பூக்கங்களையும் இழக்க வைத்து அவனது தனிவகை அருந்திறனை வலுவந்தப் படுத்துவது மூலம் ஒரு தொழிலாளியை முடமாக்கப்பட்ட கோர உருவாக மாற்றிவிடுகிறது... தனிநபர் கூறிடப்பட்ட இயங்குமுறையின் தானியங்கு விசைப்பொறி ஆக்கப் படுகிருன்'' (மார்க்ஸ்). பெரும்பாலானேர் விஷயத்தில்

இந்த விசைப்பொறி, தொழிலாளியை உடலிலும் உள்ளத்திலும் வெளிப்படையாக முடமாக்குவது மூலமே செவ்வைப்படுத்தப்படுகிறது. நவீனத் தொழில் துறையின் இயந்திரங்கள் தொழிலாளியை ஒரு இயந்திரம் என்ற நிலையில் இருந்து ஒரு இயந்திரத்தின் வெறும் பின் சேர்ப்பு என்ற அளவுக்குத் தரம் தாழ்த்துகின்றன. ''அதே ஒரு கருவியைக் கையாளுவதிலான வாழ்நாள் முழுதிலுமான தனித் திறமை இப்போது அதே ஒரே இயந்திரத்திற்குச் சேவை செய்யும் வாழ்நாள் முழுதிலுமான தனித் திறமையாகிறது. தொழிலாளியை, அவனது குழந்தைப் பருவம் தொட்டே, ஒரு தனிவகை இயந்திரத்தின் பகுதியாக உருமாற்றம் செய்யும் நோக்கத்துடன் இயந்திரங்கள் தவறுகப் பயன்படுத்தப்படுகின்றன'' (மார்க்ஸ்). தொழிலாளர்கள் மட்டுமன்றித் தொழிலாளர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ சுரண்டிவரும் வர்க்கங்களும் கூட, உழைப்புப் பிரிவினை மூலம், அவர்களது செயல்பாட்டுக் கருவிக்கு அடிப்படுத்தப்படுகின்றனர்: ஆன்மிக வெறுமையைக் கொண்ட முதலாளி தனது சொந்த மூலதனத்துக்கும் லாபத்திற்குமான வெறி பிடித்த பேராசைக்கு அடிமையாகிறுன்; வழக்குரைஞர் சுதந்திர சக்தியாக ஆதிக்கம் செலுத்திவரும் தமது புதைபடிவமாகிய சட்டக் கருத்தோட்டங்களுக்கு ஓர் அடிமையாகிறுன்; ''படித்த வர்க்கங்கள்'' பொதுவாகப் பலவிதமான ஸ்தல குறுமனப்போக்குகள், ஒரு சார்புத் தன்மை, தமது சொந்தப் பௌதிக மற்றும் மனம் சார்ந்த குறுநோக்கு, தனிப்பட்ட கல்வி, தனிப்பட்ட செயல்பாட்டுடன்—இந்தத் தனிப்பட்ட செயல்பாடு வெறுமனே ஒன்றும் செய்யாமையாக இருப்பினும்—வாழ்நாள் முழுதும் பிணைக்கப்பட்டிருப்பது ஆகியவற்ருல் அடிப்படுத்தப்படுகின்றனர்.

ஒரு புறத்தில் தொழிலாளியின் வளர்ச்சியைத் தடுப்பதும் மறு புறம் வாழ்க்கை முழுதுமான ஒரே மாதிரியான, அதே இயங்கு முறையினை இயந்திரிகமாக மீண்டும் மீண்டும் நடத்துவதோடு வரையறுக்கப்பட்டதான தொழிலாளர் பணியின் வளர்ச்சியைத் தடுப்பதுமான உழைப்புப் பிரிவினையின் விளைவுகள் பற்றிக் கற்பனுவாதி

கள்[12] தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிருர்கள். நகருக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண்தன்மை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் இது பழைய உழைப்புப் பிரிவினையை முற்றிலுமாக ஒழிப்பதற்கான முதல் முன் தேவை எனவும் ஓவனைப் போலவே ஃபூரியேயும் கோரியிருந்தார். மக்கள் தொகை நாடு முழுவதிலும் 1,600 முதல் 3,000 பேர்கள் கொண்ட கோஷ்டிகளாகப் பரவலாக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு கோஷ்டியும் நிலத்தின் மையத்தில் இருந்த ஒரு பிரம்மாண்டமான மாளிகையில் வசிக்க வேண்டும், குடும்ப அலுவல்கள் சமுதாய வழிகளில் நடத்தப்பட வேண்டும் என்று இருவரும் நினைத்தார்கள். ஃபூரியே எப்போதாவது நகரங்களைப் பற்றிக் குறிப்பிடுகிருர் என்பது உண்மையே, ஆனல் இவை ஒன்றுக்கொன்று அருகருகே உள்ளதான இத்தகைய நாலைந்து மாளிகைகளைக் கொண்டதாகவே இருக்கும். சமூகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் விவசாயத்திலும் தொழில் துறையிலும் பணிபுரிய வேண்டும் என்றே இரு நூலாசிரியர்களும் விரும்பினர்கள். ஃபூரியே தொழில் துறையில் பிரதானமாயும் கைவினைத் தொழிலையும் பட்டறைத் தொழிலையும் உட்படுத்தியிருந்தார், அதே பொழுதில் ஓவன் நவீனத் தொழில் துறைக்கே முக்கிய பாத்திரத்தை ஒப்படைக்கிருர்; வீட்டு வேலைகளுக்கு நீராவி சக்தியும் இயந்திரங்களும் புகுத்தப்பட வேண்டும் என்று ஏற்கெனவே கோருகிருர். விவசாயம் மற்றும் தொழில் துறைக்குள் ஒவ்வொரு தனிநபருக்கும் ஆக அதிக சாத்தியமான அளவுக்குப் பல்வகைப்பட்ட வேலைகளைத் தரவும், இதற்கு ஏற்ப இளைஞருக்கு சாத்தியமான அளவு அதிகப்பட்சமான சர்வாம்ச தொழில் நுட்பச் செயல்பாடுகளுக்கான பயிற்சியை வழங்கவும் வேண்டும் என்று இருவரும் கோருகின்றனர். சர்வாம்ச நடைமுறைச் செயல்பாடு மூலம் மனிதன் சர்வப் பொதுவான வளர்ச்சியினை அடைதல் வேண்டும், உழைப்பானது முதலில் வேலையின் வகைமாற்றம் காரணமாயும் (ஃபூரியேயின் சொல்லில் கூறினல்) குறிப்பிட்ட ஒரு வகையான வேலைக்கு ஈடுபடுத்தப்படும் ''அமர்வின்'' குறுகிய காலம் காரணமாயும் உழைப்புப் பிரிவினையால் அழிக்கப்பெற்றுவிட்டதான தன் கவர்ச்சித்தன்மையினை உழைப்பு மீட்டுப்

பெறவேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஹெர் டூரிங் வாரிசாகப் பெற்ற சுரண்டும் வர்க்கங்களின் சிந்தனைப் பாங்கு விஷயத்தில் ஃபூரியே மற்றும் ஓவன் இருவருமே மிகவும் முந்தி இருந்தார்கள், டூரிங்[13] கருத்துப் படி நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண்தன்மை நிலைமைகளின் இயல்பு காரணமாகத் தவிர்க்க முடியாததாகும். குறிப்பிட்ட எண்ணிக்கை யுள்ள ''நபர்கள்'' எப்படியும் தனி ஒரு பொருளை மட்டுமே உற்பத்தி செய்யும் கதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குறுகிய நோக்கு அவர்களது வாழ்க்கை முறை யினால் வேறுபடுத்திக் காட்டப்படும் மனிதர்களின் ''பொருளாதார வகையினை'' நிரந்தரமாக்க விரும்பும் நோக்கு. அதற்கு ஏற்ப, வேறு எதையும் அன்றிக் குறிப் பாக இதையே செய்வதில் மகிழ்ச்சி காணும் மக்கள் மிகவும் தாழ்ந்த நிலைக்கு இறங்கி தமது சொந்த அடிமைத் தனத்திலும் ஒரு சார்புப் போக்கிலும் அகமகிழ்ச்சி அடைகிறார்கள். ''மடையன்'' என்ற (அடைமொழிக்குள் ளான) ஃபூரியேயின் மிகவும் கண்மண்தெரியாத துணிந்த கற்பனைகளின் அடிப்படைக் கருத்தோட்டங்களுடன் ஒப்பு நோக்கின், ஓவனின் ''முரடான, பலவீனமான, அற்ப மான'' ஆகச் சொற்பமான கருத்துக்களுடன் ஒப்புநோக் கின் ஹெர் டூரிங் தாமே இன்னும் ஒரு துடுக்கான குள்ளனைப் போன்று உழைப்புப் பிரிவினையால் முழுமை யாக ஆதிக்கம் செலுத்தப்படுகிறார்.

உற்பத்தி சாதனங்கள் அனைத்துக்கும் தன்னைத்தானே எஜமானனாக்கிக் கொள்ளவும் ஒரு சமூகத் திட்டப்படி அவற்றைப் பயன்படுத்தவும் முயலும் சமுதாயமானது, மனிதர்கள் தமது சொந்த உற்பத்தி சாதனங்களுக்கு ஆட்பட்டுக் கிடந்த முன்னாள் நிலைமைக்கு முடிவு கட்டு கிறது. ஒவ்வொரு தனிநபரும் விடுவிக்கப்பட்டாலன்றி சமுதாயம் தன்னைத்தானே விடுவித்துக் கொள்ள முடி யாது என்பது சொல்லாமலே விளங்கும். எனவே பழைய உற்பத்தி முறை அடிமுதல் முடிவரைப் புரட்சிகரமாக மாற்றப்பட வேண்டும், குறிப்பாக முன்னாள் உழைப்புப் பிரிவினை மறைய வேண்டும். அதற்குப் பதிலாக நிறுவப் படும் உற்பத்தி அமைப்பில் ஒரு புறம் எந்த ஒரு தனி

நபரும் மற்றவர்கள் தோள்கள் மீது மனித வாழ்க்கையின் இயல்பான நிபந்தனையான உற்பத்தித் திறனுள்ள உழைப்பின் தமது பங்கைச் சுமத்த முடியாது; மறுபுறம் உற்பத்தித் திறனுள்ள உழைப்பு மனிதர்களை அடிமைப்படுத்தும் ஒரு சாதனமாக இல்லாமல், ஒவ்வொரு தனிநபரும் தனது உடல் மற்றும் உள்ளத்து ஆற்றல்களை எல்லாத் திசைகளிலும் வளர்த்துக் கொள்ளவும் அவற்றை முழுமையாகச் செயல்படுத்தவுமான வாய்ப்பினை வழங்குகிறது; எனவே இதன் கீழ் உற்பத்தித் திறனுள்ள உழைப்பு ஒரு சுமையாக இல்லாமல் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

இன்று இது ஆகாசக் கற்பனையோ அல்லது செயல்படா விருப்பமோ அல்ல. உற்பத்திச் சக்திகளின் இன்றைய வளர்ச்சி, உற்பத்திச் சக்திகள் சமூகமயமாதல், முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவான தடைகள் மற்றும் தொந்தரவுகள் ஒழிக்கப்படுதல், உற்பத்திப் பண்டங்களும் உற்பத்தி சாதனங்களும் விரயமாவது தவிர்க்கப்படுதல் ஆகியவற்றால் பொருளுற்பத்தி பெருகுவதானது ஒவ்வொருவரும் தமது பங்கு வேலையைச் செய்யும் பட்சத்தில், உழைப்பதற்கு அவசியமான நேரத்தை ஓர் அளவு வரைக் குறைப்பதற்குப் போதுமானது, இந்த நேரம் இன்றைய கருத்தோட்டங்களை வைத்து அளவிடும் போது உண்மையில் சிறிதாகவே இருக்கும்.

பழைய உழைப்புப் பிரிவினையை ஒழிப்பது என்ற கோரிக்கையை நிறைவேற்றுவதில் உழைப்பின் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட வேண்டுவதில்லை. நிலைமை நேர் மாறானது, நவீனத் தொழில் துறை காரணமாக அது உற்பத்தியின் ஒரு நிபந்தனையாகிவிட்டது. ''இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதானது, பட்டறைத் தொழில் பான்மையில் ஒரு குறிப்பிட்ட நபரை ஒரு குறிப்பிட்ட பணியில் இடையறாது இணைத்து வைத்திருக்கும் வகையில், இந்த வினியோகத்தைக் கெட்டிப்படுத்த வேண்டிய அவசியத்தை அகற்றிவிடுகிறது. இந்த அமைப்பு முழுவதன் இயக்கமும் தொழிலாளியிடமிருந்து துவங்குவதில்லை மாறாக இயந்திரத்திலிருந்து துவங்குவதால் வேலையில் எவ்வித இடைமுறிவும் இன்றி எந்த நேரமும் ஆட்களை மாற்று

வது நடைபெறலாம்.... கடைசியாக, இளைஞர்கள் இயந்திர-வேலையை மிகவும் விரைவாகக் கற்றுத் தெரிந்து கொள்வதால், இயந்திரங்களில் வேலைசெய்வதற்கு என்று தனியாகத் தனிவகையான ஊழியர்களை வளர்த்துக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை.'' இயந்திரங் களைப் பயன்படுத்தும் முதலாளித்துவ முறை மரத்துப் போன தனித் தொழிலுடன் கூடிய பழைய உழைப்புப் பிரிவினையை — தொழில்நுணுக்க நோக்குநிலையிலிருந்து இது மிகையாகிவிட்ட போதிலும்—தவிர்க்க முடியாத வகையில் நிரந்தரமாக்குகிறது, ஆனால் இந்தப் பத்தாம் பசலிப் போக்கை எதிர்த்து இயந்திரமே கலகம் புரி கிறது. நவீனத் தொழில் துறையின் தொழில்நுட்ப அடித் தளம் புரட்சிகரமானது. ''இயந்திரங்கள், இரசாயனச் செய்முறைகள் மற்றும் இதர முறைகளின் மூலம் அது உற்பத்தியின் தொழில்நுட்ப அடித்தளத்தில் மட்டுமன்றி, தொழிலாளியின் பணிகளிலும் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கின் சமூக இணைப்புகளிலும் தொடர்ச்சியாக மாற்றங்களை விளைத்து வருகிறது. அதே சமயம் அது சமூகத்திற்குள் உழைப்புப் பிரிவினையைப் புரட்சிகரமாக மாற்றுகிறது, பெருந்திரளான மூலதனத்தையும் உழைக் கும் மக்களையும் உற்பத்தியின் ஒரு பிரிவிலிருந்து இன் னொன்றுக்கு இடையறாது இறக்கிவிடுகிறது. தனது இயல்பு காரணமாக, நவீனத் தொழில் துறையானது உழைப்பில் மாற்றம், செயல்பாட்டில் நெகிழ்வு, தொழி லாளரின் சர்வப்பொதுவான இயங்குமாற்றல் ஆகிய வற்றை இன்றியமையாதனவாக்குகிறது.... இந்த முற்ற முழு முரண்பாடு, தொழிலாளி வர்க்கத்தினிடையிருந்து இடையறாது மனித பலி வாங்கியும், உழைப்புச் சக்தி யைத் துடுக்குத்தனமாக வீணடித்தும், சமூக அராஜகம் மூலம்... நாசம் விளைத்தும் தனது ஆத்திரத்தைக் காட்டு கிறது என்பதை நாம் கண்டோம். இது எதிர்மறை அம்சம். ஆனால் ஒரு புறம், தற்போது உழைப்பில் மாற்றம் செய்வது அடக்க முடியாத இயற்கை விதி என்ற பான்மை யில், எல்லாக் கட்டங்களிலும் எதிர்ப்புக்குள்ளாகும் இயற்கை விதியின் கண்மூடித்தனமான நாசகரச் செய

லுடன் தன்னைத்தானே திணித்துக் கொள்கிறது என்றால், மறு புறத்தில் நவீனத் தொழில் துறையானது அதன் பேரிடர்கள் மூலம் உழைப்பில் மாற்றத்தை, இதன் பின் விளைவாக பல்வகையான வேலைகளைச் செய்வதற்கான தொழிலாளியின் தகுதி சாத்தியமானவரை மிகப்பெரும் வளர்ச்சி சமூக உற்பத்தியின் அடிப்படை விதி என்று அங்கீகரிக்கும் அவசியத்தைத் திணிக்கிறது. இந்த விதியின் சகஜமான செயல்பாட்டுக்கு உற்பத்தி முறையினைத் தகவமைத்துக் கொள்வது சமுதாயத்துக்கு ஒரு ஜீவ மரணப் பிரச்சினையாகிறது. ஒரே மாதிரியான அற்பமான செயலையே வாழ்நாள் முழுதும் திரும்பத் திரும்பப் புரிந்து முடமாக்கப்பட்டு ஒரு மனிதத் துண்டமாக்கப் பட்டுள்ள இன்றைய சிறுவேலைத் தொழிலாளி அகற்றப் பட்டு அந்த இடத்தில் பல்வகையான உழைப்புக்குத் தகுதியுள்ள, உற்பத்தி மாறுதல் எதையும் எதிரிடத் தயாராக உள்ள முற்றிலும் வளர்ச்சியடைந்த நபரை அமர்த்த வேண்டும் இல்லையேல் சாவுதான் என்று சமுதாயத்தைக் கட்டாயப்படுத்துகிறது நவீனத் தொழில் துறை; வளர்ச்சியடைந்த இந்த நபர் தான் புரியும் பல்வேறு சமுதாயப் பணிகளைத் தனது சொந்த இயற்கையாற்றல்களுக்கும், தேடிப் பெற்றதான ஆற்றல்களுக்கும் தாராளமான வாய்ப்புக்களை வழங்கும் பல்வேறு பாங்குகளே என்று கருதுகிறான்'' (மார்க்ஸ், மூலதனம்).

கிட்டத்தட்ட சர்வாம்சங்களிலும் நடைமுறை சாத்தியமான மூலக்கூறுகளின் இயக்கத்தினைத் தொழில்நுட்ப நோக்கங்களுக்கான பொருண்மைகளின் இயக்கமாக மாற்றுவதற்கு நமக்குப் போதித்துள்ள நவீனத் தொழில் துறை இதன் மூலம் உற்பத்தியை ஸ்தலக் கட்டுப்பாடுகளிலிருந்து கணிசமான அளவுக்கு விடுவித்துள்ளது. நீர்விசை ஸ்தலத்துக்குரியது; நீராவி சக்தி கட்டுப்பாடற்றது. நீர்விசை இன்றியமையாத வகையில் நாட்டுப்புறத்தைச் சார்ந்திருக்கிறது, ஆனால் நீராவி சக்தி நகர்ப்புறத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற கட்டாயத் தேவை இல்லை. முதலாளித்துவப் பயன்பாடுதான் இதைப் பிரதானமாயும் நகரங்களில் செறியும்படி செய்கிறது, தொழில் கிராமங்களைத் தொழில் நகரங்களாக மாற்றுகிறது. இவ்வாறு

செய்யும் போது இது அதே சமயத்தில் தொழில் துறை இயங்கிவரும் நிலைமைகளைக் குலைக்கிறது. நீராவி எஞ்சினின் முதல் தேவையும், நவீனத் தொழில் துறையின் ஏறத்தாழ எல்லா உற்பத்திப் பிரிவுகளின் பிரதானத் தேவையும் ஓரளவு சுத்தமான தண்ணீரே. ஆனால் தொழில் நகரம் எல்லாத் தண்ணீரையும் நாற்றமடிக்கும் எருவாக மாற்றி விடுகிறது. எனவே நகரப்புறச் செறிவு என்பது எவ்வளவுதான் முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை நிபந்தனையாக இருந்த போதிலும், ஒவ்வொரு தனிப் பட்ட தொழில் துறை முதலாளியும் இந்தச் செறிவினால் தவிர்க்க முடியாத படி படைக்கப்பட்ட பெரிய நகரங்களிலிருந்து வெளியேறவும், தனது ஆலையை நாட்டுப் புறத்துக்கு மாற்றவும் இடையறாது முயல்கிறார். இந்த நிகழ்ச்சிப் போக்கை லங்காஷயர் மற்றும் யார்க்ஷயர் போன்ற ஜவுளி ஆலைத்தொழில் மாவட்டங்களில் விவரமாக ஆய்வு செய்யலாம்; நகரங்களிலிருந்து நாட்டுப் புறத்திற்கு இடையறாது வெளியேறுவதன் மூலம் நவீன முதலாளித்துவத் தொழில் துறை இடைவிடாமல் புதிய பெரிய நகரங்களைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறது. உலோகத் தொழில் மாவட்டங்களிலும் நிலைமை இதுவே; அங்கு வேறு காரணங்களும் ஓரளவுக்கு இதே விளைவைக் கொண்டுவருகின்றன.

நவீனத் தொழில் துறையின் முதலாளித்துவத் தன்மை ஒழிக்கப்பட்டால் மட்டுமே இந்தப் புதிய நச்சுச் சுழலிலிருந்து நாம் வெளியேற முடியும், இடையறாது தன்னைத் தானே மறு உற்பத்தி செய்து கொள்ளும் நவீனத் தொழில் துறையிலான இந்த முரண்பாட்டுக்குத் தீர்வு காண முடியும். தனியொரு விரிவான திட்டத்தின் அடிப் படையில் உற்பத்திச் சக்திகளை ஒன்றுக்கொன்று இசைவாக உறுதியாகப் பொருந்தச் செய்யக் கூடிய சமூக அமைப்பு மட்டுமே தொழிலின் சொந்த அபிவிருத்திக்கும் மற்றும் இதர உற்பத்திக் கூறுகளைப் பராமரித்து வளர்ப்பதற்கும் சிறப்பாகப் பொருந்தக் கூடிய வழியில் நாடு முழுவதிலும் தொழில் துறை பரவலாக்கப்படுவதை அனுமதிக்க முடியும்.

எனவே, நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடை

யிலான முரண்தன்மையை ஒழிப்பது சாத்தியம் மட்டுமல்ல. இது தொழில் துறைப் பொருளுற்பத்தியின் நேரடி அவசியமாகிவிட்டது, விவசாயப் பொருளுற்பத்திக்குப் பொது சுகாதாரம் போன்று அவசியமாகிவிட்டது. நகரம் மற்றும் நாட்டுப்புறத்தின் கூட்டிணைவு மூலம் மட்டுமே காற்று, நீர் மற்றும் நிலத்தை இன்று விஷப்படுத்தும் நிலைமைக்கு முடிவு கட்ட முடியும்; இத்தகைய கூட்டிணைவு மட்டுமே இப்போது நகரங்களில் நலிவுற்றுவாடுகிற வெகுஜனங்களின் நிலைமையை மாற்றி அவர்களது கழிவுகள் நோய்களை உற்பத்திசெய்வதற்குப் பதில் தாவரங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுவனவாகச் செய்ய முடியும்.

தனது தேவைகளுக்கான மூலப்பொருள் ஆதாரங்களின் ஸ்தல வரம்புகளிலிருந்து முதலாளித்துவத் தொழில் துறை ஏற்கெனவே தன்னைத்தானே ஓரளவுக்கு சுதந்திரமாக்கிக் கொண்டு விட்டது. ஜவுளித் தொழில் பிரதானமாயும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களைக் கொண்டே இயங்குகிறது. ஸ்பெயின் நாட்டின் இரும்பு கனியம் இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் ஆலைகளில் பயன்படுத்தப்படுகிறது, ஸ்பெயின் நாட்டின் மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் செம்பு கனியம் இங்கிலாந்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நிலக்கரிக் களமும் இப்போது தனது எல்லைகளுக்கும் அப்பாற்பட்ட பிரதேசத்துக்கு நிலக்கரி வழங்குகிறது, இந்தப் பிரதேசம் ஆண்டுதோறும் விரிவடைந்து வருகிறது. ஐரோப்பியக் கடற்கரை முழுவதிலும் நீராவி எஞ்சின்களுக்கு இங்கிலாந்தின் நிலக்கரியும் ஓரளவுக்கு ஜெர்மன் நிலக்கரியும் பெல்ஜியன் நிலக்கரியும் பயன்படுத்தப்படுகின்றன. முதலாளித்துவ உற்பத்தியின் தடைவேலிகளிலிருந்து விடுதலைபெற்ற சமுதாய அமைப்பு இன்னும் பெருமளவு முன்னேறிச் செல்லலாம். சர்வாம்சப் பயிற்சி பெற்ற உற்பத்தியாளர் இனம் ஒன்றைப் பிறப்பிப்பதன் மூலம்—அவர்கள் ஒட்டு மொத்தமாகத் தொழில் துறை உற்பத்தியின் விஞ்ஞான அடிப்படையைப் புரிந்து கொண்டு, உற்பத்திப் பிரிவுகளின் முழு வரிசையிலும் அடிமுதல் முடிவரை அவர்கள் நடைமுறை அனுபவம் பெற்றுக் கொண்டார்கள்—

சமுதாயம் ஒரு புதிய உற்பத்திச் சக்தியைத் தோற்றுவிக்கிறது. இது மிகவும் தொலைவான இடங்களிலிருந்து மூலப் பொருள்களையும் எரிபொருள்களையும் ஏற்றிக் கொண்டு வருவதற்குத் தேவைப்படும் உழைப்பைப் பெருமளவு ஈடு செய்யும்.

நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையில் இருந்த பிரிவை ஒழிப்பது என்பது கற்பனுவாதமல்ல; நாடு முழுவதிலும் நவீனத் தொழில் துறையை சாத்தியமான அளவுக்கு மிகவும் சமமாகப் பங்கீடு செய்தல் மூலம் இது நெறியாக்கம் செய்யப்படுமானுல் இது சாத்தியமே. பெரிய நகரங்களில் நாகரிகம் நமக்கு விட்டுச் சென்றுள்ள மரபுரிமையை ஒழிப்பதற்கு அதிக நேரமும் அதிக சிரமமும் எடுக்கும் என்பது உண்மை. ஆனுல் இந்த நிகழ்ச்சிப் போக்கு எத்துணை நீடித்ததாக இருந்த போதிலும் இந்த மரபுரிமை கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டும், ஒழிக்கப்படும். பிரஷ்யன் தேசீய இனத்தின் ஜெர்மானிய சாம்ராஜ்யத்துக்கு என்ன கதி ஏற்பட்டாலும் சரி பெரிய நகரங்கள் அழிய வேண்டும் என்ற பிஸ்மார்க்கின் உள்ளத்தின் விருப்பம் நிச்சயமாயும் நிறைவேற்றப்படும் என்று பெருமையுடன் உணர்ந்தபடி அவர் சாவை வரிக்கலாம்.[14]

ஹெர் டூரிங்கின் கருத்துக்கள் எத்துணை சிறுபிள்ளைத் தனமாக இருக்கின்றன என்பதை இப்போது பாருங்கள்: பொருளுற்பத்தியின் பழைய முறையை அடிமுதல் முடிவரைப் புரட்சிகரமாக மாற்றுமல், முதலாவதாகப் பழைய உழைப்புப் பிரிவினைக்கு முடிவு கட்டாமல், சமூகம் ஒரே மொத்தமாக உற்பத்தி சாதனங்கள் அனைத்தையும் கைப்பற்ற முடியும்; ''இயற்கை நாட்டம் மற்றும் சொந்த ஆற்றல்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டால்'' எல்லாமே முறைப்படி இருக்கும். ஆனுல் முன்னைப் போலவே **தனி** ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு ஆட்பட்டுப் பெருந்திரளான நபர்கள் அப்படியே இருப்பார்கள்; ''மக்கள் தொகை'' முழுதுமே உற்பத்தியின் தனி ஒரு பிரிவில் ஈடுபடுத்தப்படும்; முன்போலவே மனித இனம் பல்வேறு முடமாக்கப்பட்ட ''பொருளாதார இனங்களாகத்'' தொடர்ந்து பிளவுபட்டிருக்கும், ஏனெனில் இன்னும் ''போர்ட்டர்கள்'' மற்றும் ''சிற்பிகள்'' இருக்

கிருர்கள். சமூகம் உற்பத்தி சாதனங்கள் ஒட்டுமொத்தத் திற்கும் எஜமானனுக வேண்டும்; அப்பொழுதுதான் ஒவ் வொரு தனிநபரும் அவரது உற்பத்தி சாதனத்திற்கு அடிமையாகத் தொடர்ந்து இருப்பார்; எந்த உற்பத்தி சாதனத்தால் அவர் அடிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதை மட்டுமே அவர் தேர்வு செய்து கொள்ள முடியும். ஹெர் டூரிங் நகரத்தையும் நாட்டுப்புறத்தையும் பிரிப்பது ''இயல்பாகவே தவிர்க்க முடியாதது'' என்று எவ்வாறு கருதுகிருர் என்பதையும், வெறிமது வடித்தல் மற்றும் பீட் சர்க்கரை உற்பத்தி என்ற இரண்டில், குறிப்பாயும் பிரஷ்யன் தொழில் பிரிவுகளில் மட்டுமே சிறு ஆறுதல் காண்கிருர் என்பதையும், அவர் எவ்வாறு நாட்டில் தொழில் துறையின் பங்கீட்டை ஒரு சில எதிர் காலப் புனைவுகளையும், மூலப்பொருள்களை முயன்று பெறு வதை தொழில் துறையுடன் நேரடியாக இணைப்பதன் அவசியத்தையும் சார்ந்ததாக்குகிருர் என்பதையும்—இந்த மூலப்பொருள்கள் அவை தோன்றுமிடங்களில் இருந்து மிகவும் அதிகமான தொலைதூரத்தில் ஏற்கெனவே பயன் படுத்தப்படுகின்றன! — பாருங்கள். தான் பின்வாங்கிச் செல்வதை இறுதியாக மூடி மறைக்கச் செய்யும் முயற்சி யில் ஹெர் டூரிங், முடிவில் சமுதாயத் தேவைகள் பொருளாதாரக் காரணங்களுக்குக்கூட எதிராக — இது ஏதோ பொருளாதாரத் தியாகம் போலும்!—விவசாயத் தையும் தொழில் துறையையும் இணைக்கும் என்று நமக்கு உறுதியளிக்கிருர்.

நகரத்தை நாட்டுப்புறத்திடமிருந்து பிரித்து வைப் பது உட்பட்ட பழைய உழைப்புப் பிரிவினையை ஒழித்து விடக் கூடியதும் உற்பத்தி முழுவதையும் புரட்சிகரமாக மாற்றக் கூடியதுமான புரட்சிகர சக்திகள் நவீன பெருவீதத் தொழில் துறையில் ஏற்கெனவே கருவுருவில் உள்ளன, அவற்றின் வளர்ச்சி தற்போது நிலவும் முதலாளித்துவ உற் பத்தி முறையினுல் தடைசெய்யப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டுமானுல், பிரஷ்யன் Landrecht என்ற நிலச் சட்டம் அமுலாகும் அரங்கைவிட மிகவும் விரிவான கண் ணோட்டம் அவசியம், வெறிமது மற்றும் பீட் சர்க்கரை உற்பத்தியே கேந்திரத் தொழிலாக இருக்கும், வர்த்தக

நெருக்கடியைப் புத்தக மார்க்கெட்டில் படித்தாராயத் தக்க ஓர் அரங்கைவிடவும் விரிவான கண்ணேட்டம் அவசியம். இவற்றைப் பார்ப்பதற்கு உண்மையான பெருவீதத் தொழிலின் வரலாற்று வளர்ச்சி, அதன் இன்றைய எதார்த்த வடிவம், குறிப்பாக அதன் தாயகமான ஒரு நாட்டில், எங்கு அது சிறந்த மாதிரி வளர்ச்சியைப் பெற்றுள்ளதோ அங்கு இருக்கும் நிலைமை பற்றிய அறிவு அவசியம். இதன் பின் எவரும் நவீன விஞ்ஞான சோஷலிசத்தைக் கொச்சைப்படுத்தவோ மற்றும் ஹெர் டூரிங்கின் **பிரத்தியேகமான பிரஷ்யன் சோஷலிசமாக** அதை இழிவுபடுத்தவோ முயல்வது பற்றி எண்ணமாட்டார்கள்.

*1876 செப்டம்பர்—1878 ஜூனில்*
*எழுதப்பட்டது*

## இயற்கையின் இயக்க இயல்
### என்ற நூலிலிருந்து

மனிதனுடன் வரலாறு துவங்குகிறது. விலங்குகளுக்கும் அவைகளின் இனத் தோற்றத்திலிருந்து தொடங்கி, படிப்படியாக இன்றைய நிலைக்கு எவ்வாறு பரிணமித்தன என்று ஒரு வரலாறு உண்டு. இருந்தாலும் கூட, இந்த வரலாறு அவைகளுக்காக உண்டாக்கப்பட்டதே; அதில் அவைகளே பங்குபற்றும் அளவுக்கு அவைகளுடைய உணர்வும் விருப்பமும் இல்லாமலே இது நிகழ்கிறது. இதற்கு மாறாக, மனிதர்கள் — குறுகிய பொருளில் — விலங்குகளிடமிருந்து எந்த அளவுக்கு விலகிச் செல்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் தங்களது வரலாற்றைத் தாங்களே உணர்வுபூர்வமாகப் படைக்கின்றனர்; இதனால், அந்த அளவுக்கு எதிர்பாராத விளைவுகளினுடையவும், கட்டுக்குள் இல்லாத சக்திகளுடையவும் பாதிப்புகள் இந்த வரலாற்றின்மீது குறைந்து, முன்கூட்டியே நிர்ணயித்த குறிக்கோளுடன் வரலாற்றுப் பூர்வமான விளைவும் மேலும் திட்பநுட்பமாகப் பொருந்துகிறது. ஆனால், இந்த அளவுகோலை மனித வரலாற்றிற்கு வைத்துப் பார்த்தோமெனில், தற்போது மிக அபிவிருத்தியடைந்துள்ள மக்களின் வரலாற்றுக்கு வைத்துப் பார்த்தாலும் கூட, கொள்ளப்பட்ட குறிக்கோள்களுக்கும் பெறப்பட்ட பலன்களுக்கும் பிரம்மாண்டமான தகவு வேறுபாடு இன்னும் கூட உள்ளது என்பதையும், எதிர்பாராத விளைவுகளே மேலோங்கி நிற்கின்றன என்பதையும், திட்டமிட்டு இயக்கிவிடப்பட்ட சக்திகளைக் காட்டிலும் கட்டுக்குள் இல்லாத சக்திகளே அதிக வலுவுடன் விளங்குகின்றன என்பதை

யும் நாம் காண்கிறோம். மனிதர்களின் மிக முக்கியமான சரித்திரபூர்வமான செயல்பாடு, அவர்களை விலங்குகளின் நிலையிலிருந்து மானுட நிலைக்கு உயர்த்தியதும் அவர்களின் இதர எல்லாச் செயல்பாடுகளுக்கும் பௌதிக அடித்தளமாக உள்ளதுமான செயல்பாடு—அதாவது அவர்களுடைய வாழ்க்கைத் தேவைப் பொருள்களை உற்பத்தி செய்துகொள்வது, நம் காலத்தில் சமுதாய உற்பத்தி எனப்படுவது—கட்டுக்குள் இல்லாத சக்திகளின் எதிர் பார்க்காத விளைவுகளின் பரஸ்பர வினைக்கு உள்ளாக்கப் பட்டு, விரும்பப்படுகிற குறிக்கோள் விதிவிலக்காக மட்டுமே அடையப்பட்டும், அதனால் பெரும்பாலாக அதற்கு நேர் எதிராகவே பெறப்பட்டும் இருக்கிற வரை அது வேறு விதமாக இருக்க முடியாது. தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ள நாடுகளில் இயற்கைச் சக்திகளை நாம் அடக்கி மனிதனுக்காக உழைக்குமாறு ஏவியிருக்கிறோம்; இதன் மூலமாக எல்லையற்ற அளவுக்கு, வயது வந்த நூறு பேர்கள் முன்பு உற்பத்தி செய்ததைவிட ஒரு சிறுவன் தற்போது அதிகமாக உற்பத்தி செய்யும் அளவுக்கு, உற்பத்தியைப் பெருக்கியுள்ளோம். இதன் பலன் என்ன? அதிகமாகிற வேலைப் பளுவும், அதிகமாகி வருகிற மக்களுடைய வறுமையும், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை பெரிய அளவுக்குச் சரிவுமேயாகும். வரலாற்று ரீதியான வளர்ச்சியின் சிகரம் எனப் பொருளாதாரவாதிகள் கொண்டாடும் சுயேச்சையான போட்டி, பிழைப்புப் போராட்டம் என்பது **விலங்கின உலகின்** சகஜமான நிலைப்பாடாகும் என டார்வின்[15] எடுத்துக்காட்டிய பொழுது, அவர் மனித குலத்தைப் பற்றி, விசேஷமாகத் தமது நாட்டவரைக் குறித்து எவ்வளவு கசப்பானதொரு நையாண்டி நூலை வரைந்துவிட்டார் என்பதை அவர் அறியவில்லை. உற்பத்தியும் வினியோகமும் திட்டமிட்டு நடத்தப்படுகிற, சமூக உற்பத்தி உணர்வுபூர்வமாக ஸ்தாபன ரீதியான அமைப்புக்குள் கொண்டு வரப்படுகின்ற போது தான் சமூகத் துறையிலும் மனித குலம் இதர விலங்கின உலகிலிருந்து மேலே உயர்த்தப்பட முடியும்; அதே முறையில் தான் பொதுவான பொருளுற்பத்தி இதைக் குறிப்பாக உயிரியல் துறையில் மனித குலத்

திற்குச் செய்தது. சரித்திரரீதியான பரிணுமம் என்பது அப்படிப்பட்டதொரு ஸ்தாபன ரீதியான அமைப்பைத் தானே தவிர்க்க முடியாததாக்குகிறது; ஒவ்வொரு நாளும் அதைச் சாத்தியமாக்கவும் செய்கிறது. அந்தக் காலத்தி லிருந்து வரலாற்றின் ஒரு புதிய சகாப்தம் துவங்கும்; அதில் மானுட வர்க்கமே, அத்துடன் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த அதனுடைய செயலாற்றல்களுமே, குறிப்பாக இயற்கை விஞ்ஞானமே, அடையக் கூடிய பெரும் முன் னேற்றம் இதற்கு முந்தியதனைத்தையும் வெகுதூரம் மிஞ்சித்திகழும்.

*1873—1883*க்கிடையே
பெரும்பகுதியும் எழுதப்பட்டு
*1885—1886*ல் முடிக்கப்பட்டது

## பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை

### என்ற நூலிலிருந்து

அப்படியானால் சிறு விவசாயிகளின் பால் நமது நிலை என்ன? நாம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுகிற சந்தர்ப்பத்தில் சிறு விவசாயிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டியிருக்கும்?

முதலாவதாக, சிறு விவசாயியின் அழிவு தவிர்க்க முடியாதது என்பதை நாம் முன்னூகிக்கிறோம்; ஆனால் நாம் தலையிடுவதன் மூலமாக அதைத் துரிதப்படுத்துவது நம்முடைய இலட்சியமல்ல என்று பிரெஞ்சு வேலைத் திட்டத்தில்[16] சொல்லப்பட்டிருப்பது முற்றிலும் சரியானதே.

இரண்டாவதாக, அரசு அதிகாரம் எங்கள் கையில் இருக்கும் காலத்தில் நாங்கள் சிறு விவசாயிகளின் சொத்தைப் பலவந்தமாகப் பறிமுதல் செய்வதைப் பற்றிச் (நஷ்ட ஈடு கொடுத்துச் செய்வதா, கொடாமலே செய்வதா என்ற பேச்சுக்கோ இங்கு இடமில்லை) சிந்திக்கவும் மாட்டோம்; பெரிய நிலச்சுவான்தார்களின் விஷயத்தில் தான் நாங்கள் அப்படிச் செய்து தீர வேண்டும். சிறு விவசாயி சம்பந்தமாக நமது பணி என்னவென்றால், முதலில், அவரது தனியாள் உற்பத்தியையும் தனியுடைமையையும் கூட்டுறவு உற்பத்தியாகவும் கூட்டுறவு உடைமையாகவும் மாற்றுவதுதான்; இதைப் பலாத்காரமாகச் செய்யாமல், உதாரணத்தைக் கொண்டும், இந்த நோக்கத்துக்காகச் சமுதாய உதவியைத் தந்தும் செய்து வைப்போம். அதன் பிறகு சிறு விவசாயிக்கு இன்றைக்குக் கூட வெளிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டிய எதிர்கால அனுகூலங்களைக் காட்டுவதற்கு நிச்சயமாக நம்மிடம் நிறைய வழிவகைகள் இருக்கத்தான் போகின்றன.

டென்மார்க் நாட்டில் கோப்பன்ஹேகன் என்ற ஒரே ஒரு உண்மையான நகரம் மட்டுமே இருக்கிறது. எனவே டென்மார்க்கின் சோஷலிஸ்டுகள் அந்த நகரத்துக்கு வெளியே விவசாயிகள் மத்தியில் செய்யப்படும் பிரச் சாரத்தை மட்டுமே நம்பியிருந்த காரணத்தால், அவர் கள் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பே இத்தகைய திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கிராமத்தை அல்லது ஒரு சமய வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள்—டென்மார்க்கில் தனிப்பட்ட பெரிய குடி யிருப்புகள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன— தங்களுடைய நிலங்களை ஒன்று சேர்த்து ஒரு பெரிய பண்ணையை ஏற்படுத்துவது; அந்தப் பண்ணையில் பொது நிர்வாகத்தில் கூட்டாக விவசாயம் செய்து, மொத்த உற்பத்தியை ஒவ்வொருவரும் கொடுத்த நிலம், பணம், உழைப்பின் விகிதாச்சார அளவில் வினியோகம் செய் வது என்று திட்டமிடப்பட்டது. டென்மார்க்கில் சிறு நில உடைமை இரண்டாந்தரப் பாத்திரத்தை மட்டுமே வகிக்கிறது. ஆனால் சிறு நிலவுடைமைகள் இருக்கிற ஒரு பகுதியில் இந்தக் கருத்தை நாம் பயன்படுத்தினால், நிலங் களை ஒன்று சேர்த்து மொத்த நிலப்பகுதியில் பெரிய அளவில் விவசாயம் செய்தால், இதுவரை உபயோகப் படுத்தப்பட்டுவந்த உழைப்புச் சக்தியில் ஒரு பகுதி மிகை யாகிவிடும் என்பது தெரியவரும். இப்படி ஏற்படுகிற உழைப்புச் சேமிப்பு பெரிய அளவில் நடைபெறுகிற விவ சாயத்தில் இருக்கும் முக்கியமான சாதகங்களில் ஒன்று எனலாம். இந்த உழைப்புச் சக்தியை இரண்டு வழிகளில் பயன்படுத்தலாம். பக்கத்திலிருக்கும் பெரிய பண்ணை களிலிருந்து நிலத்தைக் கூடுதலாகப் பெற்று அதை விவசாயக் கூட்டுறவில் உபயோகத்தில் வைத்துக் கொள்ளலாம். அல்லது சம்பந்தப்பட்ட விவசாயிகள் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான சாதனங்களையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம்; இது அவர் களுக்கு ஒரு துணைத் தொழிலாகவும் முதன்மையாகவும் இயன்றவரையிலும் அவர்களுடைய உபயோகத்துக்காக வும் இருக்கும். இரண்டு வழிகளிலுமே அவர்களுடைய பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்படும்; அதே

சமயத்தில் அந்த விவசாயக் கூட்டுறவை ஒரு உயர்ந்த வடிவத்துக்குக் கொண்டு போவதற்கும் மொத்தத்தில் அந்தக் கூட்டுறவின் மற்றும் அதன் உறுப்பினர்களின் உரிமைகளேயும் கடமைகளேயும் அந்த மொத்த சமூகத்தின் மற்ற இலாகாக்களின் உரிமைகள் கடமைகளோடு சமப்படுத்துவதற்கும் தேவையான செல்வாக்கு அந்தப் பொதுவான, சமூக நிர்வகிக்கும் அமைப்புக்குக் கிடைக்கிறது. இதை ஒவ்வொரு குறிப்பிட்ட உதாரணத்திலும் எப்படி நிறைவேற்றுவது என்பது அந்த உதாரணத்தின் சந்தர்ப்பங்களேயும், நாம் எத்தகைய நிலேமைகளின் கீழ் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ருேம் என்பதையும் பொறுத்திருக்கும். இந்தக் கூட்டுறவுகளுக்கு மேலும் பல சலுகைகளேக் கொடுக்கக் கூடிய நிலேமையில் நாம் இருப்பது கூட சாத்தியமே. உதாரணமாக, மொத்த ஒத்திக் கடனேயும் தேசிய பாங்க் ஏற்றுக்கொண்டு அதே சமயத்தில் வட்டி விகிதத்தைக் கணிசமாகக் குறைப்பது; பெரிய அளவில் உற்பத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பொது நிதியிலிருந்து முன்பணம் கொடுத்து உதவுவது (இது முதன்மையாகவோ அல்லது கட்டாயமாகவோ பணமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில்லே; இயந்திர சாதனங்கள், இரசாயன உரம், இதர தேவையான பொருள்களாகக் கொடுக்கலாம்) முதலியவை.

விவசாயிகளின் வீடுகளேயும் வயல்களேயும் கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்ற கூட்டுறவுச் சொத்தாக மாற்றுவதன் மூலமாகவேதான் நாம் அந்தச் சொத்துக்களே அவர்களுக்காகக் காப்பாற்றவும் பாதுகாக்கவும் முடியும் என்பதை விவசாயிகள் புரிந்து கொள்ளுமாறு செய்வதுதான் முக்கியமான விஷயம். அதன் முக்கியத்துவம் தொடர்ந்து நீடிக்கும். தனிப்பட்ட சொத்துடைமையினுல் ஏற்படுகின்ற தனிப்பட்ட விவசாயம்தான் விவசாயிகளே அவர்களுடைய அழிவை நோக்கித் துரத்துகிறது. அவர்கள் தனிப்பட்ட வேலேமுறையே இருக்க வேண்டுமென்று வற்புறுத்திஞல், அவர்களுடைய காலாவதியாகிவிட்ட உற்பத்தி முறைக்கு பதிலாக முதலாளித்துவப் பெரிய அளவு உற்பத்தி ஏற்படும்; அவர்களும் தங்களுடைய வீடுகளிலிருந்தும் வயல்களிலிருந்தும் விரட்டப்படு

வதும் தவிர்க்க முடியாததாகிவிடும். இது தான் இன்றிருக்கும் நிலை எனலாம். இங்கே நாம் வருகிறோம். அவர்கள் பெரிய அளவு உற்பத்தியைக் கொண்டுவரக் கூடிய—இது முதலாளிகளின் நலனுக்காக இல்லாமல், அவர்களுடைய சொந்த நலனுக்காக, பொது நலனுக்காகக் கொண்டு வரப்படுகிறது—வாய்ப்பை அவர்கள் முன்வைக்கிறோம். இது விவசாயிகளின் சொந்த நன்மைக்கு உகந்தது; அவர்களுடைய விமோசனத்துக்கு இருக்கிற ஒரே வழி இதுவே என்று அவர்களைப் புரிந்து கொள்ளவைக்க உண்மையாகவே முடியாமற்போய் விடுமா?

முதலாளித்துவ உற்பத்தியின் அபரிமிதமான சக்திக்கு எதிராக உங்களுடைய தனிப்பட்ட சொத்துக்களையும் தனிப்பட்ட உற்பத்தியையும் பாதுகாப்போம் என்று சிறு நிலவுடைமை விவசாயிகளிடம் இப்பொழுதோ அல்லது வேறு எந்த சமயத்திலோ நாம் உறுதி கொடுக்கக் கூடாது. அவர்களுடைய சொத்து உறவுகளில்—அவர்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக—நாம் பலவந்தமாகத் தலையிட மாட்டோம் என்பதை மட்டுமே நாம் உறுதியாகக் கூற முடியும். மேலும், முதலாளிகளும் பெரிய நிலவுடைமையாளர்களும் சிறு விவசாயிகளுக்கு எதிராக நடத்துகிற போராட்டம் இன்று முதல் மிகவும் குறைந்த அநியாயமான வழிகளில் நடத்தப்பட வேண்டும், அடிக்கடி பின்பற்றப்படுகிற நேரடியான திருட்டும் ஏமாற்றுவதும் இயன்றவரை தடுக்கப்பட வேண்டும் என்று நாம் வற்புறுத்த வேண்டும். இதில் கூட நாம் ஒரு சில மிக விசேஷமான சமயங்களில் மட்டுமே வெற்றி பெற முடியும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் நேர்மை முடிவடைவது எங்கே, திருட்டுத்தனம் தொடங்குவது எங்கே என்று யாரும் சொல்ல முடியாது. எனினும் அரசு பொது அதிகாரம் ஏமாற்றியவனுக்கு ஆதரவாக இருக்கிறதா அல்லது ஏமாற்றப்பட்டவனுக்கு ஆதரவாக இருக்கிறதா என்பது எப்பொழுதுமே கணிசமான வித்தியாசத்தை ஏற்படுத்தும். நாம் திட்டவட்டமான முறையில் சிறு விவசாயிக்கு ஆதரவாக இருக்கிறோம். அந்தச் சிறு விவசாயியின் நிலைமையை இன்னும்

அதிக அளவுக்குத் தாங்கக் கூடியதாகச் செய்வதற்கு, அந்த விவசாயி கூட்டுறவில் சேருவதென்று முடிவு செய்து விட்டால் அந்த மாற்றத்தை சுலபமாக ஏற்படுத்துவதற்கு, அவரால் இன்னும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை என்ருல் அவர் நன்கு யோசித்து முடிவு செய்கிற வரையிலும் அந்தச் சிறு நிலவுடைமையை அதிக காலத்துக்கு அவர் வைத்துக் கொண்டிருப்பதற்கு நம்மாலியன்ற எல்லா வற்றையும் செய்வோம். தன்னுடைய சொந்த உழைப்பைக் கொண்டு உயிர் வாழ்கிற சிறு விவசாயி முற்றிலும் நம்மவர் என்பதற்காக மட்டுமின்றி, இது கட்சியின் நேரடியான நலனுக்கு ஏற்றது என்பதனுல் இதைச் செய் கிருேம். விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தினுள் தூக்கி எறியப்படுகிற நிலைமையில் அவர்களில் எவ்வளவு அதிக மான பேர்களை நாம் காப்பாற்றுகிருேமோ — அவர்கள் விவசாயிகளாக இருக்கும் பொழுதே நம் அணிக்கு அவர் களை வென்றுவிட்டோமானுல்—அவ்வளவு சீக்கிரமாகவும் சுலபமாகவும் சமூக மாற்றம் சாதிக்கப்பட்டுவிடும். முத லாளித்துவ உற்பத்தி எல்லா இடங்களிலும் அதன் மிகத் தீவிரமான அளவுக்கு வளர்ச்சியடைகிற வரை, கடைசி யாக மிஞ்சுகிற சிறு கைவினைஞரும் சிறு விவசாயியும் முதலாளித்துவப் பெரிய அளவு உற்பத்திக்குப் பலியாகும் வரை சமூக மாற்றத்துக்குக் காத்துக் கொண்டிருப்பதில் நமக்கு எந்தப் பயனுமில்லை. இந்த நோக்கத்தினுல் விவ சாயிகளின் நன்மையை முன்னிட்டுப் பொதுப் பணத்தைப் பயன்படுத்திச் செய்யப்படும் பொருளாயத தியாகம் முதலாளித்துவப் பொருளாதாரக் கருத்தோட்டப்படி பணத்தை வீணுக்குவது தான்; எனினும் பொதுவாக சமூகப் புனரமைப்பிற்கு ஏற்படுகிற செலவில் அது பத்து மடங்கு சேமிப்பை ஏற்படுத்துமாதலால் அது ஒரு சிறந்த முதலீடே. எனவே, இந்த நோக்கத்தின் பேரில் நாம் விவசாயிகளிடம் தாராள மனப்பான்மையோடு நடந்து கொள்ளலாம். இந்த முடிவுக்குப் பொருத்தமான ஸ்தூலமான ஆலோசனைகளைச் சொல்லவோ அல்லது நுணுக்கமான விவரங்களைச் சொல்லவோ இது இடமல்ல; இங்கே நாம் பொதுவான கோட்பாடுகளை மட்டுமே எடுத் துரைக்க முடியும்.

நாம் சிறு நிலவுடைமைகளை நிரந்தரமாகப் பாது காக்க உத்தேசிக்கிறோம் என்ற அபிப்பிராயத்தை மட்டுமே ஏற்படுத்தக் கூடிய வகையில் உறுதியளிப்பது சிறு விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் கட்சிக்கும் மிகப் பெரிய கெடுதலைச் செய்வதாகும். அது விவசாயிகள் விடுதலையடையக் கூடிய வழியை நேரடியாகவே தடுப்பதைப் போன்றதாகும்; கட்சியைக் காட்டுத்தனமான யூத எதிர்ப்பு நிலையின் தரத்துக்குக் கீழே இறக்கிவிடும். இதற்கு மாறாக, முதலாளித்துவம் ஆட்சி செலுத்துகிறவரையிலும் விவசாயிகள் நிலையில் சிறிதுகூட நம்பிக்கைக்கு வழியில்லை, அவர்களுடைய சிறு நிலவுடைமைகளை அப்படியே பாதுகாப்பது சிறிதும் சாத்தியமற்றது, கைவண்டியை ரயில் வண்டி நசுக்கிவிடுவதைப் போல அவர்களுடைய திறனற்ற, காலாவதியாகிப் போன சிறு அளவு உற்பத்தி முறையை முதலாளித்துவப் பெரிய அளவு உற்பத்தி நசுக்கிவிடுவது முற்றிலும் நிச்சயமானது என்பதை விவசாயிகளிடம் திரும்பத் திரும்பத் தெளிவுபடுத்துவது நமது கட்சியின் கடமையாகும். நாம் இதைச் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியின் தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்குக்கு ஏற்றமுறையில் நடந்தவர்களாவோம்; இந்த வளர்ச்சி நம் வார்த்தைகளில் இருக்கும் உண்மையைச் சிறு விவசாயிகளுக்கு நிச்சயமாக உணர்த்தும்.

நான்ட் வேலைத்திட்டத்தை உருவாக்கியவர்களும் அடிப்படையில் நான் தெரிவித்த கருத்துக்களையே கொண்டிருக்கிறார்கள் என்று நான் உறுதியாக நம்புவதை இங்கே தெரிவிக்காமல் இந்தப் பொருளை முடிப்பதற்கு நான் விரும்பவில்லை. இன்று சிறு நிலவுடைமைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற பகுதிகள் நாளை பொதுச் சொத்தாக மாறிவிடுவது நிச்சயம் என்பதை அவர்களைக் காட்டிலும் அவர்களுடைய நுண்ணறிவு நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறது. சிறு நிலவுடைமை கண்டிப்பாக மறைந்து விடும் என்பதை அவர்களே ஒத்துக் கொள்கிறார்கள். தேசிய கவுன்சிலின் சார்பில் லஃபார்க்[17] தயாரித்து நான்ட் காங்கிரசில் வெளியிடப்பட்ட அறிக்கையும் இந்தக் கருத்தை முழுவதுமே அங்கீகரிக்கிறது. அந்த அறிக்கை பெர்லினிலிருந்து வெளிவருகின்ற *Sozialdemokrat* பத்திரிகை

யில் இந்த வருடம் அக்டோபர் மாதம் 18ந் தேதிய இத ழில் வெளியிடப்பட்டிருக்கிறது. நான்ட் வேலைத்திட்டத் தைத் தயாரித்தவர்கள் எழுதியிருப்பது வேறு, உண்மை யில் அவர்கள் சொல்ல விரும்புவது வேறு என்பதை அதில் உபயோகித்திருக்கிற வார்த்தைகளின் முரண்பா டான தன்மை வெளிக்காட்டிவிடுகிறது. அவர்களைச் சரி யாகப் புரிந்து கொள்ளவில்லை; அவர்களுடைய கருத்துக் கள் தவருகப் பயன்படுத்தப்பட்டன என்ருல் அது அவர் களுடைய தவருகும். எனினும் அவர்கள் தங்களுடைய வேலைத்திட்டத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்; அடுத்த பிரெஞ்சு காங்கிரஸ் அதை நன்கு திருத்தியமைக்க வேண்டும்.

நாம் இப்பொழுது பெரிய விவசாயிகளுக்கு வரு வோம். இங்கே, பரம்பரையாகக் கிடைத்த சொத்துக்களின் பிரிவினையாலும் கடன்கள், நெருக்கடியால் ஏற்படும் நில விற்பனையாலும் சிறு நிலவுடைமை விவசாயியிலிருந்து பரம்பரையாகக் கிடைத்த சொத்தைச் சிதறவிடாது பாது காத்த அல்லது அதனோடு கூடுதலாகச் சேர்த்துக் கொண்ட பெரிய நிலவுடைமையாளர் வரை, இடை நிலைக் கட்டங் களின் கதம்பமான படிவத்தைப் பார்க்கிறோம். எங்கே மத்தியதர விவசாயி சிறு நிலவுடைமை விவசாயிகளோடு வசிக்கிருரோ அங்கே அவருடைய நலன்களும் கருத்துக் களும் அவர்களுடையவற்றிலிருந்து அதிகமாக வேறு பட்டிருக்காது. தன்னுடைய வகையைச் சேர்ந்தவர்களில் எவ்வளவு அதிகமானவர்கள் முன்பே சிறு நிலவுடைமை விவசாயிகளின் தரத்துக்குத் தாழ்ந்து போய்விட்டார்கள் என்பதை அவர் தன்னுடைய சொந்த அனுபவத்தி லிருந்தே தெரிந்திருப்பார். ஆனுல் எங்கே பெரிய அளவு, மத் தியதர விவசாயிகள் ஆதிக்கம் வகிக்கிருர்களோ, பொது வாக விவசாய வேலைகளைச் செய்வதற்கு வேலையாட்கள்— ஆண்களும் பெண்களும் — தேவைப்படுகிருர்களோ, அங்கே நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. ஒரு தொழிலா ளர் கட்சி முதலில் கூலி உழைப்பாளிகளுக்காக, அதாவது ஆண், பெண் வேலையாட்களுக்கும் தினக்கூலிக்கு உழைப் பவர்களுக்காகவும் போராட வேண்டியது அவசியம். தொழிலாளர்களின் கூலி அடிமைத்தனம் நீடிப்பதை

உள்ளடக்கிய எவ்விதமான உறுதிகளையும் விவசாயிகளுக்குக் கொடுப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்படுகிறது. ஆனால் பெரிய அளவு, நடுத்தர விவசாயிகள் அந்த நிலையிலேயே நீடிக்கும் வரையிலும் அவர்கள் கூலித் தொழிலாளர்களின் உதவியில்லாமல் தங்களுடைய பண்ணைகளை நிர்வகிக்க முடியாது. எனவே சிறு அளவு விவசாயிகள் அப்படியே நிரந்தரமாக நீடிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் மத்தியில் நாம் ஏற்படுத்துவது வடிகட்டிய முட்டாள்தனமாக அமையும் என்றால் அதே வாக்குறுதியைப் பெரிய அளவு, மத்தியதர விவசாயிகளுக்குக் கொடுத்தோமென்றால் அது துரோகம் செய்வது போன்றதே.

இங்கே மறுபடியும் இதற்கு இணையான நகரங்களில் உள்ள கைவினைஞர்களின் உதாரணம் இருக்கிறது. அவர்கள் விவசாயிகளைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு அழிந்துவிட்டார்கள் என்பது உண்மையே; ஆனால் பயிற்சியாளர்களோடு சேர்த்து கூலியாட்களைப் பயன்படுத்துபவர்கள் அல்லது கூலியாட்களின் இடத்தில் பயிற்சியாளர்களை வைத்திருப்பவர்கள் சிலர் இன்னும் இருக்கிறார்கள். இத்தகைய பிரதம கைவினைஞர்களில் தங்களுடைய வாழ்க்கையை அந்த விதமாகவே நிரந்தரப்படுத்திக் கொள்ள விரும்புபவர்கள் யூத எதிர்ப்பாளர்களோடு சேர்ந்து தங்கள் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளட்டும்; அங்கேயிருந்து தங்களுக்கு எத்தகைய உதவியும் கிடைக்காது என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்கிற வரையிலும் அங்கே இருக்கட்டும். தங்களுடைய உற்பத்தி முறை தவிர்க்க முடியாதபடி அழியப்போகிறது என்பதை உணர்ந்துவிட்ட மற்றவர்கள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்; மேலும் எதிர்காலத்தில் மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஏற்படப் போகிற நிலைமையைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். மேலே சொல்லப்பட்டது பெரிய அளவு, மத்தியதர விவசாயிகளுக்கும் பொருந்தக் கூடியதே. அவர்களைக் காட்டிலும் அவர்களுடைய வேலைக்காரர்கள்—ஆண்களும், பெண்களும்—தினக் கூலிக்கு உழைப்பவர்கள் மீது நாம் அதிகமான அக்கறை கொண்டிருக்

கிறோம் என்பதை இங்கே சொல்வது அவசியமல்ல. இந்த விவசாயிகள் அவர்களுடைய வாழ்க்கைமுறை தொடர்ந்து நீடிக்கும் என்ற உறுதிமொழியை விரும்பினூர்கள் என்றால் நாம் அத்தகைய நம்பிக்கையைத் தருவதற்குரிய நிலையில் இல்லை. அப்படியானால் அவர்கள் எல்லா வாக்குறுதிகளை யும் இஷ்டம் போலக் கொடுத்து எதையும் மறுக்காமல் மகிழ்ச்சியடைகிற யூத எதிர்ப்பாளர்கள், விவசாயக் கழகம் இன்னும் இவை போன்ற கட்சிகளோடு போய்ச் சேர்ந்து விட வேண்டும். பெரிய அளவு, மத்தியதர விவசாயிகளும் இதைப் போலவே முதலாளித்துவ உற் பத்தி முறை மற்றும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதியா கின்ற விலை மலிவான தானியத்தின் போட்டியில் சிக்கிச் சீரழிவது தவிர்க்க முடியாதது என்பது பொருளாதார ரீதியில் நமக்கு நன்றாகத் தெரிகிறது. இந்த விவசாயிகளி டம் அதிகரித்துவருகிற கடன்களும் எங்கு பார்த்தாலும் வெளிப்படையாகத் தெரிகின்ற அவர்களுடைய வீழ்ச்சி யும் இதை நிரூபிக்கிறது. இந்த வீழ்ச்சிக்கு எதிராக நாம் செய்யக் கூடியது ஒன்று தான். இங்கும் விவசாய நிலங்களை ஒன்று சேர்த்துக் கூட்டுறவு முறையில் அமைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்வோம். இவற்றில் கூலி உழைப்பைச் சுரண்டுவது மென்மேலும் அதிகமாக அகற்றப் படும்; இவற்றை ஒரு மாபெரும் தேசிய உற்பத்தியா ளர் கூட்டுறவின் கிளைகளாகப் படிப்படியாக மாற்று வதும், அதனுடைய எல்லாக் கிளைகளும் ஒரே விதமான உரிமைகளும் கடமைகளும் கொண்டிருக்கும் வகையில் அமைப்பதையும் செய்யலாம். இந்த விவசாயிகள் தங் களுடைய உற்பத்தி முறை தவிர்க்க முடியாத வகை யில் அழிந்துவிடப் போவதை உணர்ந்து, அதற்குரிய கட்டாயமான முடிவுகளை அடைந்துவிட்டால், வருவித்துக் கொண்டால் அவர்கள் நம்மை நோக்கி வருவார்கள்; புதிய உற்பத்தி முறைக்குத் தங்களை மாற்றிக் கொள் வதற்கு நாம் நமது முழுத் திறமையையும் பயன்படுத்தி அவர்களுக்கு உதவி செய்வது நமது கடமையாகும். இல்லையென்றால் நாம் அவர்களை எக்கேடாவது கெட்டுப் போகுமாறு விட்டுவிட்டு அவர்களுடைய கூலித் தொழி லாளர்களை நோக்கித் திரும்ப வேண்டியது தான்; அவர்கள்

மத்தியில் நமக்கு அனுதாபம் இருப்பது உறுதி. அநேக மாக இங்குமே நாம் பலவந்தமாகப் பறிமுதல் செய்ய வேண்டிய அவசியம் இல்லாது போய்விடலாம்; மற்றவை களைப் பொறுத்த வரையிலும் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற பொருளாதார வளர்ச்சிகள் இந்தக் கடின உணவையும் கூட ஏற்றுக் கொள்ளச் செய்யும் என்று நம்புவோம்.

பெரிய நிலவுடைமைச் சொத்துக்கள் மட்டுமே முற்றிலும் சுலபமாகத் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினையாகும். நாம் இங்கே சிறிது கூட மறைமுகமாக இல்லாத முதலாளித்துவ உற்பத்தியோடு சம்பந்தப்பட்டிருப்பதால் எப்படிப்பட்ட மன உறுத்தல்களும் நேர்மை உணர்ச்சியும் நம்மைத் தடுக்க வேண்டியதில்லை. இங்கே நமக்கு எதிரே நிற்பது பெருந்திரளாக உள்ள கிராமப்புறத் தொழிலாளர்கள் என்பதால் நமது கடமை மிகத் தெளிவாக இருக்கிறது. நம்முடைய கட்சி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய உடனே அது தொழிற்துறை முதலாளிகளிடமிருந்து பறிமுதல் செய்ததைப் போல பெரிய நிலவுடைமைக்குச் சொந்தக்காரர்களிடமிருந்தும் பறிமுதல் செய்ய வேண்டியதே. இந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்கிற பொழுது அவற்றுக்கென நஷ்ட ஈடு கொடுப்பதா, இல்லையா என்பது பிரதானமாக நம்மைப் பொறுத்த விஷயமல்ல; நாம் பதவியைக் கைப்பற்றும் சூழ்நிலைமைகளை—குறிப்பாக இந்தக் கனவான்கள், பெரும் நிலவுடைமையாளர்கள் எப்படிப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை — அதிகமாகப் பொறுத்திருக்கும். நஷ்ட ஈடு கொடுப்பது எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்கப்பட முடியாது என்று நாம் ஒரு போதும் கருதுவதில்லை. இவர்கள் அத்தனை பேரையும் மொத்தமாக விலைக்கு வாங்கிவிட்டால் நமக்கு வேலை மிகச் சுலபமாகிவிடும் என்று தம் கருத்தை மார்க்ஸ் என்னிடம் (எத்தனை தடவைகள்!) சொல்லியிருக்கிறார். எனினும், இங்கே இது நமக்கு முக்கியமல்ல. இவ்விதமாக மக்களிடம் திரும்ப வந்து சேருகிற பெரிய பண்ணைகளை அவற்றில் முன்பே பயிரிட்டுப் பாடுபடும் கிராமப்புறத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து, அவர்களைக் கூட்டுற

வாக அமைக்க வேண்டும். பொது மக்களின் கண்காணிப்பில் அவர்கள் பாடுபடவும் பலன் பெறுவதற்கும் இந்தப் பண்ணைகள் அவர்களிடம் கொடுக்கப்படுகின்றன. இந்த உரிமை எந்த நிபந்தனைகளின் பேரில் அவர்களுக்குத் தரப்படும் என்பதைப் பற்றி இப்பொழுது எதுவும் நிச்சயமாகச் சொல்வது இயலாது. எப்படி இருந்தபோதிலும் ஒரு முதலாளித்துவ பண்ணை சமூக பண்ணையாக மாறுவதற்கு முழுத் தயாரிப்புகள் செய்யப்பட்டு விட்டன; திருவாளர் குரூப் அல்லது திருவாளர் வான் ஷ்டம்மின் தொழிற்சாலையில் நடைபெறுவதைப் போல, ஒரே இரவுக்குள் இதை நிறைவேற்றிவிட முடியும். இந்த விவசாயக் கூட்டுறவுகளின் உதாரணம் பெரிய அளவு கூட்டுறவு உற்பத்தியின் சாதகங்களை இன்னும் ஏற்றுக்கொள்ளாதிருக்கிற கடைசி சிறு நிலவுடைமை விவசாயிகளையும், நிச்சயமாக பல பெரிய விவசாயிகளையும் கூட ஒத்துக் கொள்ளச் செய்யும்.

*1894 நவம்பர்*
*15க்கும் 22க்கும் இடையே*
*எழுதப்பட்டது*

# கடிதங்களிலிருந்து

## நியூயார்க் நகரத்திலிருந்த யோசிப் வெய்டமையருக்கு* கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து

*லண்டன், மார்ச் 5, 1852*

*என்னைப் பொறுத்தவரையிலும், நவீன சமூகத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவர்களுக்கிடையே நடைபெறுகிற போராட்டத்தையோ கண்டு பிடித்த பெருமை என்னைச் சேர்ந்ததல்ல. எனக்கு வெகு காலத்துக்கு முன்பே முதலாளித்துவ வரலாற்ருசிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றுரீதியான வளர்ச்சியையும், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்ளமைப்பையும் வர்ணித்திருக்கிருர்கள். நான் புதிதாக என்ன செய்தேன் என்ருல், அது கீழ்க் கண்டவற்றை விளக்கியது தான்:* **1) வர்க்கங்கள் இருப்பதென்பது உற்பத்தியின் வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களோடு** *இணைக்கப்பட்டிருக்கிறது, 2) வர்க்கப் போராட்டம் கட்டாயமாகத்* **தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு** *இட்டுச் செல்லும், 3) இந்த சர்வாதிகாரம் என்பது* **எல்லா வர்க்கங்களையும் ஒழிப்பதற்கும், வர்க்கபேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கும்** *மாற்றமாக இருக்கிறது. வர்க்கப் போராட்டத்தை மட்டுமல்லாமல் வர்க்கங்கள் இருப்பதைக் கூட மறுக்கிற ஹைன்ஸென் போன்ற அறிவில்லாத முட்டாள்கள்—அவர்கள் என்னதான் இரத்தம் சுண்டக் கூக்குரல் போட்டாலும், தங்களுக்கு மனிதாபிமானத்*

---

* **வெய்டமையர், யோசிப்** *(1818—1866)—ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் தொழிற்சங்க இயக்கங்களின் தலைவராக இருந்தவர்; மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் நண்பர்.*—ப-ர்.

தோற்றத்தைக் கொடுத்துக்கொண்ட போதிலும்—முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி செய்கின்ற சமூக நிலைமைகளை வரலாற்றின் கடைசிப் பொருளாக, non plus ultra* ஆகக் கருதுகிறார்கள் என்பதையும் அவர்கள் முதலாளிகளின் ஊழியர்கள் என்பதை மட்டுமே நிரூபிக்கிறார்கள். முதலாளித்துவ ஆட்சியின் கட்டாயமான தற்காலிகத் தன்மையையும் அதன் அளவையும் இந்த முட்டாள்கள் எவ்வளவு குறைவாகப் புரிந்து கொள்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுடைய குற்றேவல் அதிக அருவருப்புடையதாக இருக்கிறது.

---

* அடையக் கூடிய உச்சநிலை (லத்தீன்).—ப-ர்.

## வியென்னுவிலிருந்த கார்ல் காவுத்ஸ்கிக்கு* பிரெடெரிக் எங்கெல்ஸ்

### எழுதிய கடிதத்திலிருந்து

*லண்டன், பிப்ரவரி 1, 1881*
122, Regent's Park Road, N. W. **

*2. விரைவில் ஏற்படப் போகும் ஜனத்தொகைப் பெருக்கம் என்று சொல்லப்படுகிற ஆபத்தையும் அதன் மூலமாக நமது நவீன சமூக அமைப்பு அழிந்து போகக் கூடிய ஆபத்தையும் நாம் எவ்வாறு தவிர்க்க முடியும், இந்தப் புதிரை எவ்வாறு தீர்க்க முடியும் என்று அவர்களுக்கு நாம் காட்ட வேண்டுமென்று தொழிலாளி வர்க்க சோஷலிஸ்டுகளாகிய நம்மை கத்தேடெர் சோஷலிஸ்டுகள்[18] பிடிவாதத்தோடு விடாப்பிடியாக அறைகூவிய போதிலும் நான் அவர்களுக்கு இந்த மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும் என்பது அவசியமல்ல. இந்த நபர்களின் எல்லாக் கவலைகளையும் சந்தேகங்களையும்—அதற்கு அவர்களுடைய குழப்பமான அதிக மிகை அறிவுதான் காரணம்—அவர்கள் சார்பில் தீர்த்து வைப்பது அல்லது, உதாரணமாக, ஷாப்லே[19] மட்டுமே தம்முடைய பெரிய புத்தகங்கள் பலவற்றில் எழுதியிருக்கும் அச்சமூட்டக் கூடிய பிதற்றல்கள் அனைத்தையும் மறுத்து எழுதுவது முற்றிலும் நேரத்தை வீணாக்குவதுதான் என்று நான்*

---

* **காவுத்ஸ்கி, கார்ல்** *(1854—1938)—ஜெர்மனியின் சமூக-ஜனநாயக இயக்கத்திற்கும் இரண்டாவது அகிலத்திற்கும் தலைவராகவும் தத்துவாசிரியராகவும் இருந்தவர்; மத்தியத்துவத்தின் சித்தாந்தி; முதல் உலகப் போர் தொடங்கியதிலிருந்து மார்க்சியத்தைக் கைவிட்டவர்.*—**ப-ர்.**

*** 122, ரீஜென்ட் பார்க் ரோடு, நோர்ட்-வேஸ்ட்.* —**ப-ர்.**

கருதுகிறேன். இந்தக் கனவான்கள் **மூலதனத்திலிருந்து** மேற்கோள் காட்டுவது போல அதற்குரிய குறிகளுடன் எழுதியிருக்கும் **போலியான மேற்கோள்கள்** எல்லாவற்றை யும் திருத்துவதற்கு முயற்சித்தால் கூட அது ஒரு பெரிய அளவு புத்தகமாக வளர்ந்துவிடும். அவர்கள் தங்களுடைய கேள்விகளுக்கு பதில் கூறுமாறு நம்மை வற்புறுத்துவதற்கு முன்பாக முதலில் சரியாகப் படிக்க வும் பிரதியெடுக்கவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், அமெரிக்காவில் அபரிமிதமான உற்பத்தியும் **உண்மையிலேயே** பெரிய அளவு விவசாயமும் இப்பொழுது ஆரம்பமாகி, அந்த உணவுப் பொருள்களின் குவியலில் நம்மை உண்மையிலே மூழ்கடித்துவிடுவோம் என்று பய முறுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் பிரச்சினை அவ்வளவு அவசரமானதென்று நான் கருதவில்லை. இந்தக் கொந்தளிப்பின் முற்பொழுதில் நாம் இருக் கிறோம்; அதனுல் ஏற்படக் கூடிய பலவிதமான விளைவு களில் ஒன்று **பூமியில் முதன்முறையாக எல்லா இடங்களி லும் மக்கள் வசிக்குமாறு** செய்வதாகும்—இதைப் பற்றி 169—170ம் பக்கங்களில் நீங்கள் எழுதியிருப்பது இந்தப் பிரச்சினையை மிகவும் லேசாகவே தொட்டுச் செல் கிறது—அதனையொட்டி ஐரோப்பாவிலும் ஜனத்தொகை யில் பெரும் அதிகரிப்பு **கட்டாயமான தேவையாகிவிடும்** என் பது உறுதி....

மனித குலத்தின் எண்ணிக்கை மிகப் பெரிய அள வுக்கு உயர்கிற பொழுது, அதை அதிகரிக்காமல் செய் கின்ற தடைகள் தேவைப்படும் என்ற கருத்தியலான நிலை ஏற்படுவது உண்மையே. ஆனுல் கம்யூனிஸ்ட் சமூகம் முன்பே பொருள்களின் உற்பத்தியை ஒழுங்குபடுத்தியதைப் போல மனித உயிர்களின் உற்பத்தியையும் ஒழுங்கு படுத்த வேண்டிய கட்டாயம் தனக்கு ஏற்பட்டிருப்பதாகக் கம்யூனிஸ்ட் சமுதாயம் ஏதாவதொரு சமயத்தில் சிந்திக்க நேருமானுல், அப்பொழுது, அந்த கம்யூனிஸ்ட் சமூகம்—[அது] மட்டுமே—எத்தகைய சிரமமும் இல்லா மல் அதைச் செய்யும். இப்பொழுது பிரான்சிலும், கீழ் ஆஸ்திரியாவிலும் எத்தகைய திட்டமும் இல்லாமல் தானுகவே தோன்றி வளர்ந்த விளைவைக் கம்யூனிஸ்ட்

சமூகம் திட்டமிட்ட முறையில் ஏற்படுத்துவது அவ்வளவு சிரமமானதாக எனக்குத் தோன்றவில்லை. எப்படியிருந்த போதிலும் அந்த நோக்கத்தை அடைய அவர்கள் எந்த சாதனங்களை எங்கே, எப்படி, ஏன் கையாளுவார்கள் என்பது அந்த மக்களுடைய காரியமாகும். இந்த விஷயத்தில் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கும் அறிவுரை சொல்வதற்கும் எனக்குத் தகுதியிருப்பதாக நான் கருதவில்லை. இவர்கள் நம்மைப் போலவே கெட்டிக்காரர்களாக இருப்பார்கள் என்பது நிச்சயம்.

மற்ற விஷயங்களைப் பொறுத்தவரை நான் முன்பே 1844ம் வருடத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறேன்: ''மால்தஸ்[20] சொல்வது எத்தகைய மறுப்பும் சொல்ல முடியாத அளவுக்குச் சரியானதென்று வைத்துக் கொண்டாலும், இந்த (சோஷலிஸ்ட்) மாற்றத்தை உடனடியாக ஆரம்பிப்பது அவசியம். ஏனென்றால் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு எதிரான மிகவும் சுலபமான, மிகவும் பயன் தரக் கூடிய நடவடிக்கை இனப்பெருக்க உணர்ச்சியை தார்மிக முறையில் கட்டுப்படுத்துதல் என்று மால்தஸ் எடுத்துக் காட்டுகிற வழியை அது மட்டுமே சாத்தியமாக்குகிறது; அதன் மூலம் ஏற்படக் கூடிய வெகுஜனக் கல்வி மட்டுமே சாத்தியமாக்குகிறது'' (*Deutsch-Französische Jahrbücher*, பக்கம் 109).

## நியூயார்க் நகரத்திலிருந்த பிலீப் வான் பாட்டெனுக்கு* பிரெடெரிக் எங்கெல்ஸ்

### எழுதிய கடிதத்திலிருந்து

*லண்டன், ஏப்ரல் 18, 1883*

*எதிர்காலத் தொழிலாளி வர்க்கப் புரட்சியின் இறுதி விளைவுகளில்* **ஒன்று, அரசு** *என்று அழைக்கப்படுகிற அரசியல் ஸ்தாபனம் (செல்வம் படைத்த சிறுபான்மையினருக்கு உழைக்கும் பெரும்பான்மையினரை ராணுவ பலத்தின் மூலம் பொருளாதாரரீதியில் கீழ்ப்படுத்துவதே இந்த ஸ்தாபனத்தின் முக்கியமான நோக்கமாக எப்போதும் இருந்து வந்திருக்கிறது) படிப்படியாகக் கலைக்கப்பட்டு, அது கடைசியில் மறைந்து விடுவதே என்ற கருத்தை மார்க்சும் நானும் 1845ம் வருடத்திலிருந்தே வைத்துக் கொண்டிருந்திருக்கிறோம். சிறுபான்மையினரான செல்வந்தர்கள் மறைந்து விடும் பொழுது, ஆயுதந்தாங்கிய ஒடுக்கும் அரசு அதிகாரத்தின் அவசியமும் மறைந்து விடுகிறது. இதைச் சாதிப்பதற்கும் எதிர்கால சமூகப் புரட்சியின் இன்னும் அதிக முக்கியத்துவமுடைய மற்ற லட்சியங்களைச் சாதிப்பதற்கும் பாட்டாளி வர்க்கம் ஸ்தாபன ரீதியான அரசியல் சக்தியாகிய அரசை முதலில் கைப்பற்றிக்கொண்டு அதனுடைய உதவியோடு முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பை நசுக்கி, சமூகத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்றும் அதே சமயத்தில் நாங்கள் எப்போதும் கருதி வந்திருக்கிறோம். இதை* **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** *(1847) இரண்டாம் அத்தியாயத்தின் கடைசியில் முன்பே சொல்லியிருக்கிறோம்.*

---

* **பாட்டென், பிலீப் வான்**—*அமெரிக்க சோஷலிஸ்ட் தலைவர்.*—**ப-ர்.**

# பிரெஸ்லாவிலிருந்த ஒட்டோ வான் போனிக்கிற்கு* பிரெடெரிக் எங்கெல்ஸ்

## எழுதிய கடிதத்திலிருந்து

போல்க்ஸ்டோன், டோவருக்கு அருகே,
ஆகஸ்டு 21, 1890

உங்களுடைய கேள்விகளுக்கு[21] நான் சுருக்கமாகவும் பொதுப்படையான வகையிலும் தான் பதில் எழுத முடியும். இல்லாவிட்டால், முதல் கேள்விக்கு மட்டுமே நான் ஒரு பெரிய விரிவுரையே எழுத வேண்டியிருக்கும்.

1. என்னுடைய சிந்தனைக்கு எட்டிய வரை, ''சோஷலிஸ்ட் சமூகம்'' என்று சொல்லப்படுவது மாருத அமைப்பல்ல. மற்ற எல்லா சமூக அமைப்புக்களையும் போலவே அதையும் தொடர்ச்சியான இயக்கத்துக்கும் மாற்றத்துக்கும் உட்பட்டதாகவே கருத வேண்டும். இன்றைய அமைப்புக்கும் அதற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு எல்லா உற்பத்தி சாதனங்களும் தேசத்தின் பொதுவுடைமை என்ற அடிப்படையில் நாட்டில் உற்பத்தி அமைந்திருப்பது எனலாம். இப்படித் திருத்தியமைப்பதை நாளைக்கு ஆரம்பித்து ஆனல் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு போவதும் சாத்தியமானதே என்று எனக்குத் தோன்றுகிறது. நம் தொழிலாளர்களால் அதைச் செய்ய முடியும் என்பதை அவர்கள் நடத்துகின்ற பல உற்பத்தியாளர், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் எடுத்துக் காட்டுகின்றன. போலீஸ்காரர்கள் இந்தச் சங்கங்களைத் திட்டமிட்டு அழிக்காமலிருக்கிற இடங்களில் எல்லாம் அவை முதலாளித்துவப் பங்குதாரர்கள் கம்பெனிகளைப் போல நன்ருகவும் இன்னும் அதிக

* போனிக், ஒட்டோ வான்—ஜெர்மனியின் பொதுவாழ்வுப் பிரமுகர்.—ப-ர்.

அளவுக்கு நேர்மையாகவும் நடத்தப்படுகின்றன. ஜெர்மனியில் சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்துக்கு[22] எதிராகத் தொழிலாளர்கள் நடத்திய வெற்றிகரமான போராட்டத்தில் அவர்கள் சிறப்பான வகையில் தங்களுடைய அரசியல் முதிர்ச்சியைக் காட்டிய பிறகும் நீங்கள் ஜெர்மனியில் வெகுஜனங்களின் அறியாமையைப் பற்றி எப்படிக் குறிப்பிடுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அறிவுஜீவிகள் என்று சொல்லப்படுபவர்களின் ஆதரவுப் பசப்பும் தவறான பிரசங்கங்களும் இதைக் காட்டிலும் பெரிய தடை என்று எனக்குத் தோன்றுகிறது. தொழில் நுட்பம், வேளாண்மையியல், பொறியியல், இரசாயனம், கட்டிடக்கலை ஆகிய துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் நமக்கு இன்னும் தேவை என்பது உண்மையே. ஆனால் நிலைமை என்னதான் மோசமாகப் போனாலும், முதலாளிகள் அவர்களை விலைக்கு வாங்குவதைப் போலவே நாமும் அவர்களை எப்பொழுதும் விலைக்கு வாங்க முடியும். அவர்களிடையே சில துரோகிகள் இருப்பதை—அப்படி துரோகிகள் இருப்பது நிச்சயம்—ஒரு எச்சரிக்கையாக, கடுமையான உதாரணமாகக் காட்டினால், நம்மிடம் நேர்மையாக நடந்து கொண்டால் அவர்களுக்கு லாபகரமானது என்பதை அவர்கள் தெரிந்து கொள்வார்கள். இந்த நிபுணர்களோடு நான் பள்ளி ஆசிரியர்களையும் சேர்த்துக் கொள்கிறேன். இவர்களைத் தவிர மற்ற ''அறிவு ஜீவிகள்'' இல்லாமலேயே நாம் நன்றாக முன்னேறிப் போக முடியும். உதாரணமாக, இன்று மாணவர்கள், கல்வியறிவாளர்கள் கட்சிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கனவான்களைச் சரியாகக் கட்டுப்படுத்தி வைக்காவிட்டால், இவர்களின் வருகை தீமையை ஏற்படுத்திவிடலாம்.

எல்ப் நதிக்குக் கிழக்கே இருக்கிற ஜங்கர்களின் பெரும்பண்ணைகளை, இன்றுள்ள தினக் கூலிக்கு உழைப்பவர்களுக்கும் மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும், உரிய தொழில்நுட்ப மேற்பார்வையின் கீழ் சுலபமாகக் குத்தகைக்கு விட்டுவிடலாம். அவர்கள் இந்தப் பண்ணைகளைக் கூட்டாக விவசாயம் செய்வார்கள். ஏதேனும் கலவரங்கள் ஏற்படுமானால், எத்தகைய பள்ளிக்கூடச்

சட்டங்கள் இன்றிருந்தாலும்கூட மக்களை மூர்க்க மடையச் செய்திருக்கும் ஜங்கர்கள் மட்டுமே அதற்குக் காரணமாக இருப்பார்கள்.

இதற்குப் பெரிய தடையாக இருக்கக் கூடியவர்கள் சிறு விவசாயிகளும் விடாக்கண்டர்களான மிகவும் அதிக கெட்டிக்காரத்தனம் கொண்ட அறிவஜீவிகளுமே. அறிவு ஜீவிகள் எந்தப் பிரச்சினையில் எவ்வளவு குறைவாகப் புரிந்துகொள்கிறார்களோ அவ்வளவு அதிகச் சிறப்பாகத் தாங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுவிட்டதாக எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாட்சி அதிகாரம் நம்மிடம் இருக்குமாதலால், வெகுஜனங்களிடம் நமக்குப் போதுமான எண்ணிக்கையில் ஆதரவாளர்கள் ஏற்பட்டதும், பெரும் தொழில்களையும் பெரிய விவசாயப் பண்ணைகளையும் சீக்கிரமாகவே சமூகச் சொத்தாக மாற்றிவிடலாம். மற்றவையெல்லாம் சற்று விரைவாகவோ அல்லது தாமதமாகவோ தொடர்ந்து ஏற்படும். பெரிய அளவு உற்பத்தியோடு நாம் மேலான நிலைமையில் இருப்போம்.

இதற்குப் பொருத்தமான உணர்வு இல்லாதிருக்கிறதே என்று நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். இது இருக்கிறது — பிரபுக்கள், முதலாளிகளிடமிருந்து தோன்றி தாங்கள் தொழிலாளர்களிடமிருந்து இன்னும் எவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டும் என்பதைச் சிறிதும் புரிந்து கொள்ளாமலிருக்கிற அறிவுஜீவிகளிடம் மட்டுமே அது இல்லாமலிருக்கிறது.

# விளதீமிர் லெனின்

# மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்

மார்க்சின் போதனே, நாகரிக உலகெங்கிலும் (அதிகாரத்தரப்பினதும், மிதவாதிகளதும் ஆகிய இரு வகையான) முதலாளித்துவ விஞ்ஞானம் அனைத்திடமிருந்தும் அளவற்ற பகைமையையும் வெறுப்பையும் கிளப்பிவிடுகிறது. மார்க்சியம் ஒரு வகையான ''நச்சுத்தன்மை கொண்ட குறுங்குழுவாதம்'' என்று அது கருதுகின்றது. அதனிடமிருந்து வேறு எந்த விதமான போக்கையும் எதிர்பார்க்க முடியாதுதான். ஏனெனில், வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் ''ஒருசார்பற்ற'' சமுதாய விஞ்ஞானம் எதுவும் இருக்க முடியாது. அதிகாரத்தரப்பைச் சேர்ந்த விஞ்ஞானம் அனைத்தும், மிதவாதிகளது விஞ்ஞானம் அனைத்தும் ஏதாவதொரு விதத்தில் கூலி அடிமை முறையை ஆதரிக்கிறது. மார்க்சியமோ கூலி அடிமை முறையை ஈவிரக்கமின்றி எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்துள்ளது. மூலதனத்துக்குக் கிடைக்கும் இலாபத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தலாமா என்ற பிரச்சினையில் முதலாளிகள் ஒருசார்பற்றவர்களாய் இருப்பார்களென எதிர்பார்ப்பது எப்படி அசட்டுத்தனமாகுமோ, ஏமாளித்தனமாகுமோ, அப்படித்தான் கூலி அடிமை முறைச் சமுதாயத்தில் விஞ்ஞானம் ஒருசார்பற்றதாய் இருக்குமென எதிர்பார்ப்பதும் அசட்டுத்தனமாகும், ஏமாளித்தனமாகும்.

இது மட்டுமல்ல. தத்துவஞானத்தின் வரலாறும் சரி, சமுதாய விஞ்ஞானத்தின் வரலாறும் சரி, மார்க்சியத்தில்

''குறுங்குழுவாதம்'' போன்றதெதுவும் கிடையாது என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன. அதாவது, அது ஒரு இறுகிப்போன வறட்டுப் போதனையல்ல; உலக நாகரிக வளர்ச்சியின் ராஜபாட்டையின் வழியே வராமல் அதனின்று விலகி வேறொரு வழியே முளைத்த போதனை அல்ல. மாறாக, மனித குலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கெனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்ஸ் விடைகள் தந்தார் என்பதில்தான் குறிப்பாக அவருடைய மேதாவிலாசம் அடங்கியுள்ளது. தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் ஆகியவற்றின் தலைசிறந்த பிரதிநிதிகளுடைய போதனைகளின் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாகத் தான் மார்க்சின் போதனை எழுந்தது.

மார்க்சின் போதனை மெய்யானது, அதனால்தான் அது எல்லாம்வல்ல தன்மை பெற்றிருக்கிறது. அது முழுமையான, உள்ளிணக்கம் கொண்ட போதனை. ஓர் ஒன்றிணைந்த உலகப் பார்வையை அது மக்களுக்கு அளிக்கிறது. எந்த வடிவத்திலுமமைந்த மூடநம்பிக்கைகளோ, பிற்போக்கோ, முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு ஆதரவோ இந்த உலகப் பார்வையுடன் ஒத்துவர முடியாது. ஜெர்மன் தத்துவஞானம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிசம் என்ற வடிவத்தில் 19ம் நூற்றாண்டில் மனித குலம் உருவாக்கித் தந்த தலைசிறந்த படைப்புகளின் உரிமை பெற்ற வாரிசுதான் மார்க்சியம்.

இவை மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களாகும், மூன்று உள்ளடக்கக் கூறுகளாகும். இவற்றைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

## 1

**பொருள்முதல்வாதம்தான்** மார்க்சியத்தின் தத்துவஞானமாகும். பொருள்முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவஞானமாகும், இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும், மூடநம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்ன பிற

வற்றுக்கும் தீராப்பகையாகும் என்பது ஐரோப்பாவின் நவீனகால வரலாறு பூராவிலும், இன்னும் முக்கியமாய் மத்திய காலக் குப்பைக் கூளங்களை எதிர்த்தும், நிறுவனங்களிலும் கருத்துக்களிலும் ஆட்சி புரிந்த பிரபுத்துவத்தை எதிர்த்தும் நடைபெற்ற முடிவான கடும் போரின் களனுயிருந்த பிரெஞ்சு நாட்டில் 18ம் நூற்றுண்டின் இறுதியிலும் தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டது. ஆகவே பொருள்முதல்வாதத்தை ''மறுப்பதற்கும்'', பலவீனப்படுத்துவதற்கும், பழிப்பதற்கும், ஜனநாயகத்தின் எதிரிகள் முழுமூச்சுடன் முயன்று பார்த்தார்கள். தத்துவஞானக் கருத்துமுதல்வாதத்தின் பல வகை வடிவங்களை இவர்கள் ஆதரித்தனர். இவ்வகைக் கருத்துமுதல்வாதம் ஏதாவது ஒரு வழியில் எப்பொழுதும் மதத்தைப் பாதுகாக்கவோ ஆதரிக்கவோதான் செய்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாதுகாத்தனர். இந்த அடிப்படையிலிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு திரிபும் மிகவும் தவறுயிருப்பதை அவர்கள் அடிக்கடி விளக்கி வந்தார்கள். எங்கெல்ஸ் எழுதிய **லுத்விக் ஃபாயர்பாக், டூரிங்குக்கு மறுப்பு** என்கிற நூல்களில் அவர்களுடைய கருத்துக்கள் மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** என்கிற நூலைப் போலவே இவ்விரண்டு நூல்களும் வர்க்க உணர்வு பெற்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவசியமான கைப் புத்தகங்களாகும்.

18ம் நூற்றுண்டின் பொருள்முதல்வாதத்துடன் மார்க்ஸ் நின்றுவிடவில்லை. அவர் தத்துவஞானத்தை முன்னேறச் செய்தார். மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம் திரட்டிய செல்வங்களைக் கொண்டு, குறிப்பாக ஹெகலின்[23] தத்துவ முறை—இதிலிருந்தே ஃபாயர்பாகின்[24] பொருள்முதல்வாதம் தோன்றியது—திரட்டிய செல்வங்களைக் கொண்டு, அவர் பொருள்முதல்வாதத்தை வளப்படுத்தினுர். இந்தச் செல்வங்களில் பிரதானமாக விளங்குவது **இயக்கவியல்தான்.** இயக்கவியல் என்பது மிக மிக முழுமையான, ஆழமான, ஒரு தலைப்பட்சமில்லாத வடிவத்தில் வளர்ச்சியைப் பற்றி விளக்கி விவரிக்கும்

போதனையாகும்; நிரந்தரமாக வளர்ச்சியுற்ற வண்ண முள்ள பருப்பொருளை நமக்குப் பிரதிபலித்துக் காட்டும் மனித அறிவின் சார்புநிலையை வலியுறுத்தும் போதனை யாகும். ரேடியம், மின்னணுக்கள், தனிமங்களில் ஒன்று மற்றொன்றாக மாறுவது—இவை போன்ற இயற்கை விஞ் ஞானத்தின் மிக நவீன கண்டுபிடிப்புக்களெல்லாம் மார்க் சின் இயக்கவியல் பொருள்முதல்வாதமே சரியானது என்று வியக்கத்தக்க முறையில் உறுதிப்படுத்தியுள்ளன. அழுகிப்போன பழைய கருத்துமுதல்வாதத்தைப் பற்றிய ''புதிய'' மறுவியாக்கியானங்களைக் கொண்டு முத லாளித்துவத் தத்துவஞானிகள் தந்த போதனைகளால் இதைத் தடுக்க முடியவில்லை.

தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை மார்க்ஸ் ஆழமாக்கி வளர்த்து நிறைவு பெறச் செய்தார். இயற்கை பற்றிய அறிதலை **மனித சமுதாயம்** பற்றிய அறிதலாக வும் விரிவாக்கினார். மார்க்சின் **வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம்** விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. முன்பெல்லாம் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்துக்களில் குழப்பமும் தான்தோன்றித்தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய், வியப்பூட்டும் அள வுக்கு ஒருமித்த முழுமையும் உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்துவிட்டது. வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம் என்ற இந்தத் தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதை விட உயர்தரமான இன்னொரு சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை—உதாரணமாக, நிலப் பிரபுத்துவச் சமுதாய அமைப்பு முறையிலிருந்து முத லாளித்துவச் சமுதாய அமைப்பு முறை எப்படி வளர் கிறது என்பதை—அது காட்டுகிறது.

இயற்கை என்பது—அதாவது வளர்ச்சி பெற்றுக் கொண்டேயிருக்கும் பருப்பொருள் என்பது—மனி தனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது. அதே போல தான் மனிதனின் **சமுதாய அறிவு** எனப்படுவதும் (அதாவது

தத்துவஞானம், மதம், அரசியல் முதலானவை சம்பந்த மாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும்) சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கிறது. அரசியல் நிறுவனங்கள் என் பவையெல்லாம் பொருளாதார அடித்தளத்தின் மீது நிறுவப்பட்ட மேல்கட்டுமானமேயாகும். உதாரணமாக, நவீன ஐரோப்பிய அரசுகளின் பல்வேறு அரசியல் வடி வங்கள் எல்லாம் பாட்டாளி வர்க்கத்தின் மேல் முதலாளி வர்க்கம் செலுத்தி வரும் ஆதிக்கத்தைப் பலப்படுத்த எப் படிப் பயன்படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

மார்க்சின் தத்துவஞானம் முழுநிறைவு பெற்ற தத் துவஞானப் பொருள்முதல்வாதமாகும். இந்தப் பொருள் முதல்வாதம் மனித குலத்திற்கு, குறிப்பாகத் தொழி லாளி வர்க்கத்துக்கு, மகத்தான அறிவுச் சாதனங்களை வழங்கியிருக்கிறது.

## 2

பொருளாதார அமைப்பு முறை என்ற அடித்தளத்தின் மீதுதான் அரசியல் மேல்கட்டுமானம் கட்டப்படுகிறது என்று ஏற்றுக் கொண்டவுடன், மார்க்ஸ் தமது பெரும் பாலான கவனத்தை இந்தப் பொருளாதார அமைப்பு முறையின் மீது செலுத்தினார். மார்க்சின் பிரதான நூலாகிய **மூலதனம்** நவீன காலத்திய—அதாவது, முதலாளித்துவ—சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையை ஆராயும் நூலாகும்.

மார்க்சுக்கு முற்பட்ட மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரம் முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றி லும் அதிக வளர்ச்சி பெற்றிருந்த இங்கிலாந்திலே உரு வாயிற்று. ஆதாம் ஸ்மித்தும்[25] டேவிட் ரிக்கார்டோ வும்[26] பொருளாதார அமைப்பு முறையை ஆராய்ந்து மதிப்பு பற்றிய உழைப்புத் தத்துவத்துக்கு அஸ்திவார மிட்டார்கள். அவர்களுடைய பணியை மார்க்ஸ் தொடர்ந்து நடத்தினார். இந்தத் தத்துவத்தை அவர் திட்டமாக நிரூபித்து முரணற்ற வகையில் விவரித்தார். ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்

வதில் செலவழிக்கப்பட்ட சமுதாய ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டுதான் நிர்ண யிக்கப்படுகிறது என்று அவர் விளக்கிக் காட்டினுர்.

முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள், பொருள் கள் இடையிலான (ஒரு பண்டம் மற்றென்றுடன் பரி மாற்றம் செய்து கொள்ளப்படும்) உறவு என்பதாக விவரித்ததில் **மனிதர்கள் இடையிலான உறவு** நிலவுவதை மார்க்ஸ் புலப்படுத்தினுர். பண்டப் பரிமாற்றம் தனித்தனி யான உற்பத்தியாளர்களிடையே சந்தை மூலமாக ஏற் படும் பிணைப்பைக் காட்டுகிறது. **பணம்** என்பது இந்தப் பிணைப்பு தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் பொருளா தார வாழ்க்கை முழுவதையும் பிரிக்க முடியாதபடி முழு மொத்தமாக இணைத்து மேலும் மேலும் நெருக்கமாவதைக் குறிக்கிறது. **மூலதனம்** என்பது இந்தப் பிணைப்பு மேலும் வளர்ச்சியுறுவதைக் குறிக்கிறது; அதாவது மனிதனின் உழைப்புச் சக்தியே ஒரு பரிமாற்றப் பண்டமாகிவிடு வதைக் குறிக்கிறது. கூலி பெறும் உழைப்பாளி நிலம், ஆலைகள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றின் சொந்தக் காரர்களிடம் தனது உழைப்புச் சக்தியை விற்கிறுன். தொழிலாளி வேலை நாளின் ஒரு பகுதியைத் தன்னை யும் தனது குடும்பத்தையும் பராமரித்துக் கொள்வதற்கு வேண்டிய செலவுக்காக (அதாவது, கூலிக்காக) உழைப் பதில் கழிக்கிறுன். மறு பகுதியில் ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு **உபரி மதிப்பை** உண்டாக்கித் தருகிறுன். இந்த உபரி மதிப்புத்தான் இலாபத்துக்குத் தோற்றுவாய், அது தான் முதலாளி வர்க்கத்தின் செல் வத்துக்குத் தோற்றுவாய்.

உபரி மதிப்பைப் பற்றிய போதனைதான் மார்க்சின் பொருளாதாரத் தத்துவத்துக்கு மூலைக்கல் ஆகும்.

தொழிலாளியின் உழைப்பால் உண்டாக்கப்பட்ட மூல தனம் சிறு உற்பத்தியாளர்களை அழித்து வேலையில்லா தோர் பட்டாளத்தைப் படைப்பதின் மூலமாகத் தொழி லாளியை நசுக்குகிறது. தொழில் துறையில்,பெருவீத உற் பத்தி பெறுகிற வெற்றி பளிச்சென்று தெரிகிறது. ஆனுல், இதே நிகழ்ச்சியை விவசாயத் துறையிலும் நாம் பார்க்க முடியும். பெருவீத முதலாளித்துவ விவசாயத்தின் மேநிலை

அதிகமாகிக் கொண்டே போகிறது; விவசாயத்தில் இயந்திரங்களை உபயோகிப்பதும் அதிகரிக்கிறது; பண மூலதனத்தின் சுருக்குக் கயிற்றில் விவசாயப் பொருளாதாரம் சிக்கிக் கொள்கிறது; அது தனது பிற்பட்ட தொழில் நுணுக்கத்தின் சுமையால் அழுத்தப்பட்டு அழிகிறது. விவசாயத் துறையில் சிற்றளவான உற்பத்தியின் சீர்குலைவுக்குரிய வடிவங்கள் வேறாயிருப்பினும், இச்சீர்குலைவு ஏற்படுவது மறுக்க முடியாத உண்மையாகும்.

மூலதனம் சிற்றளவான உற்பத்தியை ஒழிப்பதன் மூலம், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கும் பெரிய முதலாளிகளின் கூட்டுகளுக்கு ஏகபோக நிலையைப் படைப்பதற்கும் வகை செய்கிறது. உற்பத்தியே மேலும் மேலும் சமுதாயத் தன்மை பெறுகிறது: ஒரு முறையான பொருளாதார ஒழுங்கமைப்பிலே இலட்சக் கணக்கான, கோடிக் கணக்கான தொழிலாளர் பிணைக்கப் பட்டு விடுகின்றனர். ஆனால் அந்தக் கூட்டு உழைப்பின் உற்பத்திப் பொருளை விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில முதலாளிகள் உடைமையாக்கிக் கொள்கிறார்கள். உற்பத்தியில் அராஜகம் வளர்கிறது; அதேபோல் நெருக்கடிகளும் வளர்கின்றன; சந்தைகளைப் பிடித்துக் கொள்வதற்கான ஆவேச வேட்டையும் அதிகமாகிறது; திரளான மக்களின் வாழ்க்கைக் காப்புறுதியின்மையும் அதிகரிக்கிறது.

தொழிலாளர்கள் மூலதனத்தை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையை முதலாளித்துவ முறை தீவிரப்படுத்தும் அதே சமயத்தில் ஒன்றுசேர்ந்த தொழிலாளர் எனும் மாபெரும் பலத்தையும் பிறப்பித்துவிடுகிறது.

பரிமாற்றப் பண்டப் பொருளாதாரத்தின் ஆரம்ப வித்துக்களிலிருந்து, சாதாரணப் பரிமாற்றத்திலிருந்து தொடங்கி, மிக உயர்ந்த வடிவங்கள் வரையில், பெருவீத உற்பத்தி வரையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் ஆராய்ந்து காட்டினார்.

பழையவையும் புதியவையும் அடங்கலான எல்லா முதலாளித்துவ நாடுகளின் அனுபவமும் இந்த மார்க்சியப் போதனை பிழையற்றதாகும் என்பதை ஆண்டுதோறும் மேலும் மேலும் கூடுதலான தொழிலாளர்களுக்குத் தெளிவாக நிரூபித்துக் காட்டி வருகிறது.

உலகெங்கும் முதலாளித்துவம் வெற்றி பெற்று விட்டது. ஆனல் இந்த வெற்றி முதலாளித்துவத்தின் மீது தொழிலாளர் காணப் போகும் வெற்றியின் முன்னறி விப்பே ஆகும்.

3

நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை வீழ்த்தப்பட்டு **''சுதந்திரமான''** முதலாளித்துவச் சமுதாயம் இப்பூவுல கில் தோன்றிய பொழுது இந்தச் சுதந்திரம் உழைப் பாளிகளை ஒடுக்கவும் சுரண்டவும் அமைந்த புதியதோர் அமைப்பு முறையையே குறித்தது என்பது உடனே தெளி வாக விளங்கலாயிற்று. இந்த ஒடுக்குமுறையின் பிரதி பலிப்பாகவும் இதற்கான கண்டனமாகவும் பல்வேறு சோஷலிசப் போதனைகள் உடனே தலைதூக்கத் தொடங் கின. ஆனல் ஆரம்ப காலத்திய சோஷலிசம் **கற்பன** சோஷலிசமாகத்தான் இருந்தது. அது முதலாளித்துவச் சமுதாயத்தை விமர்சித்தது, கண்டித்தது, சபித்தது; அந்தச் சமுதாயத்தை ஒழிக்க வேண்டும் என்று கனவு கண்டது; அதை விட மேலான ஓர் அமைப்பு முறையைப் பற்றி ஆகாயக் கோட்டை கட்டி வந்தது; சுரண்டுவது ஒழுக்கக்கேடான செயல் என்று பணக்காரர்களுக்கு உணர்த்த முயற்சித்தது.

ஆனல் கற்பன சோஷலிசத்தினல் விடுதலைக்கான மெய்யான வழியைக் காட்ட முடியவில்லை. முதலாளித் துவத்தில் நிலவும் கூலி அடிமை முறையின் சாராம்சத்தை அதனல் விளக்க முடியவில்லை. முதலாளித்துவ முறையின் வளர்ச்சி பற்றிய விதிகளை அதனல் கண்டுபிடிக்க முடிய வில்லை. ஒரு புதிய சமுதாயத்தின் படைப்பாளியாக அமைய வல்ல **சமுதாயச் சக்தியை** அதனல் சுட்டிக் காட்டவும் முடியவில்லை.

இதற்கிடையில், நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியையும் பண்ணை அடிமை முறையின் வீழ்ச்சியையும் தொடர்ந்து ஐரோப்பா முழுவதிலும், குறிப்பாக பிரான்சில், ஏற்பட்ட புயல் வேகப் புரட்சிகள், **வர்க்கங்களின் போராட்டம்தான்**

எல்லா வளர்ச்சிக்கும் ஆதாரமாயும் உந்து விசையாகவும் உள்ளது என்பதை மேலும் மேலும் தெளிவாக வெளிப் படுத்தின.

நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கெதிராய் அரசியல் சுதந் திர இலட்சியத்துக்குக் கிடைத்த எந்த ஒரு வெற்றி யும் அவ்வர்க்கத்தின் மூர்க்கமான எதிர்ப்பில்லாமல் கிடைத்து விடவில்லை. முதலாளித்துவச் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களிடையே ஜீவமரணப் போராட்டம் இல்லாமல் எந்த முதலாளித்துவ நாடும் ஓரளவு சுதந் திரமான, ஜனநாயக அடிப்படையில் வளர்ச்சியுற்றுவிட வில்லை.

வேறு எவருக்கும் முன்பாக மார்க்சுக்குத்தான் உலக வரலாறு போதிக்கும் படிப்பினையை இதிலிருந்து கண் டறியவும், அந்தப் படிப்பினையை முரணின்றிச் செயல் படுத்தவும் முடிந்தது, இதில்தான் அவருடைய மேதா விலாசம் இருக்கிறது. வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய போதனைதான் அந்த முடிவாகும்.

நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லா விதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக் குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன் கள் ஒளிந்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள் தனமான ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார் கள். பழைய ஏற்பாடு ஒவ்வொன்றும் எவ்வளவுதான் அநா கரிகமானதாகவும் அழுகிப்போனதாகவும் தோன்றிய போதிலும் ஏதாவது ஓர் ஆளும் வர்க்கத்தின் சக்திகளைக் கொண்டு அது நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத் தங்கள், மேம்பாடுகள் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் இதை உணராத வரையில் பழைய அமைப்பு முறையின் பாதுகாவலர்கள் அவர்களை என்றென்றும் முட்டாள் களாக்கிக் கொண்டேயிருப்பார்கள். இந்த வர்க்கங்களின் எதிர்ப்பைத் தகர்த்து ஒழிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்ன? பழைமையைத் துடைத்தெறிய வும் புதுமையைப் படைக்கவும் திறன் பெற்றவையும் சமுதாயத்தில் தங்களுக்குள்ள நிலையின் காரணமாக

அப்படிப் படைத்துத் தீர வேண்டிய கட்டாயத்திலிருக்கிற வையுமான சக்திகளை நம்மைச் சூழ்ந்துள்ள இதே சமுதாயத்திற்குள்ளேயே நாம் கண்டுபிடித்து, அந்தச் சக்திகளுக்கு அறிவொளியூட்டிப் போராட்டத்திற்கு ஒழுங்கமைத்துத் திரட்ட வேண்டும். இது ஒன்றேதான் வழி.

மார்க்சின் தத்துவஞானப் பொருள்முதல்வாதம் ஒன்றுதான் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களெல்லாம் அது வரை உழன்று கொண்டிருந்த ஆன்மிக அடிமைத்தனத்திலிருந்து வெளியேறும் வழியைப் பாட்டாளி வர்க்கத்திற்குக் காட்டியிருக்கிறது. மார்க்சின் பொருளாதாரத் தத்துவம் ஒன்றுதான் பொதுவான முதலாளித்துவ அமைப்பு முறையில் பாட்டாளி வர்க்கத்தின் உண்மை நிலையை விளக்கியுள்ளது.

அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரை, ஸ்வீடனிலிருந்து தென்னாப்பிரிக்கா வரை, உலகமெங்கும் பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையான நிறுவனங்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. தனது வர்க்கப் போராட்டத்தை நடத்திச் செல்வதன் வாயிலாகப் பாட்டாளி வர்க்கம் அறிவொளியும் கல்வியும் பெற்று வருகிறது; முதலாளித்துவச் சமுதாயத்திற்குரிய சார்புக் கருத்துக்களினின்று தன்னை விடுவித்துக் கொண்டுவருகிறது; தன் அணிகளை நெருக்கமாகத் திரட்டிச் சேர்த்து வருகிறது; தனது வெற்றிகளின் வீச்சை அளந்தறியக் கற்றுக் கொண்டு வருகிறது; தன் சக்திகளை எஃகு போல் திடப்படுத்தி வருகிறது; தடை செய்ய முடியாதபடி வளர்ந்து வருகிறது.

*1913 மார்ச்சில்*
**புரோஸ்வெஷேனியே**, *இதழ் 3ல்*
வெளிவந்தது

## கார்ல் மார்க்ஸ்

### என்ற கட்டுரையிலிருந்து

### சோஷலிசம்

முற்றிலும் தனிமுழுமையாயும் இன்றைய சமுதாயத்தின் பொருளாதார இயக்க விதியிலிருந்தே மார்க்ஸ், முதலாளித்துவச் சமுதாயம் சோஷலிஸ்டு சமுதாயமாக மாற்றமடைவது தவிர்க்க முடியாததாகும் என்ற முடிவுக்கு வருகிறார். உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது பல்லாயிரக் கணக்கான வடிவங்களிலே முன்னைவிட அதிக வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது; மேலும் மார்க்ஸ் மறைந்த பின் கழிந்துள்ள இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் பெருவீத உற்பத்தியின் வளர்ச்சியிலும், முதலாளிகளின் கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகளின் வளர்ச்சியிலும், நிதி மூலதனத்தின் அளவுகளிலும் சக்தியிலும் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான அதிகரிப்பிலும் இது—அதாவது, உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது — வெகு தெளிவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது, தவிர்க்க முடியாதபடி சோஷலிசம் வந்து சேருவதற்கு இதுதான் முதன்மையான பொருளாயத அடிப்படையாகும். இந்த மாற்றத்திற்கு அறிவுத் துறையிலும் ஒழுக்க நெறித் துறையிலும் விசைச் சக்தியாக விளங்குவதும், நேரடியாக இருந்து இம்மாற்றத்தை நிறைவேற்றும் செயலாளியாக விளங்குவதும், பாட்டாளி வர்க்கமே. இந்த வர்க்கத்துக்கு முதலாளித்துவமே பயிற்சியளிக்கிறது. முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகிற போராட்டம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது; அந்த வடிவங்

களின் உட்பொருள் வளமும் மேலும் மேலும் அதிகரிக்கிறது; தவிர்க்க முடியாத முறையிலே இந்தப் போராட்டம் அரசியல் ஆட்சியதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதை (''பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை'') நோக்கமாகக் கொண்ட அரசியல் போராட்டமாகின்றது. உற்பத்தி சமுதாயமயமாக்கப் படுவதன் விளைவாக உற்பத்தி சாதனங்கள் சமுதாயச் சொத்தாக மாற்றப்படுவது, ''உடைமை பறித்தோரை உடைமை நீக்கம் செய்வது'' நிகழ்ந்தே தீரும். உழைப்பின் உற்பத்தித் திறனில் மகத்தான அதிகரிப்பு, வேலை நேரத்தைக் குறைப்பது, துவக்கக்கால, சிதறிய நிலையிலே யுள்ள, சிற்றளவான உற்பத்தி அழிந்ததிலே மிஞ்சிக் கிடக்கிற மிச்சசொச்சங்களை நீக்கிவிட்டு கூட்டு முறையிலமைந்த, மேம்படுத்தப்பட்ட உழைப்பை நிலைநாட்டுவது—இவையெல்லாம் இந்த மாற்றத்தினால் நேரடியாக அடையும் விளைவுகளாகும். விவசாயத்துக்கும் தொழிலுக்குமிடையேயுள்ள ஒட்டுறவை முதலாளித்துவம் இறுதியாக வெட்டிவிடுகிறது. அதே சமயத்தில், முதலாளித்துவம் அதன் ஆக உயர்ந்த வளர்ச்சியால் இந்த ஒட்டுறவிற்குரிய புதிய அம்சங்களையும் தயாரிக்கிறது; உணர்வுபூர்வமான விஞ்ஞானத்தை நடைமுறையில் செயல்படுத்துவது, கூட்டு முறையில் உழைப்பை இணைப்பது, உலக மக்கள் தொகையை மறுவினியோகம் செய்வது (கிராமப் புறங்களில் ஒதுங்கிக்கிடக்கிற நிலைக்கும், தனிமைப்பட்டிருக்கிற நிலைக்கும், அநாகரிக நிலைக்கும், அதே சமயத்தில் பெரியபட்டணங்களில் பெருந்திரளான மக்கள் தொகை இயற்கைக்கு விரோதமாய்க் குவிந்து கிடக்கிற நிலைக்கும் இது ஒருங்கே முற்றுப் புள்ளி வைக்கும்)—இவற்றின் அடிப்படையில் தொழிலுக்கும் விவசாயத்துக்குமிடையே இணைப்புக்குரிய புதிய அம்சங்களை அது தயாரிக்கிறது. புதிய வடிவத்தில் அமைந்த குடும்பம், பெண்களின் நிலையிலும் இளந்தலைமுறையைப் பராமரித்து வளர்ப்பதிலும் புதிய நிலைமைகள்—இவற்றை இன்றைய முதலாளித்துவத்தின் உச்ச வடிவங்கள் தயாரித்துக் கொண்டிருக்கின்றன: பெண் மக்கள் மற்றும் குழந்தைகளின் உழைப்பு, தந்தை வழிக்குடும்பத்தை முதலாளித்துவம்

உடைத்தெறிவது—இவையெல்லாம் நவீனகால சமுதாயத்தில் தவிர்க்க முடியாதபடி மிக பயங்கரமான, நாசகரமான, வெறுக்கத்தக்க வடிவங்களைப் பெறுகின்றன. இருந்த போதிலும், ''குடும்பத் துறைக்கு வெளியே, உற்பத்தி முறையில், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும், ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் ஒரு முக்கியமான பாத்திரத்தைத் தருவதின் மூலமாக நவீன இயந்திரத் தொழில் முந்தியதை விட உயர்வான குடும்ப வடிவத்துக்கு, பால் உறவு வடிவத்துக்குப் புதிய பொருளாதார அடித்தளத்தை உண்டாக்குகிறது. பண்டைக் கால ரோமானிய, பண்டைக்கால கிரேக்க, அல்லது கிழக்கத்தியக் குடும்ப வடிவங்களைப் பரமமானவை, இறுதியானவை என்று கொள்வது எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத்தமாகும் டியூட்டானிக்—கிறித்தவக் குடும்ப வடிவத்தைப் பரமமானதென்றோ இறுதியானதென்றோ கருதுவது. தவிரவும், மேலே சொன்ன குடும்ப வடிவங்களையெல்லாம் மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால் அவையெல்லாம் வரலாற்று வளர்ச்சியில் ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன்றிய ஒரு வரிசையாக அமைகின்றன. மேலும், கூட்டாகச் சேர்ந்து வேலை செய்யும் குழுவானது இரு பாலாராலும் எல்லா வயதினராலும் ஆனதென்னும் உண்மை தக்க நிலைமைகளில் மனிதத்துவ வளர்ச்சிக்கு நிச்சயமாய் ஒரு தோற்றுவாயாகிவிடும் என்பது தெளிவு. ஆனால் அதன் தன்னியல்பாய் வளர்ந்த கொடிய முதலாளித்துவ வடிவத்தில்—உற்பத்தி வேலை முறைக்குத் தொழிலாளி இருக்கிறானே தவிர தொழிலாளிக்காக உற்பத்தி வேலை முறையில்லை என்ற முதலாளித்துவ வடிவத்தில்—அது ஊழலுக்கும் அடிமைத்தனத்துக்கும் கேடு தருகிற அபாயகரமான தோற்றுவாயாகிவிடுகிறது'' (**மூலதனம்**, தொகுதி 1, 13ம் அத்தியாயத்தின் இறுதி). ஆலை முறையில் நாம் பார்ப்பது ''எதிர்காலத்தியக் கல்வியின் கரு, குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டிருக்கிற ஒவ்வொரு குழந்தை விஷயத்திலும் அந்தக் கல்விபாடபோதனை, உடற்பயிற்சி ஆகியவற்றோடு உற்பத்தியாற்றலுள்ள உழைப்பையும் இணைத்து வைக்கும்—உற்பத்தியின் வினைத் திறமையைக் கூடுதலாக்குவதற்குள்ள

வழிகளில் அதுவும் ஒன்று என்பதற்காக மட்டுமல்ல, முழு வளர்ச்சி பெற்ற மனிதர்களை உண்டாக்குவதற்கும் அது ஒன்றுதான் வழி என்பதற்காக'' (அதே நூல்). தேசிய இனம், அரசு என்ற பிரச்சினைகளையும் அதே வரலாற்று அடிப்படையில் தான் மார்க்சினது சோஷலிசம் வைக்கிறது—சென்ற காலத்தை விளக்குவது என்ற அர்த்தத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்தை அச்சமின்றி முன்னறிந்து கூறி, அதனைச் சாதிப்பதற்குத் தைரியமான நடைமுறைப் பணி மேற்கொள்வது என்ற அர்த்தத்திலும். தேசங்கள் என்பவை சமுதாய வளர்ச்சியைச் சேர்ந்த முதலாளித்துவ சகாப்தத்தில் தவிர்க்க முடியாதபடி உண்டாகிற ஒரு விளைவு, ஒரு வடிவம் ஆகும். தொழிலாளி வர்க்கம், ''தன்னையும் தேசத்துக்குள் ஒரு பகுதியாக்கிக் கொள்ளாமல்'', தானும் ''தேசியத் தன்மை'' பெறுமல் (''இந்தச் சொல்லின் முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல''), அது பலம் பெற முடியவில்லை, பக்குவம் பெற முடியவில்லை, உருவாக முடியவில்லை. ஆனால் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மேலும் மேலும் தேசியத் தடைகளை உடைத்தெறிகிறது, தேசியத் தனி வாழ்வை அழிக்கிறது, தேசியப் பகைமைகளுக்குப் பதிலாக வர்க்கப் பகைமைகளை ஏற்படுத்துகிறது. ஆகவே, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில், ''தொழிலாளிகளுக்குத் தேசம் ஒன்றும் கிடையாது'' என்பது முழுக்க முழுக்க உண்மையாகும்; மேலும், குறைந்த பட்சம் நாகரிகமடைந்துள்ள நாடுகளிலாவது இருக்கும்படியான தொழிலாளிகளின் ''ஒன்றுபட்ட போராட்டம்''... ''பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்குத் தேவையான முதல் நிபந்தனைகளில் ஒன்றாகும்'' **(கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை)** என்பதும் முழுக்க முழுக்க உண்மை. அரசு என்பது ஒழுங்கமைக்கப் பெற்ற பலாத்காரம் ஆகும். சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமரசப்படுத்த முடியாத வர்க்கங்களாகச் சமுதாயம் பிளவுண்ட போது, வெளிப்பார்வைக்குச் சமுதாயத்துக்கு மேலே நின்று கொண்டும் ஓரளவுக்குச் சமுதாயத்திலிருந்து விலகியும் இருக்கிற ''அதிகாரம்'' இல்லாமல் சமுதாயம் வாழ முடியாத போது, அரசு தவிர்க்க முடியாதபடி தோன்றியது. அரசு என்பது,

வர்க்க முரண்பாடுகளுக்குள்ளிருந்தே உதித்து, ''மிகவும் வலிமை வாய்ந்த, பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கத்தின் அரசாக ஆகிறது; அந்த வர்க்கம், அரசின் மூலமாக, அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக ஆகிறது; இந்த வழியிலே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஒடுக்கி வைத்துச் சுரண்டிக் கொண்டிருப்பதற்கு அது புதிய சாதனங்களைப் பெறுகிறது. இப்படித்தான் பண்டைக் காலத்திய அரசு, எல்லாவற்றிற்கும் மேலாக, அடிமைகளை ஒடுக்கி வைத்திருப்பதற்கமைந்த அடிமையுடைமையாளரின் அரசாக இருந்தது; அதே போலத்தான் நிலப்பிரபுத்துவ அரசு என்பதும் பண்ணையடிமைகளாகிய விவசாயிகளையும் கொத்தடிமைகளையும் ஒடுக்கி வைத்திருப்பதற்கமைந்த பிரபு வம்சத்தினரின் அரசாக இருந்தது; அதே போலத்தான், நவீன காலப் பிரதிநிதித்துவ அரசும் கூலியுழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கமைந்த கருவியாகும்'' (எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலைப் பார்க்க. இந்த நூலில் எங்கெல்ஸ், தம்முடைய கருத்துக்களையும் மார்க்சின் கருத்துக்களையும் விளக்குகிருர்). முதலாளித்துவ அரசின் மிகமிகச் சுதந்திரமான, மிகமிக முற்போக்கான வடிவம் என்றுள்ள ஜனநாயகக் குடியரசுகூட இந்த உண்மையை எந்த விதத்திலும் அழிக்கவில்லை, ஆனல் வெறுமனே அதன் வடிவத்தை மாற்றுகிறது (அரசாங்கத்துக்கும் பங்கு மார்க்கெட்டுக்கும் உள்ள தொடர்பு; அரசாங்க அலுவலர்களிடையேயும் பத்திரிகைக்காரர்களிடையேயும் — நேர்முகமாகவும் மறைமுகமாகவும்—இருக்கிற ஊழல் முதலியன). வர்க்கங்களை ஒழிப்பதில் கொண்டு போய் விடுவதின் மூலமாக சோஷலிசம் அரசை ஒழிப்பதிலும் கொண்டுபோய்விடும். **டூரிங்குக்கு மறுப்பு** என்ற நூலில், ''எந்த முதல் செய்கையிலே அரசானது உண்மையிலே சமுதாயம் முழுவதின் பிரதிநிதியாகத் தன்னைத்தானே அமைத்துக் கொள்கிறதோ—அதாவது, சமுதாயத்தின் சார்பில் உற்பத்தி சாதனங்களைப் பறிமுதல் செய்கிறதோ—அதே முதல் செய்கைதான் அரசு என்ற முறையில் அது சுதந்திரமாகச் செய்யும் கடைசிச் செய்கையுமாகும்.

ஒரு துறைக்குப் பின் ஒரு துறையாக, சமுதாய உறவுகளில் அரசாட்சி தலையிடுவது அனுவசியம் என்று ஆகிக் கொண்டு வந்து, பிறகு அது தானுகவே அற்றுப் போகிறது. மனிதர்களை ஆளுவது என்பது போய் அதன் இடத்தில் விவகாரங்களை நிர்வகிப்பது, உற்பத்தி இயக்கப் போக்குகளை நடத்துவது என்பது ஏற்படுகிறது. அரசு 'ஒழிக்கப்படுவதில்லை', அது தானுகவே உலர்ந்து உதிர்ந்து போகிறது''. ''உற்பத்தியாளர்களின் சுதந்திரமான, சமமான சங்கம் என்ற அடிப்படையில் உற்பத்தியை ஒழுங்கமைத்திடும் சமுதாயம் அரசு இயந்திரம் முழுவதையும் அப்போது அது இருக்க வேண்டிய இடத்தில், அதாவது பண்டைக் காலப் பொருள்களை வைத்திருக்கும் காட்சி சாலையில், கைராட்டை, வெண்கலக் கோடரி ஆகியவற்றின் பக்கத்தில் கொண்டுபோய் வைத்துவிடும்'' (எங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்).

கடைசியாக: உடைமை பறித்தோரை உடைமை நீக்கம் செய்கிற காலப் பகுதியில் தொடர்ந்து இருந்து வரப் போகிற சிறு விவசாயிகளின் பால் மார்க்சினது சோஷலிசம் காட்டும் அணுகு முறை சம்பந்தப்பட்ட வரையில் மார்க்சின் கருத்துக்களை வெளியிடும்படியான எங்கெல்சின் ஒரு பிரகடனத்தை நாம் குறிப்பிட வேண்டும்: ''...அரசு அதிகாரம் எங்கள் கையில் இருக்கும் காலத்தில் நாங்கள் சிறு விவசாயிகளின் சொத்தைப் பலவந்தமாகப் பறிமுதல் செய்வதைப் பற்றிச் (நஷ்ட ஈடு கொடுத்துச் செய்வதா, கொடாமலே செய்வதா என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை) சிந்திக்கவும் மாட்டோம்; பெரிய நிலச்சுவான்தார்களின் விஷயத்தில் தான் நாங்கள் அப்படிச் செய்து தீர வேண்டும். சிறு விவசாயி சம்பந்தமாக நமது பணி என்னவென்ருல், முதலில், அவரது தனியாள் உற்பத்தியையும் தனியுடைமையையும் கூட்டுறவு உற்பத்தியாகவும் கூட்டுறவு உடைமையாகவும் மாற்றுவதுதான்; இதைப் பலாத்காரமாகச் செய்யாமல், உதாரணத்தைக் கொண்டும், இந்த நோக்கத்துக்காகச் சமுதாய உதவியைத் தந்தும் செய்து வைப்போம். அதன் பிறகு சிறு விவசாயிக்கு இன்றைக்குக் கூட

*வெளிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டிய எதிர்கால அனுகூலங்களைக் காட்டுவதற்கு நிச்சயமாக நம்மிடம் நிறைய வழிவகைகள் இருக்கத்தான் போகின்றன''* (**பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை** *என்ற எங்கெல்சின் நூல், பக்கம் 17, அலெக்சேயெவா பதிப்பு; ருஷ்ய மொழிபெயர்ப்பில் பிழைகள் உள்ளன. அசல் பிரதி Die Neue Zeit என்ற பத்திரிகையில் வெளியிடப் பட்டது).*

*1914 ஜூலை—நவம்பரில்*
*எழுதப்பட்டது*

# சுய நிர்ணயம் பற்றிய விவாதத்தைத் தொகுத்துரைத்தல்

### என்ற கட்டுரையிலிருந்து

## 1. சோஷலிசமும் தேசீய இனங்களின் சுய நிர்ணயமும்

சோஷலிசத்தின் கீழ் தேசீய இனங்களின் சுய நிர்ணயத்தை அமுலாக்க மறுப்பது சோஷலிசத்துக்கு துரோகம் செய்வதாகும் என்று நாம் வலியுறுத்தியிருக்கிறோம். ''சுய நிர்ணய உரிமை சோஷலிஸ்ட் சமூகத்தில் பயன் படுத்தப்படுவதில்லை'' என்று நமக்கு பதிலளிக்கப்படுகிறது. இந்த வேறுபாடு தீவிரமானதாகும். இது எங்கேயிருந்து தோன்றுகிறது?

''தேசீய ஒடுக்குமுறையின் ஒவ்வொரு வகையையும் சோஷலிசம் ஒழித்துவிடும்; ஏனென்றால் அந்த ஒடுக்குமுறைக்கு இட்டுச் செல்கின்ற வர்க்க நலன்களை சோஷலிசம் ஒழித்து விடுகிறது...'' என்று நமது எதிர்த்தரப்பினர் வாதிக்கிறார்கள். தேசீய ஒடுக்குமுறையை ஒழிப்பதற்குத் தேவையான பொருளாதார முன்தேவைகளைப் பற்றிய—இவை நன்கு தெரிந்தவை என்பதால் யாரும் இவற்றை மறுக்கவில்லை—இந்த வாதத்துக்கும் அரசியல் ஒடுக்குமுறையின் வடிவங்களில் ஒன்றான அதாவது ஒரு தேசத்தின் எல்லைகளுக்குள் மற்றொரு தேசீய இனத்தைப் பலாத்காரமாக வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றிய விவாதத்துக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா? இது அரசியல் பிரச்சினைகளைச் சந்திக்காமல் தப்பிப்போய்விடுகிற முயற்சி என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை! நமது முடிவு சரி என்பதைப் பின்னர் வருகிற வாதங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

''ஒரு சோஷலிஸ்ட் சமூகத்தில் தேசீய இனம் என்பது ஒரு பொருளாதார, அரசியல் அங்கமாக இருக்குமென நாம் நம்பக் காரணமில்லை. அது அநேகமாக, ஒரு

கலாசார மற்றும் மொழி அங்கத்தின் தன்மையை மட்டுமே அடையலாம். ஏனென்றால் ஒரு சோஷலிஸ்ட் கலாசாரப் பகுதியின் பிரதேசப் பிரிவினையானது—அது நடைமுறையில் ஏற்பட்டால்—உற்பத்தியின் தேவைகளுக்கு ஏற்றவகையில் மட்டுமே செய்யப்பட முடியும்; மேலும் இப்படிப்பட்ட பிரிவினையைப் பற்றிய பிரச்சினையில் முழு அரசுரிமையைக் கொண்டிருக்கும் ('சுய நிர்ணயத்துக்கான உரிமை' என்பது வலியுறுத்துவது போல) தனிப்பட்ட தேசீய இனங்கள் மட்டுமே முடிவு செய்யக் கூடியது அல்ல என்பது இயற்கையே; அது சம்பந்தப்பட்ட எல்லாக் குடிமக்களாலும் **கூட்டாக நிர்ணயிக்கப்படும்....''**

நமது போலிஷ் தோழர்களுக்கு இந்தக் கடைசி வாதம்,—**சுய** நிர்ணயத்துக்குப் பதிலாகக் **கூட்டு** நிர்ணயம்—அதிகமாகப் பிடித்திருக்கிறது போலும். எனவே அவர்கள் அதைத் தங்களுடைய ஆய்வுரையில் **மூன்று தடவைகள்** திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த பிற்போக்குத்தனமான அக்டோபரிஸ்டு[27] வாதத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவதால் மட்டும் அது ஒரு சமூக-ஜனநாயகவாதமாக மாறிவிடாது. எல்லாப் பிற்போக்காளர்களும் முதலாளித்துவ வர்க்கமும், ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகளுக்குள் பலவந்தமாக வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் தேசீய இனங்களுக்குத் தங்கள் விதியை ஒரு பொது நாடாளுமன்றத்தில் ''கூட்டாக நிர்ணயித்துக் கொள்வதற்கான'' உரிமையைக் கொடுக்கிறார்கள். இரண்டாம் வில்ஹெல்ம்[28] ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் எதிர்காலத்தை ஒரு பொது ஜெர்மன் நாடாளுமன்றத்தில் ''கூட்டாக நிர்ணயம் செய்து கொள்ளும்'' உரிமையை பெல்ஜியர்களுக்குக் கொடுக்கிறார்.

நமது எதிர்த்தரப்பினர் விவாதத்துக்கு உட்பட்ட ஒரே பிரச்சினையை, விவாதத்துக்கு வைக்கப்பட்டிருக்கும் ஒரே பிரச்சினையாகிய பிரிந்து போகின்ற உரிமையை, சந்திக்காமல் தப்பிப் போகப் பார்க்கிறார்கள். இதன் விளைவுகள் மோசமாக இல்லாதிருக்குமானால் இது வேடிக்கையாகவே இருக்கும்!

நமது முதல் ஆய்வுரையிலேயே ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் விடுதலை அரசியல் பகுதியில் ஒரு இரட்டை

மாற்றத்தை மறைமுகமாகக் குறிக்கிறது என்று கூறியிருந்தோம்: (1) தேசீய இனங்களின் முழு சமத்துவம்— இது அரசுக்குள் நடப்பதை மட்டுமே குறிக்கிறது; யாரும் இதை மறுப்பதில்லை; (2) அரசியல்ரீதியாகப் பிரிந்து போவதற்குச் சுதந்திரம். இது அரசின் எல்லைக் கோடுகளை எப்படி அமைப்பது என்பதைப் பற்றியது. இது மட்டுமே மறுக்கப்படுகிறது. ஆனால் நமது எதிர்த் தரப்பினர் இதைப் பற்றி மௌனமாக இருக்கிறார்கள். அவர்கள் அரசின் எல்லைகளைப் பற்றியோ அல்லது அரசைப் பற்றியோ கூட சிந்திக்க விரும்பவில்லை. இது ஒரு வகையான ''ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம்''; 1894—1902ம் வருடங்களிலிருந்த பழைய ''பொருளாதாரவாதத்தைப்'' போன்றது.[29] அவர்கள் பின்வரும் வகையில் வாதாடினார்கள்: முதலாளித்துவம் வெற்றியடைந்திருக்கிறது — எனவே அரசியல் பிரச்சினைகளை விவாதிப்பது நேரத்தை வீணாக்குவதே. ஏகாதிபத்தியம் வெற்றியடைந்திருக்கிறது—எனவே அரசியல் பிரச்சினைகளை விவாதிப்பது நேரத்தை வீணாக்குவதே! இப்படிப்பட்ட அரசியல் இல்லாத கொள்கை மார்க்சியத்துக்கு அதிக மான தீங்கு செய்யும்.

**கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** என்ற நூலில் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக் கால கட்டமும் ஒன்று உள்ளது; இந்த இடைக்காலத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் என்பது வேறு எதுவாகவும் இருக்க முடியாது.'' இது வரையிலும் இந்த உண்மை—வெற்றிகரமான சோஷலிசம் முழுமையான கம்யூனிசமாக வளர்ச்சி அடையும் வரை அரசு இருக்கும் என்பதை அங்கீகரிப்பதையும் அது உள்ளடக்கியிருக்கிறது—சோஷலிஸ்டுகளுக்கு மறுக்க முடியாததாக இருந்து வந்தது. அரசு **உலர்ந்து உதிர்ந்து மறையும்** என்று எங்கெல்ஸ் கூறியிருப்பது எல்லோரும் அறிந்ததே. ஜனநாயகம் என்பது அரசு வடிவம்; அரசு உலர்ந்து உதிர்ந்து மறைகிற பொழுது ஜனநாயகமும்

உலர்ந்து உதிர்ந்து மறைந்து விடும் என்று நமது முதல் ஆய்வுரையில் நாங்கள் வேண்டுமென்றே வலியுறுத்தினேம். நமது எதிர் அணியினர் மார்க்சியத்துக்குப் பதிலாக வேறு ஏதாவது ''அரசு அல்லாத'' கருத்து நிலையை ஏற்றுக் கொள்ளும் வரை, அவர்களுடைய வாதங்கள் மாபெரும் தவருகவே இருக்கும்.

அரசைப் பற்றிப் (**அதாவது** அதன் **எல்லைக்கோடுகளை** வகுப்பது என்ற பொருளில்) பேசுவதற்கு பதிலாக அவர்கள் ''சோஷலிஸ்ட் கலாசாரப் பகுதியைப்'' பற்றிப் பேசுகிருர்கள்; அதாவது எல்லா அரசுப் பிரச்சினைகளையும் அழித்துத் துடைத்துவிட்ட மாதிரி அர்த்தம் கொண்ட தெளிவில்லாத ஒரு சொற்ருெடரை வேண்டுமென்றே தேர்ந்தெடுக்கிருர்கள். இங்கே கேலிக்குரிய வகையில் கூறியது கூறலைப் பார்க்கிருேம். அரசு இல்லையென்ருல் எல்லைகளைப் பற்றிய பிரச்சினை இல்லை. அப்படியாஞல், **மொத்த** ஜனநாயக-அரசியல் வேலைத் திட்டமும் தேவையில்லாததாகும். அரசு ''உலர்ந்து உதிர்ந்து மறைகிற'' பொழுது எந்தக் குடியரசும் இருக்கப் போவதில்லை.

ஜெர்மானிய இன வெறிப் பிரச்சாரகரான லென்ச்—ஐந்தாவது ஆய்வுரையில் (அடிக்குறிப்பு) நாம் குறிப்பிட்டுள்ள கட்டுரைகளில்—எங்கெல்ஸ் எழுதிய **போவும் ரைனும்** என்ற கட்டுரையிலிருந்து ஒரு சுவாரசியமான பகுதியை மேற்கோள் காட்டியிருக்கிருர். இந்தக் கட்டுரையில் பல சிறு நாடுகள், வளம் பெற முடியாத நாடுகளை விழுங்கிய வரலாற்று ரீதியான வளர்ச்சியின் போக்கில், ''ஐரோப்பாவின் பெரிய, வளம் பெறக் கூடிய நாடுகளின்'' எல்லைகள் மக்கள் தொகையின் ''மொழியாலும் அனுதாபத்தாலும்'' அதிகமான வகையில் நிர்ணயிக்கப் பட்டுவருகிறதென்று எங்கெல்ஸ் மற்ற பல கருத்துக்களோடு சேர்த்துச் சொல்லியிருக்கிருர். இந்த எல்லைகளை ''இயற்கையானவை'' என்று அவர் குறிப்பிடுகிருர். ஐரோப்பாவில் முற்போக்கான முதலாளித்துவம் நிலவிய காலத்தில், சுமாராக 1848ம் வருடத்திலிருந்து 1871ம் வருடம் முடிய இந்த நிலைமை இருந்தது. இன்று, ஜனநாயக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை பிற்

போக்கான, ஏகாதிபத்திய முதலாளித்துவம் மேலும் மேலும் அதிகமாக நொறுக்கி வருகிறது. ஏகாதிபத்தியம் தனக்குப் பின்னல் வரப்போகிற சோஷலிசத்திடம், குறை வான ஜனநாயக ரீதியான எல்லைகளை, ஐரோப்பாவிலும் உலகத்தின் மற்ற பகுதிகளிலும் அதிகமான எண்ணிக்கை யில் பிடிக்கப்பட்ட நாடுகளைப் பாரம்பரியமாகக் கொடுக்கும் என்பதற்குப் பல அறிகுறிகள் தெரிகின்றன. வெற்றியடைந்த சோஷலிசம் எல்லாப் பகுதிகளிலும் முழு ஜனநாயகத்தைத் திரும்ப ஏற்படுத்தியும் அமுல் நடத்தியும் வரும்பொழுது, அரசு எல்லைகளை ஜனநாயக ரீதியாக வகுக்காது விட்டுவிடுமென்றே, மக்கள் தொகை யின் ''அனுதாபங்களைப்'' புறக்கணிக்கும் என்றே கருத முடியுமா? இந்தக் கேள்விகளை எழுப்புவதே நமது போலிஷ் தோழர் மார்க்சியத்திலிருந்து சறுக்கி ''ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தை'' நோக்கிப் போய்க் கொண் டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டும்.

மார்க்சியத்தைக் கேலிச் சித்திரமாக்கிய பழைய ''பொருளாதாரவாதிகள்'' மார்க்சியவாதிகளுக்குப் ''பொருளாதாரம் மட்டுமே'' முக்கியமானது என்று தொழிலாளர்களிடம் கூறினர்கள். புதிய ''பொருளா தாரவாதிகள்'' வெற்றியடைந்த சோஷலிசத்தின் ஜன நாயக அரசு எல்லைகள் இல்லாமல் இருக்க முடியும் (பொருள் இல்லாமல் ''உணர்வுகளின் தொகுதியைப்'' போல) என்று சிந்திப்பதாகத் தோன்றுகிறது; அல்லது உற்பத்தியின் தேவைகளுக்கு ஏற்ற முறையில் ''மட்டுமே'' எல்லைகள் வகுக்கப்படும் என்று சிந்திப்பதாகத் தோன்று கிறது. நடைமுறையில் எல்லைகள் ஜனநாயக ரீதியாக வகுக்கப்படும் அதாவது மக்கள் தொகையின் விருப்பத் துக்கும் ''அனுதாபங்களுக்கும்'' ஏற்றபடி வகுக்கப்படும். முதலாளித்துவம் இந்த அனுதாபங்களை முரட்டுத்தன மாக மிதித்துத் தள்ளுகிறது; அதன் மூலம் தேசங் களிடையே மீண்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அதிகத்தடைகளைப் போடுகிறது. சோஷலிசம் வர்க்க ஒடுக்குமுறை இல்லாதபடி உற்பத்தியை அமைப்பதன் மூலம், அரசின் எல்லா உறுப்பினர்களின் நல்வாழ்வையும் உறுதிப்படுத்துவதன் மூலம் மக்கள் தொகையின் ''அனு

தாபங்களுக்கு'' முழு வாய்ப்புக் கொடுக்கிறது; அதன் மூலம் தேசங்கள் நெருங்கி வருவதையும் இணைவதையும் ஆதரிப்பதோடு அதற்கு அதிகமான வேகத்தையும் கொடுக்கிறது.

இந்த கனமான, கரடு முரடான ''பொருளாதாரவாதத்திலிருந்து'' வாசகருக்கு ஓய்வு கொடுப்பதற்காக, நமது விவாதங்களுக்கு வெளியே இருக்கின்ற ஒரு சோஷலிஸ்ட் எழுத்தாளரின் வாதத்தை இங்கே மேற்கோள் காட்டுகிறேன். அந்த எழுத்தாளருடைய பெயர் ஓட்டோ பௌவர். அவரும் ''கலாசார-தேசீய சுயாட்சி''[30] என்ற அவருடைய ''அன்புக்குரிய கருத்தைச்'' சுற்றி வருபவர்தான். எனினும் மிகவும் முக்கியமான ஏராளமான பிரச்சினைகளில் அவர் மிகச் சரியான முறையில் வாதிடுகிறார். உதாரணமாக, **தேசீயப் பிரச்சினையும் சமூக-ஜனநாயகமும்** என்ற தமது புத்தகத்தின் இருபத்தொன்பதாம் பாராவில் **ஏகாதிபத்தியக்** கொள்கைகளை மூடிமறைப்பதற்குத் தேசீய சித்தாந்தம் பயன்படுகிறதென்று மிகச் சரியாகக் குறிப்பிட்டிருக்கிறார். **சோஷலிசமும் தேசீயவாதக் கொள்கையும்** என்ற முப்பதாவது பாராவில் அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

''பலாத்காரத்தின் மூலமாக மொத்த தேசீய இனங்களையுமே தன்னுடைய அமைப்புக்குள் வைத்திருக்க சோஷலிஸ்ட் சமூகத்தால் ஒரு போதும் முடியாது. தேசீய கலாசாரத்தின் அனைத்து வசதிகளையும் பெற்றிருப்பதோடு, சட்ட சபையிலும் அரசாங்கத்திலும் முழுமையாகவும் முனைப்பாகவும் பங்கெடுத்துக் கொண்டு வருகிற, கடைசியாக, ஆயுதங்களையும் பெற்றிருக்கிற மக்கள் தொகுதியினரைக் கற்பனை செய்து பாருங்கள். அப்படிப்பட்ட ஒரு தேசீய இனத்தைப் பலாத்காரத்தின் மூலம் அந்நிய சமூக அமைப்பின் ஆட்சிக்கு உட்படுத்துவது சாத்தியமா? எல்லா அரசு அதிகாரமுமே ஆயுத பலத்தைப் பொறுத்திருக்கிறது. கடந்த காலத்திலிருந்த வீரப் படைகளை அல்லது கூலிப்படைகளைப் போல, இன்றைய மக்கள் படையும், ஒரு சாதுரியமான அமைப்பின் மூலம், ஒரு குறிப்பிட்ட நபர், குடும்பம் அல்லது வர்க்கத்தினுடைய கைகளில் கருவியாக இருக்கிறது. ஒரு சோஷலிஸ்ட் சமூகத்தின் ஜனநாயக அமைப்பின் ராணுவம் என்பது ஆயுதத்தை ஏந்திய மக்கள் என்பதைத் தவிர வேறு அல்ல; ஏனென்றால் அது எத்தகைய நிர்ப்பந்த

மும் இல்லாமல் சமூக மயமாக்கப்பட்ட தொழிற்சாலை களில் வேலை செய்து கொண்டு, அரசியல் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் முழுப் பங்கு வகிக்கும் உயர்ந்த கலாசாரத்தை உடைய மனிதர்களைக் கொண்டதா கும். இத்தகைய நிலைமைகளில் அந்நிய ஆட்சிக்கான எத்தகைய சாத்தியமும் மறைந்து விடுகிறது.''

இது உண்மையே. முதலாளித்துவத்தின் கீழ் தேசீய ஒடுக்குமுறையை (அல்லது வேறு எவ்விதமான அரசியல் ஒடுக்குமுறையையும் ஒழிப்பதென்பது முடியாது; ஏனென் ருல் இதற்கு வர்க்கங்களை ஒழிப்பது அதாவது சோஷ லிசத்தை அமுலாக்குவது அவசியமாகும். சோஷலிசம் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், அது பொருளாதாரம் மட்டும்தான் என்று வகைப்படுத்திவிட முடியாது. தேசீய ஒடுக்குமுறையை ஒழிப்பதற்கு ஒரு அடிப்படை—சோஷலிஸ்ட் உற்பத்தி— அவசியமாகும்; ஆனுல் இந்த அடிப்படையோடு சேர்த்து ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட அரசு, ஜனநாயக ராணுவம், இதரவை—இருக்க வேண்டும். முதலாளித் துவத்தை சோஷலிசமாக மாற்றுவதன் மூலம் பாட்டாளி வர்க்கம் தேசீய ஒடுக்குமுறையை ஒழிப்பதற்கான சாத்தியத்தை ஏற்படுத்துகிறது; ஆனுல் பிரிந்து போவதற் கான முழுச் சுதந்திரம் உட்பட மக்கள் தொகையின் ''அனுதாபங்களுக்கு'' ஏற்றபடி அரசு எல்லைகள் வகுக்கப் படுவதையும் சேர்த்து எல்லாத் துறைகளிலும் முழு ஜனநாயகத்தை ஏற்படுத்திய பிறகு ''மட்டுமே''— ''மட்டுமே''!—இந்த சாத்தியம் நடைமுறையில் வர முடி யும். இது மிகக் குறைவான தேசீய அவநம்பிக்கையை யும் மிகச் சிறிதளவான தேசீயத் தகராறையும் கூட நடைமுறையில் அகற்றிவிடுவதற்கும், அரசு உலர்ந்து உதிர்ந்து மறைகிற பொழுது தேசங்கள் நெருங்கி வருவதை யும் இணைவதையும் துரிதப்படுத்துவதற்கும் உதவும். இது தான் மார்க்சியத் தத்துவம்; இந்தத் தத்துவத் திலிருந்துதான் நமது போலிஷ் தோழர்கள் தவருக விலகிப் போய்விட்டார்கள்.

*1916 ஜூலையில்*
*எழுதப்பட்டது*

## அரசும் புரட்சியும்
என்ற நூலிலிருந்து

### அத்தியாயம் 5

# அரசு உலர்ந்து உதிர்வதற்குரிய பொருளாதார அடிப்படை

கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம் *(பிராக்கேவுக்கு எழுதிய கடிதம், 1875 மே 5, 1891ல் தான் Die Neue Zeit, மலர் 9, இதழ் 1ல் அச்சிடப்பட்டது; ருஷ்யனில் ஒரு தனிப்பதிப்பாய் வந்துள்ளது)* என்ற தமது நூலில் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமாய் விளக்கிக் கூறுகிறார். சிறப்புமிக்க இந்நூலின் எதிர்வாதப் பகுதி லஸ்ஸாலியத்தை விமர்சிக்கிறது. இப்பகுதி இந் நூலின் கருப் பகுதியை — அதாவது கம்யூனிசத்தின் வளர்ச்சிக்கும் அரசு உலர்ந்து உதிர்வதற்கும் இடையிலுள்ள தொடர்பைப் பகுத்தாயும் பகுதியை—ஓரளவுக்குப் பின்னுக்குத் தள்ளுவதாய் உள்ளது.

### 1. பிரச்சினையை மார்க்ஸ் எடுத்துரைத்தல்

1875 மே 5ல் பிராக்கேவுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தையும் 1875 மார்ச் 28ல் பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய (மேலே நாம் ஆராய்ந்த) கடிதத்தையும் மேலெழுந்த வாரியாய் ஒப்பிட்டுப் பார்க்கையில், எங்கெல்சைக் காட்டிலும் அதிக அளவு மார்க்ஸ் ''அரசின் ஆதரவாளராய்'' இருந்ததாகவும், அரசெனும் பிரச்சினையில் இவ்விரு ஆசிரியர்களுக்கும் கணிச அளவு கருத்து வேறுபாடு இருந்ததாகவும் தோன்றக் கூடும்.

அரசு பற்றிய எல்லாப் பேச்சையும் அறவே விட்டொழித்து விடும்படி, ''அரசு'' என்னும் சொல்லையே

வேலைத்திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு அதற்குப் பதில் ''மக்கட்சமுதாயம்'' என்னும் சொல்லை உபயோகிக்கும் படி பெபெலுக்கு எங்கெல்ஸ் ஆலோசனை கூறினார். அரசெனும் சொல்லின் சரியான பொருளில் கம்யூனது ஓர் அரசாய் இருக்கவில்லை என்பதாகவும் எங்கெல்ஸ் கூறினார். ஆனால் மார்க்ஸ் ''கம்யூனிச சமுதாயத்துக் குரிய வருங்கால அரசு'' என்பதாய்க் கூடப் பேசினார், அதாவது கம்யூனிசத்திலுங்கூட அரசு அவசியமே என் பதாய் அவர் ஏற்றுக் கொண்டதாய்த் தோன்றக் கூடும்.

இது போன்ற கருத்து அடிப்படையிலேயே தவறானது. மேலும் நெருங்கிச் சென்று பரிசீலித்தோமாயின் அரசு குறித்தும் அது உலர்ந்து உதிரும் நிகழ்ச்சி குறித்தும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் கருத்துக்களும் எந்த வேறுபாடுமின்றி முழுதொத்தவையே என்பதும், மேலே குறிப்பிடப்பட்ட மார்க்சின் தொடர் உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கும் நிலையிலுள்ள அரசைத்தான் குறிப்பதா கும் என்பதும் தெளிவாகின்றன.

''உலர்ந்து உதிரும்'' இந்த வருங்கால நிகழ்ச்சி நடை பெறும் தருணத்தை வரையறுத்துக் கூற முடியாது என்பது தெளிவு—இது நீண்டநெடும் நிகழ்ச்சிப்போக் காய் இருக்குமென்பது வெளிப்படையாதலால் இவ்வாறு வரையறுத்துக் கூறுவது மேலும் இயலாததாகி விடுகிறது. மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இங்கு ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதாய்த் தோன்றுவதற்குக் காரணம், அவர்கள் வெவ்வேறு துறைகளைப் பரிசீலித்ததும், வெவ் வேறு குறிக்கோள்களைப் பின்பற்றியதும்தான். அரசு சம் பந்தமாய் நிலவிய தப்பெண்ணங்கள் (லஸ்ஸால் இடத் தும் இவை பெருமளவு இருந்தன) எவ்வளவு அபத்த மானவை என்பதை பெபெலுக்குக் கண் கூடாகவும் எடுப் பாகவும் முழு உருவிலும் தெரியப்படுத்த எங்கெல்ஸ் முற்பட்டார். ஆனால் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைப் போகிறபோக்கில் இடைநிகழ்வாகவே குறிப்பிட்டுச் சென்றார். மார்க்ஸ் கருத்துச் செலுத்தியது வேறொரு துறை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய துறை.

வளர்ச்சித் தத்துவத்தை—அதன் முரணற்ற, முழுநிறைவான, தேர்ந்தாய்ந்த, சாரப்பொருள் வடிவில்—நவீன முதலாளித்துவத்தின் ஆய்வுக்காகக் கையாளுதலே மார்க்சின் தத்துவம் அனைத்தும். இயற்கையாகவே இந்தத் தத்துவத்தை முதலாளித்துவத்தின் வரப்போகும் வீழ்ச்சி, வருங்காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சி ஆகிய இரண்டிலும் கையாளும் பிரச்சினை மார்க்சின்முன் எழுந்தது.

அப்படியானால், எந்த உண்மைகளை அடிப்படையாய்க் கொண்டு வருங்காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சி குறித்த பிரச்சினையைப் பரிசீலிப்பது?

கம்யூனிசமானது முதலாளித்துவத்திலிருந்து தோன்றுவதாகும், வரலாற்று வழியில் முதலாளித்துவத்திலிருந்து வளர்வதாகும், முதலாளித்துவம் பெற்றெடுத்த ஒரு சமுதாய சக்தியின் செயலால் விளைந்த பலனாகும் என்ற உண்மையை அடிப்படையாய்க் கொண்டுதான் இப்பிரச்சினையைப் பரிசீலிக்க முடியும். கற்பனைப் படைப்பை உருவாக்கும் முயற்சியினை, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சியினை மார்க்சிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய் ஒரு புதிய உயிர்வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன்றியது, திட்டவட்டமான இந்தத் திசையிலேதான் மாறுதலடைந்து வந்தது என்பது தெரிந்ததும், உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர் வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினையை எப்படி ஆராய்வாரோ அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிசத்தைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்தார்.

அரசுக்கும் சமுதாயத்துக்குமுள்ள உறவு பற்றிய பிரச்சினையில் கோத்தா வேலைத்திட்டம் செய்திடும் குளறுபடியை மார்க்ஸ் முதற்கண் அகற்றுகிறார். அவர் எழுதியதாவது:

> "...இன்றைய சமுதாயம் முதலாளித்துவச் சமுதாயம். நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச்சமுதாயம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறைவாகவோ மத்தியக் காலக் கூறுகளின் கலப்படத்திலி

ருந்து விடுபட்டதாகவும், அந்தந்த நாட்டின் தனிப் பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறை வாகவோ பாதிக்கப்பட்டதாகவும், அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சியுற்றதாகவும் இருந்து வரு கிறது. மறுபுறத்தில் 'இன்றைய அரசு' அந்தந்த நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறிவிடுகிறது. இது ஸ்விட்சர்லாந்தில் இருப்பதிலிருந்து பிரஷ்ய-ஜெர்மா னிய சாம்ராஜ்யத்தில் மாறுபட்டதாயும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருப்பதிலிருந்து இங்கிலாந்தில் மாறுபட்டதாயும் உள்ளது. ஆகவே 'இன்றைய அரசு' என்பது ஒரு கற்பனையே ஆகும்.

''எனினும், நாகரிகமடைந்த பல்வேறு நாடு களிலும் இருந்துவரும் பல்வேறு அரசுகளும் வடிவில் வெவ்வேறு வகைப்பட்டதாய் இருப்பினும், இவை யாவற்றுக்கும் பொதுவானது என்னவெனில், ஒன்று; இன்னொன்றைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ முதலாளித்துவ வழியில் வளர்ச்சி பெற்றிருக்கிறதே தவிர இவை நவீன முதலாளித்துவச் சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்தவையே. ஆதலால் இவை சில முக்கிய பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் 'இன்றைய அரசு' என்பதாய், இவ்வரசின் தற்போதைய மூல வேரான முதலாளித்துவச் சமுதாயம் மடிந்து மறைந்துவிடும் அந்த வருங்கால அரசிலிருந்து வேறு படுத்திப் பேசுவது சாத்தியமே.

''ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிச சமு தாயத்தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறு விதமாய்க் கூறினால், தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்தச் சமுதாயப் பணிகள் அப் பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியில் மட்டுமே பதிலளிக்க முடியும். 'மக்கள்' என்னும் சொல்லை 'அரசு' என்னும் சொல்லுடன் ஆயி ரம் வழியில் இணைப்பதன் மூலம் சாண் அளவுகூட இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வினை நெருங்கி வந்து விட முடியாது....''

''மக்கள் அரசு'' என்ற எல்லாப் பேச்சுகளையும் இவ்விதம் எள்ளி நகையாடியபின் மார்க்ஸ் பரிசீலனைக் குரிய கேள்வியை வகுத்திட்டு, இதற்கு விஞ்ஞான வழிப்பட்ட விடை காண விரும்புவோர் உறுதியாய் நிலைநாட்டப்பெற்ற விவரங்களை மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறார்.

வளர்ச்சித் தத்துவம் அனைத்தாலும், மொத்தத்தில் விஞ்ஞானத்தாலும் மிகவும் துல்லியமாய் நிலைநாட்டப் பட்டிருக்கும் முதலாவது உண்மை என்னவெனில்—இந்த உண்மையைக் கற்பனாவாதிகள் உதாசீனம் செய்தனர், சோஷலிசப் புரட்சியைக் கண்டு மிரளும் இன்றைய சந்தர்ப்பவாதிகளும் இதை உதாசீனம் செய்து வருகிறார்கள்—முதலாளித்துவத்திலிருந்து கம் யூனிசத்துக்கு மாறிச்செல்வதைக் குறிக்கும், வரலாற்று வழிப்பட்ட, ஒரு தனிக் கட்டம் அல்லது இடைக்காலம் நிச்சயம் இருக்க வேண்டும் என்பதே.

## 2. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லுதல்

மார்க்ஸ் மேலும் கூறியதாவது:

> ''...முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது; இந்த இடைக்காலத்தில் அரசு **பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரம்** என்பது வேறு எதுவாகவும் இருக்க முடியாது...''

தற்கால முதலாளித்துவ சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் ஆற்றும் பாத்திரத்தைப் பற்றிய பகுத்தாய்வின் அடிப்படையிலும், இந்த சமுதாயத்தின் வளர்ச்சி சம்பந்த மான விவரங்களின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமுள்ள ஒன்றுக்கொன்று பகைமையான நலன்களிடையே இணக் கம் காண முடியாத நிலையின் அடிப்படையிலும் மார்க்ஸ் இம்முடிவை வந்தடைகிறார்.

இதன்முன் இப்பிரச்சினை பின்வருமாறு கூறப்பட்டது: பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் பெறும் பொருட்டு முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி, அரசியல் அதிகாரத்தை வென்று தனது புரட்சிகர சர்வாதிகாரத்தை நிறுவியாக வேண்டும்.

இப்பொழுது இப்பிரச்சினை ஓரளவு வேறுவிதமாய்க் கூறப்படுகிறது: முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து—இச்சமுதாயம் கம்யூனிசத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது—கம்யூனிச சமுதாயத்துக்கு மாறிச்செல்வது ''அரசியல் இடைக்காலக் கட்டம்'' ஒன்று இல்லாமல் முடியாத காரியம்; இந்த இடைக்காலக் கட்டத்தில் அரசானது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரமாய் மட்டுமே இருக்க முடியும்.

அப்படியானல் இந்த சர்வாதிகாரம் ஜனநாயகத்திடம் கொண்டுள்ள உறவு என்ன?

''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது'', ''ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது'' என்று இரு கருத்தோட்டங்களையும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை ஒருங்கே குறிப்பிடுவதுடன் நின்றுவிடுவதை நாம் ஏற்கெனவே கண்டோம். முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்கையில், மேலே கூறப்பட்டவை யாவற்றின் அடிப்படையிலும் ஜனநாயகம் எப்படி மாற்றமடைகிறது என்பதை மேலும் துல்லியமாய் நிர்ணயிக்கலாம்.

முதலாளித்துவ சமுதாயத்தில், மிகவும் சாதகமான நிலைமைகளில் அது வளர்வதாய்க் கொள்வோமாயின், ஜனநாயகக் குடியரசில் ஓரளவு முழுமையான ஜனநாயகம் இருக்கக் காண்கிறோம். ஆனால் இந்த ஜனநாயகம் எப்பொழுதும் முதலாளித்துவச் சுரண்டலால் எழுப்பப்படும் குறுகலான வரம்புகளால் இறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நடைமுறையில் எப்பொழுதும் சிறுபான்மையோருக்கான ஜனநாயகமாகத் தான், சொத்துடைய வர்க்கங்களுக்கு மட்டுமேயான, செல்வந்தர்களுக்கு மட்டுமேயான ஜனநாயகமாகத்தான் இருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரமானது பண்டைக் கிரேக்கக் குடியரசுகளில் இருந்ததே அதேபோல ஏறத்தாழ

அடிமையுடைமையாளர்களுக்கான சுதந்திரமாகத்தான் எப்பொழுதுமே இருந்து வருகிறது. முதலாளித்துவச் சுரண்டலின் நிலைமைகள் காரணமாய் தற்காலக் கூலி அடிமைகள் பட்டினியாலும் வறுமையாலும் நசுக்கப்பட்டு ''ஜனநாயகம் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'', ''அரசியல் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'' அவல நிலையில் இருத்தப்பட்டிருக்கிறார்கள். நிகழ்ச்சிகள் சாதாரணமாய், சமாதான வழியில் ஓடிக் கொண்டிருக்கையில் பெரும்பான்மையான மக்கள் பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட முடியாதவாறு தடுக்கப் பட்டுவிடுகிறார்கள்.

இப்படிச் சொல்வது முற்றிலும் சரியே என்பதை வேறு எதையும்விட ஜெர்மனி மிகவும் தெளிவாய் ஊர்ஜிதம் செய்கிறது எனலாம். எப்படியெனில், அரசியல் சட்ட நெறி அங்கே குறிப்பிடத்தக்க நீண்ட காலத்துக்கு—ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு (1871—1914)—தொடர்ந்து நிலைத்திருந்தது. இந்தக் காலத்தில் ''சட்ட நெறியைப் பயன்படுத்திக் கொள்வதில்'' சமூக-ஜனநாயகவாதிகள் ஏனைய நாடுகளைவிட அங்கே மிகவும் அதிகமாய் சாதனை பெறமுடிந்தது. உலகில் வேறு எங்கும் முடிந்ததைவிட அதிகமான விகிதாச்சாரத்தில் தொழிலாளர்களை அவர்கள் அரசியல் கட்சியாய் ஒன்று திரட்டிக் கொள்ள முடிந்தது.

முதலாளித்துவ சமுதாயத்தில் இதுகாறும் காணப்பட்டிருக்கும் அரசியல் உணர்வு படைத்து ஊக்கமாய்ச் செயல்படும் கூலி அடிமைகளின் இந்த மிக உயர்ந்த விகிதாச்சாரம் என்ன தெரியுமா? ஒன்றரைக் கோடிக் கூலி உழைப்பாளர்களில் பத்து லட்சம் பேர் சமூக-ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர்கள்! ஒன்றரைக் கோடி பேரில் முப்பது லட்சம் பேர் தொழிற்சங்கங்களில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்!

மிகச் சொற்பமான சிறுபான்மையோருக்கு ஜனநாயகம், செல்வந்தர்களுக்கு 'ஜனநாயகம்—இதுதான் முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் ஜனநாயகம். முதலாளித்துவ ஜனநாயகத்தின் கட்டமைவை மேலும் நெருங்கிச் சென்று பார்த்தோமாயின், வாக்குரிமையின் ''அற்ப''—

அற்பமானவை என்று சொல்லப்படுகிற—விவரங்களிலும் (குடியிருப்புத்தகுதி, பெண்களின் நீக்கம் முதலானவை), பிரதிநிதித்துவ உறுப்புக்களின் செயல் முறையிலும், கூட்ட உரிமைக்கு நடைமுறையில் இருந்துவரும் தடங்கல்களிலும் (பொதுக் கட்டிடங்கள் ''ஓட்டாண்டிகளுக்கு'' உதவாதவை!), நாளேடுகளின் முற்றிலும் முதலாளித்துவ முறையிலான ஏற்பாட்டிலும், இன்ன பிறவற்றிலும் எங்கும் ஜனநாயகத்துக்கு கட்டுக்கு மேல் கட்டு போடப்பட்டிருப்பதைத்தான் காண்கிறோம். ஏழைகளுக்கு இடப்பட்டுள்ள இந்தக் கட்டுகளும் விலக்குகளும் ஒதுக்கல்களும் தடங்கல்களும் அற்பசொற்பமாகவே தோன்றும்; முக்கியமாய் இல்லாமையை நேரில் அறிந்திராதோருக்கும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் அவற்றின் வெகுஜன வாழ்வில் என்றுமே நெருங்கிய தொடர்பு கொண்டிராதோருக்கும் (முதலாளித்துவ நூலாசிரியர்களிலும் அரசியல்வாதிகளிலும் பத்தில் ஒன்பது பேர், ஏன் நூற்றில் தொண்ணூற்று ஒன்பது பேர் என்றுகூடச் சொல்லலாம், இந்த ரகத்தவரே) இப்படித்தான் அற்பசொற்பமாகவே தோன்றும். ஆனால் ஒட்டுமொத்தத்தில் இந்தக் கட்டுகள் ஏழைகளை அரசியலிலிருந்து, ஜனநாயகத்தில் நேரடியாய் பங்கு கொள்வதிலிருந்து ஒதுக்கி வெளியே தள்ளிவிடுகின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் இந்தச் சாராம்சத்தை மார்க்ஸ் மிக நன்றாய் உணர்ந்திருந்தார். கம்யூனுடைய அனுபவத்தை ஆராய்கையில் ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் வர்க்கத்தின் எந்தப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளாய் அமர்ந்து தம்மை அடக்கியொடுக்க வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானிக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்!

தவிர்க்க முடியாதவாறு குறுகலாகவும், ஏழைகளைத் திருட்டுத்தனமாய் ஒதுக்கித் தள்ளிவிடுவதாகவும், ஆகவே கபடமாகவும் முழுக்க முழுக்க பொய்க் கூற்றாகவும் இருக்கும் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து முன்னோக்கிச் செல்வதற்குரிய வளர்ச்சி, மிதவாதப் பேராசிரியர்களும் குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாதிகளும்

நம்மை நம்பவைக்க விரும்புவது போல, எளிய முறையிலும் நேரடியாகவும் ஒழுங்காகவும் ''மேலும் மேலும் கூடுதலான ஜனநாயகத்தை'' நோக்கி நடைபெறுவதில்லை. இல்லை, முன்னேக்கிச் செல்கிற வளர்ச்சியானது, அதாவது கம்யூனிசத்துக்கான வளர்ச்சியானது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது, வேறு எவ்வழியிலும் அல்ல. ஏனெனில் முதலாளித்துவச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பை வேறு யாராலும் அல்லது வேறு எந்த வழியிலும் தகர்த்திட முடியாது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது, அதாவது ஒடுக்கு முறையாளர்களை அடக்குவதற்காக ஒடுக்கப்பட்டவர்களுடைய முன்னணிப் படை ஆளும் வர்க்கமாய் அமையும் ஒழுங்கமைப்பானது ஜனநாயகத்தை விரிவாக்குவதோடு மட்டும் நின்றுவிடக் கூடியதல்ல. ஜனநாயகத்தை பிரம்மாண்டமான அளவில் விரிவாக்குவதுடன், பணமூட்டைகளுக்கான ஜனநாயகமாய் இராது முதன் முதலாய் ஏழைகளுக்கான ஜனநாயகமாய், மக்களுக்கான ஜனநாயகமாய் ஆக்குவதுடன் கூடவே ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டலாளர்களும் முதலாளிகளுமானேரின் சுதந்திரத்துக்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வரிசையாகப் பல கட்டுகளை விதித்திடுகிறது. மனித குலத்தைக் கூலி அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இவர்களை நாம் அடக்கியாக வேண்டும், இவர்களுடைய எதிர்ப்பை வன்முறை கொண்டு நசுக்கியாக வேண்டும். அடக்கியாளுதல் இருக்கும்வரை, பலாத்காரம் இருக்கும் வரை சுதந்திரத்துக்கோ ஜனநாயகத்துக்கோ இடமில்லை என்பது தெளிவு.

பெபெலுக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் இதனை மிகச் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார். ''பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவைப்படுவது தனது எதிராளிகளை அடக்கி இருத்துவதற்காகவே அன்றி சுதந்திரத்தின் நலன்களுக்காக அல்ல; சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகியதும் அரசு அரசாய் இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது'' என்று இக்கடிதத்தில் எங்கெல்ஸ் கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

மிகப் பெருவாரியான மக்களுக்கு ஜனநாயகம்,

சுரண்டலாளர்களேயும் மக்களின் ஒடுக்குமுறையாளர் களேயும் வன்முறை கொண்டு அடக்குதல், அதாவது ஜன நாயகத்திலிருந்து விலக்கி ஒதுக்குதல்—முதலாளித்துவத் திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லுகையில் இதுவே ஜனநாயகத்தில் ஏற்படும் மாறுதல்.

கம்யூனிச சமுதாயத்தில்தான்—முதலாளிகளுடைய எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு, முதலாளிகள் மறைந்து போய், வர்க்கங்கள் இல்லாமல் போய்விடும் (அதாவது, சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்தி சாதனங்களுடன் அவர்களுக்குள்ள உறவு சம்பந்தமாய் எந்தப் பாகுபாடும் இல்லாமல் போய்விடும்) அப்பொழுது மட்டும் தான் ''அரசு... இருப்பதற்கு முடிவு ஏற்படு கிறது, சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகிறது''. அப்பொழுதுதான் மெய்யாகவே முழுநிறைவான ஜன நாயகம், விதிவிலக்கு எதுவுமில்லாத ஜனநாயகம் சாத்திய மாகிக் கைவரப் பெறுகிறது. அப்பொழுதுதான் ஜன நாயகம் உலர்ந்து உதிரத் தொடங்கும். முதலாளித்துவ அடிமை வாழ்விலிருந்தும் முதலாளித்துவச் சுரண்டலின் சகிக்கவொண்ணுத கொடுமைகளிலிருந்தும் மிருகத்தனத் திலிருந்தும் அபத்தங்களிலிருந்தும் இழுக்குகளிலிருந்தும் மக்கள் விடுபட்டு, பல நூறு ஆண்டுகளாய் அறிந்துள்ள ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் அரிச்சுவடி நீதி விளக்கங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந் துள்ள சமுதாய ஒட்டுறவின் சர்வசாதாரண விதிகளேப் பற்றியொழுகச் சிறிது சிறிதாய்ப் பழகிக் கொள் வார்கள். பலாத்காரம் இல்லாமலே, பலவந்தம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே, பலவந்தத்துக் கான அரசு எனப்படும் தனிவகை இயந்திரம் இல்லாமலே அவர்கள் இவ்விதிகளேப் பற்றியொழுகப் பழகிக்கொள்வார்கள்.

''அரசு உலர்ந்து உதிர்கிறது'' என்னும் தொடர் நன்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தொடர் இந்நிகழ்ச்சிப்போக்கின் படிப்படியாய் நடந்தேறும் தன்மை, தன்னியல்பாய்த் தானே நடந்தேறும் தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாய் உள்ளது. பழக்கத் தால் மட்டுமே இது போன்ற விளேவு ஏற்பட முடியும்,

ஐயப்பாட்டுக்கு இடமின்றி நிச்சயம் ஏற்படவும் செய்யும். ஏனெனில் சுரண்டல் இல்லாத போது, ஆத்திரம் உண்டாக்கக் கூடியதும் கண்டனத்தையும் கலகத்தையும் எழச் செய்து அடக்க வேண்டியதற்கான தேவையைத் தோற்றுவிப்பதும் இல்லாதபோது, மக்கள் எப்படித் தயக்கமின்றி சமுதாய ஒட்டுறவுக்கு அவசியமான விதிகளைப் பற்றியொழுகப் பழகிக் கொண்டுவிடுகிருர்கள் என்பதற்கு லட்சோப லட்சக் கணக்கான எடுத்துக்காட்டுகளை நம்மைச் சுற்றிலும் காண்கிறோம்.

இவ்வாருக, முதலாளித்துவச் சமுதாயத்தில் இருக்கும் ஜனநாயகம் வெட்டிக் குறுக்கப்பட்ட, அலங்கோலமான, பொய்யான ஜனநாயகம்; செல்வந்தர்களுக்கு மட்டுமேயான, சிறுபான்மையோருக்கான ஜனநாயகம். கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லும் காலத்துக்குரிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முதன்முதலாய் மக்களுக்கான, பெரும்பான்மையோருக்கான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கிறது; அதனுடன் கூடவே சுரண்டலாளர்களான சிறுபான்மையோரைத் தேவையான அளவுக்கு அடக்கவும் செய்கிறது. மெய்யாகவே முழுநிறைவான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கவல்லது கம்யூனிசம் ஒன்று மட்டுமே. எவ்வளவுக்கு எவ்வளவு இது முழு நிறைவானதாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமாய் அது தேவையற்றதாகி தாஞகவே உலர்ந்து உதிர்கிறது.

வேறு விதமாய்க் கூறினுல், முதலாளித்துவத்தில் அரசெனும் சொல்லின் முறையான அர்த்தத்தைக் குறிக்கும், அதாவது ஒரு வர்க்கம் பிறிதொன்றை, அதுவும் சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அடக்குவதற்கான தனிவகைப் பொறியமைவான அரசு இருக்கிறது. சுரண்டப்படும் பெரும்பான்மையோரைச் சுரண்டும் சிறுபான்மையோர் முறையாக அடக்குவதென்னும் இத்தகைய செயல் வெற்றிபெற இயற்கையாகவே, அடக்கியொடுக்கும் பணியில் அளவு கடந்த மூர்க்கமும் மிருகத்தனமும் அவசியமாகி விடுகிறது; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாகி விடுகிறது. இந்த வெள்ளத்தில் நடந்துதான் மனிதகுலம் அடிமைமுறை,

பண்ணையடிமை அமைப்பு, கூலியுழைப்பு ஆகியவற்றின் வழியே சென்று கொண்டிருக்கிறது.

மேலும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்கையிலும் அடக்க வேண்டியது இன்னும் தேவையாகவே இருக்கிறது. ஆனால் இப்பொழுது அது சுரண்டப்பட்ட பெரும்பான்மையோர் சுரண்டும் சிறுபான்மையோரை அடக்குவதாகிறது. அடக்குவதற்கான ஒரு தனிவகை இயந்திரம், ஒரு தனிவகைப் பொறியமைவு, ''அரசு'' இன்னமும் தேவையாகவே இருக்கிறது, ஆனால் இப்பொழுது அது மாறிச் செல்லும் கட்டத்துக்குரிய அரசாய் அமைகிறது. அரசென்னும் சொல்லின் சரியான பொருளில் இனி அது அரசாய் இல்லை. ஏனெனில் சிறுபான்மையோரான சுரண்டலாளர்களை நேற்றைய கூலி அடிமைகளான பெரும்பான்மையோர் அடக்குவது ஒப்பளவில் மிகச் சாதாரணமான, எளிதான, இயற்கையான பணி ஆகுமாதலால், அடிமைகள் அல்லது பண்ணையடிமைகள் அல்லது கூலி உழைப்பாளர்களின் எழுச்சிகளை அடக்குவதற்கு வேண்டியிருந்ததைப் போலல்லாது மிகச் சொற்ப அளவே இரத்தம் சிந்தும்படி இருக்கும், மனிதகுலத்துக்கு மிகச் சொற்ப சேதமே உண்டாகும். ஜனநாயகத்தை மிகவும் விரிவாக்கி மக்களில் மிகப் பிரம்மாண்டமான பெரும்பான்மையோருக்குக் கிட்டச் செய்வது இப்பணிக்கு ஒவ்வாததல்ல ஆதலால், அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவின் தேவை மறையத் தொடங்கிவிடும். இயல்பாகவே சுரண்டலாளர்களால் மிகச் சிக்கலான பொறியமைவு ஒன்று இல்லாமல் மக்களை அடக்க முடியவில்லை. ஆனால் மக்களால் மிக எளிய ''பொறியமைவு'' கொண்டே, சுரண்டலாளர்களை அடக்கிவிட முடியும்; பெருமளவுக்குப் ''பொறியமைவு'' இல்லாமலே, ஒரு தனிவகை இயந்திரம் இன்றியே, சாதாரண ஏற்பாடான ஆயுதமேந்திய மக்களின் ஒழுங்கமைப்பைக் கொண்டே (தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளைப் போன்ற ஒழுங்கமைப்பு என்று முன்னோடிச் சென்று வரப்போவதைக் குறிப்பிடலாம்), இப்பணியைச் செய்துவிடலாம்.

முடிவில், கம்யூனிசம் ஒன்று மட்டும்தான் அரசை அறவே தேவையற்றதாக்கும். ஏனெனில் கம்யூனிசத்தில் அடக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை—ஒரு வர்க்கம் என்ற அர்த்தத்தில், மக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு எதிராய் முறையான போராட்டம் நடத்துவது என்ற அர்த்தத்தில் ''யாரும் இல்லை''. நாங்கள் கற்பனுவாதிகளல்ல; தனி நபர்கள் அடாச்செயல்கள் புரியக்கூடும், இது சாத்தியமே, தவிர்க்க முடியாததே என்பதையோ, இத்தகைய அடாச்செயல்களைத் தடுத்து நிறுத்துவது அவசியமே என்பதையோ நாங்கள் ஒரு போதும் மறுக்கவில்லை. ஆனால் முதலாவதாக, அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவு, ஒரு தனிவகை இயந்திரம் இதற்குத் தேவையில்லை; ஆயுதமேந்திய மக்கள் தாமே இதனைச் செய்துவிடுவார்கள்—நாகரிகமடைந்த மக்கள் திரள் எதுவும் நவீன சமுதாயத்தில் உடனே தலையிட்டு அடிதடிச் சண்டையை நிறுத்துவது போல, அல்லது பெண் ஒருத்தி தாக்கப்படுவதைத் தடுப்பது போல, அவர்கள் இதனைச் சுலபமாகவும் உடனடியாகவும் செய்து விடுவார்கள். இரண்டாவதாக, சமுதாய ஒட்டுறவுக்குரிய விதிகளை மீறுவதால் வரும் விளைவான இந்த அடாச்செயல்களின் அடிப்படை சமுதாயக் காரணம் மக்கள் உட்படுத்தப்பட்டுள்ள சுரண்டலும் அவர்களை வதைக்கும் இல்லாமையும் வறுமையுமேதான் என்று நமக்குத் தெரியும். இந்தப் பிரதான காரணம் நீக்கப்பட்டதும் அடாச்செயல்கள் தவிர்க்க முடியாதவாறு ''உலர்ந்து உதிரத்'' தொடங்கிவிடும். எவ்வளவு விரைவாய், எந்த வரிசையில் நடந்தேறும் என்பது தெரியாது, ஆனால் அவை உலர்ந்து உதிர்ந்துவிடும் என்பது நமக்குத் தெரியும். அவை உலர்ந்து உதிரும்போது அரசும் உலர்ந்து உதிரும்.

கற்பனுவாதப் படைப்புகளை எழுப்பாமல், மார்க்ஸ் இந்த வருங்காலத்தைப் பற்றி இப்பொழுது வரையறுத்துச் சொல்லக் கூடியதை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்கும் (படிகள், நிலைகள்) இடையிலுள்ள வேறுபாட்டை மேலும் பூரணமாய் வரையறுத்துச் சொன்னார்.

### 3. கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டம்

சோஷலிசத்தில் தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் ''குறைக்கப்படாத'' அல்லது ''முழுமையான பயன்'' கிடைக்குமென்று லஸ்ஸால் கூறிய கருத்து தவறென்பதை நிரூபிக்க **கோத்தா வேலேத்திட்டத்தின் விமர்சனத்தில்** மார்க்ஸ் விவரமான பரிசீலனேயில் இறங்குகிருர். சமுதாயத்தினுடைய சமூக உழைப்பு அனேத்திலுமிருந்து காப்பு நிதி ஒன்றைக் கழிக்க வேண்டுமென்பதை, பொருளுற்பத்தியை விரிவாக்குவதற்கும், இயந்திரங்களின் ''தேய்மானத்துக்கு'' மாற்றீடு செய்வதற்கும், இன்ன பிறவற்றுக்குமான நிதிகளேக் கழிக்க வேண்டுமென்பதை மார்க்ஸ் தெளிவுபடுத்துகிருர். பிறகு நுகர்வுச் சாதனங்களிலிருந்து நிர்வாகச் செலவுகளுக்கும், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனேகள், முதிய வயதினர் இல்லங்கள் முதலான பலவற்றுக்கும் வேண்டிய நிதியைக் கழிக்க வேண்டும்.

லஸ்ஸாலின் தெளிவற்ற, குழப்படியான, பொதுத் தொடருக்கு (''தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் முழுமையான பயன்'') பதிலாய், மார்க்ஸ் சோஷலிச சமுதாயம் அதன் விவகாரங்களே உண்மையில் எப்படி நிர்வகித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பது குறித்து நிதானித்து மதிப்பீடு செய்கிருர். முதலாளித்துவம் இல்லாது ஒழிந்து விடும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நிலேமைகளே மார்க்ஸ் **ஸ்தூலமான** முறையில் பகுத்தாராய முற்படுகிருர். அவர் கூறுவதாவது:

> ''இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது'' (தொழிலாளர் கட்சியின் வேலேத்திட்டத்தைப் பகுத்தாராய்கையில்) ''தனது சொந்த அடித்தளங்களின் மீது **வளர்ந்தெழுந்துள்ள** ஒரு கம்யூனிச சமுதாயமல்ல; மாருக, முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து **வெளித்தோன்றுவதும்**, ஆகவே தான் உதித்த அந்தப் பழைய சமுதாயத்தினிடமிருந்து பெறப்பட்ட பிறவிக்குறிகள் ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும், தார்மிக வழியிலும், அறிவு வழியிலும்—இன்னமும் பதிந்திருப்பதுமான கம்யூனிச சமுதாயத்தையே இங்கு நாம் ஆராய்கிருேம்.''

இந்தக் கம்யூனிச சமுதாயத்தைத்தான், முதலாளித்துவத்திலிருந்து பிறந்து இப்பொழுதுதான் வெளியே வந்து அந்தப் பழைய சமுதாயத்தின் பிறவிக்குறிகள் எல்லா வழியிலும் பதிந்திருக்கும் இந்த சமுதாயத்தைத் தான் மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிடுகிறார்.

உற்பத்தி சாதனங்கள் இப்பொழுது தனியாட்களது தனியுடைமையாய் இல்லை. உற்பத்தி சாதனங்கள் சமுதாயம் அனைத்தின் உடைமையாகிவிட்டன. சமூகத்துக்குத் தேவையான வேலையில் ஒரு பகுதியைச் செய்திடும் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் இவ்வளவு வேலையைச் செய்திருப்பதாய்க் கூறும் சான்றிதழ் ஒன்றைச் சமுதாயத்திடமிருந்து பெற்றுக் கொள்கிறார். இச்சான்றிதழைக் கொண்டு இதற்கு இணையான அளவுக்கு அவர் நுகர்வுப் பண்டங்களின் பொதுக் களஞ்சியத்திலிருந்து பண்டங்கள் பெறுகிறார். பொது நிதிக்குச் செல்லும் உழைப்பின் அளவு கழித்தெடுக்கப்பட்ட பின், ஒவ்வொரு தொழிலாளியும் சமுதாயத்திற்குத் தான் அளித்ததற்குச் சமமான அளவில் அதனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

''சமத்துவம்'' அரசோச்சுவதாகவே தோன்றுகிறது.

ஆனால் இத்தகைய சமுதாய அமைப்பினை (வழக்கமாய் இது சோஷலிசம் என்று அழைக்கப்படுகிறது, மார்க்ஸ் இதனைக் கம்யூனிசத்தின் முதற் கட்டமெனக் குறிப்பிடுகிறார்) கருத்தில் கொண்டு லஸ்ஸால் இது ''சமத்துவ வினியோகமாகும்'' என்றும், ''உழைப்பின் உற்பத்திப் பொருளில் சமப்பங்கு பெற எல்லோருக்கும் சம உரிமை அளிப்பதாகும்'' என்றும் கூறும் போது, லஸ்ஸால் தவறிழைக்கிறார்; இந்தத் தவற்றை மார்க்ஸ் அம்பலம் செய்கிறார்.

''சம உரிமை'' இங்கு இருக்கிறதுதான், ஆனால் இன்னமும் இது ''முதலாளித்துவ உரிமையேதான்'', ஒவ்வொரு உரிமையையும் போல சமத்துவமின்மையைக் கொண்டதேதான் என்று மார்க்ஸ் கூறுகிறார். ஒவ்வொரு உரிமையும் உண்மையில் ஒரே மாதிரி இல்லாத, ஒருவருக்கொருவர் சமமாயில்லாத வெவ்வேறானோருக்கும் சம அளவீட்டைப்

பயன்படுத்துகிறது. ஆகவே ''சம உரிமை'' என்பது உண்மையில் சமத்துவத்துக்குப் பங்கம் செய்கிறது, அநீதியாகிவிடுகிறது. ஒவ்வொருவரும் ஏனையவர் எவரையும் போல அதே அளவு சமூக உழைப்பு புரிந்து, சமூக உற்பத்திப் பொருளில் (மேற்கூறியபடி கழித்தபின் எஞ்சுவதில்) சமப் பங்கு பெறுகிறார்.

ஆனால் எல்லோரும் ஒரே மாதிரி இருக்கவில்லை: ஒருவர் வலுவானவர், மற்றொருவர் பலவீனமானவர்; ஒருவர் கல்யாணமானவர், மற்றொருவர் ஆகாதவர்; ஒருவருக்கு அதிக குழந்தைகள், மற்றொருவருக்கு அவ்வளவு இல்லை... மார்க்ஸ் இதிலிருந்து எடுத்துரைக்கும் முடிவு வருமாறு:

> ''...சமமான உழைப்பை அளித்து, ஆகவே சமுதாய நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறுவதன் மூலம், உண்மையில் ஒருவர் பிறிதொருவரை விட அதிகம் பெறவும், ஒருவர் பிறிதொருவரைவிடச் செல்வந்தராய் இருக்கவும், இன்ன பலவாறாகவும் நேர்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க, உரிமை சமமாய் இருப்பதற்குப் பதில் சமமின்றி இருத்தல் வேண்டும்....''

ஆகவே கம்யூனிசத்தின் முதற் கட்டம் இன்னமும் நீதியும் சமத்துவமும் அளித்திட முடியாத நிலையிலேதான் இருக்கும்: செல்வத்தில் வேறுபாடுகள், நியாயமில்லா வேறுபாடுகள் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கும், ஆனால் மனிதனை மனிதன் சுரண்டுதல் முடியாததாகிவிடும், ஏனென்றால் உற்பத்தி சாதனங்களை—ஆலைகளையும், இயந்திரங்களையும், நிலத்தையும், பிறவற்றையும்—கைப்பற்றி அவற்றைத் தனியுடைமையாக்கிக் கொள்வது முடியாததாகிவிடும். பொதுவில் ''சமத்துவம்'' குறித்தும் ''நீதி'' குறித்தும் லஸ்ஸால் கூறும் தெளிவற்ற குட்டிமுதலாளித்துவத் தொடர்களைத் தகர்த்திட்டு, மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையைத் தெளிவுபடுத்துகிறார். கம்யூனிச சமுதாயம் தனி நபர்களால் உற்பத்தி சாதனங்கள் கைப்பற்றப்பட்டு விட்டதிலுள்ள ''அநீதியை'' மட்டும்தான் முதலில் ஒழிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது என்பதையும், மற்றோர்

அநீதியை, அதாவது நுகர்வுப் பண்டங்களை (தேவைகளுக்கு ஏற்ப அல்லாமல்) ''ஆற்றிய உழைப்பின் அளவுக்கு ஏற்ப'' வினியோகிப்பதிலுள்ள அநீதியை அதனுல் உடனடியாக அகற்ற முடியவில்லை என்பதையும் மார்க்ஸ் காட்டுகிருர்.

முதலாளித்துவப் பேராசிரியர்களும் ''நமது'' துகானும் அடங்கலான கொச்சைவாதப் பொருளியலாளர்கள் ஓயாமல் சோஷலிஸ்டுகள்மீது குற்றம் சாட்டுகிருர்கள்; சோஷலிஸ்டுகள் மக்களிடையிலான சமத்துவமின்மையை மறந்து விடுவதாகவும் இந்த சமத்துவமின்மையை அகற்றிவிடலாமெனக் ''கனவு காண்பதாகவும்'' கூறுகிருர்கள். இந்தக் குற்றச் சாட்டு முதலாளித்துவச் சித்தாந்தவாதிகளுடைய அளவு கடந்த அறியாமையைத் தான் காட்டுகிறது என்பது விளங்குகிறது.

சிறிதும் தவருது உன்னிப்புடன் மார்க்ஸ் மனிதர்களிடையிலான தவிர்க்க முடியாத சமத்துவமின்மையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதுடன் நிற்காது, உற்பத்தி சாதனங்களை சமுதாயம் அனைத்துக்குமுரிய பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும் (சகஜமாய் இது 'சோஷலிசம்'' என்றழைக்கப்படுகிறது) வினியோகத்திலுள்ள குறைபாடுகளும் ''முதலாளித்துவ உரிமையின்'' சமத்துவமின்மையும் அகற்றப்பட்டுவிடுவதில்லை என்பதையும், ''ஆற்றப்படும் உழைப்புக்கு ஏற்ப'' உற்பத்திப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளப்படும் வரை இவை தொடர்ந்து நிலவும் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்கிருர். மேலும் தொடர்ந்து மார்க்ஸ் கூறுவதாவது:

> ''...இந்தக் குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் தவிர்க்க முடியாதவை, ஏனெனில் இச்சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளிவந்திருக்கிறது. உரிமையானது ஒருபோதும் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பையும் இதனுல் நெறிப்படுத்தப்பட்ட அதன் கலாசார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உயர்வானதாகிவிட முடியாது....''

ஆக, கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் (சாதாரணமாய் இது சோஷலிசம் என்றழைக்கப்படுகிறது)

''முதலாளித்துவ உரிமை'' அதன் முழு அளவிலும் ஒழிக்கப்பட்டு விடுவது இல்லை; பகுதி அளவுக்கே, இதுகாறும் சித்திபெற்றுள்ள பொருளாதாரப் புரட்சிக்கு ஏற்ற அளவுக்கே, அதாவது உற்பத்தி சாதனங்களைப் பொறுத்த மட்டிலுமே ஒழிக்கப்படுகிறது. ''முதலாளித்துவ உரிமை'' இவற்றைத் தனி நபர்களுடைய தனிவுடைமையாய் அங்கீகரிக்கிறது. சோஷலிசம் இவற்றைப் பொதுவுடைமையாய் மாற்றுகிறது. அந்த அளவுக்கு—அந்த அளவுக்கு மட்டுமே—''முதலாளித்துவ உரிமை'' மறைகிறது.

ஆனால் அதன் மற்றொரு பகுதியைப் பொறுத்தவரை அது தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கிறது; சமுதாய உறுப்பினர்களிடையே உற்பத்திப் பொருள்களின் வினியோகத்திலும் உழைப்பைப் பிரித்தளிப்பதிலும் ஒழுங்கியக்கியாய் (நிர்ணயிக்கும் காரணியாய்) தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கிறது. ''வேலை செய்யாதவன் உண்ணவும் வேண்டாம்'' என்னும் சோஷலிசக் கோட்பாடு ஏற்கெனவே சித்தி பெற்றுவிட்டது; ''சம அளவிலான உழைப்புக்கு சம அளவிலான உற்பத்திப் பொருட்கள்'' என்னும் மற்றொரு சோஷலிசக் கோட்பாடும் ஏற்கெனவே சித்திபெற்றுவிட்டது. ஆயினும் இது இன்னமும் கம்யூனிசமாகிவிடவில்லை; சமமல்லாதவர்களுக்கு, சமமில்லா (மெய்யாகவே சமமில்லா) உழைப்பு அளவுகளுக்கு ஊதியமாய்ச் சம அளவிலான உற்பத்திப் பொருள்களை அளிக்கும் ''முதலாளித்துவ உரிமை'' இன்னும் ஒழிக்கப்பட்டாகவில்லை.

இது ஒரு ''குறைபாடே'', ஆனால் கம்யூனிசத்தின் முதற்கட்டத்தில் இது தவிர்க்க முடியாதது என்று மார்க்ஸ் கூறுகிறார். ஏனெனில் கற்பனாவாதத்தில் ஈடுபடாதிருக்க வேண்டுமாயின், முதலாளித்துவத்தை வீழ்த்தியதும் மக்கள் உரிமைத் தராதரம் எதுவும் பாராது சமுதாயத்துக்காக வேலை செய்ய உடனடியாய்க் கற்றுக்கொண்டுவிடுவார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. தவிரவும் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டதும் இத்தகைய ஒரு மாறுதல் ஏற்படுவதற்கு வேண்டிய பொருளாதார முன்னிபந்தனைகள் உடனடியாய்ப் படைக்கப்பட்டுவிடுவதில்லை.

''முதலாளித்துவ உரிமையின்'' தராதரத்தைத் தவிர இப்பொழுது வேறு தராதரம் இருக்கவில்லை. ஆகவே இந்த அளவுக்கு அரசுக்குரிய தேவை இன்னும் இருந்து வருகிறது; உற்பத்தி சாதனங்களின் பொதுவுடைமையைப் பாதுகாப்பதுடன், உழைப்பிலும் உற்பத்திப் பொருள்களின் வினியோகத்திலும் சமத்துவத்தைப் பாதுகாக்கக் கூடிய அரசு தேவைப்படுகிறது.

முதலாளிகளும் வர்க்கங்களும் இனி இல்லையாதலால் அந்த அளவுக்கு அரசு உலர்ந்து உதிர்கிறது. ஆகவே எந்த **வர்க்கமும்** இனி **அடக்கப்பட** முடியாது.

ஆனால் அரசு இன்னும் அறவே உலர்ந்து உதிர்ந்து விடவில்லை, ஏனெனில் உண்மையில் சமத்துவமின்மையைப் புனிதமாக்கிவிடும் ''முதலாளித்துவ உரிமையைப்'' பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அரசு அறவே உலர்ந்து உதிர முழுநிறைவான கம்யூனிசம் அவசியமாகும்.

### 4. கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டம்

மார்க்ஸ் தொடர்ந்து கூறுகிறார்:

> ''...கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனிநபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன்கூட கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்தபின், உழைப்பானது பிழைப்புக்கான சாதனமாய் மட்டுமின்றி வாழ்வின் முதற்பெரும் தேவையுமாகியபின், தனிநபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடுகூட உற்பத்திச் சக்திகளும் அதிகரித்துவிட்டபின், பொதுச் சமுதாயச் செல்வத்தின் அருவிகள் எல்லாம் மேலும் அபரிமிதமாய்ப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகையில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப!' என்பதாய்ப் பொறித்துக் கொள்ளும்.''

''சுதந்திரம்'', ''அரசு'' இவ்விரு சொற்களையும் இணைத்து முடிபோடுவதிலுள்ள அபத்தத்தை எள்ளிநகையாடும் எங்கெல்சின் உரைகள் எவ்வளவு சரியானவை

என்பதை இப்பொழுதுதான் நம்மால் முழு அளவுக்கு உணர முடிகிறது. அரசு இருக்கும்வரை சுதந்திரம் இல்லை. சுதந்திரம் வந்ததும் அரசு இல்லாமல் போய்விடும்.

அரசு பூரணமாய் உலர்ந்து உதிர்வதற்கு அடிப்படையாய் அமைவது கம்யூனிசத்தின் மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டமாகும். இக்கட்டத்தில் கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை மறைந்துவிடுகிறது; தற்கால சமுதாய சமத்துவமின்மைக்குத் தலைமையான ஆதாரங்களில் ஒன்று இவ்வாறு இக்கட்டத்தில் மறைந்துவிடுகிறது. உற்பத்தி சாதனங்களைப் பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும், முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதால் மட்டும் உடனடியாக எவ்வகையிலும் இந்தத் தலைமையான ஆதாரத்தை அகற்றிவிட முடியாது.

முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதானது உற்பத்தி சக்திகள் பிரம்மாண்டமாய் வளர்ச்சியுறுவதைச் சாத்தியமாக்குகிறது. முதலாளித்துவம் ஏற்கெனவே எவ்வளவு நம்ப முடியாத அளவுக்கு இந்த வளர்ச்சியைத் தடுத்து இழுக்கிறதென்பதைக் காணும் போது, ஏற்கெனவே கைவரப்பெற்றுள்ள தொழில்நுட்ப நிலையின் அடிப்படையில் எவ்வளவு அதிக முன்னேற்றத்தை ஏற்படுத்தலாமென்பதைக் காணும் போது, முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதன் விளைவாய் மனித சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் தவிர்க்க முடியாதவாறு பிரம்மாண்டமாய் வளர்ச்சியடையுமென நாம் திட நம்பிக்கையோடு கூற முடியும். ஆனால் இந்த வளர்ச்சி எவ்வளவு துரிதமாய் நடந்தேறும் என்று, உழைப்புப் பிரிவினையிலிருந்து முறித்துக் கொண்டு வருவதும், கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை ஒழிக்கப்படுவதும், உழைப்பானது ‘‘வாழ்க்கையின் முதற் பெரும் தேவையாவதும்’’ எவ்வளவு சடுதியில் நடைபெறும் என்று நாம் அறியோம், அறியவும் முடியாது.

ஆகவேதான் நாம் தவிர்க்க முடியாதபடி அரசு உலர்ந்து உதிர்வது குறித்து மட்டும் பேசி, இந்த நிகழ்ச்சிப்போக்கு நீடித்து நடைபெறும் தன்மை கொண்டதாய்

இருப்பதையும் கம்யூனிசத்தின் உயர் கட்டம் வளர்ச்சி யுறுவதன் வேகத்தைச் சார்ந்ததாய் இருப்பதையும் வலி யுறுத்திவிட்டு, அரசு உலர்ந்து உதிரத் தேவையான காலத்தையோ அதன் ஸ்தூலமான வடிவங்களையோ பற்றிய பிரச்சினைக்கு விடை கூருது விட்டு வைக்க உரிமை பெற்றிருக்கிறோம். ஏனெனில் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க விவரப்பொருள் இல்லை.

''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதியைச் சமுதாயம் அனுசரிக்கையில் தான், அதாவது மக்கள் தாமே மனமுவந்து **தமது ஆற்றலுக்கு ஏற்ப** வேலை செய்யும்படி சமுதாய ஒட்டுறவுக் கான அடிப்படை நியதிகளைப் பற்றியொழுக அந்த அள வுக்குப் பழகிக் கொண்டு விடும்போதும், அவர்களுடைய உழைப்பு அந்த அளவுக்குப் பொருளுற்பத்தி ஆற்றல் மிக்கதாகிவிடும் போதும் தான் அரசு பூரணமாய் உலர்ந்து உதிர முடியும். வேருெருவரைவிட நாம் அரை மணி நேரம் அதிகம் வேலை செய்யவில்லையா, வேருெரு வரைவிட நாம் குறைவாய் சம்பளம் பெறவில்லையா என்று ஷெய்லக்கின்[31] கல்நெஞ்சுடன் கணக்கிட்டுப் பார்க்கும்படி நிர்ப்பந்தம் செய்யும் ''முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு'' அப்பொழுது கடக்கப்பட்டு விடும். அப் பொழுது சமுதாயம் உற்பத்திப் பொருள்களை வினியோ கிக்கையில் அவரவரும் பெற வேண்டிய அளவை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை இருக்காது; ஒவ்வொருவரும் ''தமது தேவைகளுக்கு ஏற்பத்'' தடங்கலின்றி சுதந் திரமாய் எடுத்துக் கொள்வார்.

முதலாளித்துவக் கண்ணேட்டத்திலிருந்து, இத் தகைய ஒரு சமுதாய அமைப்பு ''வெறும் ஆகாயக் கோட் டையே'' என்று அறிவிப்பதும், அந்தந்தக் குடிமகனின் உழைப்புமீது எந்தக் கண்காணிப்புமின்றி அவரவரும் சமுதாயத்திடமிருந்து வேண்டிய அளவு மிட்டாயும் கார் களும் பியாேனக்களும் பிறவும் பெறும் உரிமையை ஒவ் வொருவருக்கும் கிடைக்கச் செய்வதாய் வாக்களிப்ப தாக சோஷலிஸ்டுகளை நையாண்டி செய்வதும் சுலபமே. இன்றுங்கூட மிகப் பெருவாரியான முதலாளித்துவ ''விஞ்

ஞானிகள்'' இவ்வாறு நையாண்டி செய்வதோடு நின்று விடுகிறார்கள். இதன் மூலம் தமது அறியாமையையும், தன்னலங் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாக்க முனை வோரே தாம் என்பதையும்தான் வெளிப்படுத்திக் கொள் கிறார்கள்.

அறியாமைதான்—ஏனென்றால், கம்யூனிச வளர்ச்சியின் உயர் கட்டம் வருமென ''வாக்குறுதி தரும்'' எண்ணம் எந்த சோஷலிஸ்டுக்கும் தோன்றியதில்லை. இது வரவே செய்யுமென்று சோஷலிஸ்டு மூலவர்கள் முன்னறிந்து கூறி யதைப் பொறுத்தவரை, அது உழைப்பின் தற்போதைய உற்பத்தித் திறனையோ, பொமியலோவ்ஸ்கியின் கதை களில் வரும் புர்ஸாக்குகளைப்[32] போல ''வேடிக்கைக்காக வேண்டி'' பொதுச் செல்வங்களுக்குச் சேதம் விளை விக்கக் கூடியவர்களும், முடியாததைக் கொடு என்று கோரக் கூடியவர்களுமான தற்போதுள்ள சராசரி மனி தர்களையோ மனதிற் கொண்டு கூறப்பட்டதல்ல.

கம்யூனிசத்தின் ''உயர்'' கட்டம் வரும்வரை, உழைப் பின் அளவைமீதும் நுகர்வின் அளவைமீதும் சமுதாயமும் அரசும் மிகவும் கண்டிப்பான கண்காணிப்பு செய்ய வேண்டு மென்று சோஷலிஸ்டுகள் கோருகின்றனர். ஆனால் இந்தக் கண்காணிப்பு முதலாளிகளுடைய உடைமைகள் பறி முதல் செய்யப்படுவதிலிருந்தும் முதலாளிகள்மீது தொழி லாளர்களுடைய கண்காணிப்பு நிறுவப்படுவதிலிருந்தும் ஆரம்பமாக வேண்டும், தவிரவும் இந்தக் கண்காணிப்பு அதிகார வர்க்கத்தினராலான அரசால் அல்ல, ஆயுதமேந் திய தொழிலாளர்களாலான அரசால் நடத்தப்பட வேண் டும் என்கின்றனர்.

முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் (மற்றும் த்ஸெ ரெத்தேலிகள், செர்னோவ்கள்[33] முதலானோரை ஒத்த முத லாளித்துவ சித்தாந்தவாதிகளது பரிவாரத்தினரும்) தன் னலங்கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது எதில் காணக்கிடக்கிறது என்றால், இன்றைய அரசியலின் ஜீவா தாரமான அவசர அவசியப் பிரச்சினையை விட்டுவிட்டு, அதாவது முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்தல், குடிமக்கள் எல்லோரையும் பிரம்மாண்டமான ஒரே ''கூட்டமைவின்''—அனைத்து அரசின்—தொழி

லாளர்களாகவும் சிப்பந்திகளாகவும் மாற்றுதல், இந்தக் கூட்டமைவின் செயல் அனைத்தையும் மெய்யான ஜன நாயக அரசுக்கு, தொழிலாளர், படையாளர்கள் பிரதிநிதி களது சோவியத்துகளின் அரசுக்கு முற்றிலும் கீழ்ப்படியச் செய்தல் ஆகியவற்றை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாய் நெடுந்தொலைவிலுள்ள எதிர்காலத்தைப் பற்றிய வாக்கு வாதத்தையும் பேச்சையும் மேற்கொள்கிறார்கள்.

புலமை வாய்ந்த பேராசிரியரும், அவரைத் தொடர்ந்து குட்டிமுதலாளித்துவ அற்பவாதியும், இவரையும் தொடர்ந்து த்ஸெரெத்தேலிகளும் செர்னேவ்களும் போல்ஷிவிக்குகளின் அதீத கற்பனைகள் என்றும், வாய்ச் சவடால் வாக்குறுதிகள் என்றும், சோஷலிசத்தைப் ''புகுத்துவது'' சாத்தியமல்ல என்றும் பேசுகையில், இவர்கள் கம்யூனிசத்தின் உயர் கட்டம் அல்லது படியை மனதிற் கொண்டிருக்கிறார்கள். இதனைப் ''புகுத்துவதாய்'' யாரும் ஒருநாளும் வாக்குறுதி கூறவுமில்லை, நினைத்ததுங்கூட இல்லை; இது ''புகுத்தப்படக் கூடியது'' அல்ல.

இது நம்மை சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமுள்ள விஞ்ஞான வழியிலான வேறுபாடு குறித்த பிரச்சினைக்கு இட்டுச் செல்கிறது. ''சமூக-ஜனநாயகவாதி'' என்னும் பெயர் சரியல்ல என்பது குறித்து மேலே குறிக்கப்பட்ட தமது வாதத்தில் எங்கெல்ஸ் இந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்டினர். கம்யூனிசத்தின் முதல் அல்லது கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்குமுள்ள வேறுபாடு அரசியல் வழியில் காலப்போக்கில் மிகப் பெரியதாய் இருக்கும் எனலாம். ஆனல் இவ்வேறுபாட்டை இப்பொழுது முதலாளித்துவத்தில் இருக்கையில் கண்டறிய முற்படுவது நகைக்கத்தக்கதே ஆகும். தனிப்பட்ட அராஜகவாதிகள் மட்டும் வேண்டுமானல் (கிரப்போத்கின்களும் கிராவும் கார்னெலிசனும் அராஜகவாதத்தின் ஏனைய ''தாரகைகளும்'' சமூக-தேசியவெறியர்களாகவும், இன்னமும் கண்ணிய உணர்வையும் மனசாட்சியையும் விட்டுவிடாதுள்ள ஒரு சில அராஜகவாதிகளில் ஒருவரான கே குறிப்பிட்டது போல ''அராஜகவாத-அகழாளர்களாகவும்'', ''பிளெஹானவின் பாணியில்'' மாற்றமடைந்திருப்பதிலிருந்து எதுவும் அறிந்து கொள்ளாதோர்

அராஜகவாதிகளிடையே இன்னமும் இருப்பார்களாயின்) இதற்குத் தலைமை முக்கியத்துவம் அளிக்கக் கூடும்.

ஆனால் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமுள்ள விஞ்ஞான வழியிலான வேறுபாடு தெட்டத் தெளிவானது. வழக்கமாய் சோஷலிசம் என்று அழைக்கப்படுவதை மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிட்டார். உற்பத்தி சாதனங்கள் பொதுவுடைமை ஆகிவிடும் அளவுக்கு இக்கட்டத்துக்கும் ''கம்யூனிசம்'' என்னும் சொல் பொருந்துவதாகும், ஆனால் இது முழு நிறைக் கம்யூனிசம் அல்ல என்பதை நாம் மறக்காதிருக்க வேண்டும். மார்க்சின் விளக்கங்களுக்குள்ள மாபெரும் முக்கியத்துவம் என்னவெனில் இங்கும் அவர் பொருள்முதல்வாத இயக்கவியலை, வளர்ச்சித் தத்துவத்தை முரணின்றிக் கையாளுகிறார்; கம்யூனிசத்தை முதலாளித்துவத்தில் இருந்து வளர்ச்சியுறும் ஒன்றாகக் கருதுகிறார். பண்டிதப் புலமை சார்ந்த வழியில் ''கண்டுபிடிக்கப்பட்ட'', புனையப்பட்ட இலக்கணங்களுக்கும் சொற்களைப் பற்றிய பயனற்ற சண்டப் பிரசண்டங்களுக்கும் (எது சோஷலிசம்? எது கம்யூனிசம்?) பதிலாய், மார்க்ஸ் கம்யூனிசத்தின் பொருளாதார முதிர்ச்சியினுடைய இரு கட்டங்கள் எனப்படத்தக்கவற்றின் பகுத்தாய்வை அளிக்கிறார்.

முதற் கட்டத்தில் அல்லது படியில் கம்யூனிசமானது பொருளாதார வழியில் இன்னமும் முழு அளவு முதிர்ச்சியுற்றதாக, முதலாளித்துவத்தின் மரபுகள் அல்லது மிச்சசொச்சங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டதாக இருக்க முடியாது. ஆகவே கம்யூனிசம் அதன் முதற் கட்டத்தில் ''முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பை'' விட்டொழிக்காமல் வைத்துக் கொள்ளும் சுவாரசியமான நிகழ்வு ஏற்படுகிறது. நுகர் பொருள்களின் வினியோகம் குறித்த இந்த முதலாளித்துவ உரிமைக்கு முதலாளித்துவ அரசு இருப்பது தவிர்க்க முடியாத முன்னிபந்தனையாகும், ஏனெனில் உரிமைக்குரிய தராதரங்கள் அனுசரிக்கப்படுமாறு உறுதிப்படுத்த வல்ல இயந்திரம் இல்லையேல் உரிமை அர்த்தமற்றதாகிவிடும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், கம்யூ

னிசத்தில் சில காலத்துக்கு முதலாளித்துவ உரிமை மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்கம் இல்லாத முதலாளித்துவ அரசுங்கூட இருக்கும்!

இது முரணுரை போலத் தோன்றலாம், அல்லது மார்க்சியத்தின் அதியற்புத உள்ளடக்கச் சாரத்தை ஆய்ந்தறிய கிஞ்சித்தும் முயலாதோர் அடிக்கடி மார்க்சியத்தின் மீது குறை கூறுகிறுர்களே அத்தகைய இயக்கவியல் புதிராகவுங்கூடத் தோன்றலாம்.

ஆனுல் உண்மை என்னவெனில், இயற்கையிலும் சமுதாயத்திலும் பழைமையின் மிச்சசொச்சங்கள் புதுமையில் எஞ்சி நின்று வாழ்க்கையில் நம்மை ஒவ்வொரு தப்படியிலும் எதிர்நோக்குகின்றன. தான்தோன்றித்தனமாய்க் கம்யூனிசத்தில் ''முதலாளித்துவ'' உரிமையைக் கடுகளவும் மார்க்ஸ் புகுத்திவிடவில்லே. முதலாளித்துவத்தின் **அடிவயிற்றிலிருந்து** வெளித்தோன்றும் ஒரு சமுதாயத்தில் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் தவிர்க்க முடியாததைத்தான் அவர் சுட்டிக் காட்டினுர்.

தொழிலாளி வர்க்கத்துக்கு, தனது விடுதலேக்காக அது முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், ஜனநாயகம் அளவு கடந்த முக்கியத்துவமுடையதாகும். ஆயினும் ஜனநாயகம் தாண்டிச் செல்லக் கூடாத ஓர் எல்லேக் கோடல்ல. பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கும் செல்லும் பாதையில் அமைந்த கட்டங்களில் ஒன்றே அது.

ஜனநாயகம் சமத்துவத்தைக் குறிக்கிறது. சமத்துவம் என்ருல் **வர்க்கங்கள்** ஒழிக்கப்படுதல் என்று பிழையற்ற முறையில் அர்த்தப்படுத்திக் கொள்வோமாயின், பாட்டாளி வர்க்கம் சமத்துவத்துக்காக நடத்தும் போராட்டத்தின் மாபெரும் முக்கியத்துவமும், ஒரு முழக்கம் என்ற முறையில் சமத்துவத்தின் மாபெரும் முக்கியத்துவமும் தெளிவாய் விளங்கும். ஆனுல் ஜனநாயகம் **பெயரளவிலான** சமத்துவத்தையே குறிக்கிறது. சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் உற்பத்தி சாதனங்களின் உடைமை **சம்பந்தமாய்** சமத்துவம்

சாதிக்கப் பெற்றதும், அதாவது உழைப்புக்கும் சம்பளங்களுக்குமான சமத்துவம் சாதிக்கப் பெற்றதும், மேலும் தொடர்ந்து முன்னேறுவது எப்படி, பெயரளவிலான சமத்துவத்திலிருந்து நடைமுறை உண்மையான சமத்துவத்துக்கு, அதாவது ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதி செயல்படும் நிலைக்கு முன்னேறுவது எப்படி என்கிற பிரச்சினை தவிர்க்க முடியாதபடி மனிதகுலத்தை எதிர்நோக்கும். எந்தக் கட்டங்களின் வாயிலாய், எந்த நடைமுறை நடவடிக்கைகளைக் கொண்டு மனிதகுலம் இந்தத் தலைமையான குறிக்கோளைச் சென்றடையும் என்பதை நாம் அறியோம், அறியவும் முடியாது. ஆனால் சோஷலிசத்தை உயிரற்ற, இறுகிக்கெட்டியாகிய, என்றென்றுக்குமாய் மாறாத ஒரே நிலையில் இருத்தப்பட்ட ஒன்றாய்க் கொள்ளும் சாதாரண முதலாளித்துவக் கருத்தோட்டம் நம்ப முடியாத அளவுக்குப் பொய்யானது என்பதையும், உண்மையில் சோஷலிசத்தில் மட்டும்தான் பொது வாழ்வு, தனியார் வாழ்வு இவற்றின் எல்லாத் துறைகளிலுமே மிக வேகமான, மெய்யான, உண்மையிலேயே பிரம்மாண்டத் திரளானோரைக் கொண்ட, முதலில் பெரும்பான்மையோரையும் பிறகு மக்கள் தொகை அனைவரையுமே கொண்ட, முன்னேற்றப் பேரியக்கம் தொடங்கும் என்பதையும் உணர்ந்து கொள்வது மிக முக்கியமாகும்.

ஜனநாயகம் என்பது அரசின் ஒரு வடிவமாகும், அரசு வகைகளில் ஒன்றாகும். எனவே ஒவ்வொரு அரசையும் போல ஜனநாயகமும் ஒரு புறத்தில் ஆட்களுக்கு எதிராய் ஒழுங்கமைந்த, முறையான வன்முறைப் பிரயோகத்தைக் குறிக்கிறது. ஆனால் அது மறுபுறத்தில் குடிமக்களின் சமத்துவம், அதாவது அரசின் கட்டமைப்பை நிர்ணயிப்பதிலும் அரசை நிர்வகிப்பதிலும் எல்லோருக்கும் சம உரிமை உண்டென்பது பெயரளவில் அங்கீகரிக்கப்படுவதையும் குறிக்கிறது. இதன் விளைவு என்னவெனில், ஜனநாயகம் அதன் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், முதலாளித்துவத்தை எதிர்த்துப் புரட்சிகரப் போராட்டம் நடத்தும் வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தை

ஒன்றுதிரளச் செய்கிறது; முதலாளித்துவ அரசுப் பொறியமைவையும்—குடியரசு வடிவிலான முதலாளித்துவ அரசுப் பொறியமைவையும்கூட—நிரந்தரச் சேனையையும், போலீசையும், அதிகாரவர்க்கத்தையும் இந்தப் பாட்டாளி வர்க்கம் தகர்த்துத் தவிடுபொடியாக்கி புவிப் பரப்பிலிருந்தே துடைத்தெடுத்துவிட்டு, இவற்றுக்குப் பதிலாய் மேலும் ஜனநாயகமான ஓர் அரசுப் பொறியமைவை அமைக்கக் கூடியதாக்குகிறது. முன்னிலும் அதிக ஜனநாயகமுடைத்த அரசுப் பொறியமைவு என்றாலுங்கூட இதுவும் ஓர் அரசுப் பொறியமைவுதான். அனைத்து மக்களும் அடங்கிய காவலர் படையை நிறுவ முற்படும் ஆயுதமேந்திய தொழிலாளர்களின் வடிவில் அமைந்த அரசுப் பொறியமைவு இது.

இங்கு ''அளவு பண்பாய் மாறுகிறது'': ஜனநாயகம் இந்த அளவுக்கு அதிகரிப்பதானது முதலாளித்துவ சமுதாயத்தின் வரம்புகளைத் தாண்டிச் சென்று இச்சமுதாயத்தை சோஷலிச வழியில் திருத்தியமைப்பதன் துவக்கத்தைக் குறிக்கிறது. மெய்யாகவே எல்லோரும் அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்வார்களாயின் முதலாளித்துவத்தால் தன் பிடியை இருத்திக் கொள்ள முடியாது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி தான் மெய்யாகவே ''எல்லோரும்'' அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்ளும்படி வகை செய்யும் முன்னிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. இந்த முன்னிபந்தனைகளில் சில வருமாறு: அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுதல், மிகவும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் ஏற்கெனவே இது சாதிக்கப் பெற்றுவிட்டது; தபால் துறை, ரயில்வேக்கள், பெரிய ஆலைகள், பெருவீத வாணிபம், வங்கித்துறை, இன்ன பிறவற்றுலான சிக்கல்மிக்க, பிரம்மாண்டமான, சமூகமயமான இயந்திரத்தால் கோடானுகோடியான தொழிலாளர்கள் ''பயிற்சியும் கட்டுப்பாடும்'' உடையோராக்கப்படுதல்.

இந்தப் பொருளாதார முன்னிபந்தனைகள் இருக்குமாயின், முதலாளிகளும் அதிகாரவர்க்கத்தினரும் வீழ்த்தப்பட்ட பின், இவர்களுக்குப் பதிலாய் உற்பத்தியையும் வினியோகத்தையும் கண்காணிப்பதிலும் உழைப்பையும் உற்பத்திப் பொருள்களையும் பற்றிய கணக்குப் பதிவு

வேலையிலும் உடனடியாகவே, எடுத்தயெடுப்பிலே, ஆயுத மேந்திய தொழிலாளர்களையும், ஆயுதமேந்திய மக்கள் அனைவரையுமே ஈடுபடுத்துவது முற்றிலும் சாத்தியமே. (கண்காணிப்பும் கணக்குப் பதிவுமான இந்தப் பிரச்சினை யைப் பொறியாளர்கள், விவசாய நிபுணர்கள் முதலான விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஊழியர்களைப் பற்றிய பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இந்தக் கனவான்கள் இன்று முதலாளிகளுடைய விருப் பங்களுக்குப் பணிந்து வேலை செய்கிறார்கள், நாளைக்கு ஆயுதமேந்திய தொழிலாளர்களுடைய விருப்பங்களுக்குப் பணிந்து இன்னுங்கூட திறம்பட வேலை செய்வார்கள்.)

கணக்கீடு, கண்காணிப்பு—கம்யூனிச சமுதாயத்தின் **முதற் கட்டம்** தடங்கலின்றி இயங்கவும் சரிவரச் செயற் படவும் **பிரதானமாய்த்** தேவைப்படுகிறவை இவையே குடிமக்கள் **எல்லோரும்** அரசின் சம்பளச் சிப்பந்திகளாய் மாற்றப்பட்டு விடுகிறார்கள்; அரசு ஆயுதமேந்திய தொழி லாளர்களால் ஆனது. குடிமக்கள் **எல்லோரும்** அரசி னுடைய நாடு தழுவிய ஒரேயொரு ''கூட்டமைவின்'' சிப் பந்திகளும் தொழிலாளர்களும் ஆகிவிடுகிறார்கள். தேவைப் படுவது எல்லாம் இவர்கள் சமத்துவமாய் வேலை செய்ய வேண்டும், வேலையில் தமக்கு உரிய பங்கைச் செய்து சமத்துவ சம்பளம் பெற வேண்டும் என்பதே. இதற்கு வேண்டிய கணக்கீடும் கண்காணிப்பும் முதலாளித்துவத் தால் வெகுவாய் **எளிமைப்படுத்தப்பட்டு,** எழுத்தறிவுடையவர் எவரும் செய்ய முடியும்படியான மேற்பார்வையிடல், பதிவு செய்தல், எண் கணிதத்தின் அடிப்படை விதிகளை அறிந்திருத்தல், தக்க ரசீதுகளை எழுதிக் கொடுத்தல் போன்ற மிக மிக எளிய வேலை களாய்க் குறுகும் படிச் செய்யப்பட்டுவிட்டன.*

---

* அரசின் மிக முக்கிய பணிகள் தொழிலாளர்கள் தாமே செய்யத்தக்க கணக்கீடு, கண்காணிப்பு ஆகியவை யாய்க் குறுகும்படிச் செய்யப்படுகையில், அரசானது ''அரசியல் வழியிலான அரசாய்'' இருக்கும் நிலை முடி வுற்றுவிடும்; ''பொதுப் பணிகள் தமது அரசியல் தன் மையை இழந்து, வெறும் நிர்வாகப் பணிகளாகிவிடும்'' (பார்க்கவும்: மேலே, அத்தியாயம் 4, § 2, அராஜகவாதி களுடன் எங்கெல்சின் வாக்குவாதம்).

மக்களில் பெரும்பான்மையோர் தாமே சுயேச்சையாகவும் எல்லாவிடத்தும் இத்தகைய கணக்குப் பதிவுகளைச் செய்யவும், (இப்பொழுது சிப்பந்திகளாய் மாற்றப்பட்டு விட்ட) முதலாளிகளையும் தமது முதலாளித்துவப் பழக்கங்களை விடாது வைத்துள்ள அறிவுத் துறைக் கனவான்களையும் இவ்விதம் கண்காணித்துக் கொள்ளவும் தொடங்குகையில், இந்தக் கண்காணிப்பு மெய்யாகவே சர்வவியாபகமானதாகவும் பொதுவானதாகவும் வெகுஜனத்தன்மையதாகவும் ஆகிவிடும், இதிலிருந்து தப்ப வழி இருக்காது, ஏனெனில் ''போக்கிடம்'' எதுவும் இருக்காது.

சமுதாயம் முழுதும் சமமான உழைப்புக்குச் சமமான சம்பளத்துடன் ஒரே அலுவலகமும், ஒரே ஆலையுமாகிவிடும்.

ஆனால் பாட்டாளி வர்க்கம் முதலாளிகளைத் தோற்கடித்த பிற்பாடும், சுரண்டலாளர்களை வீழ்த்திய பிற்பாடும் சமுதாயம் முழுவதுக்கும் விரிவடையச் செய்யும் இந்த ''ஆலைத்துறைக்'' கட்டுப்பாடு எவ்வகையிலும் நமது இலட்சியமோ, நமது இறுதிக் குறிக்கோளோ அல்ல. முதலாளித்துவச் சுரண்டலால் விளைந்த எல்லா இழுக்குகளையும் அசிங்கங்களையும் களைந்து சமுதாயத்தைச் சுத்தம் செய்து தூய்மையாக்குவதற்கும், மேலும் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கும் இது அவசியமான ஒரு படியே அன்றிவேறல்ல.

எத்தருணம் முதல் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும்—அல்லது குறைந்தது மிகப் பெரும்பான்மையோர்—அரசைத் தாமே நிர்வகிக்கக் கற்றுக் கொள்கிறார்களோ, இந்தப் பணியை நேரில் தாமே மேற்கொள்கிறார்களோ, மிகச் சொற்ப தொகையினரே ஆன முதலாளித்துவச் சிறுபான்மையோரையும், தமது முதலாளித்துவப் பழக்கங்களை விட்டொழிக்க விரும்பாத கனவான்களையும், முதலாளித்துவத்தால் அறவே பாழ்படுத்தப்பட்டு விட்ட தொழிலாளர்களையும் கண்காணிக்க ''ஏற்பாடு செய்கிறார்களோ''—அத்தருணம் முதலாய் எவ்வகையான அரசாங்கத்துக்குமுள்ள தேவை அடியோடு மறையத் தொடங்கிவிடும். ஜனநாயகம் எவ்வளவுக்கு எவ்வளவு பூரணமானதாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது

தேவையற்றதாகும் தருணம் அருகாமையில் வந்துவிடு கிறது. ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான அரசு, ''அரசெனும் சொல்லின் சரியான பொருளில் அரசாயில் லாத'' இது, எவ்வளவுக்கு எவ்வளவு ஜனநாயகமுடைத்த தாய் ஆகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அரசின் ஒவ் வொரு வடிவமும் வேகமாய் உலர்ந்து உதிரத் தொடங்கு கிறது.

ஏனென்றால், **எல்லோரும்** சமூகப் பொருளுற் பத்தியை நிர்வகிக்கக் கற்றுக் கொண்டு சுயேச்சை யாய்த்தாமே நடைமுறையில் நிர்வகிக்கும்போது, சுயேச் சையாய்த்தாமே கணக்குகள் பதிவு செய்து கொண்டு சோம்பேறிகளையும் செல்வச் சீமான்களது புதல்வர்களை யும் மோசடிக்காரர்களையும் ஏனைய ''முதலாளித்துவ மரபு களின் காவலர்களையும்'' கண்காணிப்புச் செய்யும் போது, இந்த வெகுஜன அளவிலான கணக்கீட்டிலிருந்தும் கண் காணிப்பிலிருந்தும் தப்புவது தவிர்க்க முடியாத வகையில் அவ்வளவு கடினமாகிவிடுமாதலால், அவ்வளவு அரிதிலும் அரிதான விதிவிலக்காகி விடுமாதலால், மற்றும் உடனுக் குடன் கடுந்தண்டனைக்கு உரியதாக்கப்படலாமாதலால் (ஏனெனில் ஆயுதமேந்திய தொழிலாளர்கள் காரிய வழிப்பட்டவர்களே அன்றி உணர்ச்சிப் பசப்பாளர்களான அறிவுத் துறையினரல்ல, யாரும் தம்மிடம் வாலாட்ட இடந்தர மாட்டார்கள்), சமூக வாழ்க்கையின் சாதாரண அடிப்படை விதிகளைப் பற்றியொழுக வேண்டிய **அவசியமானது** விரைவில் நிலையான ஒரு **பழக்க மாகிவிடும்.**

இனி கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டத்திலிருந்து அதன் உயர் கட்டத்துக்கு மாறிச் செல்லவும், அதனுடன் கூடவே அரசு பூரணமாய் உலர்ந்து உதிரவும் பாதை விரியத் திறக்கப்பட்டுவிடும்.

*1917 ஆகஸ்டு—செப்டெம்பரில்*
*எழுதப்பட்டது*

## அரசு பற்றி மார்க்சியம்
### என்ற கட்டுரையிலிருந்து

*இவ்விதத்தில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பது ''அரசியல் இடைக்கால கட்டமாகும்'';* **இந்தக் கட்டத்திலுள்ள அரசும்** *அரசிலிருந்து அரசு-அல்லாத, அதாவது ''அரசு என்ற வார்த்தைக்கு உரிய அர்த்தத்தில் இனி இல்லாதிருப்பதிலிருந்து'' மாற்றமடைவதாகும். எனவே மார்க்சும் எங்கெல்சும் இந்தப் பிரச்சினையில் ஒருவருக்கொருவர் முரண்படவில்லை.*

*மேலும் மார்க்ஸ் ''எதிர்கால கம்யூனிச சமுதாயத்தின் அரசைப்'' பற்றிப் பேசுகிறார்!! எனவே ''***கம்யூனிச*** சமுதாயத்திலும்'' கூட அரசுத் தன்மை இருக்கும்!! இங்கே முரண்பாடு காணப்படவில்லையா?*

*இல்லை:*

| | |
|---|---|
| *முதலாளி வர்க்கத்துக்கு அரசு தேவையாக இருக்கிறது* | *1—முதலாளித்துவ சமுதாயத்தில் அரசு—இச்சொல்லுக்கு உரியஅர்த்தத்தில்* |
| *பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவையாக இருக்கிறது* | *2—இடைக்கால கட்டம் (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்): மாறும் வகையான அரசு (அரசு — இச்சொல்லுக்கு உரிய அர்த்தத்தில் அல்ல)* |

| | |
|---|---|
| அரசு தேவையாக இருக்க வில்லை—அது உலர்ந்து உதிர்ந்து மறைகிறது | 3—கம்யூனிச சமுதாயம்: அரசு உலர்ந்து உதிர்வது |

முழுமையாக முரணின்மையும் தெளிவும் கொண்டிருக் கிறது!!

இல்லையென்றால்:

| | |
|---|---|
| 1—பணக்காரர்களுக்கும் பாட்டாளி வர்க்கத்தின் மிகச் சிறிய பகுதிக்கும் மட்டுமே ஜனநாயகம். [ஏழைகள் அதைப் பற்றி நினைக்கக் கூடிய நிலையில் இல்லை!] | 1—ஜனநாயகம் பூரண மாக ஒருபோதும் பின் பற்றப்படுவதில்லை — விதிவிலக்காக எப்பொ ழுதாவது பின்பற்றப் படுவதுண்டு... |
| 2—ஏழை மக்களுக்கு, மக் கள் தொகையில் 9/10 பகுதியினருக்கு ஜனநாய கம்—பணக்காரர்களின் எதிர்ப்பைப் பலாத்கா ரத்தின் மூலம் ஒடுக்கு தல் | 2—அநேகமாகப் பூரண மான ஜனநாயகம், முத லாளி வர்க்கத்தின் எதிர்ப்பு ஒடுக்கப்படு வதால் மட்டுமே வரை யறுக்கப்படுகிறது |
| 3—பூரண ஜனநாயகம், நிரந்தரப் பழக்கமாகி, அதன் காரணமாக உலர்ந்துமறைந்து, ''ஒவ் வொருவரிடமிருந்தும் அவ ருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவ ருடைய தேவைக்கு ஏற்ப'' என்ற கொள்கைக்கு இடம் கொடுக்கிறது | 3—உண்மையாகவே பூரண ஜனநாயகம் நிரந்தரப் பழக்கமாகி அதன் காரண மாக உலர்ந்து மறை கிறது... பூரண ஜன நாயகம் ஜனநாயகம் இல்லாமைக்குச் சமம். இது புதிரல்ல, உண் மையே! |

1930ல் லெனின் தொகுப்பு,
பதினான்காம் புத்தகத்தில்
முதன்முறையாக வெளியிடப்பட்டது

# போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?

முதலாளித்துவப் போட்டி, தனியார் முன்முயற்சி மற்றும் முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அமைப்பு முறையின் இதர நேர்த்தியான நற்பண்புகளையும் வரப் பிரசாதங்களையும் பற்றிப் புகழ்ந்து முதலாளித்துவ நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த நற்பண்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள மறுப்பதாயும் ''மானுட இயல்பைப்'' புரிந்து கொள்வதில் அசட்டை செய்வதாயும் சோஷலிஸ்டுகள் மீது குற்றம் சாட்டப் படுகிறது. ஆனால் உண்மையில் முதலாளித்துவம் நீண்ட கால முன்பே சிறுவீத சுயேச்சையான பண்ட உற்பத்தியைப் பெருவீத, மிகப் பெருவீத ஆலை உற்பத்தி, கூட்டுப் பங்கு நிறுவனங்கள், சிண்டிக்கேட்டுகள் மற்றும் இதர ஏகபோகங்களால் பதிலீடு செய்து விட்டது. சிறுவீதப் பண்ட உற்பத்தி முறையின் கீழ் முதலாளித்துவப் போட்டி மூலம் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவை கணிசமான அளவுக்கு வளரவாய்ப்பு இருந்தது. ஆனால் இத்தகைய பெருவீத முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவப் போட்டி என்பதன் பொருள் மக்கள் திரளின், அதன் மிகப் பெரும் பெரும்பான்மையின், நூறு உழைப்பாளிகளில் தொண்ணூற்றொன்பது பேரின் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை நம்பற்கரிய முறையில் கொடுமையாக ஒடுக்குவது என்பதாகும். மேலும் முதலாளித்துவப் போட்டியானது நிதி மோசடி, தனிச் சலுகை, சமுதாய ஏணியின் உயர்

படியில் இருப்போரிடம் கொத்தடிமைத்தனம் ஆகிய வற்றால் பதிலீடு செய்யப்பட்டுவிட்டது.

சோஷலிசம் போட்டியை அழித்து மறைத்து விடுவதில்லை. மாறாக அதை உண்மையிலேயே விரிவான அளவில், வெகுஜன அளவில் செயல்படுத்தவும், உழைக்கும் மக்களை அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் ஆயிரம் கோடி மக்கள் மூலம் முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நெரிக்கப்பட்டு விட்ட மக்களிடம் அமோகமாக இருந்த அந்தத் தனி ஆற்றல்களை வெளிக் காட்டவும் உரியதான செயல் துறையில் அவர்களை உள்ளபடியே ஈர்ப்பதற்குமான வாய்ப்பினை சோஷலிசம் முதல் தடவையாகப் படைத்துருவாக்குகிறது.

இப்போது ஒரு சோஷலிச அரசாங்கம் ஆட்சியில் இருப்பதால் நமது பணி நேசப்போட்டியை ஒழுங்கமைப்ப தாகும்.

முதலாளித்துவ வர்க்கத்தினை அண்டிவாழ்வோரும் மற்றும் கெஞ்சிப் பிழைப்போரும் சோஷலிசத்தை ஓர் ஒரே மாதிரியான, பழகிப் படிந்துபோன, சலிப்பூட்டுகிற, கவர்ச்சியற்ற பாசறை அமைப்பு என்று வருணித்தார்கள். பண மூட்டைகளின் அடிவருடிகளும் சுரண்டலாளரிடம் இச்சகம் பேசுவோருமான முதலாளித்துவ அறிவுத்துறை கனவான்கள் சோஷலிசத்தை மக்களைக் ''கிலியூட்டுவதற் கான'' ஒரு பூச்சாண்டியாகப் பயன்படுத்தினார்கள். மக் களோ முதலாளித்துவத்தின் கீழ் கடுஞ்சிறை வாசம், பாசறைபாணிக் கட்டுப்பாடு, கடுமையான சலிப்புத்தரும் உழைப்பு, கொடிய வறுமையும் அரைப்பட்டினியுமான வாழ்க்கை என்ற கதிக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கடுஞ்சிறை வாசத்தில் இருந்து மக்களை விமோ சனப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை நிலப்பிரபுக் களின் நிலங்களைப் பறிமுதல் செய்தல், தொழிலாளர் கண்காணிப்பைக் கொண்டுவருதல் மற்றும் வங்கிகளைத் தேசவுடைமையாக்குவதும்ஆகும். அடுத்த நடவடிக்கைகள் ஆலைகளைத் தேசவுடைமையாக்குதல், மக்கள் தொகை முழுவதையும் நுகர்வாளர் சங்கங்களில் கட்டாயமாக ஒழுங்கமைத்தல்—இந்தச் சங்கங்கள் அதே சமயம் விளை

பொருள்களின் விற்பனைச் சங்கங்களாக இருக்கும்—தானியம் மற்றும் இதர அவசியப் பொருள் வர்த்தகத்தினை அரசு ஏகபோகமாக்குதல்.

ஊக்கம், நேசப்போட்டி, துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை உண்மையிலேயே பேரளவில் வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பு இப்போதுதான் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாளியை வெளியேற்றியுள்ள அல்லது மெய்யான தொழிலாளர் கண்காணிப்பு மூலம் மட்டுப்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆலையும், நிலவுடைமைச் சுரண்டலாளர் ஒழிக்கப்பட்டு அவரது நிலம் பறிமுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமமும் இப்போதுதான் உழைக்கும் மனிதன் தனது சிறப்பாற்றல்களை வெளிப்படுத்தவும், முதுகைச் சற்றே நிமிர்த்தவும், முழு ஆகிருதியுடன் எழுச்சியுற்று நிற்கவும், தான் ஒரு மானுடஜீவி என்று உணரவுமான ஒரு துறையாக விளங்குகிறது. நூற்றாண்டுகள் காலமாகப் பிறருக்குப் பாடுபட்டும், சுரண்டலாளருக்காகக் கட்டாய உழைப்பைச் செய்தும் வந்த பிறகு முதல் தடவையாகத் தனக்காகவே உழைப்பது என்பது சாத்தியமாகியுள்ளது. மேலும் ஒருவர் தனது வேலையில் நவீனத் தொழில்நுட்பத்தின் மற்றும் கலாசாரத்தின் சகல சாதனைகளையும் ஈடுபடுத்துவதை சாத்தியமாக்குகிறது.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்னும் நிலைக்கு மனிதகுல வரலாற்றில் ஏற்பட்ட இந்த மகத்தான மாற்றம், பிணக்கு, இடர்ப்பாடுகள், மோதல்கள், வேரூன்றி விட்ட புல்லுருவிகள் மற்றும் அவர்களை அண்டிப்பிழைப்போருக்கு எதிரான பலப்பிரயோகம் இன்றி நிகழ முடியாது. இந்த விஷயத்தில் எந்தத் தொழிலாளிக்கும் எவ்விதப் பிரமைகளும் கிடையாது. கொடிய வறுமையாலும், சுரண்டலாளர்களுக்குப் பல்லாண்டுகள் புரிந்த அடிமை உழைப்பு மூலமும், அவர்களிடமிருந்து பெற்ற எண்ணற்ற வசைகள் மற்றும் அவமானம் மூலமும் வயிரமடைந்த தொழிலாளர்களும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் அந்தச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதற்கு அதிக காலம் பிடிக்கும் என்பதை உணர்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நோவயா ஷீஸ்ன்[34]

ஆதரவாளர்கள் அல்லது இதர சக்தியைச் சேர்ந்த அறிவுத்துறை கனவான்களின் உணர்ச்சிப் பசப்புப் பிரமைகளால் கிஞ்சிற்றும் பீடிக்கப்படவில்லை. இந்தக் கனவான்கள் முதலாளிகளை ''கண்டனம் செய்து'', தொண்டைகம்மக் ''கூக்குரலிட்டவர்கள்'', அவர்களை எதிர்த்து ''பாவலா காட்டியவர்கள்''. ஆனால் செயல்களுக்கு வரும் போது, அச்சுறுத்தல்களைச் செயல்படுத்தவரும் போது, முதலாளிகளை அகற்றும் வேலையை நடைமுறையில் நிறைவேற்றவரும் போது கண்ணீர் விட்டுக் கரைந்து அடிபட்ட நாய்க்குட்டிகளைப் போல நடந்து கொள்வார்கள்.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்ற நிலைக்கு, பிரம்மாண்டமான, தேசீய (ஓரளவுக்கு சர்வதேசீய, உலக) வீதத்தில் உழைப்பைத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் நிலைக்கு ஏற்படும் மகத்தான மாற்றத்துக்கு—சுரண்டலாளர் எதிர்ப்பை ஒடுக்குவதற்கான ''ராணுவ'' நடவடிக்கைகளுடன்—பாட்டாளி வர்க்கமும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் எடுக்கும் மிகப் பெரிய ஒழுங்கமைப்பு, அமைப்பாளருக்குரிய முயற்சியும் தேவை. இந்த ஒழுங்கமைப்புப் பணி, நேற்றைய அடிமையுடைமையாளர்களையும் (முதலாளிகளையும்) முதலாளித்துவ அறிவுத்துறையைச் சேர்ந்த அவர்களது அடிவருடிக் கூட்டத்தையும் தாட்சண்யமின்றி ராணுவ முறைகளால் ஒடுக்கும் பணியுடன் பின்னிப் பிணைந்து ஓர் உருவமாகச் சமைந்துள்ளது. நேற்றைய அடிமையுடைமையாளர்களும் அவர்களது அறிவுத்துறைக் கையாட்களும் ''நாங்கள் எப்போதும் அமைப்பாளர்களாயும் தலைவர்களாயும் இருந்தவர்கள். நாங்கள் நாட்டாண்மை செய்தவர்கள் தொடர்ந்து அவ்வாறே செய்ய விரும்புகிறோம். 'சாமான்ய மக்களுக்கு', தொழிலாளர் விவசாயிகளுக்கு நாங்கள் கீழ்ப்படிய மறுக்கிறோம். நாங்கள் அவர்களுக்கு அடிப்பட மாட்டோம். பண மூட்டைகளின் தனியுரிமைகளையும் மக்கள் மீதான மூலதனத்தின் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக அறிவை ஆயுதமாக மாற்றுவோம்'' என்று கூறுகிறார்கள், நினைக்கிறார்கள்.

இவ்வாறுதான் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவுஜீவிகளும் கூறுகிறுர்கள், நினைக்கிறுர்கள், செய்கிறுர்கள். சுயநலத்தின் கருத்து நிலையில் இருந்து பார்த்தால் அவர்களது நடத்தை புரிந்து கொள்ளக் கூடியதேயாகும். பிரபுத்துவ நிலவுடைமையாளர்களை அண்டிவாழ்பவர்களும் கெஞ்சிப் பிழைப்பவர்களும் பாதிரிகளும் எழுதுகோலர்களும் கோகல் சித்திரித்த அதிகார வர்க்கத்தினரும், பெலீன்ஸ்கியைப்[35] பகைத்த ''அறிவுஜீவிகளும்'' கூட பண்ணை அடிமை முறையில் இருந்து விட்டுப் பிரிவது ''கடினம்'' என்று கண்டனர். ஆனுல் சுரண்டலாளர் மற்றும் அவர்களது அறிவுத்துறை ஏவலாட்களின் லட்சியம் கவைக்குதவாதது. தொழிலாளரும் விவசாயிகளும் அன்ஞர்களின் எதிர்ப்பைத் தகர்க்கத் தொடங்குகின்றனர். துரதிருஷ்டவசமாக இன்னும் போதியளவு உறுதியாகவும் வைராக்கியமாகவும் தாட்சண்யமின்றியும் செயல்படவில்லை. ஆனுல் அதை அவர்கள் தகர்த்தெறிவது திண்ணம்.

உழைக்கும் மக்கள் மீது சோஷலிஸ்டுப் புரட்சியால் சுமத்தப்படும் ஒழுங்கமைப்புப் பணிகளை—உலக வரலாற்றுப் பொருளில் மகத்தான, உண்மையிலேயே வீரம் செறிந்ததான பணிகளை—''சாமான்ய மக்களும்'', ''சாமான்ய'' தொழிலாளரும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் செய்து சமாளிக்க முடியாது என்று ''அவர்கள்'' கருதுகிறுர்கள். தமக்குத்தாமே தேறுதல் சொல்லிக் கொள்வதற்கு முதலாளிகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் வழக்கமாகச் சேவை புரியப் பழகிவிட்ட அறிவுஜீவிகள்: ''நாங்கள் இல்லாமல் உங்களால் முடியாது'' என்று கூறுகிறுர்கள். ஆனுல் அவர்களது திமிரான வன் கூற்று வீண் முயற்சியாகும். கல்விகற்ற மனிதர்கள் மக்களின் பக்கம், உழைப்பாளி மக்களின் பக்கம் ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கிறுர்கள். மூலதனத்தின் ஏவலாட்களது எதிர்ப்பைத் தகர்க்க உதவி புரிகிறுர்கள். விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பல ஆற்றல் மிகுந்த ஒழுங்கமைப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் தம்மைத் தாமே உணர்ந்து கொள்ளவும், மாபெரும் ஜீவாதாரமான படைப்பாற்றல் பணியினை நோக்கி விழிப்புற்று முழுமுயற்சி செய்யவும், தமது

சொந்த சக்திகளைக் கொண்டு சோஷலிஸ்டு சமூக அமைப்பைக் கட்டும் பணியினை நிறைவேற்றவும் இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிருர்கள்.

இன்றுள்ள முக்கியமான கடமைகளில் ஒன்று, ஒரு வேளை ஆக முக்கியமான கடமை தொழிலாளரின், பொதுவாக எல்லா உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் சுயேச்சையான முன்முயற்சியை வளர்ப்பது, படைப்பாற்றல் முறையிலான ஒழுங்கமைப்பு வேலையில் அதை சாத்தியமான அளவுக்கு விரிவாக வளர்ப்பது என்பதேயாகும். ''உயர்ந்த வர்க்கங்கள்'' என்று அழைக்கப்படுபவர்கள் மட்டுமே, செல்வந்தர்கள் மட்டுமே, செல்வந்தர் பள்ளிகளில் பயின்றவர்கள் மட்டுமே அரசை நிர்வாகம் செய்யவும் சோஷலிஸ்டு சமுதாயத்தின் ஒழுங்கமைப்பு வேலையை நெறியாக்கம் செய்யவும் வல்லவர்கள் என்றதான பழைய, அபத்தமான, காட்டுத்தனமான, வெறுக்கத்தக்க, அருவருப்பான தப்பெண்ணத்தை எதுவும் செய்து நாம் உடைத்தெறிதல் வேண்டும்.

இந்தத் தப்பெண்ணம் அழிகேடான மாமூல், மரத்துப்போன மனப்பாங்கு, அடிமைத்தனமான பழக்கங்கள் ஆகியவற்ருலும், இதற்கும் மேல் முதலாளிகளின் மோசமான சுயநலத்தாலும் வளர்க்கப்பட்டது. முதலாளிகளின் நலன், கொள்ளை செய்து ஆதிக்கம் செலுத்துவதும் ஆதிக்கம் செலுத்திக் கொள்ளை செய்வதும் ஆகும். இல்லை. தமக்கு அறிவின் சக்தி அவசியம் என்பதைத் தொழிலாளர்கள் ஒரு கணமும் மறக்க மாட்டார்கள். தொழிலாளர்கள் இப்போது குறிப்பாயும் அறிவைப் பெறுவதில் அசாதாரணமான ஆர்வம் காட்டி வருகிருர்கள். இதைப் பற்றி பாட்டாளிகளின் மத்தியில் தவருன கருத்துக்கள் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை இது புலப்படுத்துகிறது. படிக்கவும் எழுதவும் தெரிந்த, மக்களை எடைபோடத் தெரிந்த, நடைமுறை அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொரு சாமான்ய தொழிலாளியும் விவசாயியும் அமைப்பாளர் வேலையைச் செய்யும் திறனுடையவராவார். முதலாளித்துவ அறிவுஜீவிகள் யாரைப் பற்றி அத்தகைய ஆணவத்தோடும் வெறுப்போடும் பேசுகிருர்களோ அந்த ''சாமான்ய மக்கள்'' மத்தியில் இத்தகைய

பல ஆடவரும் மகளிரும் உள்ளனர். தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் மத்தியில் நிலவும் இது போன்ற செழுமையான ஆற்றல், இது வரை பயன்படுத்தப்படாத ஆதார சக்தியாகும்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகள் இன்னும் ''பயந்தவர்களாக'' உள்ளனர். அவர்கள்தாமே இப்போது ஆளும் வர்க்கம் என்ற கருத்துக்கு இன்னும் வழக்கப்பட்டு விடவில்லை. அவர்கள் இன்னும் போதியளவு உறுதிப்பாடு அடையவில்லை. தமது வாழ்க்கை முழுவதும் அடிக்குப் பயந்து வேலை செய்தும் வறுமையாலும் பட்டினியாலும் கட்டாயப்படுத்தப்பட்டும் வந்த லட்சோப லட்சம் மக்கள் உள்ளங்களில் இந்தப் பண்புகளைப் புரட்சியால் ஒரே வீச்சில் புகுத்த முடியாது. ஆனால் 1917 அக்டோபர் புரட்சி வலுவானது, நிலைத்து நிற்கக் கூடியது, வெல்லற்கரியது. காரணம், அது இந்தப் பண்புகளை எழுப்பியுள்ளது, பழைய தடைகளைத் தகர்க்கிறது, தேய்ந்து போன தளைகளை அகற்றுகிறது, உழைக்கும் மக்களைப் புது வாழ்வினை சுயேச்சையாகப் படைத்துருவாக்கும் பாதையில் தலைமை தாங்கி நடத்திச் செல்கிறது.

கணக்கீடு, கண்காணிப்பு—இதுவே தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் ஒவ்வொரு சோவியத்தின், ஒவ்வொரு நுகர்வாளர் சங்கத்தின், ஒவ்வொரு வழங்கீடு ஒன்றியம் அல்லது கமிட்டியின், ஒவ்வொரு ஆலைக் கமிட்டியின் அல்லது பொதுவாகத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்பின் பிரதான பொருளாதாரப் பணியாகும்.

உழைப்பின் அளவையும் உற்பத்தி சாதனங்களையும் பழைய வழக்கப்படி ஓர் அடிமையின் நோக்கு நிலையில் இருந்து கருதிப் பார்ப்பதை எதிர்த்து நாம் போராட வேண்டும். அந்த அடிமையின் ஏகக் குறிக்கோள் உழைப்பின் கடுமையைச் சற்றே குறைப்பது அல்லது முதலாளி வர்க்கத்திடமிருந்து குறைந்தபட்சம் ஏதோ சில சிறு சலுகை பெறுவது என்பதாக இருந்தது. முன்னேறிய வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள். அவர்கள் புதிதாக வந்தவர்களுக்கு உறுதியான எதிர்ப்புக் காட்டி

வருகின்ருர்கள். இந்தப் புதியவர்கள் ஆலை உலகத்தை நோக்கி போரின் போது பிரத்தியேகமாயும் பெருந் தொகையில் திரண்டு வந்தார்கள். அவர்கள் இப்போது மக்களது உடைமைக்குள் வந்துவிட்ட மக்கள் ஆலைகளைப் பழைய முறையிலேயே நடத்த விரும்புகிருர்கள். அவர் களது ஒரே நோக்கம் ''சாத்தியமான அளவு பெரிய லாபத்தைத் திரட்டிக் கொண்டு பிறகு வெளியேறுவது'' என்பதே. இந்தப் போராட்டத்தில் முன்னேறிய தொழி லாளர் பக்கம் ஆதரவாக வர்க்க உணர்வுள்ள, நேர்மை யான, சிந்திக்கிற விவசாயிகளும் உழைக்கும் மக்களும் சேருவார்கள்.

உயர் அரசு அதிகாரம் என்ற முறையில் தொழி லாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளாலோ, அல்லது அந்த ஆட்சி அதிகாரத் தின் நெறிமுறைகள் அல்லது ஆணையுரிமையின் பேரிலோ கணக்கு வைத்தலும் கண்காணித்தலும் நடத்தப்படும் பட்சத்தில்—இது விரிந்து பரந்த பொதுவான சர்வப் பொது கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும், செய்யப்பட்ட உழைப்பு மற்றும் உற்பத்தியான பொருள் களின் வினியோகம் மீதான கணக்கு வைத்தலும் கண் காணிப்புமாகும்—இது பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டு உறுதிப்பட்ட பிறகான சோஷலிஸ்டு மாற்றத்தின் சாரமாகும்.

சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்வதற்கு இன்றியமையாது தேவைப்படும் கணக்கு வைத்தலும் கண்காணிப்பும் மக்கள் திரளால் மட்டுமே செயல்படுத்த முடியும். தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் பெருந் திரள் செல்வந்தர், கயவாளிகள், சோம்பேறிகள் மற்றும் போக்கிரிகள் விஷயத்தில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பில் சுயவிருப்பமான மனச்சான்று பூர்வமான ஒத்துழைப்பைத் தோற்றுவிக்க வேண்டும். இந்த ஒத் துழைப்பு புரட்சிகர ஊக்கம் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதனுல் மட்டுமே, முதலாளித்துவத்திட மிருந்து சோஷலிசம் மரபாகப் பெற்றதான சாபக்கே டான முதலாளித்துவ சமூக அமைப்பின் மீதமிச்சங்களை, மனிதகுலத்தின் கசடுகளை, இந்தப் படுமோசமாக சிதிலப்

பட்டுத் தேய்ந்து போன உறுப்புகளை, இந்தத் தொத்து நோயை, பிளேக் நோயை, சீழ்ப்புண்ணை வென்று ஒழிக்க முடியும்.

தொழிலாளர்களே விவசாயிகளே, உழைக்கும் மக்களே, சுரண்டப்படும் மக்களே! நிலம், வங்கிகள் மற்றும் ஆலைகள் இப்போது மக்கள் அனைவரின் சொத்துக்களாகி விட்டன! நீங்கள் **நீங்களே** பொருள்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்துக் கணக்கு வைக்கவும், கண்காணிப்புச் செய்யவும் வேலை தொடங்க வேண்டும். இது **மட்டுமே** சோஷலிசத்தின் வெற்றிக்கான பாதை, அதன் வெற்றிக்கான ஒரே உத்தரவாதம்! எல்லாச் சுரண்டலையும் எல்லா வறுமையையும் எல்லா ஏழ்மையையும் எதிர்த்து வெல்வதற்கான ஒரே உத்தரவாதம்! எல்லோருடைய தேவைகளையும் திருப்தி செய்வதற்குப் போதுமான ரொட்டி, இரும்பு, வெட்டு மரம், கம்பளி, பருத்தி மற்றும் மென்சணல் ருஷ்யாவில் இருக்கிறது. ஆனால் இதற்கு உழைப்பும் அதன் விளைபொருள்களும் சரியானபடி வினியோகிக்கப்பட வேண்டும். இந்த வினியோகத்தின் மீது அனைத்து மக்களின் **காரியகரமான நடைமுறை** கண்காணிப்பு நிலைநாட்டப்பட வேண்டும். மக்களின் விரோதிகளான செல்வந்தர், அவர்களை அண்டி வாழ்பவர்கள், கயவர், சோம்பேறிகள், போக்கிரிகளை அரசியலில் **மட்டுமின்றி, அன்றுடப் பொருளாதார** வாழ்விலும் தோற்கடிக்க வேண்டும்.

இந்த மக்களின் விரோதிகளுக்கு, சோஷலிசத்தின் விரோதிகளுக்கு, உழைக்கும் மக்களின் விரோதிகளுக்கு எவ்விதக் கருணையும் காட்டக் கூடாது. செல்வந்தர் மற்றும் அவர்களை அண்டிவாழ்வோர், முதலாளித்துவ அறிவுஜீவிகளை எதிர்த்து அழிக்கும் வரைப் போர், கயவர் சோம்பேறிகள் போக்கிரிகளை எதிர்த்துப் போர்! அவர்கள் அனைவரும் ஒரே இனம், முதலாளித்துவத்தின் கான் முளைகள், பிரபுக்குல மற்றும் முதலாளித்துவ சமூக அமைப்பின் ஈற்றுக்கள். இந்த சமூக அமைப்பில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள், அவமதிக்கிறார்கள். இந்த சமூக அமைப்பின் வறுமையும் இன்மையும் ஆயிரம் ஆயிரம் பேர்களைப்

போக்கிரித்தனம், ஊழல் மற்றும் கயமைப் பாதையில் போகும்படி நிர்ப்பந்தித்து அவர்கள் தமது மானுடச் சாயல்கள் அனைத்தையும் இழக்கும்படிச் செய்கிறது. இந்த சமூக அமைப்பு, உழைக்கும் மனிதனிடம், ஏமாற்று மூல மாவது சுரண்டலில் இருந்து தப்பிக்கவும், அதிலிருந்து விடுபடவும், ஒரு கணமேனும் சரி விருப்பமற்ற உழைப்பில் இருந்து தப்பிக்கவும், சாத்தியமான எந்த வழியிலாவது, எதைச் செய்தும் குறைந்த பட்சம் ஒரு துண்டு ரொட்டி யாவது பெற்று பட்டினி கிடக்காமல் தானும் தனது சுற்றமும் பசிவேதனையைச் சற்றே தணித்துக் கொள்ள வும் வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர்க்க முடியாத வகையில் வளர்க்கிறது.

செல்வந்தரும் கயவாளிகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே ஆவர். அவர்கள் முதலாளித்துவம் வளர்த்த புல்லுருவிகளின் இரண்டு பிரதான வகை இனங்களே. அவர்கள் சோஷலிசத்தின் பிரதான விரோதி கள். இந்த விரோதிகளை மக்கள் அனைவரின் விசேஷக் கவனக் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டும். சோஷ லிஸ்டு சமூக அமைப்பின் சட்டங்கள் மற்றும் விதிமுறை களைச் சிறிதளவு மீறினாலும் கூட அவர்கள் தாட்சண்ணிய மின்றித் தண்டிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் பலவீனத்தின் வெளிப்பாடோ, தயக்கமோ, உணர்ச்சிப் பசப்போ எதுவும் சோஷலிசத்துக்கு எதிரான அளப்பரிய பாதகச் செயலாகும்.

இந்தப் புல்லுருவிகளை சோஷலிஸ்டு சமூக அமைப் புக்குத் தீங்கற்றவர்களாக மாற்ற வேண்டுமானால், அனைத்து மக்களும் லட்சோபலட்சம் தொழிலாளர்களும் விவசாயிகளும் சுய விருப்பத்தோடும், ஊக்கத்தோடும், புரட்சிகர உற்சாகத்தோடும் பங்கேற்கும் முறையில், செய்யப்பட்ட வேலை, பொருள் உற்பத்தி மற்றும் வினியோ கம் குறித்த கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் நாம் ஒழுங்கமைத்தல் வேண்டும். நேர்மையான, அறி வுடைய, திறமையுள்ள ஒவ்வொரு தொழிலாளி மற்றும் விவசாயியின் ஆற்றலுக்குள் முற்றும் அடங்கியதான கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் ஒழுங்கமைக்கும் பொருட்டு நாம் அவர்களது ஒழுங்கமைக்கும் தனி

ஆற்றல்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும். இந்தத் தனி ஆற்றல் அவர்கள் மத்தியில் காணப்படுகிறது. அவர்கள் மத்தியில் ஸ்தாபனத்துறையிலான சாதனைகளை விஷயத்திலான நேசப்போட்டியை எழுச்சியுற வைத்து தேசீய அளவில் ஒழுங்கமைக்க வேண்டும். படித்த மனிதனின் அவசியமான அறிவுரைக்கும், ''படித்தவர்'' மத்தியில் மிக வழக்கமாக நிலவும் மடிமை மீதான ''சாமான்ய'' தொழிலாளி மற்றும் விவசாயி மேற்கொள்ளும் அவசியமான கண்காணிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைத் தொழிலாளரும் விவசாயிகளும் தெளிவாகக் காணுமாறு செய்தல் வேண்டும்.

இந்த மடிமை, இந்தக் கவனம் இன்மை, துப்புரவு இன்மை, காலத்திட்பம் இன்மை, அமைதி இழந்த அவசரக் கோலம், செயலுக்குப் பதில் விவாதத்தையும் வேலைக்குப் பதில் பேச்சையும் மாற்றீடு செய்யும் விருப்பம், எதையும் முழுமையாகச் செய்து தீர்க்காமல் உலகிலுள்ள சகலத்தையும் எடுத்துச் செய்வதற்கான விருப்பம் ஆகியவை ''படித்தவர்களின் இனப்'' பண்புகளாகும். இதற்குக் காரணம் அவர்கள் இயல்பாகவே மோசமானவர்கள் என்பது அல்ல. அவர்களது தீய சித்தமும் அல்ல. இதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கையின் பழக்கங்கள், அவர்களது வேலை நிலைமைகள், சோர்வடைதல், மூளை உழைப்பை உடல் உழைப்பில் இருந்து சகஜங்கெட்ட நிலையில் பிரிவினை செய்தல் ஆகிய இத்தியாதிகள் அனைத்துமாகும்.

நமது புரட்சியின் பிழைகள், குறைபாடுகள் மற்றும் தவறுகளின் இடையில், நமது மத்தியில் இருக்கும் அறிவுஜீவிகளின்—தற்போது தவிர்க்கவியலாத—இந்த வருந்தத்தகுந்த இனப்பண்புகளின் விளைவாக ஏற்பட்ட பிழைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அதோடு அறிவுஜீவிகளின் ஒழுங்கமைக்கும் வேலை மீது தொழிலாளர்களின் மேற்பார்வை போதியளவு இல்லாததும் இப்பிழைகளின் பாற்படும்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்னும் ''பயந்த நிலையில்'' இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயத்தை

ஒழிக்க வேண்டும், அதை அவர்கள் நிச்சயமாயும் ஒழிப்பார்கள். படித்த நபர்கள், அறிவுஜீவிகள் மற்றும் நிபுணர்களின் அறிவுரைகள், நெறிமுறைகளை நாம் தவிர்க்க முடியாது. நல்லறிவுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் இதை முற்றிலும் நன்ருகப் புரிந்து கொள்கிருர். தொழிலாளர், விவசாயிகள் சார்பில் இருந்து போதிய கவனமோ தோழமை பூர்வமான மரியாதையோ குறைந்து விட்டதாக நமது மத்தியில் உள்ள அறிவுஜீவிகள் புகார் செய்ய முடியாது. ஆனுல், அறிவுரைகள் நெறிமுறைகள் என்பன ஒரு விஷயம், நடைமுறையில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு இன்னெரு விஷயம் ஆகும். மிகப் பெரும்பாலும் அறிவாளிகள் அருமையான அறிவுரைகளையும் நெறிமுறைகளையும் தருகின்றனர். ஆனுல் சொற்களைச் செயலாகப் பெயர்க்கும் காரியத்தில், நடைமுறைக் கண்காணிப்பைச் செயல்படுத்துவதில், இந்த அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் படுமோசமாக, அபத்தமான முறையில், வெட்கக்கேடான அளவில் ''வாய்ப்பு இழந்தவர்கள்'', ஆற்றல் அற்றவர்கள் என்பதை நிதர்சனப்படுத்தி விடுகிருர்கள்.

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ''மக்கள்'' மத்தியில் இருந்தும், ஆலைத் தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகள் இடையில் இருந்தும் வரும் நடைமுறை அமைப்பாளர்களின் உதவியும் தலைமைப் பாத்திரமும் வேண்டாம் என்று ஒழிப்பது அறவே சாத்தியமல்ல. ''பானைகள் செய்வது கடவுள்கள் அல்ல''— இந்த உண்மையைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது மனங்களில் நன்ருகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதைய முழு விவகாரமும் நடைமுறை வேலையே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தத்துவம் நடைமுறையாக மாற்றப்படும், நடைமுறையால் உயிர்க்களை ஊட்டப்படும், நடைமுறையால் சரி பார்க்கப்படும், நடைமுறையால் சோதிக்கப்படும் அந்த வரலாற்றுத் தருணம் வந்து விட்டது. இப்பொழுது, ''மெய்யான இயக்கத்தின் ஒவ்வொரு படியும் ஒரு டஜன் வேலைத்திட்டங்களை விடவும் அதிக முக்கியமானது'' என்ற

மார்க்சின் சொற்கள் குறிப்பாயும் மெய்மையாகின்றன. செல்வந்தர்களையும் கயவாளிகளையும் நடைமுறையில் மெய்யாகவே மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, முழுமையாக அகத்தே பதிவு செய்து, அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சோஷலிசம் பற்றிய அருமையான ஒரு டஜன் வாதங்களை விடவும் மதிப்புடையதாகும். ஏனெனில் ''தத்துவம், எனது நண்பரே, நரை கண்டது, ஆனல் வாழ்க்கையின் கற்பகத்தரு பசுமையானது''[36].

தொழிலாளர், விவசாயிகளிடையிலான நடைமுறை அமைப்பாளர்களிடை நேசப்போட்டி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அறிவாளிகள் விரும்பிச் செய்ய முனையும் மாரு நிலைப்படி உருவடிவங்களை நிலைநாட்டவும் மேலிருந்து ஒரே மாதிரித்தன்மையைத் திணிக்கவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போரிட வேண்டும். மாரு நிலைப்படி உருவடிவங்களுக்கும் மேலே இருந்து திணிக்கப்படும் ஒரே மாதிரித் தன்மைக்கும், ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு மத்தியத்துவத்துக்கும் இடையே பொதுவான அம்சம் எதுவுமே கிடையாது. விவரங்களில், பிரத்தியேக வட்டார இயல்புகளில், அணுகும் முறைகளில், கண்காணிப்பைச் செயல்படுத்தும் முறைகளில், புல்லுருவிகளை (செல்வந்தர், கயவர்கள், அக்கறையற்ற உணர்ச்சி வெறிபிடித்த அறிவாளிகள் இத்தியாதி) அழித்தொழித்து அவர்களைத் தீங்கற்றவர்கள் ஆக்குவதற்கான வழிகளில் பல்வகைத் தன்மை இருப்பதால் தலையாய கூறுகளின், அடிப்படைகளின், சாரத்தின் ஒற்றுமை கலைக்கபடவில்லை ஆனல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அடிமட்டத்தில் இருந்து வரும் முன்முயற்சி, சுயேச்சைப் போக்கு, செயல் சுதந்திரம் மற்றும் ஊக்கத்தை எவ்வாறு மாரு நிலைபடி உருக்களில் இருந்து விடுபட்ட சுய விருப்பமான மத்தியத்துவத்தோடு இணைப்பது என்பதற்கு பாரிஸ் கம்யூன்[37] ஒரு மகத்தான உதாரணத்தினை வழங்கியது. நமது சோவியத்துகள்[38] அதே பாதையைப் பின்பற்றுகின்றன. ஆனல் அவை இன்னும் ''பயந்தவையாக உள்ளன''. அவை இன்னும் தமது தொடக்க நிலை கடந்து முன்னேறவில்லை, சோஷலிச அமைப்பைக் கட்டுவது என்ற தமது புதிய மகத்தான படைப்பாற்றல் பணி

யில் இன்னும் ''ஒரு பிடிப்புப் பெறவில்லை''. சோவியத்துகள் மேலும் துணிவுடன் செயல்படத் தொடங்க வேண்டும், மேலும் அதிக முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டும். எல்லா ''கம்யூன்களும்''—ஆலைகள், கிராமங்கள், நுகர்வாளர் சங்கங்கள், வழங்கீடுக் கமிட்டிகள்—உழைப்பு மற்றும் உற்பத்திப் பொருள்களை வினியோகிப்பதைக் கணக்கு வைக்கும் கண்காணிக்கும் நடைமுறை அமைப்பாளர்களாக ஒன்றுக்கொன்று நேசப்போட்டியிட வேண்டும். இந்தக் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு வேலைத் திட்டம் எளிதானது, தெளிவானது, எல்லோருக்கும் புரியக் கூடியது. எல்லோருக்கும் ரொட்டி, எல்லோருக்கும் சீரான காலணி நல்ல உடை, எல்லோருக்கும் குளிருக்கு அடக்கமான இருப்பிடங்கள். எல்லோரும் மனச் சாட்சிப்படி வேலை செய்ய வேண்டும், (தமது வேலையைத் தட்டிக் கழிப்பவன் உட்பட) கயவாளி ஒருவன் கூட சுதந்திரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது, அவன் சிறையிலடைக்கப்பட வேண்டும் அல்லது மிகவும் கடுமையான வகைப்பட்ட கட்டாய உழைப்புத் தண்டனை அனுபவிக்கவிட வேண்டும். சோஷலிசத்தின் சட்டங்கள் விதிமுறைகளை மீறும் எந்த ஒரு செல்வந்தனும் கயவாளி அடைந்த கதியில் இருந்து தப்பி விட அனுமதிக்கக் கூடாது, நீதிப்படிச் செல்வந்தனுக்கும் அதே கதிதான் ஏற்பட வேண்டும். ''வேலைசெய்யாதவனுக்கு உணவில்லை.'' இதுவே சோஷலிசத்தின் நடைமுறைக் கட்டளையாகும். இவ்வாறுதான் காரியங்கள் நடைமுறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். நமது தொழிலாளர் விவசாயி அமைப்பாளர்கள், ''கம்யூன்கள்'' பெருமிதம் கொள்ள வேண்டிய நமது நடைமுறை வெற்றிகள் இவையே. இது குறிப்பாயும் அறிவாளிகளிடையிலான அமைப்பாளர்களுக்குப் பொருந்தியதாகும் (குறிப்பாயும், காரணம், அவர்கள் தமது பொதுவான கட்டளைகள் மற்றும் தீர்மானங்கள் பற்றி மிகவும் அதிகமாக, அளவுக்கு மேல் மிகவும் அதிகமாகப் பெருமிதம் கொள்ளும் வழக்கமுடையவர்கள்).

கணக்கு வைக்கவும் செல்வந்தர், கயவாளிகள் மற்றும் சோம்பேறிகளைக் கண்காணிக்கவும் ஆயிரக்கணக்

கான நடைமுறை வடிவங்களும் முறைகளும் வகுக்கப்பட வேண்டும், கம்யூன்களாலேயே, நகரத்திலும் நாட்டுப் புறத்திலுமான சிறிய அலகுகள் மூலமே நடைமுறையில் சோதிக்கப்பட வேண்டும். பல்வகைத் தன்மை இங்கு பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதமாக, தனியொரு பொது நோக்கத்தைச் சாதனையாக்குவதற்கான வெற்றிக்கு வாக்குறுதியாக, ருஷ்யா என்னும் நிலப்பரப்பில் கயவாளிகள், செல்வந்தராகிய மூட்டைப் பூச்சிகள் இத்தியாதி எல்லா கேடு சூழ் பூச்சி புழுக்களை அகற்றிச் சுத்தப்படுத்தும் சாதனமாக விளங்குகிறது. ஓர் இடத்தில் பத்துச் செல்வந்தர்கள், ஒரு டஜன் கயவாளிகள், வேலைக்கு மட்டம் போடும் (போக்கிரிகளைப் போல பெத்ரோகிராதில் குறிப்பாகக் கட்சி அச்சகங்களில் வேலைக்கு மட்டமடிக்கும் அச்சுக் கோப்போர் தோரணையில்) அரை டஜன் தொழிலாளர் சிறையில் தள்ளப்படுவர். இன்னொரு இடத்தில் அவர்கள் கக்கூசுகளைக் கழுவும்படி ஏவப்படுவர். மூன்றாவது இடத்தில் அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வந்த பின் ''மஞ்சள் சீட்டுகள்'' வழங்கப்பட்டு அவர்கள் திருந்தும் வரை தீங்கு விளைக்கும் நபர்கள் என்பதாக எல்லோரும் கண்காணிக்கும்படி வைக்கப்பட்டிருப்பர். நாலாவது இடத்தில் சோம்பேறிகளில் பத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே சுடப்படுவர். ஐந்தாவது இடத்தில் கலவையான முறைகள் கையாளப்படும். தற்காலிக விடுதலை மூலம் திருந்தக் கூடியவர்களான செல்வந்தர், முதலாளித்துவ அறிவுஜீவிகள், கயவாளிகள், போக்கிரிகள் விரைவில் திருந்திக் கொள்வதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படுவர். எந்த அளவுக்கு அதிகமாகப் பல்வகைத் தன்மை இருக்குமோ அந்த அளவுக்கு நமது பொது அனுபவம் மேலும் சிறப்பாகவும் அதிகச் செழுமையாகவும் இருக்கும். சோஷலிசத்தின் வெற்றி மேலும் உறுதியானதாயும் அதிக துரிதமானதாயும் விளங்கும். நடைமுறையால்—நடைமுறையால் மட்டுமே வகுக்க முடியும்—போராட்டத்துக்கான சிறந்த முறைகளையும் வழிகளையும் மேலும் எளிதாக வகுக்க முடியும்.

பட்டினியால் வாடும் மக்கள் இல்லாத, வேலையின்றித் திண்டாடுவோர் இல்லாத, சோம்பேறிச் செல்வந்தர்

இல்லாத, அறிவுஜீவிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் வெறுக்கத்தக்க அடிவருடிகளும், நாசவேலை செய்வோரும் இல்லாத எந்தக் கம்யூன், எந்த பெரு நகர வட்டாரம், எந்த ஆலை அல்லது எந்தக் கிராமம் இருக்கிறது? தொழிலாளர் உற்பத்தித் திறனை உயர்த்தவும், ஏழைகளுக்கு நல்ல புதிய வீடுகள் கட்டித் தரவும், செல்வந்தர் வீடுகளில் ஏழைகளைக் குடி வைக்கவும், ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தின் ஒவ்வொரு குழந்தைக்கும் முறையாக ஒரு போத்தல் பால் வழங்கவும் எங்கே பெரும்பணி ஆற்றப்பட்டுள்ளது? இந்த அம்சங்களில்தான் கம்யூன்கள், குடிவாழ் கூட்டுக்கள், உற்பத்தியாளர்-நுகர்வாளர் சங்கங்கள், இணைப்புகள், தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆகியவற்றுக்கிடையே நேசப்போட்டி வளர வேண்டும். இந்தப் பணியில் நடைமுறையில் தொண்டாற்ற தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் முன்வர வேண்டும், அரசு நிர்வாகத்தில் வேலை செய்ய அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் ஏராளமான தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேவலம் அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். தமது ஆற்றல்களைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களே அவர்கள் மட்டுமே மக்களின் ஆதரவுடன் ருஷ்யாவைப் பாதுகாக்க முடியும், சோஷலிச லட்சியத்தைப் பாதுகாக்க முடியும்.

*1917 டிசம்பர் 24—27ல்*
*எழுதப்பட்டது*

# தேசீயப் பொருளாதார தலைமைக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை
## மே 26, 1918

(லெனினது வருகையைத் தொடர்ந்து தொடர்ந்த கரவொலி முழக்கம்.) தோழர்களே, முதன் முதலாக மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் பேரால் தேசீயப் பொருளாதாரக் கவுன்சில்களின் காங்கிரசுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி.)

தோழர்களே, தேசீய தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலுக்கு இப்போது மிகவும் கடினமான ஆனால் மிகவும் கைம்மாறு தருகிற ஒரு பணி உள்ளது. அக்டோபர் புரட்சியின் ஆதாயங்கள் இன்னும் முன் செல்லும் அளவுக்கு, அது தொடங்கிவைத்த எழுச்சி மேலும் தீர்க்கமடையும் அளவுக்கு, சோஷலிஸ்டுப் புரட்சியின் சாதனைகள் மேலும் உறுதியாக நிலை நாட்டப்படும் அளவுக்கு, சோஷலிஸ்டு அமைப்பு கெட்டிப்படும் அளவுக்கு பொருளாதாரக் கவுன்சில்களின் பங்கு அதிகமாகும், உயர்வுபெறும், அரசு நிறுவனங்களில் எல்லாம் வைத்து இவை மட்டுமே நிலைத்திருக்கும். சோஷலிஸ்டு அமைப்பு நிறுவப்படுவதை நாம் நெருக்கமாக அணுகிவரும் போது இவற்றின் நிலை மேலும் நிலைத்து நிற்கக் கூடியதாக மாற்றமுறும். முற்றிலும் நிர்வாகம் சார்ந்த பொறியமைவின், நிர்வாகத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ள ஒரு பொறியமைவின் தேவை குறையும். சுரண்டலாளர்களின் எதிர்ப்பு இறுதியாகத் தகர்க்கப்பட்ட பிறகு, உழைக்கும் மக்கள் சோஷலிஸ்டு உற்பத்தியை ஒழுங்கமைக்கத் தெரிந்து கொண்ட பிறகு, இந்த நிர்வாகப் பொறியமைவு இச்சொல்லின் சரியான,

கரூரான குறுகிய பொருளில் பழைய அரசின் இந்தப் பொறியமைவு, மடிந்தழிவது திண்ணம். அதேபோதில் தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் மாதிரியான பொறியமைவு நிச்சயமாயும் வளரும், வளமுறும், வலிமையடையும், ஸ்தாபனத் திரட்சியுள்ள சமூகத்தின் எல்லாப் பிரதானச் செயல்களையும் நிறைவேற்றும்.

இதனால்தான், தோழர்களே, நாம் நமது தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் மற்றும் வட்டாரக் கவுன்சில்களின் அனுபவத்தை, அவை நெருக்கமாயும் பிரிக்கவொண்ணு முறையிலும் தொடர்பு பூண்டுள்ள செயல்களுடன் சேர்த்துப் பார்க்கும் போது, பல காரியங்கள் முடிவுருமல், முழுமையடையாமல், ஒழுங்கமையாமல் இருந்த போதிலும் நாம் நம்பிக்கை இன்மை சார்ந்த முடிவுக்கு வருவதற்கான அற்பமான அடிப்படை கூட இல்லை என்று நான் கருதுகிறேன். தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் தனக்குத்தானே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி, பிராந்திய வட்டாரக் கவுன்சில்கள் தமக்குத்தாமே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி மிகப் பேரளவானதாயும், சர்வாம்சமானதாயும் இருப்பதன் காரணமாக, நாம் எல்லோரும் உற்று நோக்கும் இதில், கவலைதரக் கூடிய எதுவும் அறவே இல்லை. மிகப் பல தடவை—நமது கருத்து நிலையில் இருந்து நிச்சயமாயும் ஒருவேளை மிகவும் அடிக்கடி—''மூன்று முறை அள, ஒரு தரம் வெட்டு'' என்ற பழமொழி பிரயோகிக்கப்படவில்லை. துரதிருஷ்டவசமாக அந்தப் பழமொழியில் வெளியிட்டிருப்பது போன்று சோஷலிஸ்டு வழிகளில் பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பது சம்பந்தமான காரியம் அத்தனை எளிதானதல்ல.

சகல ஆட்சி அதிகாரமும்—இந்தத் தடவை அரசியல், பிரதானமாயும் அரசியல் ஆட்சி அதிகாரம் மட்டுமல்ல, ஆனல் பொருளாதார ஆட்சி அதிகாரமும், அதாவது அன்றூட மானுட வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்கள் மீதே பாதிப்புச் செலுத்தும் ஆட்சி அதிகாரம்—ஒரு புதிய வர்க்கத்திடம் மாற்றி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வர்க்கம் மனிதகுல வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தொகையின் மிகப்பெரிய

பெரும்பான்மையின், உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் முழுத் திரளுக்கும் தலைவனாகத் திகழ்கிறது. இந்த நிலையில் நமது கடமைகள் மேலும் சிக்கலுறுகின்றன. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்களை முற்றிலும் புதிய வழிகளில் நாம் ஒழுங்கமைக்க வேண்டியுள்ள போது நம்மை எதிரிடும் ஸ்தாபனக் கடமைகளின் ஆக உயர் முக்கியத்துவமும் உயர் கடினமும் காரணமாக ''மூன்று முறை அள, ஒரு தரம் வெட்டு'' என்ற பழமொழியில் போன்று அவ்வளவு எளிதாகக் காரியங்களை ஏற்பாடு செய்வது சாத்தியமல்ல என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒரு சாதனத்தை எண்ணற்ற தடவைகள் அளந்து விட்டுப் பிறகு இறுதியாக அளக்கப்பட்டுப் பொருத்தப்பட்டதை வெட்டிவிட்டுப் பொருத்தும் நிலையில் நாம் நிச்சயமாயும் இல்லை. நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் நமது பொருளாதாரக் கட்டமைவை நிர்மாணிக்க வேண்டும். பல்வேறு நிறுவனங்களைத் தேர்ந்து ஆராய வேண்டும், அவற்றின் வேலையைக் கவனிக்க வேண்டும், உழைக்கும் மக்களின் பொது அனுபவத்தால், எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றின் வேலையின் பலன்களை வைத்துப் பரிசீலிக்க வேண்டும். நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் மேலும் சுரண்டலாளர்களின் ஆவேசமான போராட்டமும் வெறித்தனமான எதிர்ப்பும் உள்ள நிலைமையில் இதை நாம் செய்ய வேண்டும். முதலாளித்துவச் சுரண்டலின் கடைசிச் சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுக்கக் கூடிய தருணத்தை நாம் எந்தளவு நெருங்கி வருகிறோமோ, அந்தளவு சுரண்டலாளர்களின் வெறியாட்டமும் அதிகரிக்கிறது. ஒரு குறுகிய காலகட்டத்திற்கு உள்ளேயே தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளின் மாதிரிகள், ஒழுங்கு விதிகள், நிர்வாக அமைப்புகளைப் பல தடவைகள் நாம் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்ட போதிலும், இந்த நிலைமைகளில் நம்பிக்கை இன்மைக்குச் சிறிதளவும் ஆதாரம் இல்லை என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. இருப்பினும் தமது சிறந்த உணர்வுகள் புண்படுத்தப்பட்டதாகக் கருதும் முதலாளித்துவ வர்க்கத்தினரும் சுரண்டலாளர்களும் வன்மத்துடன் வெடித்துக் குமுறுவதற்கு இது

பெருமளவு இடம் தருகிறது. இந்த வேலையில் உதாரண மாக, பிரதான தண்ணீர் வாரியத்தில், மிகவும் நெருக்க மான மிகவும் நேரடியான பங்கு வகிப்போர் ஒழுங்கு விதிகளையும் நிர்வாகத்தின் நியதிகள் மற்றும் சட்டங்களை யும் மூன்று தடவை மாற்றுவதை எப்போதும் திருப்தி கரமாக இருப்பதாகக் கருத முடியாது. இத்தகைய வேலை யில் இருந்து பெறும் திருப்தி பெரிதல்ல. அரசாணைகளை மிகவும் அடிக்கடி மாற்றும் நேரடியான பொல்லாங்கில் இருந்து நாம் ஓரளவுக்கு நம்மை நாமே விலக்கிக் கொண்டும், அதன் சொந்தமான இன்னும் போதாத தாக இருக்கும் அதன் சக்திகளின் உதவிகொண்டு ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் செய்து முடிக்க வேண்டியிருக்கும் பேரளவான உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள கடமையை மேலும் சற்று ஆழமாகப் பார்ப்போமானல், பல்வேறு நிர்வாக முறைகளிலும் பல்வேறு வடிவிலான கட்டுப்பாட்டிலும் இன்னும் பல மாற்றங்களைச் செய் வதும் அவற்றை நடைமுறையில் சோதிப்பதும் தவிர்க்க முடியாதது என்பது உடனடியாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகும். இத்தகைய பிரம்மாண்டமான பணியில் நாம் முன் கூட்டியே நிர்ணயம் செய்த நெறிமுறைகளுக்கு ஏற்ப ஒரே அடியில் புதிய சமுதாய அமைப்பின் ஸ்தா பன வடிவங்களை உடனடியாக நிலைநாட்டி உருவாக்க முடியும் என்று என்றுமே உரிமை பாராட்டி இருக்க முடி யாது; எதிர்காலத்தின் வாய்ப்புகள் குறித்து என்றேனும் எழுதியுள்ள விவேகமுள்ள சோஷலிஸ்டு எவரும் இதை என்றுமே கருதி இருக்க முடியாது.

நமக்குத் தெரிந்திருந்தது அனைத்தும், முதலாளித்துவ சமூகம் பற்றிய சிறந்த நிபுணர்கள் அதன் வளர்ச்சியை முன்னறிந்து கூறிய மாபெரும் சிந்தனையாளர்கள் நமக்குத் துல்லியமாகச் சுட்டிக் காட்டியதுமான எல்லாம் என்னவெனில், இந்த மாற்றம் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாதது என்பதும் இது ஒரு குறிப்பிட்ட முக்கியமான வழியில் நடைபெற வேண்டும் என்பதும் உற்பத்தி சாதனங்களிலான தனி உடைமை உரிமை வரலாற்று ரீதியில் அழிந்தே தீரும் என்பதும் அது நிச் சயம் தகர்ந்தழிய வேண்டும், சுரண்டலாளர்கள் தவிர்க்க

முடியாத வகையில் உடைமை நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதும் ஆகும். இது விஞ்ஞான ரீதியான துல்லியத்துடன் நிலைநாட்டப்பட்டது. நாம் சோஷலிசத்தின் பதாகையைப் பற்றிக் கொண்ட போது, நாம் நம்மை சோஷலிஸ்டுகள் என்று பறை சாற்றிக் கொண்ட போது, நாம் சோஷலிஸ்டுக் கட்சிகளை நிறுவிக் கொண்ட போது, நாம் சமுதாயத்தை மாற்றி அமைத்த போது—இதை நாம் அறிந்திருந்தோம். சோஷலிஸ்டு மறு சீரமைப்பை நோக்கிச் செயல்படும் நோக்கத்துடன் நாம் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்ட போது நாம் இதை அறிந்திருந்தோம். ஆனால் நமக்கு மாற்றங்களின் வடிவங்கள் பற்றியோ ஸ்தூலமான மறு சீரமைப்பின் வளர்ச்சி விகிதம் பற்றியோ தெரிந்திருக்க முடியாது. இந்த விஷயத்தில் கூட்டு அனுபவம், லட்சோப லட்சம் பேரின் அனுபவம் மட்டுமே நமக்கு நிர்ணயமான வழிகாட்டுதலை வழங்க முடியும். நமது பணிக்கு, சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணிக்கு, நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் முதலாளித்துவ சமுதாயத்திலும் வரலாற்றைப் படைத்தவர்களான அந்த உயர் பகுதிகளைச் சேர்ந்த நூறு பேர், நூறுயிரம் பேர்களின் அனுபவம் போதுமானதல்ல என்பதே இதற்குக் குறிப்பான காரணமாகும். அவர்களது இந்த வழியில் நாம் முன்னேறிச் செல்ல முடியாது என்பதற்குத் திட்டவட்டமான காரணம், நாம் கூட்டு அனுபவத்தை, லட்சோப லட்சம் உழைக்கும் மக்களின் அனுபவத்தைச் சார்ந்து நிற்கிறோம் என்பதாகும்.

எனவே, சோவியத்துகளின் பிரதானமான அடிப்படையான பணியான ஸ்தாபனப் பணி மீது பரந்த அளவிலான சோதனைகள், பரந்த அளவிலான நடவடிக்கைகள், பரந்த அளவிலான மாற்றங்கள், பரந்த அளவிலான இடர்ப்பாடுகள் தவிர்க்க முடியாத வகையில் சுமத்தப்படும் என்பதையும், இதைப் பற்றிய அனுபவம் நமக்கு இல்லாததால் குறிப்பாயும், ஒவ்வொரு நபரையும் அவருக்கு உரிய சரியான இடத்தில் எப்படிப் பொருத்துவது என்ற பிரச்சினை சம்பந்தமாக இந்த இடர்ப்பாடுகள் சுமத்தப்படும் என்பதையும் நாம் அறிவோம். இங்கு ஒவ்வொரு நடவடிக்கையையும் நாமே வகுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பாதையில் நாம் செய்யும் தவறு எந்தளவுக்குக் கடுமையாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இப்பணி நிச்சயமாயும் அதிகரிக்கும். தொழிற்சங்கங்களில் அங் கத்தினர் தொகை அதிகரிக்குந்தோறும், கூடுதலாக வரும் ஒவ்வொரு ஆயிரம் பேரும், கூடுதல் வரும் ஒவ்வொரு நூறாயிரம் பேரும் உழைக்கும் மக்களின் சுரண்டப்படும் மக்களின் முகாம்களில் இருந்து வருந்தோறும், இது காறும் மரபுக்கும் வழக்கத்திற்கும் ஏற்ப வாழ்ந்தவர் கள் சோவியத் அமைப்புக்களை நிர்மாணிப்போர் முகாம் களில் சேர்ந்து வரும் போது தகுதியானோர் என்று நிரூ பிக்கப்பட்டு சரியான வழியில் வேலைகளை ஒழுங்கமைக்க வேண்டியவர்களான மக்களின் தொகை அதிகரித்து வரும்.

தேசியப் பொருளாதாரக் கவுன்சில்—தலைமைப் பொருளாதாரக் கவுன்சில்—முன்பாக குறிப்பாயும் அடிக் கடி எழுந்து வரும் இரண்டாம் பட்சமான பணிகளில் ஒன்றை, முதலாளித்துவ நிபுணர்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான பணியை, எடுத்துக் கொள்வோம். நாம் எல்லோரும், குறைந்த பட்சம் விஞ்ஞானம் மற்றும் சோஷலிசத்தின் அடிப்படை மீது தமது நிலையை மேற் கொள்வோர், இந்தப் பணி எந்த அளவுக்கு சர்வதேச முத லாளித்துவம் உழைப்பின் பொருளாயத தொழில்நுட்ப முன்தேவைகளை எந்தளவுக்கு வளர்த்திருக்கிறதோ, அதை விஞ்ஞானத்தை அடிப்படையாக்கிப் பேரளவில் ஒழுங்கமைத்து, மிகப் பெருமளவிலான விஞ்ஞான போதனை பெற்ற நிபுணர்களைப் பயிற்றுவித்துள்ளதோ அந்த அளவுக்கு மட்டுமே இப்பணியை நிறைவேற்ற முடியும் என்பதை அறிவோம். இது இல்லாமல் சோஷ லிசம் சாத்தியம் அல்ல என்பதை நாம் அறிவோம். கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக முதலாளித்துவத்தின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளவர் களும், சோஷலிசம் தவிர்க்க வொண்ணாதது என்ற முடி வுக்கு மீண்டும் மீண்டும் வந்திருப்பவர்களுமான அந்த சோஷலிஸ்டுகளின் நூல்களை நாம் திரும்பவும் படிப்போ மானால் அவர்கள் அனைவரும் எவ்விதமான விதிவிலக்கும் இன்றி, விஞ்ஞானத்தை அதன் முதலாளித்துவத் தளை களில் இருந்து, மூலதனத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்

பதில் இருந்து, நீசத்தனமான முதலாளித்துவப் பேராசையின் நலன்களுக்கு அடிமையாக இருப்பதில் இருந்து, விடுவிக்கவல்லது சோஷலிசம் மட்டுமே என்று சுட்டியுரைத்து வந்திருக்கிருர்கள் என்பதை நாம் காண முடியும். சமூக உற்பத்தியும் வினியோகமும் விஞ்ஞான பூர்வமான வழிகளில் பரவலாக விஸ்தரிக்கப்படுவதையும், அவை உழைக்கும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி, கூடுமானவரை அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்துக்கு உண்மையில் கீழடங்கியதாக இருக்கும்படி செய்வதும் சோஷலிசத்தால் மட்டுமே சாத்தியம், சோஷலிசத்தால் மட்டுமே இதை அடைய முடியும். இதை அது நிச்சயம் அடைய வேண்டும் என்பதை நாம் அறிவோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில் தான் மார்க்சியத்தின் முழுமையான பன்முகத்தன்மையும் அதன் முழுமையான வலிமையும் காணக்கிடக்கின்றன.

இதை எதிர்க்கும் நபர்களேச் சார்ந்து நிற்கும் அதே பொழுதில் இதை நாம் அடைந்தாக வேண்டும். காரணம், மூலதனம் எந்த அளவுக்குப் பெரிதாக மாறுகிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர்களே அதிகமாக அடக்குகிறது. இப்போது ஆட்சி அதிகாரம் தொழிலாளர், ஏழை விவசாயிகளின் கரங்களில் இருப்பதாலும், அரசாங்கம் மக்களின் ஆதரவோடு தனக்குத்தானே பணிகளே வகுத்துக்கொள்வதாலும், நாம் இந்த சோஷலிஸ்டு மாற்றங்களே, முதலாளித்துவ சமூகத்தில் பயிற்சி பெற்ற, வேறு நிலேமைகளே அறியாத, வேறு எந்த ஒரு சமூக அமைப்பைப் பற்றியும் கருதிப் பார்க்க முடியாத முதலாளித்துவ நிபுணர்களின் உதவியுடன் சாதனேயாக்க வேண்டும். எனவே இந்த நிபுணர்கள் தமது வேலேயில் முற்றமுழு நேர்மையோடும் விசுவாசத்தோடும் இருக்கும் இடங்களில் கூட அவர்கள் ஆயிரக்கணக்கான முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் நிரம்பிக் கிடக்கிருர்கள், தாமே காணவியலாத ஆயிரக்கணக்கான பந்தங்களால் முதலாளித்துவ சமூகத்துடன் தொடர்பு பூண்டிருக்கிருர்கள். இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு மடிந்து வருகிறது, அழிவுறுகிறது, எனவே அது மூர்க்கமான எதிர்ப்பைத் தோற்றுவித்து வருகிறது.

இந்த முயற்சிகள், சாதனைகள் சம்பந்தமான இடர்ப் பாடுகளை நாம் நம்மிடமிருந்தே மறைத்துக்கொள்ள முடியாது. இதைக் குறித்து எழுதியுள்ள சோஷலிஸ்டுகள் பலர். ஆனால் தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் போது, மிகவும் செழுமையான, வரலாற்று முறையில் தவிர்க்க முடியாத, நமக்கு அவசிய மான, முதலாளித்துவத்தால் சேகரம் செய்யப்பட்ட கலாசாரம், ஞானம் மற்றும் தொழில்நுணுக்கக் களஞ் சியத்தின் கூட்டு மொத்தத்தையும் முதலாளித்துவத்தின் கருவி என்பதில் இருந்து சோஷலிசத்தின் கருவியாக மாற் றும் கடமையினைத் தொழிலாளி வர்க்க ஆட்சி தனது பணியாக மேற்கொள்ளும் போது, அதை எதிரிடும் இந்த ஸ்தூலமான நடைமுறை இடர்ப்பாடு சம்பந்தமாக எதிர் கால சோஷலிஸ்டு சமூக அமைப்புப் பற்றிய எந்த ஒரு சோஷலிஸ்டின் நூலிலோ எந்த ஒரு பிரபல சோஷலிஸ்டின் கருத்திலோ சுட்டிக் காட்டப்பட்டிருப்பதைக் கண்டதாக எனக்கு நினைவு இல்லை. இதை ஒரு பொது சூத்திரத்தில், கருத்தியலான அறிவாய்வில் செய்வது எளிது. ஆனால் உடனே மடிந்துவிடாமல் மரணம் நெருங்க நெருங்க மிக வும் மூர்க்கமான எதிர்ப்பினைத் தொடுக்கும் முதலாளித் துவத்தை எதிர்த்த போராட்டத்தில் இந்தப் பணியைச் செய்யப் பிரம்மாண்ட முயற்சிகள் தேவை. இந்தத் துறை யில் சோதனைகள் நடைபெற்று ஓரளவான பிழைகளை நாம் திரும்பத் திரும்ப திருத்திக் கொள்வோமானால் இது தவிர்க்க முடியாதது. காரணம், நாம் தேசீயப் பொருளா தாரத்தின் இந்த அல்லது அந்தத் துறையில் நிபுணர் களை முதலாளித்துவத்தின் ஊழியர்களாக இருப்பதில் இருந்து உழைக்கும் மக்களின் ஊழியர்களாக, அவர்களது ஆலோசகர்களாக உடனடியாக மாற்ற முடியாது. இதை உடனடியாகச் செய்ய முடியாததால் அது மிகச் சிறிய அளவு நம்பிக்கை இன்மைக்குக் கூட இடமளித்தல் கூடாது. ஏனெனில் நாம் நமக்கென ஒருங்குவித்துள்ள பணி உலக வரலாற்று இடர்ப்பாடும் முக்கியத்துவமும் உடைய பணியாகும். தனி ஒரு நாட்டில், ருஷ்யாவை விடக் குறைந்த அளவே பின்தங்கிய நாடாக அது இருந்த போதிலும், நாலாண்டுகள் நீடித்த முன் என்றும் கண்

டிராத வேதனைமிகுந்த கடுமையான நாசகரமான போருக்குப் பிந்திய நிலைமைகளில் அன்றி மிகவும் சிறந்த நிலைமைகளில் நாம் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் சரி, நாம் முற்றிலும் நமது சொந்த முயற்சிகள் மூலமே சோஷலிஸ்டுப் புரட்சியை பூர்த்தி செய்திருக்க முடியாது. தற்போது ருஷ்யாவில் நடைபெற்றுவரும் சோஷலிஸ்டுப் புரட்சியுடன் மாறுபாடுற்று, சக்திகளின் தெட்டத்தெளிவான பொருத்தக் கேடைச் சுட்டிக்காட்டும் நபர் பழமைவாதியான ''கூட்டில் அடைந்த மனிதனை''[39] ஒத்தவனுக இருப்பார். அவரால் தமது இயலுணர்வுக்கு மிகையாகப் பார்க்க முடியாது. சக்திகளின் பொருத்தக் கேடுள்ள பல சம்பவங்கள் இல்லாமல் முக்கியத்துவம் உள்ள எந்த ஒரு வரலாற்று மாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை அவர் மறந்து விடுகிறுர். சக்திகள் புரட்சி வளரும் விதத்தில் போராட்டத்தின் போக்கில் வளர்கின்றன. ஒரு நாடு ஆழமான மாற்றம் கொண்டுவரும் பாதையினை மேற்கொண்டுவிட்டதெனில், அது அந்த நாட்டுக்கும் அந்த நாட்டில் வெற்றியீட்டிய தொழிலாளி வர்க்கத்தின் கட்சிக்கும் பெருமை தருவதாகும். அவை முன்னுட்களில் கருத்தியலாயும் தத்துவார்த்த முறையிலும் எழுப்பப்பட்ட பணிகளை நடைமுறைப் பாங்கில் மேற்கொள்ள வேண்டும். இந்த அனுபவம் என்றுமே மறக்கப்பட மாட்டாது. பொருள் உற்பத்தி முழுவதையும் தேசிய அளவில் ஒழுங்கமைக்கும் நடைமுறை வேலையில் தொழிற்சங்கங்களிலும் வட்டார அமைப்புகளிலும் இப்போது ஒன்று சேர்ந்துள்ள தொழிலாளர்கள் பெற்றுவரும் அனுபவத்தை, ருஷ்யப் புரட்சியும் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியும் கடந்து செல்லும் நிலைமாற்றங்கள், எத்துணை கடினமாக இருந்த போதிலும் சரி, பறித்துவிட முடியாது. இது வரலாற்றில் சோஷலிசத்தின் சாதனை என்று ஏற்கப்பட்டுவிட்டது. இதன் மீது வருங்கால உலகப் புரட்சி தனது சோஷலிஸ்டு கட்டுமானத்தை நிறுவும்.

இன்னெரு பிரச்சினையை, ஒருக்கால் மிகவும் கடினமான ஒரு பிரச்சினையை, தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் நடைமுறைத் தீர்வு காண வேண்டிய பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது தொழி

லாளர் கட்டுப்பாடு பற்றிய பிரச்சினையாகும். சுருக்கமாகச் சொன்னால் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடும் போது குறிப்பாயும், தொழிற்சங்கங்கள் தான் தொழிலாளர் களின் ஆகப் பெரிய அமைப்புகளான உலோகத் தொழி லாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியும், அகில ருஷ்யத் தொழிற்சங்கக் கவுன்சிலும் தான், லட்சக் கணக்கான உழைக்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தியுள்ள உயர் தொழிற்சங்க அமைப்புகள் தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முதலில் சுதந்திரமாக வேலைசெய்யத் தொடங் கின என்பதை, இப்பிரச்சினை உலக வரலாற்று முக்கியத் துவம் உடையது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண் டும், மன நிறைவுடன் வற்புறுத்த வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் பொருட்டு நாம் அந்த ஓரளவு தோல் விகள், சிறு தோல்விகளில் இருந்தும், தனிப்பட எடுத்துக் கொண்டால் வென்று சமாளித்தற்கரியது என்று தோன் றும் நம்பற்கரிய இடர்ப்பாடுகளில் இருந்தும், நம்மை நாமே விலக்கிக் கொள்ள வேண்டும். நாம் மேலும் உயர் மட்டத்திற்கு எழுச்சியுற்று, சமூகப் பொருளாதார அமைப்பு முறைகளின் வரலாற்று மாற்றங்களை ஆய்வு செய்தல் வேண்டும். இந்தக் கோணத்தில் இருந்து மட் டுமே நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளப்பரிய தன் மையை சரியாகக் கணிக்க முடியும். இது வரையில், நிலப் பிரபுத்துவ ருஷ்யாவில் 1861 வரை[40] இது தமது சொந்த விவகாரம் என்று கருதிய ஒரு சில நில உடைமையாளர் களால் தீர்வு காணப்பட்டதான இந்தப் பணியை இந்த சந்தர்ப்பத்தில் சமூகத்தின் ஆக முன்னேறிய பிரதிநிதி கள், உழைக்கும், சுரண்டப்படும் மக்கள் தமது சொந்த முன்முயற்சியின் மீது தாமே மேற்கொண்டுள்ளனர் என்ற மெய் விவரத்தின் பேரளவான முக்கியத்துவத்தை இதற்குப் பிறகு மட்டுமே சரியாகக் கணிப்பது சாத்திய மாகும். அந்த சமயத்தில் அரசு இணைப்பாக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டுவருவது அவர்களது விவ காரமாக இருந்தது.

இந்தக் கட்டுப்பாட்டைப் பிரபுத்துவ நிலவுடைமை யாளர்கள் எப்படி உருவாக்கினார்கள் என்பதை நாம் அறிவோம். அது பெரும்பான்மையான மக்களுக்கு ஒடுக்கு

முறையாக, மானக்கேடாக, கடுங்காவல் சிறைத் தண்டனையின் நம்பற்கரிய கடும்வதையாக இருந்தது. பண்ணை அடிமை முறையில் இருந்து முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கான இந்த மாறுதல் கட்டம் முழுவதையும் நினைவுக்குக் கொண்டு வாருங்கள். நீங்கள் நேரடியாகப் பார்த்ததில் இருந்து—உங்களில் பெரும்பான்மையினர் நேரடியாகப் பார்த்திருக்க முடியாது என்ற போதிலும்—பழைய தலைமுறையினரிடமிருந்து நீங்கள் அறிந்து கொண்டதிலிருந்து, 1861க்குப் பிறகு முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கான மாற்றம், பழைய நிலப்பிரபுத்துவத்தின் தண்டாயுதக் கட்டுப்பாட்டிலிருந்து ஏற்பட்ட மாற்றம், மிகவும் அறிவற்றதான ஆணவம் பிடித்த மிருகத்தனமான மானமிழக்கச் செய்யும் சொந்த வன்முறையின் கட்டுப்பாட்டில் இருந்து, முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு, பட்டினியின் கட்டுப்பாட்டுக்கு, உண்மையில் முதலாளித்துவ அடிமைத்தனத்தின் கட்டுப்பாடான கட்டற்ற கூலிக்கமர்த்தல் எனப்படுவதற்கு மாறிச் செல்வது, வரலாற்று ரீதியாக எவ்வளவு எளிதாகத் தோற்றமளித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்குக் காரணம், மனிதகுலம் ஒரு சுரண்டலாளரிடமிருந்து இன்னொரு சுரண்டலாளருக்குக் கடந்து சென்றது. மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் ஒரு சிறுபான்மை, மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் இன்னொரு சிறுபான்மைக்கு இடம் கொடுத்தது, பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் முதலாளிகளுக்கு இடமளித்தார்கள், ஒரு சிறுபான்மை இன்னொரு சிறுபான்மைக்கு இடமளித்தது. அதே போதில் உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் ஒடுக்கப்பட்டுக் கிடந்தனர். ஒரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டிலிருந்து இன்னொரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டுக்கு மாறுவதற்கும் கூட பல ஆண்டுகள், பல பத்தாண்டுகள் பிடித்தன. இந்தக் காலப் பகுதியில் பழைய பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் எல்லாம் பாழாகி அழிந்து வருகிறது எனவும், நாட்டைப் பண்ணை அடிமை முறை இல்லாமல் நிர்வகிக்க முடியாது எனவும் முற்றிலும் உண்மையாகவே கருதினர். அதேபோதில் புதிய முதலாளித்துவ அதிபர் ஒவ்வொரு படியிலும் நடைமுறை இடர்ப்பாடுகளை

எதிரிட்டு தனது முயற்சியால் பலன் இல்லை என்று அதைக் கைவிடலானார். இந்த மாறுதல் கட்டத்தின் போதான இடர்ப்பாடுகளுக்கு முக்கியமான சான்று, உருப் படியான நிரூபணங்களில் ஒன்று, அந்த சமயத்தில் பயன் படுத்துவதற்குச் சிறந்த இயந்திரங்கள் வேண்டும் என் பதால் ருஷ்யா வெளிநாடுகளில் இருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்ததேயாகும். மேலும் இந்த இயந்திரங் களைக் கையாள ஆட்கள் இருக்கவில்லை, நிர்வாகிகள் இல்லை என்பதும் தெரியவந்தது. ருஷ்யா முழுதும் அருமை யான இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் கிடந்ததை எவரும் பார்க்க முடியும். பழைய பிரபுத்துவக் கட்டுப் பாட்டில் இருந்து புதிய பூர்ஷ்வா-முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு மாறிச் செல்வது இத்தனை கடினமாக இருந்தது.

எனவே, தோழர்களே, இந்த விவரத்தை இந்தக் கோணத்தில் இருந்து பார்ப்பீர்களானால், நீங்கள் அந்தப் பேர்வழிகளால், அந்த வர்க்கங்களால், அந்த முதலாளித் துவ வர்க்கத்தினரால், அவர்களை அண்டிப் பிழைப்ப வர்களால் தவறாக வழி நடத்தப்பட மாட்டீர்கள். இவர் களது ஏகப்பணி பீதியை விதைப்பதும், மனச்சோர்வை விதைப்பதும், நமது வேலை முழுதையும் பொருத்தவரை யில் பூரண மனச்சோர்வை ஏற்படுத்துவதும், அது பயனற்றது என்று தோன்றும்படி செய்வதும் ஆகும். இவர்கள் கட்டுப்பாடின்மை மற்றும் ஊழலின் ஒவ்வொரு சம்பவத்தையும் சுட்டிக் காட்டி அந்தக் காரணத்திற்காக புரட்சி பயனற்ற வேலை என்று அதைக் கைவிடுகின்றனர். மக்கள் ஒரு புதிய கட்டுப்பாட்டைப் படைத்து வரும் போது உலகில், வரலாற்றில் ஊழல் இல்லாத, கட்டுப் பாடின்மை இல்லாத, வேதனை தரும் சோதனைப் படிகள் இல்லாத உண்மையிலேயே மகத்தான தனி ஒரு புரட்சி என்றோ இருந்தது போலக் கருதுகின்றனர் போலும். வர லாற்றில் இந்தத் தொடக்க கட்டம் முதல் தடவையாக எய்தப் பெற்றது என்பதையும், ஒரு புதிய கட்டுப்பாடு, தொழிலாளர் கட்டுப்பாடு, தோழமைத் தொடர்பின் கட்டுப்பாடு, சோவியத் கட்டுப்பாடு லட்சக் கணக்கான உழைக்கும் சுரண்டப்படும் மக்களால் உண்மையில்

படைத்துருவாக்கப்படுகிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. இந்தத் துறையில் துரிதமான வெற்றி ஏற் பட்டுவிடும் என்று நாம் உரிமை பாராட்டவில்லை, எதிர் பார்க்கவும் இல்லை. இந்தப் பணி முழுமையுற ஒரு முழு வர லாற்று சகாப்தம் பிடிக்கும் என்பதை நாம் அறிவோம். இந்த வரலாற்று சகாப்தத்தை நாம் துவக்கி விட்டோம், இன்னும் முதலாளித்துவ அமைப்பாக இருக்கும் ஒரு நாட்டில், முதலாளித்துவ சமூகத்தின் கட்டுப்பாட்டை உடைத்துவரும் சகாப்தத்தை நாம் துவக்கிவிட்டோம். இந்த அழிக்கும் பணியில் அரசியல் உணர்வுடைய எல் லாத் தொழிலாளர்களும், முற்ற முழுமையான பாடு படும் விவசாயிகள் அனைவரும், எல்லா இடங்களிலும் உதவிவருவது கண்டு பெருமை அடைகிறோம். சுரண்டல் மற்றும் அடிமை முறையினை அடிப்படையாக்கிய இந்தக் கட்டுப்பாட்டை மாற்றி, அதனிடத்தில் ஒன்றுபட்ட உழைப்பின் புதிய கட்டுப்பாட்டை, கோடிக் கணக்கான மக்கள் தொகை கொண்ட நாடான ருஷ்யா முழுவதன் ஒன்றுபட்ட ஸ்தாபனத் திரட்சியுள்ள தொழிலாளர் உழைக்கும் விவசாயிகளின் கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும். இதை, மேலிருந்து வரும் நெறிமுறைகள் விளைவாகவன்றி தமது சொந்த ஜீவிய அனுபவத்தின் நெறிமுறைகளின் மீது மக்கள் சுயவிருப்பமாகத் தமது சொந்த முன்முயற்சியால் புரிதல் வேண்டும் என்று உணர்ந்துவரும் சகாப்தத்தை நாம் துவங்கிவிட்டோம். இந்தப் பணியில் பேரளவான இடர்ப்பாடு உள்ளது. ஆனால் இது ஒரு பயனுள்ள பணியுமாகும். காரணம், இதை நாம் நடைமுறையில் நிறைவேற்றினால் மட்டுமே நாம் குழிதோண்டிப் புதைத்து வரும் முதலாளித்துவ சமூகத்தின் சவப்பெட்டியின் மீது கடைசி ஆணியை அறைந்தவர்களாவோம். (க ர வெ ா லி.)

## மாபெரும் தொடக்கம்

### என்ற கட்டுரையிலிருந்து

பல சந்தர்ப்பங்களில் நான் சுட்டிக் காட்டியிருப்பது போல, ஏனைய பல சந்தர்ப்பங்களுடன்கூட, மார்ச் 12ல் பெத்ரோகிராத் சோவியத்தின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் நான் சுட்டிக் காட்டியது போல, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்களுக்கு எதிரான பலாத்காரப் பிரயோகம் மட்டுமல்ல, பிரதானமாய்க்கூட அது பலாத்காரப் பிரயோகம் அல்ல. பாட்டாளி வர்க்கமானது உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் மேலும் உயர்வான ஒரு ரகத்தின் பிரதிநிதியும் படைப்பாளனும் ஆகும் என்பதுதான் இந்தப் புரட்சிகரப் பலாத்காரப் பிரயோகத்துக்கான பொருளாதார அடிப்படை, இதன் பயனுடைமைக்கும் வெற்றிக்குமான உத்தரவாதம். முக்கியமானது இதுவே. கம்யூனிச பலத்தின் ஆதாரமும், அதன் இறுதி வெற்றி தவிர்க்க முடியாதது என்பதற்கான உத்தரவாதமும் இதுவே.

சமூக உழைப்புக்கான பிரபுத்துவ ஒழுங்கமைப்பு குறுந்தடி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நிலப்பிரபுக்களால் சூறையாடப்பட்டுக் கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்ட உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் முற்றிலும் மூழ்கி ஒடுக்கப்பட்டோராய் இருந்தனர். சமூக உழைப்புக்கான முதலாளித்துவ ஒழுங்கமைப்பு பட்டினி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; முதலாளித்துவக் கலாசாரமும் முதலாளித்துவ ஜன

நாயகமும் எவ்வளவுதான் முன்னேறியிருப்பினும் மிகவும் முன்னேறிய, நாகரிகம் படைத்த, ஜனநாயகக் குடியரசு களிலும் மிகப்பெருந்திரளான உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் மூழ்கி மிதித்து நசுக்கப்படும் திரளான கூலியடிமைகள் அல்லது ஒடுக்கப்பட்ட விவசாயிகளாகவே இருந்தனர், விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய முதலாளிகளால் சூறையாடப்பட்டுக் கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்டனர். சமூக உழைப்புக்கான கம்யூனிச ஒழுங்கமைப்பு—இதற்கான முதற் படியே சோஷலிசம் எனப்படுவது—நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய இருபாலரின் ஒடுக்குமுறையை வீழ்த்திவிட்ட உழைப்பாளி மக்கள் தாமே சுதந்திரமாகவும் உணர்வு பூர்வமாகவும் வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது, காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் அதையே ஆதாரமாய்க் கொள்ளும்.

இந்தப் புதிய கட்டுப்பாடு விண்ணிலிருந்து குதித்து விடுவதில்லை, ஆத்மார்த்திக விருப்பத்திலிருந்து பிறந்து விடுவதில்லை. பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளில், மட்டுமிருந்தே இது வளர்ச்சியுறுகிறது. இந்நிலைமைகள் இல்லாமல் இது வளர்வது சாத்தியமல்ல. வரலாற்று வழி வந்த குறிப்பிட்ட ஒரு வர்க்கமே, பெருமளவு முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதும் ஒன்றுபடுத்தப்பட்டதும் பயிற்சியளிக்கப்பட்டதும் அறிவூட்டப்பட்டதும் உறுதியூட்டப்பட்டதுமான ஒரு வர்க்கமே இந்தப் பொருளாயத நிலைமைகளுக்குரிய இருப்பிடம் அல்லது சாதனம். பாட்டாளி வர்க்கம்தான் இந்த வர்க்கம்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்கிற லத்தீன், விஞ்ஞான, வரலாற்று-தத்துவவியல் தொடரை எளிய மொழியில் பெயர்த்திடுவோமாயின் பின்வருவதே அதன் பொருள்:

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தால் மட்டும்தான், அதாவது பொதுவில் நகரத் தொழிலாளர்கள், ஆலை, தொழில் துறைத் தொழிலாளர்கள் ஆகியோரால் மட்டும்தான், மூலதனத்தின் ஒடுக்குமுறையை வீழ்த்துவதற்கான போராட்டத்திலும், நடைமுறையில் இந்தப் போராட்

டத்தை நடத்திச் செல்வதிலும், வெற்றியைப் பாதுகாப்பதற்கும் உறுதி பெறச் செய்வதற்குமான போராட்டத்திலும், புதிய சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கும் பணியிலும், வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்கான போராட்டம் அனைத்திலும் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் பெருந்திரள் முழுவதுக்கும் தலைமை தாங்க முடிகிறது. (சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலுள்ள விஞ்ஞான வழிப்பட்ட வேற்றுமை என்னவெனில் முதலாவது சொல் முதலாளித்துவத்திலிருந்து தோன்றும் புதிய சமுதாயத்தின் முதற் கட்டத்தையும், இரண்டாவது சொல் மேலும் உயர்வான அடுத்த கட்டத்தையும் சுட்டுகிறவை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்.)

''பெர்ன்'', மஞ்சள் அகிலம்[41] புரியும் தவறு என்னவெனில், அதன் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் சொல்லளவில் மட்டும்தான் ஏற்றுக் கொள்கிறார்கள், அதன் தர்க்க முடிவுக்குச் சிந்தித்துச் செல்ல அஞ்சுகிறார்கள். தவிர்க்க முடியாததான இந்த முடிவு, குறிப்பாய் முதலாளித்துவ வர்க்கத்துக்குக் குலைநடுக்கம் உண்டாக்கும் இந்த முடிவு அவர்களுக்கு அச்சம் தருவதாயுள்ளது. இது அவர்களுக்குச் சிறிதும் ஏற்புடையதல்ல. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது வர்க்கப் போராட்டத்துக்கும் உரிய காலமாகும் என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிறார்கள். வர்க்கங்கள் ஒழிக்கப்படாது இருக்கும் வரை வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகும், மூலதனம் வீழ்த்தப்பட்டதும் உடனடியாய் அடுத்து வரும் காலகட்டத்தில் வடிவத்தில் மாற்றமுற்று அது குறிப்பாய் மூர்க்கமடைந்து குறிப்பாய்த் தனி இயல்பு உடையதாகி விடுகிறது என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிறார்கள். பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபின் அது வர்க்கப் போராட்டத்தை நிறுத்தி விடவில்லை, வர்க்கங்கள் ஒழிக்கப்படும் வரை தொடர்ந்து நடத்தியே செல்கிறது—போராட்டம் நடைபெறும் சூழ்நிலையும் போராட்ட வடிவமும் போராட்ட வழிகளும்தான் மாறுபடுகின்றன.

''வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல்'' என்பதன் பொருள் என்ன? இதுவே சோஷலிசத்தின் இறுதிக் குறிக்கோள் என்பதை, தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வோர் எல்லோருமே அங்கீகரிக்கிறுர்கள், ஆனுல் அதன் உட்பொருள் குறித்துப் பலரும் சிந்திப்பதில்லே. வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்தி சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிகப் பெரும்பாலும் இது சட்டத்தால் நிலேநிறுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை சுவாதீனமாக்கிக் கொள்ளும் முறையினுலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணமாய் ஒன்று மற்ருென்றின் உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ள முடியும்படியான மக்கள் பகுதிகளாகும்.

வர்க்கங்களே அறவே ஒழிப்பதற்குச் சுரண்டலாளர்களான நிலப்பிரபுக்களேயும் முதலாளிகளேயும் வீழ்த்திஞல் மட்டும் போதாது, அவர்களுடைய சொத்துடைமை உரிமைகளே ஒழித்தால் மட்டும் போதாது; உற்பத்தி சாதனங்களில் தனியார் உடைமை அனேத்தையும் ஒழிப்பது அவசியம், நகருக்கும் கிராமத்துக்குமுள்ள பாகுபாட்டையும் மற்றும் உடல் உழைப்பாளர்களுக்கும் மூளே உழைப்பாளர்களுக்குமுள்ள பாகுபாட்டையும் ஒழிப்பது அவசியம் என்பது தெளிவு. இதற்கு நீண்ட நெடுங் காலம் தேவைப்படும். இதைச் சாதிப்பதற்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் பிரம்மாண்டமான முன்னேற்றம் கண்டாக வேண்டும்; சிறிய அளவுப் பொருளுற்பத்தியின் எண்ணற்ற மீதமிச்சங்களின் எதிர்ப்பைச் சமாளிப்பது அவசியம் (அடிக்கடி சாத்துவிகத் தன்மையதான இது மிகவும் பிடிவாதமானது, இதைச் சமாளிப்பது மிகவும் கடினமானது); இந்த மீதமிச்சங்களுடன் சம்பந்தப்பட்ட

பழக்கத்தின், பழைமைப் பிடிப்பின் பிரம்மாண்ட சக்தியைச் சமாளிப்பது அவசியம்.

இந்தப் பணியைச் செய்யும் ஆற்றல் ''உழைப்பாளி மக்கள்'' அனைவருக்கும் சம அளவில் உண்டெனக் கொள்ளுதல் வெறும் பேச்சே ஆகும், அல்லது மார்க்சியத்துக்கு முற்காலத்திய, மிகப் பழங்காலத்திய சோஷலிஸ்டின் பிரமையே ஆகும். ஏனெனில், இந்த ஆற்றல் தானாகவே வந்துவிடும் ஒன்றல்ல, வரலாற்று வழியில் வளர்ந்து வருவதாகும், பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளிலிருந்து மட்டுமே வளர்வதாகும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குச் செல்லும் பாதையின் தொடக்கத்தில் இந்த ஆற்றலைப் பெற்றிருப்பது பாட்டாளி வர்க்கம் மட்டுமேதான். அது தன்னை எதிர்நோக்கும் பிரம்மாண்டப் பணியை நிறைவேற்றும் ஆற்றலுடையதாய் இருக்கிறது. ஏனெனில் முதலாவதாக, நாகரிக சமுதாயங்களில் அதுவே மிகுந்த பலம் படைத்த மிக முன்னேறிய வர்க்கம்; இரண்டாவதாக, வளர்ச்சி பெற்ற மிகப் பெருவாரியான நாடுகளில் அது மக்கள் தொகையில் பெரும்பான்மையானது; மூன்றாவதாக, ருஷ்யாவைப் போன்ற பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளின் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் அரைப் பாட்டாளி வர்க்கத்தினர்; அதாவது ஆண்டில் ஒரு பகுதி முறையாய்ப் பாட்டாளி வர்க்க வழியில் வாழ்ந்து தமது ஜீவனோபாயத்தில் ஒரு பகுதியை முறையாய் முதலாளித்துவத் தொழில் நிலையங்களில் கூலி உழைப்பாளர்களாய் வேலை செய்து சம்பாதிக்கும் மக்கள்.

சுதந்திரம், சமத்துவம், பொதுப்படையான ஜனநாயகம், உழைப்பு ஜனநாயகத்தின் சமத்துவம், இன்ன பலவற்றையும் பற்றிய பொதுவான பேச்சின் அடிப்படையில் (காவுத்ஸ்கியும் மார்த்தவும் பெர்ன், மஞ்சள் அகிலத்தின் ஏனைய வீரர்களும் செய்வது போல) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவோர், தமது குட்டிமுதலாளி அற்பத்தனத்தைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்; முதலாளித்துவ வர்க்கத்தின்

வாலைப் பற்றிக் கொண்டு சித்தாந்த வழியில் அடிமைப் பட்டோராய் அதைப் பின்தொடர்ந்து செல்கிறுர்கள். இந்தப் பிரச்சினைக்குரிய சரியான தீர்வினை அரசியல் ஆட்சியதிகாரம் வென்று பெற்ற குறிப்பிட்ட வர்க்கத் துக்கும், அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும், பாட் டாளி வர்க்கத்தவர் அல்லாதோரும் மற்றும் அரைப் பாட்டாளி வர்க்கத்தவருமான உழைப்பாளி மக்கள் திரள் அனைத்துக்கும் இடையிலுள்ள குறிப்பிட்ட உறவுகளை ஸ்தூலமாய் ஆராய்வதன் அடிப்படையிலேதான் காண முடியும். இந்த உறவுகள் கற்பனுவாத இசைவு நிலவும் ''அதிசிரேஷ்ட'' நிலைமைகளில் உருவாவதில்லை, பல் வேறுன மிகப் பல வடிவங்களை ஏற்கும் வெறித்தனமான முதலாளித்துவ வர்க்கத்து எதிர்ப்பின் மெய்யான நிலைமை களில் உருவாகின்றன.

மூலதனத்தின் ஒடுக்குமுறையை, அது நடத்தும் கொள்ளையையும் புரியும் ஒவ்வொரு வகைக் கொடுங் கோன்மையையும், ருஷ்யா அடங்கலாய் எல்லா முதலாளித் துவ நாடுகளிலும் மக்களில் மிகப் பெருவாரியானேர், இன் னும் முக்கியமாய் உழைப்பாளி மக்களில் மிகப் பெரு வாரியானேர், நேரில் தாமும் தமது உற்றுர் உறவினர் மூல மும் ஆயிரக் கணக்கான முறை அனுபவித்திருக்கிறுர்கள். ஏகாதிபத்தியப் போரானது, அதாவது அனைத்து உலகை யும் சூறையாடுவதில் தலைமைப் பாத்திரம் செலுத்தப் போவது ஆங்கிலேய மூலதனமா அல்லது ஜெர்மன் மூலதனமா என்பதைத் தீர்மானிப்பதற்காக லட்சோப லட்ச மக்கள் கொன்று குவிக்கப்பட்ட படுகொலையானது, இந்தக் கொடிய வேதனைகளை வெகுவாய்த் தீவிரப்படுத்தி யுள்ளது, அவற்றை மேலும் அதிகப்படுத்தி ஆழமாக்கி யுள்ளது, மக்களை இவற்றின் பொருளை உணர்ந்து கொள்ளும் படிச் செய்துள்ளது. எனவேதான் மக்களில், குறிப்பாய் உழைப்பாளி மக்களில், மிகப் பெருவாரியானேர் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்கத்திடம் அனுதாபம் காட்டுகின்றனர். ஏனெனில் அது தீரமிக்க நெஞ்சுறுதி யோடும் புரட்சிகரச் சீற்றத்தோடும் மூலதனத்தின் ஒடுக்கு முறையை வீழ்த்தி, சுரண்டலாளர்களைக் கவிழ்த்து, அவர் களுடைய எதிர்ப்பை நசுக்கி வருகிறது; சுரண்டலாளர்

களுக்கு இடமில்லாத ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் பாதையைச் செப்பனிடுவதற்காகத் தனது இரத்தத்தைச் சிந்துகிறது.

உழைப்பாளி மக்களின் பாட்டாளி வர்க்கத்தவரல்லாத, அரைப் பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினரின் குட்டிமுதலாளித்துவ ஊசலாட்டங்களும் முதலாளித்துவ வர்க்கத்தின் ''குடையின்'' கீழ், முதலாளித்துவ ''நெறிமுறைக்குத்'' திரும்ப வேண்டுமென்ற அவர்களது போக்கும், பெரிய அளவிலும் தவிர்க்க முடியாததாகவும் இருப்பினும், அவர்களால் பாட்டாளி வர்க்கத்தின் தார்மிக, அரசியல் மேலாண்மையை அங்கீகரிக்காது இருக்க முடியவில்லை. பாட்டாளி வர்க்கம் சுரண்டலாளர்களை வீழ்த்தி அவர்களுடைய எதிர்ப்பை நசுக்குவதோடு அல்லாமல், ஒரு புதிய, உயர்வான சமூக பந்தத்தை, சமூகக் கட்டுப்பாட்டை அல்லவா கட்டியமைத்து வருகிறது; வர்க்க உணர்வு படைத்த ஒன்றுபட்ட உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டை அல்லவா, தமது சொந்த ஒற்றுமையினுடையதை அன்றி, தம்மிலும் அதிக வர்க்க உணர்வு படைத்த அஞ்சா நெஞ்சங் கொண்ட உறுதிமிக்க புரட்சிகரமான, நிலையான தமது சொந்த முன்னணிப் படையினுடையதை அன்றி வேறு எந்தக் கட்டுத் தளையையும் மேலாண்மையையும் அறியாத உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டை அல்லவா கட்டியமைத்து வருகிறது.

வெற்றி பெறும் பொருட்டு, சோஷலிசத்தைக் கட்டியமைத்து அதை உறுதியாக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கம் இருபடியான அல்லது இரட்டையான ஒரு பணியை நிறைவேற்றியாக வேண்டும். முதலாவதாக, மூலதனத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்தில் அது தனது ஒப்பற்ற வீரதீரத்தால் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் முழுத் திரளையும் தன் பக்கத்துக்குக் கவர்ந்து இழுக்க வேண்டும்; முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்கும் அவ்வர்க்கத்தின் எதிர்ப்பை அடியோடு நசுக்குவதற்குமான போராட்டத்தில் இத்திரளைத் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு, ஒழுங்கமைத்து, தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வேண்டும். இரண்டாவதாக, உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்கள்

பெருந்திரள் அனைத்துக்கும் மற்றும் குட்டிமுதலாளித்துவப் பகுதிகள் யாவற்றுக்கும் தலைமை தாங்கிப் புதிய பொருளாதார வளர்ச்சிக்குரிய பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும்; ஒரு புதிய சமூகப் பிணைப்பை, ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை நோக்கி, விஞ்ஞானமும் முதலாளித்துவத் தொழில்நுட்பமும் ஈட்டியுள்ள நவீன சாதனைகளை, பெரிய அளவு சோஷலிசத் தொழில் துறையைப் படைப்பித்துவரும் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களது வெகுஜன ஐக்கிய அமைப்புடன் இணைக்கவல்ல ஒரு புதிய உழைப்பு ஒழுங்கமைப்பை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இரண்டாவது பணி முதலாவதைக் காட்டிலும் கடினமானது. ஏனெனில் வீர உணர்ச்சி வேகங் கொண்ட தனிப்பட்ட செயல்களால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாத பணி அது; **சர்வசாதாரண, அன்றாட** வேலைகளில் மிகவும் நீடித்து, விடாமுயற்சியுடன் செயல்படும் மிகவும் கடினமான வெகுஜன வீரதீரம் இதற்கு அவசியமாகும். ஆயினும் இந்தப் பணிதான் முதலாவதைக் காட்டிலும் மிகவும் அத்தியாவசியமான பணி. ஏனெனில் முடிவாய்ப் பார்க்கையில், மேலும் உயர்வான ஒரு புதிய சமூகப் பொருளுற்பத்தி முறைதான், முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவப் பொருளுற்பத்திக்குப் பதிலாய்ப் பெரிய அளவு சோஷலிசப் பொருளுற்பத்தியை நிறுவுதல்தான் முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வெற்றிகள் பெறுவதற்குரிய பலத்தின் மிக ஆழ்ந்த மூலாதாரமும், இந்த வெற்றிகளின் நிலைப்பாட்டுக்கும் நிரந்தரத்துக்குமான ஒரேயொரு உத்தரவாதமும் ஆகும்.

...புதிய சமுதாய அமைப்பு வெற்றி பெற, இறுதியாய்ப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறன்தான் மிக முக்கியமானது, தலைமையானது. உழைப்பின் உற்பத்தித் திறனில் பண்ணையடிமை முறை அறியாத உயர் நிலையை முதலாளித்துவம் உண்டாக்கிற்று. உழைப்பின் உற்பத்தித் திறனில் மேலும் மிக உயர்ந்த ஒரு புதிய நிலையை உண்டாக்குவதன் மூலம் சோஷலிசமானது முதலாளித்துவத்தை அடியோடு தோற்கடிக்க முடியும்,

தோற்கடிக்கவும் போகிறது. இது மிகவும் கடினமான பணி, இதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனால் இது துவக்கப்பட்டு விட்டது, இதுவே பிரதானமாகும். பட்டினி கிடக்கும் மாஸ்கோவில், பட்டினி கிடக்கும் தொழிலாளர்களால், சோதனை வாய்ந்த நான்கு ஆண்டுக் கால ஏகாதிபத்திய யுத்தத்தையும் பிறகு மேலும் பெருஞ் சோதனையாயிருந்த ஒன்றரை ஆண்டுக்கால உள்நாட்டுப் போரையும் கடந்து வந்த இத்தொழிலாளர்களால் 1919 கோடையில் இந்த மாபெரும் பணியினைத் துவக்க முடிந்ததெனில், பிற்பாடு நாம் உள்நாட்டுப் போரில் வாகை சூடி சமாதானம் வென்று கொள்ளும் போது எப்படிப் பட்ட வளர்ச்சி ஏற்படும்?

முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கையாளும் வர்க்க உணர்வு படைத்த, ஒன்றுபட்ட தொழிலாளர்களின் மனமுவந்த உழைப்பின் உயர்வான—முதலாளித்துவத்தில் நிலவுவதுடன் ஒப்பிடுகையில்—உற்பத்தித் திறனே கம்யூனிசம். கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள் கம்யூனிசத்தின் மெய்யான தொடக்கமாய் அமைந்து அளவு கடந்த மதிப்புடையனவாகின்றன. இது அரிதினும் அரிய ஒன்று, ஏனெனில் (நமது கட்சி வேலைத்திட்டம் முற்றிலும் சரியானபடி கூறுவது போல) நாம் ''முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சர்வசாதாரணமான தொழிலாளர்கள் கடின உழைப்பைக் கண்டு அஞ்சாமல் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், ஒவ்வொரு பூடு* தானியத்தையும் நிலக்கரியையும் இரும்பையும் பிற பொருள்களையும்—நேரடியாகத் தொழிலாளர்கள் கைக்கோ அவர்களது ''நெருங்கிய'' உற்றார் உறவினர் கைக்கோ அல்லாமல் ''தொலைவான'' உற்றார் உறவினர் கைக்கு, அதாவது சமுதாயம் அனைத்தின், முதலில் தனியொரு சோஷலிச அரசிலும், பிறகு சோவியத் குடியரசுகளது ஐக்கியத்திலும் ஒன்றுபட்ட

* பூடு—பழைய ருஷ்ய எடையளவு; 16 கிலோகிராம்களுக்குச் சமம்.—ப-ர்.

கோடானு கோடியான மக்கள் அனைவரின் கைக்கு உரியன வாகிய இவற்றை—சேதமின்றிக் காப்பதில் ஆர்வமிக்க அக்கறை காட்டுகையில் கம்யூனிசம் தொடங்குகிறது.

சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பற்றிய ஆடம்பரமான, பகட்டு ஆரவாரமான முதலாளித்துவ-ஜனநாயக உரிமை சாசனத்தைக் கார்ல் மார்க்ஸ் மூல தனத்தில் எள்ளி நகையாடுகிறார். பொதுப்பட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று பேசப்படும் சொல் வீச்சுக்கள் யாவற்றையும் அவர் எள்ளி நகையாடுகிறார். அவக்கேடு வாய்ந்த பெர்ன் அகிலத்தின், அவக்கேடு வாய்ந்த இன்றைய தலைவர்களும் அடங்கலாய், எல்லா நாடுகளின் குட்டிமுதலாளி வர்க்கத்தாரையும் போலிப் பண்பாளர்களையும் இந்தச் சொல்வீச்சுக்கள் மதி மயங்கச் செய்து விடுகின்றன. இந்த ஆடம்பரமான உரிமைப் பிரகடனங்களுக்கு நேர் மாறாய்ப் பாட்டாளி வர்க்கம் பிரச்சினையை எடுத்துரைக்கும் பகட்டற்ற, நிதானமான, நடைமுறைச் செயல் சார்ந்த, எளிய முறையினை மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்—வேலை நேரத்தைக் குறைப்பதற் காகச் சட்டம் இயற்றுதல் இத்தகைய செயல்முறைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். மார்க்ஸ் எடுத்துரைப் பது எவ்வளவு பொருத்தமானது, பொருட் செறிவு கொண்டது என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உள்ளடக்கம் கண் கூடாய்த் தெரியத் தெரிய மேலும் மேலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் விளங்கு கிறது. மெய்யான கம்யூனிசத்தின் ''சூத்திரங்கள்'' காவுத் ஸ்கிகளும்[42] மென்ஷிக்குகளும்[43] சோஷலிஸ்டு-புரட்சியா ளர்களும்[44] பெர்ன் அகிலத்தைச் சேர்ந்த அவர்களது அருமைச் ''சோதரர்களும்'' கையாளும் ஆடம்பரமான சிக்கல் வாய்ந்த புனிதச் சொல்லடுக்குகளிலிருந்து வேறு படுகிறவை, எப்படியெனில் யாவற்றையும் அவை உழைப்பு நிலைமைகளாய்ச் சுருக்கிக் காட்டுகின்றன. ''உழைப்பு ஜனநாயகம்'', ''சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம்'', ''மக்களாலான அரசாங்கம்'' இத்தியாதி வாய்ப்பேச்சுக்கள் எல்லாம் வேண்டாம். வர்க்க உணர்வு படைத்த இன்றைய தொழிலாளர்களும் விவசாயிகளும் முதலாளித்துவ அறிவாளிகளது இந்த ஆடம்பரச் சொல்

லடுக்குகளின் அர்த்தத்தைக் கண்டு கொண்டு விடுகிறூர் கள். ''தளுக்குப் பேர்வழியின்'' குறை சொல்ல முடியாத ''நேர்த்தியான'' பாவனையையும் அப்பழுக்கில்லாத தோற்றத்தையும் கண்ட மாத்திரத்திலே, சாதாரண பகுத் தறிவும் அனுபவமும் உடையவர் ஒருவர் பிழையற்றவாறு ''மோசடிக்காரனுய்த்தான் இருப்பான்'' என்று எடுத்த எடுப்பிலே எவ்வளவு சுலபமாய்ச் செல்லிவிடுகிறுரோ அதே போலச் சுலபமாய் இவர்கள் இதிலுள்ள சூதைக் கண்டு கொண்டுவிடுகிறுர்கள்.

ஆடம்பரச் சொல்லடுக்குகள் குறைய வேண்டும், சர்வசாதாரணமான **அன்ருட** வேலையும் ஒவ்வொரு பூடு தானியத்திலும் ஒவ்வொரு பூடு நிலக்கரியிலும் காட்டப் படும் அக்கறையும் ஓங்க வேண்டும்! பட்டினி கிடக்கும் தொழிலாளர்களுக்கும் கந்தல் உடுத்தி வெறுங்காலுடன் நிற்கும் விவசாயிகளுக்கும் தேவைப்படும் இந்தப் பூடு தானியத்தையும் பூடு நிலக்கரியையும் அளித்திடுவதில்— **பேரம் பேசி அல்ல,** முதலாளித்துவ வழியில் அல்ல, மாஸ் கோ-கஸான் ரயில் பாதையைச் சேர்ந்த தேர்ச்சியில்லா வேலையாட்களையும் ஊழியர்களையும் போன்ற சாதாரண உழைப்பாளர்களின் உணர்வு பூர்வமான மனமுவந்த, அளவிலா வீரம் வாய்ந்த உழைப்பின் மூலம் அளித்திடு வதில்—அக்கறை ஓங்க வேண்டும்.

புரட்சிப் பிரச்சினைகள் குறித்து முதலாளித்துவ அறி வாளிகள் அனுசரிக்கும் வாய்ச்சவடால் போக்கின் மீத மிச்சங்கள் எங்கும், நம்முடைய அணிகளிலே கூட காணப் படுகின்றன என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். உதாரணமாய் நமது பத்திரிகைகள் அழுகிப்போன முதலாளித்துவ-ஜனநாயகப் பழங் காலத் தின் இந்த அழுகிப்போன மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட அதிகமாய் எதுவும் செய்யவில்லை. மெய்யான கம்யூனிசத்தின் ஆடம்பரமற்ற எளிய, சர்வசாதாரண மான, ஆனுல் உயிர் சக்தி மிக்க குருத்துக்களை வளர்த்திட அவை அதிகமாய் எதுவும் செய்யவில்லை.

பெண்களின் நிலையை எடுத்துக் கொள்வோம். ஆட்சி யதிகாரத்துக்கு வந்த முதலாவது ஆண்டிலேயே இந்தத் துறையில் நாம் செய்ததில் நூற்றில் ஒரு பங்கைக்கூட

உலகில் எந்த ஜனநாயகக் கட்சியும், மிகவும் முன்னேறிய முதலாளித்துவக் குடியரசிலுங்கூட பல பத்தாண்டுகளிலும் செய்ததில்லை. பெண்களை அசமத்துவ நிலையில் வைக்கும் இழிவான சட்டங்களை, திருமண ரத்துக்கு விலங்கு களிட்டும் அருவருக்கத்தக்க வினைமுறைகளால் அதைச் சுற்றிவளைத்தும், திருமணத்துக்குப் புறம்பாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு அங்கீகாரம் அளிக்க மறுத்தும், அவற்றின் தந்தையரைத் தேடிப் பிடிக்கும்படி விதித்தும், இன்ன பலவாறாகவும் இழிமை செய்யும் சட்டங்களை மெய்யாகவே நாம் தகர்த்துத் தரை மட்டமாக்கினோம். இச் சட்டங்களின் எண்ணற்ற மீதமிச்சங்கள் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் வெட்கக்கேடாய் எல்லா நாகரிக நாடுகளிலும் இருக்கக் காணலாம். இத்துறையில் நாம் செய்திருப்பவை குறித்துப் பெருமை கொள்ள நமக்கு ஆயிரம் மடங்கு உரிமை உண்டு. பழைய முதலாளித்துவச் சட்டங்கள், ஏற்பாடுகளின் குப்பை கூளங்களை எவ்வளவுக்கு எவ்வளவு சுத்தமாய்க் கூட்டிப் பெருக்கி அறவே அகற்றினோமோ, கட்டியமைப்பதற்காகத் தரையைச் சுத்தம் செய்துள்ளோமே தவிர இன்னும் கட்டியமைத்தாகவில்லை என்பது நமக்கு அவ்வளவுக்கு அவ்வளவு தெளிவாய்த் தெரிகிறது.

பெண் விடுதலைச் சட்டங்கள் யாவும் இருந்த போதிலும் தொடர்ந்து அவள் இல்லத்து அடிமையாகவே வாழ்கிறாள். ஏனெனில், அற்பத்தனமான வீட்டு வேலைகள் அவளை நசுக்கி நெரித்து மழுங்க வைத்து இழிவுறச் செய்கின்றன; அடுப்படியிலும் குழந்தைத் தொட்டிலுடனும் கட்டுண்டுவிடச் செய்கின்றன. உற்பத்தித் திறனில் படு கேவலமான கீழ்நிலைக்கு உரிய அற்ப வேலைகளில், உயிரை வதைக்கும், சிந்தனையை மழுங்கச் செய்யும், நசுக்கி ஒடுக்கும் ஓயாத நச்சரிப்பு வேலைகளில் அவள் தன் உழைப்பைப் பாழாக்குகிறாள். இந்த அற்பத்தனமான வீட்டு வேலை நச்சரிப்பை எதிர்த்து எங்கே, எப்பொழுது முழு முனைப்பான போராட்டம் (அரசு ஆட்சியதிகாரம் செலுத்தும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில்) தொடங்குகிறதோ, அல்லது இன்னும் சரிவரக் கூறுவோமாயின் பெரிய அளவு சோஷலிசப் பொருளாதாரமாய் அதன் முழு

அளவிலான மாற்றம் தொடங்குகிறதோ, அங்கேதான், அப்பொழுது தான் மெய்யான பெண் விடுதலை, மெய்யான கம்யூனிசம் தொடங்கும்.

மறுக்க முடியாத ஒன்ருய் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தத்துவார்த்த அளவில் கருதும் இந்தப் பிரச்சினையில் நாம் நடைமுறையில் போதிய கவனம் செலுத்துகிருேமா? இல்லவே இல்லை. கம்யூனிசத்தின் குருத்துக்கள் இத்துறையில் ஏற்கெனவே இருப்பவற்றை நாம் வேண்டிய அளவு பேணிக் காக்கிருேமா? இல்லை என்றே திரும்பவும் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. பொது உண்டி நிலையங்கள், பிள்ளைப் பராமரிப்பகங்கள், குழந்தைப் பள்ளிகள்—இவைதாம் இந்தக் குருத்துக்களுக்கான உதாரணங்கள். ஆடம்பரமோ படாடோபமோ மினுக்கோ எதுவும் இல்லாத எளிய, அன்ருட சாதனங்கள் இவை—பெண்களை மெய்யாகவே விடுவிக்க வல்லவை, சமூகப் பொருளுற்பத்தியிலும் பொது வாழ்விலும் பெண்களின் பாத்திரத்தைப் பொருத்தவரை ஆடவர்களுக்கு அவர்கள் சரிசமத்துவமாய் இல்லாத நிலையை மெய்யாகவே மட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் வல்லவை. இந்தச் சாதனங்கள் புதியவை அல்ல, (சோஷலிசத்துக்கான எல்லா முன்தேவைகளையும் போல) இவையும் பெருமளவு முதலாளித்துவத்தால் உண்டாக்கப்பட்டவையே. ஆனுல் முதலாளித்துவத்தில் இவை முதலாவதாக, அரிதாகவே இருந்தன; இரண்டாவதாக—இது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தது—லாபமடிக்கும் நிலையங்களாய், ஊக வாணிபம், லாப வேட்டை, ஏமாற்று, மோசடி ஆகியவற்றின் படுமோசமான எல்லா இயல்புகளும் மிகுந்தவையாகவும், ''முதலாளித்துவக் கொடையின் கழைக்கூத்துகளாகி'' சிறந்த தொழிலாளர்களது நியாயமான வெறுப்புக்கும் இகழ்ச்சிக்கும் உரியனவாகவும் இருந்தன.

நமது நாட்டில் இந்த நிலையங்களின் எண்ணிக்கை வெகுவாய் அதிகரித்திருப்பதிலும், இந்நிலையங்களின் தன்மை மாற்றமுறத் தொடங்கியிருப்பதிலும் சந்தேகமில்லை. தொழிலாளி, விவசாயிப் பெண்களிடம் நாம் உணர்வதற்கும் கூடுதலான அளவில் நிறுவன ஒழுங்கமைப்புத் திறன் இருப்பதிலும், ஏராளமான தொழிலாளர்களது

பங்குடனும் இன்னும் ஏராளமான நுகர்வாளர்களது பங்குடனும் நடைமுறைப் பணிக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்கள் நாம் அறிந்ததைக் காட்டிலும் மிக அதிகம் பேர் இருப்பதிலும் சந்தேகமில்லை. பெருமையடித்துக் கொள்ளும் நமது ''அறிவுத்துறையினரையோ'' அரை வேக் காட்டுக் ''கம்யூனிஸ்டுகளையோ'' ''பீடித்துக் கொண்டு விடும்'' அபரிமிதமான வாய்ப் பேச்சும், அமளியும், சச்சரவும், திட்டங்களையும் அமைப்புகளையும் பிறவற்றை யும் பற்றிய கூச்சலும் இல்லாமலே, இவர்கள் இப்பணிக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்கள். ஆனால் புதியதன் இந்தக் குருத்துக்களை வேண்டிய அளவுக்கு நாம் பேணி வளர்த் திடவில்லை.

முதலாளித்துவ வர்க்கத்தாரைப் பாருங்கள். அவர் களுக்குத் தேவையானதை விளம்பரப்படுத்த எவ்வளவு நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கிறார்கள்! ''முன்மாதிரி'' நிலையங்களாய் முதலாளிகள் கருதுகிறவற்றை அவர் களுடைய செய்தியேடுகளின் கோடிக் கணக்கான பிரதிகள் எப்படி மெச்சிப் புகழ்கின்றன பாருங்கள்! ''முன்மாதிரி'' முதலாளித்துவ நிலையங்கள் எப்படித் தேசியப் பெருமைக் குரியனவாய் ஆக்கப்படுகின்றன பாருங்கள்! நமது பத்திரிகைகள் சிறந்த உண்டி நிலையங்களையோ பிள்ளைப் பராமரிப்பகங்களையோ விவரித்துக் கூறி, தினசரி வற்புறுத் தலின் மூலம் அவற்றில் சிலவற்றை முன்மாதிரிகளாய் மாறச் செய்வதற்காக முயற்சி செய்வதில்லை, அல்லது மிக அரிதாகவே செய்கின்றன. நமது பத்திரிகைகள் அவற்றைப் போதிய அளவு விளம்பரப்படுத்துவதில்லை, முன்மாதிரியான கம்யூனிஸ்டுப் பணியால் எப்படி மனித உழைப்பை மிச்சப்படுத்த முடியும், நுகர்வாளர்களுக்கு வசதிகள் செய்து தர முடியும், பண்டங்களைச் சேமிக்க முடியும், இல்லத்து அடிமை வாழ்விலிருந்து பெண்களை விடுவிக்க முடியும், சுகாதார நிலைமைகளை மேம்படச் செய்ய முடியும், இச்சாதனைகளை சமுதாயம் அனைத் துக்கும் உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் விரிந்து பரவச் செய்ய முடியும் என்பதை அவை விளக்கமாய் விவரிப்பதில்லை.

முன்மாதிரியான பொருளுற்பத்தி, முன்மாதிரியான

கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள், ஒவ்வொரு பூடு தானியத்தையும் கொள்முதல் செய்வதிலும் வினியோகிப்பதிலும் முன்மாதிரியான கவனம், கடமையுணர்ச்சி, முன்மாதிரியான உண்டி நிலையங்கள், இந்தத் தொகுதியில் இந்தத் தொழிலாளர் வீட்டில் காணக்கூடிய முன்மாதிரியான சுத்தம் முதலானவை யாவற்றிலும் நமது பத்திரிகைகளும் மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகளின் நிறுவனம் ஒவ்வொன்றும் தற்போது செலுத்துவதைக் காட்டிலும் பத்து மடங்கு கூடுதலான கவனமும் கருத்தும் செலுத்த வேண்டும். இவை எல்லாம் கம்யூனிசத்தின் குருத்துக்கள். இவற்றைப் பேணி வளர்த்திடுவது நமக்குரிய பொதுவான, தலையாய கடமை. நமது உணவு நிலைமையும் பொருளுற்பத்தி நிலைமையும் கடினமாகவே இருப்பினும், போல்ஷிவிக் ஆட்சியின் ஒன்றரை ஆண்டில் நிச்சயமாய் நெடுகிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது: தானியக் கொள்முதல் 3 கோடிப் பூடுகளிலிருந்து (1917 ஆகஸ்டு 1லிருந்து 1918 ஆகஸ்டு 1 வரை) 10 கோடிப் பூடுகளாய் (1918 ஆகஸ்டு 1லிருந்து 1919 மே 1 வரை) உயர்ந்திருக்கிறது; காய்கறிகள் பயிரிடுதல் விரிவடைந்திருக்கிறது; பயிரிடப்படாத நிலப் பரப்பு குறைந்திருக்கிறது; எரிபொருள் இடர்ப்பாடுகள் பெருமளவில் இருந்துங்கூட ரயில் போக்கு வரத்து மேம்படத் தொடங்கியிருக்கிறது: மற்றும் பலவற்றையும் குறிப்பிடலாம். இந்தப் பொதுச் சூழலிலும் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தின் ஆதரவிலும் கம்யூனிசத்தின் குருத்துக்கள் காய்ந்து கருகிவிடமாட்டா, அவை வளர்ந்து முழுமையான கம்யூனிசமாய் மலரும்.

*1919 ஜூலையில்*
*தனிப் பிரசுரமாக*
*வெளியிடப்பட்டது*

## பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும்

### என்ற கட்டுரையிலிருந்து

சோஷலிசம் என்ருல் வர்க்கங்கள் ஒழிக்கப்படும் என்று பொருளாகும்.

வர்க்க்ங்களை ஒழிப்பதற்கு முதலாவதாக நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளை வீழ்த்த வேண்டும். எமது கடமையின் இந்தப் பகுதி நிறைவேற்றப்பட்டு விட்டது. ஆனல் இது ஒரு பகுதி மட்டுமே மேலும் இது ஆகக் கடினமான பகுதி அன்று. வர்க்கங்களை ஒழிப்பதற்கு, இரண்டாவதாக, ஆலைத் தொழிலாளிக்கும் விவசாயிக்கும் இடையிலான வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுவதும், அவர்கள் எல்லோரையும் தொழிலாளர்களாக்க வேண்டுவதும் அவசியம். இதைத் திடுமெனச் செய்து விட முடியாது. இந்தக் கடமை ஒப்புவமையற்ற அளவுக்கு அதிகக் கடினமானது, அவசியமாயும் அதிக காலம் எடுப்பதுமாகும். ஒரு வர்க்கத்தை வீழ்த்துவது மூலம் தீர்வு கண்டு விடக் கூடிய ஒரு பிரச்சினையல்ல இது. சமூகப் பொருளாதாரம் முழுவதையும் ஒழுங்கமைத்து மறுநிர்மாணம் செய்வது மூலமும், தனிநபரின், பிரிந்த நிலையிலான சிறு பண்ட உற்பத்தி முறையிலிருந்து பெருவீத சமூக உற்பத்திக்கு மாறிச் செல்வது மூலமும் மட்டுமே இதற்குத் தீர்வு காண முடியும். இந்த மாறுதல் கட்டம் அவசியமாயும் மிகவும் நீடித்ததாக இருக்கும். அவசரமான, துடுக்கான நிர்வாக மற்றும் சட்டமியற்றும் நடவடிக்கைகளால் இது தவக்கமடையலாம், சிக்கலாகலாம். விவசாயி தனது விவசாயத் தொழில் சாதனங்கள் முழுவதையும் பெருமளவுக்கு மேம்படுத்திக் கொள்ளவும் அவற்றை

அடிப்படையாகச் சீர்திருத்திக் கொள்ளவும் சாத்தியமாக்கும் வகையில் அத்தகைய உதவிகளை வழங்குவது மூலம் மட்டுமே இதனை விரைவுபடுத்த முடியும்.

இந்தப் பிரச்சினையின் இரண்டாவதும், மிகவும் கடினமானதுமான பகுதிக்குத் தீர்வு காணப் பாட்டாளி வர்க்கமானது, முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடித்த பிறகு விவசாயிகளின் பாலான தனது கொள்கையினைப் பின்வரும் அடிப்படையான வழிகளில் நெறிதிறம்பாது கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும். பாட்டாளி வர்க்கமானது உழைக்கும் விவசாயியை உடைமை விவசாயியிடமிருந்தும், விவசாயத் தொழிலாளியை விவசாய சிறு வணிகரிடமிருந்தும், பாடுபடும் விவசாயியை லாபவேட்டையாடும் விவசாயியிடமிருந்தும் பிரித்துத் தனிவரையறை செய்ய வேண்டும்.

இந்தத் தனிவரையறையில் தான் சோஷலிசத்தின் முழு சாரமும் காணக் கிடக்கிறது.

சொல்லில் சோஷலிஸ்டுகளாகவும் செயலில் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளாயும் இருக்கும் சோஷலிஸ்டுகள் (மார்த்தவ்கள், செர்னேவ்கள், காவுத்ஸ்கிகள் மற்றவர்கள்) சோஷலிசத்தின் இந்த சாரத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் அதில் வியப்பேதுமில்லை.

இங்கு நாம் குறிப்பிடும் தனிவரையறை மிகவும் இடர்ப்பாடான ஒன்று, காரணம், எதார்த்த வாழ்வில் ''விவசாயியின்'' அம்சங்கள் அனைத்தும் அவை எவ்வளவு தான் பல்வேறு வகைப்பட்டதாயும், எவ்வளவுதான் முரண்பாடானதாகவும் இருந்த போதிலும் ஒரு முழுமையில் கலந்திணைந்துள்ளன. இருந்த போதிலும் தனிவரையறை சாத்தியமே; அது சாத்தியம் என்பது மட்டுமல்ல, விவசாயியின் பண்ணை வேலை மற்றும் விவசாயியின் வாழ்க்கை நிலைமைகளிலிருந்து இது தவிர்க்க முடியாது தொடர்வதாகும். உழைக்கும் விவசாயி காலகாலமாக நிலப்பிரபுக்கள், முதலாளிகள், சிறுவணிகர்கள், லாப வேட்டைக்காரர்கள் ஆகியோராலும், ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசு உள்ளிட்ட அவர்களது அரசுகளாலும் ஒடுக்கப்பட்டுள்ளான். இந்தக் காலங்கள் முழுவதிலும் உழைக்கும் விவசாயி இந்த ஒடுக்கு

முறையாளர்களையும் சுரண்டுவோரையும் பகைக்கவும் வெறுக்கவும் தன்னைத்தானே பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறான், வாழ்க்கை நிலைமைகளால் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் ''பயிற்சி'' முதலாளியை எதிர்த்தும், லாப வேட்டைக்காரன் மற்றும் சிறு வணிகரை எதிர்த்தும் தொழிலாளியுடன் ஒரு கூட்டணியை நாடும்படி அவனைக் கட்டாயப்படுத்துகிறது. எனினும் அதே சமயம் பொருளாதார நிலைமைகள், பண்ட உற்பத்தி நிலைமைகள் விவசாயியை(எப்பொழுதுமல்ல ஆனால் பெருவாரியான சந்தர்ப்பங்களில்) தவிர்க்க முடியாத வகையில் ஒரு சிறு வணிகர் மற்றும் லாப வேட்டைக்காரராக மாற்றிவிடுகிறது.

மேலே மேற்கோள் காட்டப்பட்ட புள்ளிவிபரங்கள் உழைக்கும் விவசாயிக்கும் விவசாய லாப வேட்டையாளருக்கும் இடையே எடுப்பான வித்தியாசம் இருப்பதை வெளிப்படுத்துகிறது. 1918—1919 ஆண்டுகளின் போது நகரங்களில் பசியால் வாடிய தொழிலாளர்களுக்கு, நிர்ணயமான அரசாங்க விலைக்கு 4,00,00,000 பூடுகள் தானியத்தை வழங்கிய, அந்த விவசாயி இந்த தானியத்தை அரசாங்க நிறுவனங்களுக்கு (அவற்றின் குறைபாடுகள் அனைத்தையும் பாராட்டாமல்) வழங்கிய—இந்தக் குறைபாடுகளைத் தொழிலாளர் அரசாங்கம் முழுமையாக உணர்ந்திருந்தது ஆயினும் அவை சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்லும் முதல் காலகட்டத்தில் தவிர்க்க முடியாதவை—அந்த விவசாயி ஓர் உழைக்கும் விவசாயி, சோஷலிஸ்டுத் தொழிலாளியின் தோழர், அவருக்குச் சமமானவர், அவரது மிகவும் விசுவாசமுள்ள கூட்டாளி, முதலாளித்துவ அடிமைத்தளையை எதிர்த்த போராட்டத்தில் அவரது உடன்பிறப்பாளர் ஆவார். அப்படியிருக்க, அரசாங்க விலையைப் போலப் பத்து மடங்கு அதிக விலைக்கு இரகசியமாக 4,00,00,000 பூடுகள் தானியத்தை விற்பனை செய்த அந்த விவசாயி, நகரத் தொழிலாளர்களின் தேவையையும் பசிக் கொடுமையையும் சாதகமாக்கி, அரசாங்கத்தை ஏமாற்றி, எங்கு பார்த்தாலும் ஏமாற்று, மோசடி, திருட்டு ஆகியவற்றை அதிகரித்தும் உருவாக்கியும் வரும்—அந்த விவசாயி ஒரு லாப வேட்டையாளர், முதலாளியின் கூட்டாளி, தொழிலாளியின்

வர்க்க விரோதி, ஒரு சுரண்டலாளர் ஆவார். நாடு முழு வதற்கும் சொந்தமான நிலத்தில் இருந்து ஏதாவது ஒரு வகையில் விவசாயியினது மட்டுமன்றி தொழிலாளரின் உழைப்பும் உருவகம் பெற்றுள்ள கருவிகளின் உதவியுடன் சேகரிக்கப்பட்ட உபரி தானியத்தை வைத்திருப்பவர்யாராக இருப்பினும், தானியத்தை உபரியாக வைத்திருந்து லாபக் கொள்ளையடிப்பவர் யாராக இருப்பினும் அவர் பட்டினியால் வாடும் தொழிலாளியைச் சுரண்டுபவராவார்.

நீங்கள் சுதந்திரத்தை, சமத்துவத்தை மற்றும் ஜன நாயகத்தைக் குலைப்பவர்கள் என்று நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தொழிலாளிக்கும் விவசாயிக்கு முள்ள அசமத்துவத்தையும், அரசியல் நிர்ணய சபைகலைக்கப்பட்டதையும், உபரி தானியம் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டதையும் சுட்டிக் காட்டி அவர்கள் எம்மை நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் கூச்சல் போடுகிறுர்கள். பல நூற்றுண்டுகளாக உழைக்கும் விவசாயி இன்னலுற்று வந்த உண்மையான அசமத்துவம், உண்மையான சுதந்திரமின்மையை அகற்ற இந்தளவுக்குப் பணி செய்துள்ள ஓர் அரசு உலகில் என்றுமே இருந்தது கிடையாது என்று நாம் பதில் கூறுகிறேம். விவசாயி லாப வேட்டைக்காரனுடன் சமத்துவத்தை நாம் என்றுமே அங்கீகரிக்க மாட்டோம், சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையேயும் உண்டு கொழுத்தவருக்கும் பட்டினி கிடப்போருக்கும் இடையிலேயும் ‘‘சமத்துவத்தை’’ அங்கீகரிக்க மாட்டோம், முந்திய பகுதியினர் பிந்திய பகுதியினரைக் கொள்ளையடிப்பதற்கான ‘‘சுதந்திரத்தையும்’’ அங்கீகரிக்க மாட்டோம். இந்த வேற்றுமையை அங்கீகரிக்க மறுக்கும் அந்தப் படித்த நபர்களை, அவர்கள் தம்மைத்தாமே ஜன நாயகவாதிகள் சோஷலிஸ்டுகள், சர்வதேசீயவாதிகள், காவுத்ஸ்கிகள், செர்னேவ்கள் அல்லது மார்த்தவ்கள் என்று அழைத்துக் கொண்டாலும், வெண்படையினர்களாகவே கருதுவோம்.

**பெத்ரோகிராத்ஸ்கயா பிராவ்தா,**
*இதழ் 255, 1919 நவம்பர் 7*

## ரு. க. க.(போ.) மாஸ்கோ நகரக் கிளையின் மாநாட்டில் சுபோத்னிக்குகளைப் பற்றி நிகழ்த்திய உரையிலிருந்து டிசம்பர் 20, 1919

கம்யூனிசம் சோஷலிசத்திலிருந்து எவ்விதத்தில் வேறுபடுகிறது என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டால், முதலாளித்துவத்திலிருந்து நேரடியாக வளர்ச்சியடைகின்ற சமுதாயம் சோஷலிசம், அது தான் புதிய சமுதாயத்தின் முதல் வடிவம் என்று பதில் சொல்ல வேண்டியிருக்கும். கம்யூனிசம் அதைக் காட்டிலும் உயர்ந்த சமூக வடிவம்; சோஷலிசம் உறுதியாக வேரூன்றிய பிறகு தான் அது வளர்ச்சியடைய முடியும். முதலாளிகளின் உதவியில்லாமல் செய்யப்படுகின்ற வேலையை, உழைக்கும் மக்களின் வளர்ச்சியடைந்த பகுதியின், ஸ்தாபன ரீதியாக அமைக்கப்பட்ட முன்னணிப் படையின் கண்டிப்பான கணக்கீடும் கண்காணிப்பும் மேற்பார்வையும் இருக்கின்ற, சமூக மயமாக்கப்பட்ட உழைப்பைக் குறிப்பது சோஷலிசம்; அதில் உழைப்பின் அளவும் அதற்குரிய ஊதியமும் நிர்ணயிக்கப்பட வேண்டும். உழைப்புப் பிரிவினை, சமூகப் பொருளாதாரத்தில் நம்பிக்கை இல்லாமை மற்றும் எல்லா விவசாய நாடுகளிலும் மேலாதிக்கம் செலுத்துகின்ற குட்டிமுதலாளியின் பழைய பழக்கவழக்கங்கள் போன்ற மிச்சங்களை முதலாளித்துவ சமூகம் விட்டுச் சென்றிருப்பதால் இவற்றை நிர்ணயிப்பது அவசியமானதாகும். இவை அத்தனையுமே உண்மையான கம்யூனிஸ்டுப் பொருளாதாரத்துக்கு மாறுபட்டவை. மக்களைக் கட்டாயப்படுத்துவதற்கு எந்த விசேஷமான அமைப்பும் இல்லாத பொழுது மக்கள் தமது சமூகக் கடமைகளை நிறைவேற்றும் பழக்கத்தை உருவாக்கிக்

கொள்கின்ற அமைப்புக்கு, பொது நன்மைக்காகக் கூலி வாங்காமல் செய்கின்ற உழைப்பு பொதுவான நிகழ்வாக ஏற்படுகின்ற அமைப்புக்கு நாம் கம்யூனிசம் என்ற பெயரைக் கொடுக்கிறோம். முதலாளித்துவத்துக்கு எதிராகப் பூரணமான வெற்றியை நோக்கி முதல் காலடிகளை எடுத்து வைப்பவர்களுக்குக் ''கம்யூனிசம்'' என்ற கருதுகோள் வெகு தொலைவில் இருக்கிறது என்பது புரிந்து கொள்ளப் படக் கூடியதே. நம் கட்சியின் பெயரை மாற்றியது எவ்வளவு சரியானதாக இருந்த போதிலும், அந்த மாற்றத்தினால் நமக்கு எவ்வளவு பெரிய பலன்கள் கிடைத்திருந்த போதிலும், நம்முடைய இலட்சியத்தின் சாதனைகளும் அது வளர்ச்சியடைந்திருக்கும் அளவும் எவ்வளவு பெரியதாக இருந்த போதிலும் (இன்று உலக முழுவதிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இருக்கின்றன; கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்பட்டு ஒரு வருடம் கூட ஆகவில்லை; ஆனால் தொழிலாளர் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது அதற்குள்ளாகவே கம்யூனிஸ்டு அகிலம் பழைய, செத்துக் கொண்டிருக்கும் இரண்டாவது அகிலத்தைக் காட்டிலும் இணையற்ற பலம் கொண்டதாக இருக்கிறது) ''கம்யூனிஸ்டுக் கட்சி'' என்று பெயர் இருப்பதால் கம்யூனிஸ்டு அமைப்பு உடனடியாகக் கொண்டு வரப்படும் என்ற முறையில் புரிந்து கொள்ளப்பட்டால் அது மாபெரும் பொருட்சிதைவாகும்; வீண்பெருமையைத் தவிர அதில் வேறொன்றுமில்லை என்பதால் நடைமுறையிலும் அது தீமையாகும்.

அதனால்தான் ''கம்யூனிஸ்டு'' என்ற வார்த்தையை நாம் மிக கவனமாக உபயோகிக்க வேண்டும்; அதனால்தான் நம்முடைய வாழ்க்கையில் இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள் குறிப்பிடத்தக்க மதிப்பைக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் இந்த மிகச் சிறிய சம்பவத்தில் மட்டும்தான் ஏதோ ஒரு கம்யூனிசத்தன்மை தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. நில உடைமையாளர்கள் மற்றும் முதலாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தது சோஷலிசத்தின் மிகவும் பூர்விகமான வடிவங்களை ஏற்படுத்துவதற்கு மட்டுமே நமக்கு உதவின; அவற்றில் இன்னும் எத்தகைய கம்யூனிசத்

தன்மையும் ஏற்படவில்லை. நம்முடைய இன்றைய பொருளாதார அமைப்பை எடுத்துக் கொண்டால் அதில் சோஷலிசத்தின் கருக்கள் இன்னும் மிகவும் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றன; பழைய பொருளாதார வடிவங்கள் மிகப் பெரிய அளவுக்கு மேலாதிக்கம் வகிக்கின்றன; இவை குட்டி உடைமையாளரின் மேலாதிக்கம் என்றோ அல்லது கட்டுப்பாடற்ற, ஒழுங்குபடுத்தப்படாத லாப வேட்டையாகவோ வெளிப்படுகின்றன. நமது எதிரிகளான குட்டிமுதலாளித்துவ வர்க்க ஜனநாயகவாதிகளும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப் புரட்சிவாதிகளும் நம்மை எதிர்த்துப் பேசும் பொழுது, நாம் பெரிய அளவு முதலாளித்துவத்தை நொறுக்கி விட்டோம்; ஆனால் . அதனிடத்தில் கந்துவட்டி முதலாளித்துவம் என்ற மிக மோசமான லாப வேட்டை நீடிக்கிறது என்று கூறும் பொழுது, பெரிய அளவு முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு நாம் நேரடியாகப் போய்விட முடியும் என்று அவர்கள் கற்பனை செய்தால் அவர்கள் புரட்சிவாதிகளல்ல, சீர்திருத்தவாதிகளும் கற்பனாவாதிகளுமே என்று நாம் அவர்களுக்கு பதில் கூறுகிறோம்.

எல்லா இடங்களிலுமே பெரிய அளவு முதலாளித்துவம் தீவிரமாக அழிக்கப்பட்டு வருகிறது; சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கு இன்னும் எந்த முயற்சியும் செய்யப்படாத நாடுகளில் கூட இது தான் நிலைமை. இந்தக் கருத்தில் பார்க்கும் பொழுது நமது எதிரிகள் நம்மீது தொடுக்கின்ற விமர்சனங்கள் அல்லது ஆட்சேபணைகளில் ஒன்று கூட முக்கியமானவை அல்ல. பெரிய அளவு முதலாளித்துவம் ஒழிக்கப்பட்ட பிறகு புதிய, சிறுதரமான, லாப வேட்டை முதலாளித்துவத்தின் ஆரம்பங்கள் தோன்றின என்பது உண்மையே. பெரிய அளவு முதலாளித்துவத்தின் மிச்சங்களை எதிர்த்து மூர்க்கத்தனமான யுத்தம் நடைபெறும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் எதிர் நடவடிக்கை எடுப்பது எங்கே கடினமோ அங்கே அது எல்லாவித அற்பத்தனமான வர்த்தக சூதாட்டத்தையும் நடத்துகிறது; அதை மிக மோசமான, மிகவும் ஸ்தாபன ரீதியற்ற வர்த்தக வடிவத்தில் செய்து கொண்டிருக்கிறது.

இந்தப் போராட்டம் யுத்த நிலைமைகளில் அதிகமான மூர்க்கத்தனத்தை அடைந்திருக்கிறது; குறிப்பாக, முதலாளித்துவம் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்த இடங்களில் அது லாப வேட்டையின் அதிகக் காட்டுத்தனமான வடிவங்களை ஏற்படுத்தியிருக்கிறது. புரட்சிகரமான மாற்றம் வேறு ஏதாவது வடிவத்தைக் கொண்டிருக்கக் கூடும் என்று கற்பனை செய்வது கூடத் தவறாகும். இன்றுள்ள நமது பொருளாதாரத்தைப் பொறுத்த வரை இதுதான் நிலைமை. சோவியத் ருஷ்யாவின் இன்றைய பொருளாதார அமைப்பு எத்தகையது என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டால் முதலாளிகள் தமது விடாப்பிடியான எதிர்ப்பைக் கோடிக் கணக்கான வெவ்வேறு வழிகளில் காட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில் நாம் பழைய முதலாளித்துவப் பொருளாதாரத்தைத் திருத்தியமைத்துக் கொண்டிருக்கிறோம், பெரிய அளவு தொழில்களில் சோஷலிசத்தின் அடிப்படைகளை அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதே நமது பதிலாக இருக்கும். மேற்கு ஐரோப்பாவில் யுத்தத்தின் விளைவாக நம்மைப் போலவே மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கும் நாடுகளில் (உதாரணமாக ஆஸ்திரியாவில்) முதலாளித்துவச் சீர்குலைவும் வர்த்தக சூதாட்டமும் நம் நாட்டைக் காட்டிலும் அதிகமாகக் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டிருக்கின்றன; அங்கே முதலாளித்துவத்தை எதிர்க்கின்ற விதத்தில் சோஷலிச அமைப்பின் கருக்கள்கூட இல்லை என்றஅளவில்தான்அவை நம்மிடமிருந்து வேறுபடுகின்றன. எனினும் நம்முடைய பொருளாதார அமைப்பில் கம்யூனிஸ்டு என்று (சொல்லக் கூடிய அம்சம்) இன்னும் ஒன்றுமில்லை. சுபோத்னிக்குகள் (அதாவது எந்த அரசாங்கமோ அல்லது அதிகாரியோ உச்ச அளவு நிர்ணயிக்காத, கூலி வாங்காத உழைப்பு) ஆரம்பமாகின்ற பொழுது ''கம்யூனிஸ்டு'' தொடங்குகிறது. பொது நன்மைக்காகத் தனி நபர்கள் விரிவான அளவில் செய்கின்ற உழைப்பு அது. கிராமப் பகுதிகளில் அடுத்த வீட்டுக்காரருக்கு உதவி செய்வது தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கம். இது அப்படிப்பட்டதல்ல. நாட்டின் மொத்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச்

செய்யப்படும் உழைப்பு; மிகப் பெரிய அளவில் அமைத்துச் செய்யப்படுவது; கூலியில்லாத உழைப்பு. எனவே நம்முடைய கட்சிக்கு மட்டுமல்லாமல், நம்முடைய யதார்த்தத்தில் உண்மையிலேயே கம்யூனிசத்தன்மை கொண்ட பொருளாதார வெளிப்பாடுகளுக்கும் ''கம்யூனிஸ்டு'' என்ற வார்த்தை கொடுக்கப்படுவது அதிகப் பொருத்தமே. இன்று ருஷ்யாவில் நிலவுகின்ற அமைப்பில் ஏதாவது கம்யூனிஸ்டு இருக்கிறதென்றால் அது சுபோத்னிக்குகளில் மட்டுமே இருக்கிறது. மற்ற எல்லாமே சோஷலிசத்தை உறுதியாக அமைப்பதற்காக முதலாளித்துவத்தை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டமே. அதிலிருந்து ஏற்படுகின்ற சோஷலிசத்தின் முழு வெற்றிக்குப் பிறகு, நாம் சுபோத்னிக்குகளில் பார்க்கின்ற கம்யூனிசம் வளர்ச்சி அடையும். அது புத்தகத்திலிருந்து ஏற்படாது; வாழ்க்கையின் யதார்த்தத்திலிருந்து ஏற்படும்.

## பழைய சமூக அமைப்பை அழிப்பதிலிருந்து புதிய சமூக அமைப்பை உருவாக்கும் வரை

நமது செய்தித்தாள் கம்யூனிஸ்டு உழைப்பு என்ற பிரச்சினைக்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் இதுதான் தலைமை யான பிரச்சினையாகும். பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, முதலாளிகள், நிலப்பிரபுக்களிடமிருந்து அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்ட பிறகு, அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய பாட்டாளி வர்க்கம் சுரண்டல்காரர்களின் மூர்க்கத்தனமான எதிர்ப்பையும் அவர்களால் நடத்தப்படும் எதிர்ப்புரட்சிக் கலகங்களையும் உள்நாட்டுப் போரையும் எதிர்த்துத் தீர்மானமான வெற்றிகளை அடைந்த பிறகு மட்டுமே இந்தப் பிரச்சினையைச் செய்முறை வடிவத்தில் எழுப்ப முடியும் என்பதை நாம் முதலில் நமக்கே தெளி வாக்கிக் கொள்ள வேண்டும்.

1918ம் வருடத்தின் ஆரம்பத்தில் அந்த நேரம் வந்து விட்டது போலத் தோன்றியது. 1918ம் வருடத்தில் பிப்ர வரி மாதத்தில் ருஷ்யாவுக்கு எதிராக ஜெர்மானிய ஏகாதி பத்தியத்தின் இராணுவ நடவடிக்கைக்குப் பிறகு உண்மை யாகவே அந்த நேரம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்த சமயத்தில் அது மிகக் குறுகிய காலத்துக்கு மட்டுமே இருந்தது; எதிர்ப்புரட்சிக் கலகங்கள், படையெடுப்பு களைக் கொண்ட புதிய, முன்னைக் காட்டிலும் அதிக பல மான அலை வேகமாக நம்மை அடித்துக் கொண்டு சென்ற படியால், சோவியத் அரசாங்கத்துக்கு சமாதான பூர்வ மான வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளை நுணுக்கமாகவும்

விடாப்பிடியாகவும் கவனிப்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை.

இரண்டு வருடங்களில் முன் எப்போதும் ஏற்படாத, நம்பமுடியாத நெருக்கடிகளை, இரண்டு வருடங்களுக்கு நீடித்த பஞ்சம், வறுமை, துன்பம் ஆகியவற்றையும் அவற்றைத் தொடர்ந்து சர்வதேச முதலாளித்துவப் பிற்போக்கு கூட்டத்தின் மீது செஞ்சேனையின் மகத்தான வெற்றிகளையும் கடந்து வந்திருக்கிறோம்.

இன்று நிரந்தரமான, நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை (போலந்தை நம்மீது போர் தொடுக்குமாறு பிரெஞ்சு முதலாளிகள் தூண்டி விடாமலிருந்தால்) அடைந்து விட்டோம் என்று நம்புவதற்கு வன்மையான காரணங்கள் இருக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் சோஷலிஸ்டு அடிப்படையின் மீது நிர்மாணிப்பதில் நாம் சிறிதளவு அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். அதனால்தான் நாம் கம்யூனிஸ்டு உழைப்பு பற்றிய பிரச்சினைக்கு உடனே போக முடியும்; அவ்விதம் போக வேண்டும். நாம் முதலாளித்துவத்திலிருந்து வளர்ச்சியடைந்து வருகிற புதிய சமூக அமைப்பின் உயர்ந்த கட்டத்தைப் பற்றிப் பேசவில்லை; அதன் கீழ் கட்டத்தை, ஆரம்பக் கட்டத்தைப் பற்றியே பேசுகிறோம் என்பதால் கம்யூனிஸ்டு உழைப்பு என்று சொல்வதைக் காட்டிலும் சோஷலிஸ்டு உழைப்பு என்று சொல்வதே சரியானதாகும்.

கம்யூனிஸ்டு உழைப்பு என்ற சொற்றொடர்—அதன் குறுகிய, துல்லியமான அர்த்தத்தில்—சமூகத்தின் நன்மைக்காகச் செய்யப்படும் இலவசமான உழைப்பு என்பதாகும். இந்த உழைப்பானது திட்டவட்டமான கடமை என்றபடி செய்யப்படாமல் குறிப்பிட்ட பொருள்களைப் பெறுவதற்குரிய உரிமையை அடைவதை நோக்கமாகக் கொண்டு செய்யப்படாமல், முன்னரே முடிவு செய்யப்பட்டு, சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின்படி இல்லாமல் இருப்பதாகும். இது இலக்குகளுக்குச் சம்பந்தமில்லாத விருப்ப பூர்வமான உழைப்பு. வெகுமதியை எதிர்பார்க்காமல், வெகுமதியை ஒரு நிபந்தனையாக ஆக்காமல், பொது நன்மைக்காக உழைப்பது

வழக்கமாகி விட்டபடியால், பொது நன்மைக்காகப் பாடு படுவதன் அவசியம் உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பதால் (அதுவும் ஒரு வழக்கமாகி விட்டது) செய்யப்படுகிற உழைப்பு. ஆரோக்கியமான உயிர்ப் பொருளின் அத்தியாவசியமான தேவை இந்த உழைப்பு.

நாம், அதாவது நமது சமுதாயம், நமது சமூக அமைப்பு இந்த உழைப்பு வடிவத்தை விரிவான அளவில், உண்மையான வெகுஜன அளவில் பயன்படுத்தக் கூடிய நிலையிலிருந்து இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொண் டிருப்பார்கள்.

ஆனால் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது—பாட்டாளி வர்க்கத்தின் தீவிரமான பகுதி முழுவதும் (கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிற்சங்கங்களும்) அரசாங்கப் பகுதியினர் இருவருமே எழுப்பியிருக்கிறார்கள்—என்பது இந்தத் திசையில் காலடி எடுத்து வைப்பதாகும்.

பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்றால், நாம் சிறிய காரியங்களிலிருந்து தொடங்க வேண்டும்.

இதற்கு மாறாக, ''பெரிய காரியங்களுக்குப்'' பிறகு, அதிகாரத்திலிருந்த முதலாளித்துவச் சொத்துரிமையை வீழ்த்திவிட்டு அதனிடத்தில் பாட்டாளி வர்க்கத்தை வைத்திருக்கிற புரட்சிக்குப் பிறகு, புதிய அடிப்படையில் பொருளாதார வாழ்க்கையை அமைத்துக் கொள்வது சிறிய காரியங்களிலிருந்து மட்டுமே தொடங்க முடியும்.

சுபோத்னிக்குகள், உழைப்புச் சேனைகள், கட்டாய உழைப்பு—இவை சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு உழைப்பு செய்முறையில் அடைந்திருக்கிற பல்வேறு வடிவங்கள்.

இந்த செய்முறை ஈடேற்றம் இன்னும் பல குறைபாடு களைக் கொண்டிருக்கிறது. சிந்திக்கும் பழக்கத்தை முழு வதுமாகக் கைவிட்டவர்கள் மட்டுமே—முதலாளித்துவ ஆதரவாளர்களை இங்கே நாம் விட்டு விடுவோம்—இந்தக் குறைகளைப் பற்றி ஏளனமாகச் சிரிக்க (அல்லது கோப மடைய) முடியும்.

இப்படிப்பட்ட புதிய, கடினமான, பெரிய முயற்சியில் குறைகள், பிழைகள், தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் உள்ள

கஷ்டங்களைக் கண்டு பயப்படக்கூடியவர்கள், அவை தங்களைப் பயமுறுத்த அனுமதிப்பவர்கள், ஏமாற்றத்துக்கும், பேடித்தனமான குழப்பத்துக்கும் இடங்கொடுப்பவர்கள் சோஷலிஸ்டுகள் அல்ல.

ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை, மக்களிடையே சமூக உறவுகளின் புதிய வடிவங்களை, மக்களை உழைக்குமாறு செய்கிற புதிய வடிவங்களையும் முறைகளையும் உருவாக்குவதற்குப் பல வருடங்கள், பல பத்தாண்டுக் காலங்கள் ஆகலாம்.

அது மன நிறைவு தருகிற பணி; மேன்மையான பணி.

முதலாளி வர்க்கத்தை முறியடித்து அவர்களின் எதிர்ப்பை ஒடுக்கியதன் மூலம் நாம் அடித்தளத்தைப் பெறுவது சாத்தியமாகி அதன் மீது இந்த வேலை நடப்பது சாத்தியமாகியிருப்பது நமது நற்பயனே.

இந்தப் பணியில் நமது முழு பலத்தையும் திரட்டி ஈடுபடுத்துவோம். விடாமுயற்சி, சலியாத உழைப்பு, எந்தப் பொருளையும் நூறு முறைகள் சோதனை செய்யவும், அவற்றை நூறு தடவைகள் திருத்திக் கொள்ளவும் தேவையான விருப்பம், உறுதி, திறமை, எது வந்த போதிலும் இலட்சியத்தை அடைந்தே தீருவது—இவை அக்டோபர் புரட்சிக்கு முந்திய பத்து, பதினைந்து அல்லது இருபது வருடங்களில் பாட்டாளி வர்க்கம் பெற்றிருக்கிற குணங்களாகும்; புரட்சிக்குப் பிறகு கடந்த இரண்டு வருடங்களில், முன் எப்போதும் ஏற்பட்டிராத வறுமை, பசி, அழிவு, கைவிடப்பட்ட நிலை நிலவிய வருடங்களில் பாட்டாளி வர்க்கம் பெற்றிருக்கிற குணங்களாகும். பாட்டாளி வர்க்கத்தின் இந்தக் குணங்களே பாட்டாளி வர்க்கம் நிச்சயமாக வெற்றியடையும் என்பதற்கு உறுதி கூறும்.

*1920 ஏப்ரல் 8*

**கம்யூனிஸ்டு சுபோத்னிக்,**
*1920 ஏப்ரல் 11*

## மாஸ்கோ-கஸான் ரயில்வேயில் முதல் சுபோத்னிக்கிலிருந்து அகில ருஷ்ய மே தின சுபோத்னிக்கு வரை

மேலே தரப்பட்டிருக்கின்ற தலைப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் தூரம் முழுவதையும் நாம் ஒரே ஒரு வருடத்தில் கடந்து வந்திருக்கிறோம். இது மிகவும் அதிகமான தூரம். நமது சுபோத்னிக்குகள் எல்லாமே இன்னும் பலவீனமாக இருந்தாலும், ஒவ்வொரு சுபோத் னிக்கும் அமைக்கும் பணியிலும், ஸ்தாபனத்திலும், கட்டுப் பாட்டிலும் அதிகமான குறைகளைக் கொண்டிருந்தா லும், முக்கியமான வேலை நடைபெற்றிருக்கிறது. அதிக கனமான பளுவை நகர்த்திவிட்டோம்—அதுவே இந்தப் பிரச்சினையின் சாரமாகும்.

இதுவரை நடந்திருப்பது இன்னும் மிகவும் குறை வானதுதான்; இனி நடைபெற வேண்டியதோ இன்னும் ஏராளமாக இருக்கிறது. இவற்றைப் பற்றி சிறிதளவு கூட நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளப் போவதில்லை. எனினும் மே தினத்தன்று நடைபெற்ற சுபோத்னிக்கை உழைப்பாளி வர்க்கத்துக்குக் கேடு நினைக்கும் எதிரிகள் மட்டுமே முதலாளிகளின் விஷமத்தனமான ஆதரவாளர் கள் மட்டுமே அலட்சியப்படுத்த முடியும். முதலாளித் துவத்துக்குத் தம்மைத்—திரும்பப் பெற முடியாதபடி— விற்பனை செய்துவிட்ட மிகவும் கேவலமான நபர்கள் மட்டுமே மே தின விழாவை கம்யூனிஸ்டு உழைப்பை வெகுஜன அளவில் தொடங்குவதற்குப் பயன்படுத்திக் கொண்டதைக் கண்டனம் செய்ய முடியும்.

ஜார்கள், நிலவுடைமையாளர்கள், முதலாளிகள் தூக்கியெறியப்பட்ட பிறகு, நடைமுறையில் சோஷ

விசத்தை நிர்மாணிப்பதற்காக, புதிய சமூக உறவுகளை வளர்ப்பதற்காக, உழைப்பு பொதுவானது என்ற புதிய கட்டுப்பாட்டுக்காக, உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புதிய தேசீய பொருளாதார அமைப்பை (இது பிறகு சர்வதேச பொருளாதார அமைப்பாக) ஏற்படுத்துவதற்காக இப்பொழுது தான் முதன் முறையாக அடித்தளத்தை சுத்தம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். உற்பத்தி சாதனங்கள் தனி உடைமையாக இருந்த கேடு கெட்ட அமைப்பினுலும், தனிப்பட்ட உடைமையாளர்கள் தங்களுக்கிடையே ''சுதந்திரமான'' பரிவர்த்தனை நிலைமைகளைக் கொண்ட பொருளாதாரம், அற்பமான தனிப்பட்ட பொருளாதாரத்தினுல் தவிர்க்க முடியாத வகையில் உற்பத்தி செய்யப்படுகிற—புதிய ஊக்கமளிக்கப்படுகிற—சச்சரவு, அவ நம்பிக்கை, பகைமை, ஒற்றுமை இன்மை, பரஸ்பர சதி ஆகிய மொத்தச் சூழ்நிலையினுலுமே அசுத்தப்படுத்தப்பட்டு, தரம் தாழ்ந்துபோய்விட்ட மக்களின் பழக்கவழக்கங்களை—இப்படி நெடுங்காலமாகவே இருந்து வருகிற பழக்கவழக்கங்களை மாற்றியமைப்பதைப் பற்றிய பிரச்சினையாகும். பல நூறு வருடங்களாக சுதந்திரமான வர்த்தகம், சுதந்திரமான பரிவர்த்தனை என்பது லட்சக் கணக்கான மக்களுக்குப் பொருளாதார அறிவின் முக்கியமான பாடமாக இருந்து வந்திருக்கிறது; கோடிக் கணக்கான மக்களுக்கு மிக ஆழமாக வேரூன்றிய பழக்கமாக இருந்து வந்திருக்கிறது. முதலாளிகளால் அறிவிக்கப்பட்டு அமுலாக்கப்படுகிற மற்ற ''சுதந்திரங்களைப்'' போல, ''உழைப்பதற்குச் சுதந்திரம்'' (நடைமுறையில் இது பட்டினி கிடப்பதற்கான சுதந்திரமே) இன்னும் மற்றவைகளைப் போல, முதலாளித்துவத்தின் மோசடி, அடக்குமுறை, சுரண்டல் ஆகியவற்றை மூடி மறைக்க உபயோகிக்கப்படுகிற இந்த உரிமையும் போலியானதே.

பிரதானமாக, சொத்து உடைமையாளர் சொத்து உடைமையாளராக இருப்பதற்குப் பயன்படும் இந்தச் ''சுதந்திரத்திலிருந்து'', மூலதனம் உழைப்பைச் சுரண்டுவதற்குப் பயன்படும் இந்தச் ''சுதந்திரத்திலிருந்து'' நாம் மாற்ற முடியாத வகையில் முறித்துக் கொண்டு

விட்டோம். அதன் மிச்சங்களுக்கு எதிராக நமது முழு பலத்தோடு ஈவிரக்கமில்லாதபடி போராடிவருகிறோம். அந்தப் பணியை வெற்றிகரமாக முடிப்போம்.

பழைய சமூக இணைப்புக்கள், பழைய பொருளாதார உறவுகள், பழைய உழைப்பின் ''சுதந்திரம்'' (மூலதனத்துக்கு உட்பட்ட வகையில்), பழைய சட்டங்கள், பழைய பழக்க வழக்கங்கள் ஒழியட்டும்!

நாம் ஒரு புதிய சமுதாயத்தை நிர்மாணிப்போம்!

ஜாரிசம், முதலாளித்துவம், சர்வ வல்லமை படைத்த உலக ஏகாதிபத்திய சக்திகள் ஆகியவற்றுக்கு எதிராக நாம் நடத்திய மாபெரும் புரட்சிப் போரின் போது ஏற்பட்ட தோல்விகளைக் கண்டு நாம் தளர்ச்சியடையவில்லை.

அதிகச் சிரமமான வேலையை ஆரம்பிக்கும் பொழுது தவிர்க்க முடியாது ஏற்படுகிற தவறுகளையும் பிரம்மாண்டமான நெருக்கடிகளையும் கண்டு நாம் தளர்ச்சி அடையப் போவதில்லை; எல்லாவிதமான உழைப்புப் பழக்கங்களையும் மரபுகளையும் மாற்றியமைப்பதற்குப் பல தலைமுறைக் காலம் தேவைப்படும். பழக்கவழக்கங்களின் சக்தியை, அழுத்தத்தை எதிர்த்து நாம் நடத்துகின்ற கடுமையான போராட்டத்தில் தேவைப்படுகிற எல்லா தியாகங்களையும் செய்வோம்; கடைசி வரை போராடி வெற்றியடைவோம்; வருடக் கணக்காக, தலைமுறை தலைமுறையாக சோர்வின்றிப் பாடுபடுவோம் என்று நாம் கம்பீரமாக, உறுதியாக சபதம் செய்வோம். ''ஒவ்வொரு நபரும் தனக்கு மட்டுமே; மற்றவர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும்'' என்ற கேவலமான கொள்கையை, உழைப்பைக் கடமையாக மட்டுமே பார்க்கும் பழக்கத்தை, எந்த வேலைக்குக் குறிப்பிட்ட விகிதத்தில் ஊதியம் கிடைக்கிறதோ அது மட்டுமே நியாயமான செய்ய வேண்டிய வேலை என்று கருதுகிற பழக்கத்தை ஒழிக்கப் பாடுபடுவோம். ''எல்லோரும் ஒவ்வொருவருக்கும்; ஒவ்வொருவரும் எல்லோருக்கும்'' என்ற விதியையும், ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப'' என்ற விதியையும் மக்கள் மனதில் பதிப்பதற்காக, மக்களின்

அன்றாட வாழ்க்கையில் ஒரு விதியாகச் செய்ய, ஒரு பழக்கமாக ஆக்குவதற்காக நாம் தீவிரமாகப் பாடுபடுவோம். கம்யூனிஸ்டுக் கட்டுப்பாட்டையும் கம்யூனிஸ்டு உழைப்பையும் படிப்படியாக ஆனால் தொடர்ச்சியாக அமுல் நடத்துவதற்கு நாம் பாடுபடுவோம்.

ஒரு மாபெரும் மலையை, மிகப் பெரும் அளவிலுள்ள பிற்போக்குத்தனம், அறியாமை, ''சுதந்திரமான வர்த்தகம்'' மற்றும் மனிதனுடைய உழைப்பை, மற்ற எல்லாப் பண்டங்களையும் போல ''சுதந்திரமாக'' வாங்குவதும் விற்பனை செய்வது போன்ற பழக்கங்களை விடாப்பிடியாக வைத்துக் கொண்டிருப்பது ஆகியவற்றை அசைத்துவிட்டோம். அதிக ஆழமாக வேரூன்றிய வெறுப்புணர்ச்சிகளை, காலங்காலமாக இருந்து வருகின்ற, மிக உறுதிவாய்ந்த, உடலோடு ஒட்டிய பழக்கவழக்கங்களின் அடிப்படையை நாம் தகர்க்கத் தொடங்கிவிட்டோம். ஒரு வருடத்திலேயே நமது சுபோத்னிக்குகள் முன்னேற்றப் பாதையில் மாபெரும் அடி எடுத்து வைத்திருக்கின்றன. அவை மிகவும் பலவீனமாக இன்னும் இருக்கின்றன; எனினும் நாம் அதைக் கண்டு தளர்ச்சியடையப் போவதில்லை. நம்முடைய ''மிகவும் பலவீனமான'' சோவியத் அரசு நமது சொந்த முயற்சிகளினால்—நம் கண்களுக்கு முன்பாகவே — பலமடைந்து ஒரு பலம் பொருந்திய உலக சக்தியாக வளர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டோம். நாம் தொடர்ந்து பல வருடங்களுக்கு, பல பத்தாண்டுகளுக்கு சுபோத்னிக்குகளைக் கடைப்பிடிப்போம்; அவற்றை மென்மேலும் அபிவிருத்தி செய்து, எங்கும் பரப்பி வளர்ச்சி பெறச் செய்து ஒரு பழக்கமாக மாற்றுவோம். கம்யூனிஸ்டு உழைப்பின் வெற்றியைச் சாதிப்போம்!

**மே தின சுபோத்னிக்,**
*1920 மே 2*

# கூட்டுறவு குறித்து

1

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தற்போது, அக்டோபர் புரட்சி நடை பெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள் கையையும்[45] அன்னியில் (இதற்கு மாறாய்ப் புதிய பொரு ளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச் சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), கூட்டுறவு இயக்கம் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற்கில்லை. பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனைப் புனைவுகள் மிகுதியாய் உள்ளன. அடிக்கடி அவை நகைக்கத்தக்க அளவுக்குக் கற்பனைப் புனைவுகளாய் அமைந்துவிடுகின்றன. அவை நம்ப முடியாத கற்பனை களாய் இருக்கக் காரணம் என்ன? காரணம் என்ன வெனில், சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்து வதற்காக நடைபெறும் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அடிப்படையான, ஆழ்மட்டத்து முக் கியத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. நாம் சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டோம், ஆகவே பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனையாகவும், ஏன் புத்தார்வ மனப்பாங்காகவும், கொச்சையாகவும்கூட இருந்தவை பலவும் இப்பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வருகின்றன.

அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு வந்துவிட்டதால், உற்பத்தி சாதனங்கள் யாவும்

இந்த அரசியல் ஆட்சியதிகாரத்துக்குச் சொந்தமாகி விட்டதால், இனி மக்கள் எல்லோரையும் கூட்டுறவுக் கழகங்களில் ஒன்றுதிரளச் செய்வதுதான் நமக்குள்ள ஒரே பணி என்றாகி விட்டது. வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும், அரசியல் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுவதும், இன்ன பிறவும் அவசியமென்று பிழையற்ற முறையில் கருதியோர், நியாயமாகவே நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும் உரியதாய்க் கொண்ட அந்த சோஷலிசம், இப்பொழுது மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானோர் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட்டதும் தானாகவே தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டுவிடும். ஆனால் இப்பொழுது ருஷ்யாவின் மக்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வது எவ்வளவு பிரம்மாண்ட, எண்ணிலடங்கா மடங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதை எல்லாத் தோழர்களும் உணர்வதில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றதன் மூலம் நாம், வியாபாரியாய்ச் செயல்படும் விவசாயிக்கு, தனியார் வர்த்தகமெனும் கோட்பாட்டுக்கு ஓரளவு விட்டுக் கொடுத்தோம். இதே காரணத்தால் (சிலர் நினைப்பதற்கு நேர்மாறாய்), கூட்டுறவு இயக்கம் இன்று இந்தப் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெறுகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின்கீழ் நாம் செய்ய வேண்டியதெல்லாம் போதுமான அளவுக்கு விரிவாய் ருஷ்யாவின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதுதான். ஏனெனில் இப்பொழுது நாம் தனியார் நலத்தை, தனியார் வர்த்தக நலத்தை, அந்த நலத்தின் மீதான அரசு மேற்பார்வையுடன், கண்காணிப்புடன் எந்த அளவுக்கு இணைக்க வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; அதைப் பொது நலன்களுக்கு எந்த அளவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்று கண்டு கொண்டுவிட்டோம். பல சோஷலிஸ்டுகளுக்கும் முன்பு முட்டுக் கட்டையாய் இருந்த இதனை நாம் கண்டு கொண்டுவிட்டோம். எல்லாப் பெருவீத உற்பத்தி சாதனங்களும் அரசின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருத்தல், அரசியல் ஆட்சியதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருத்தல், இந்தப் பாட்டாளி வர்க்கம்

கோடிக் கணக்கான சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடன் கூட்டணி கொண்டிருத்தல், பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுக்குத் தலைமை தாங்குதல் உறுதி பெற்றிருத்தல் முதலான இவைதானே கூட்டுறவுகளைக் கொண்டு—கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு—முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவைப்படுகிறவை? முன்பு நாம் இந்தக் கூட்டுறவுகளை லாப வேட்டை அடிப்படையாய் இழித்துக் கூறினோம், இப்பொழுதுங்கூட புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இவற்றை ஓரளவுக்கு இவ்வாறு இழித்துக் கூற நமக்கு உரிமை உண்டு. இந்தக் கூட்டுறவுகளிலிருந்து முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதெல்லாம் மேற்கூறியவைதானே? இன்னும் இது சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது ஆகிவிடாது என்றாலுங்கூட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவையானதும் போதுமானதும் இதுதானே.

இதைத்தான் நமது செய்முறை ஊழியர்கள் பலரும் குறைத்து மதிப்பிட்டுவிடுகிறார்கள். நமது கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் ஏளனமாய்க் கருதுகிறார்கள். அதன் தனி முக்கியத்துவத்தை — முதலாவதாய், கோட்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்தும் (உற்பத்தி சாதனங்கள் அரசுக்குச் சொந்தமாயிருக்கின்றன), இரண்டாவதாய், **மிகவும் எளிய, சுலபமான, விவசாயிக்கு மிகவும் ஏற்புடையதான** வழிகளில் புதிய அமைப்புக்கு மாறிச் செல்லும் கண்ணோட்டத்திலிருந்தும் அவற்றுக்குள்ள தனி முக்கியத்துவத்தை—அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷலிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங்களை வகுப்பது ஒன்று; ஆனால் நடைமுறையில் சோஷலிசத்தைக் கட்டுவது, ஒவ்வொரு சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷலிசத்தைக் கட்டுவது முற்றிலும் வேறொன்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப்பது இதே கட்டத்தைத் தான். இதை வந்தடைந்தபின், நாம் இதைச் சொற்ப

அளவுக்கே பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்டபோது நாம் அளவுமீறிச் சென்றுவிட்டோம்; தடையில்லாத் தனியார் தொழில், தடையில்லா வாணிபம் என்னும் கோட்பாட்டுக்கு மிதமிஞ்சிய இடம் அளித்தோம் என்பதாலல்ல, கூட்டுறவுகளைக் கருதத் தவறிவிட்டோம், கூட்டுறவுகளைக் குறைத்து மதிப்பிட்டோம்; மேற்கூறிய இரு கண்ணோட்டங்களிலும் கூட்டுறவுகளுக்குள்ள மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்கெனவே மறக்கத் தொடங்கிவிட்டோம் என்பதால் நாம் அளவுமீறிச் சென்றோம்.

இந்தக் ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இப்பொழுது வாசகருடன் விவாதிக்கப் போகிறேன். ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் சோஷலிசப் பொருள் எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படும் வண்ணம் உடனடியாய் இக்கோட்பாட்டை நாம் எவ்வழிகளில் வளர்க்க முற்படலாம், முற்படவும் வேண்டும்?

கூட்டுறவானது பொதுவாகவும் எப்பொழுதும் சில தனிச் சலுகைகள் பெற்றிருப்பதோடன்றி, இந்தத் தனிச் சலுகைகள் முற்றிலும் பொருளாயதத் தன்மையனவாகவும் (சலுகைக்குரிய வங்கி வட்டி விகிதம் முதலானவை) இருக்கும்படியான அரசியல் வழியில் அது ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தனியார் தொழில் நிலையங்களுக்கு நாம் அளிக்கும் கடன்களைக் காட்டிலும், கனரகத் தொழிலுக்கும் பிறவற்றுக்கும் அளிப்பதையும் காட்டிலும் அதிகமான, சிறிதளவேனும் அதிகமான, அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால் தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். ''சுதந்திரமான'' முதலாளித்துவம் பிறப்பதற்கு நூறு கோடிக் கணக்கான ரூபிள் தொகை செலவிட வேண்டியிருந்ததைக் குறிப்பிடத் தேவையில்லை. தற்போது நாம் வழக்கத்தைவிட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்டுறவு அமைப்பே என்பதை நாம்

உணர்ந்தாக வேண்டும். மெய்யாகவே நாம் இந்த உதவியை அளித்தாக வேண்டும். அச்சொல்லின் மெய்ப் பொருளில் அது உதவியாய் இருத்தல் வேண்டும். அதாவது எந்த வகையான கூட்டுறவு வர்த்தகத்துக்கும் அளிக்கப்படும் உதவியாய் அதை அர்த்தப்படுத்தினல் போதாது; உதவிஅளிக்க வேண்டும் என்று கூறும்போது, மெய்யாகவே பெருந்திரளான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும் கூட்டுறவு வர்த்தகத்துக்கு உதவுவதையே அது குறிக்க வேண்டும். கூட்டுறவு வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியானதோர் உதவி முறைதான், ஆனல் பிரதான விவகாரம் என்னவெனில் விவசாயி எடுத்துக் கொள்ளும் இந்தப் பங்கின் இயல்பையும், அதில் அடங்கியுள்ள உணர்வையும், அதன் தன்மையையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். சுருக்கமாய்ச் சொல்வதெனில், கூட்டுறவாளர் ஒருவர் கிராமத்துக்குச் சென்று கூட்டுறவுப் பண்டகசாலை திறந்தால், மக்கள் அதில் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்வதில்லை, ஆயினும் தமது சொந்த நலன்களால் உந்தப்பட்டு அதில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள முன்வரவே செய்வர்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றோர் அம்சமும் இருக்கிறது. ''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணோட்டத்தின்படி கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் தன்முனைப்பில்லாத முறையிலல்ல, முழு முனைப்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படி தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. சுருக்கமாய்க் கூறுகையில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது ''ஒன்றே ஒன்றுதான்''. கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும் படியும், இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யும் படியும் அவர்களை ''அறிவொளி பெறச் செய்வது தான்'' அது. இந்த ''ஒன்றே ஒன்றுதான்'' மேலும் செய்ய வேண்டியதெல்லாம். சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள் தேவைப்படவில்லை. ஆனல்

இந்த ''ஒன்றே ஒன்றைச்'' செய்து முடிப்பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந்தேறியாக வேண்டும்—மக்கள் அனைவரும் கலாசார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த்தம் பேசுவதையும் கரணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு முன்னேற்றமாகும். ஏனெனில் இது சர்வ சாதாரண விவசாயியின் நிலைக்கு ஏற்றதாகக் கூடியதாய் இருக்கிறது, இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயியிடமிருந்து கோரவில்லை. ஆனால் மக்கள் தொகையினர் அனைவரையும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவுகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டியிருக்கும். யாவும் நன்கு அமையின் இதைச் சாதிப்பதற்குப் பத்து, இருபது ஆண்டுகளாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வரலாற்றுச் சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுமல், போதிய அளவு விவேகமுடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெறுமல், இதற்குரிய பொருளாயத அடித்தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகிவிடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிடமிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலை இல்லாமல்—இவையாவும் இன்றி நாம் நமது குறிக்கோளை அடைய முடியாது. செயல்களில் விரிவான புரட்சிகர வீச்சை நாம் வெளிப்படுத்திக் காட்டி—மிகுதியாய் வெளிப்படுத்திக் காட்டி முழு அளவில் வெற்றி ஈட்டியுள்ள புரட்சிகர ஆர்வத்தை விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறனுடன் இணைக்கத் தெரிந்து கொள்வதுதான் இப்பொழுது தலையாயதாகும். சிறந்த கூட்டுறவாளராவதற்கு விவேகமும் அறிவுமுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலையே குறிப்

பிடுகிறேன். வர்த்தகம் புரிகிருேம் என்பதால் தாம் நல்ல வர்த்தகர்களே என்பதாய்க் கற்பனே செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டாக வேண்டும். முன்னதிலிருந்து பின்னது பெறப்பட்டுவிடவில்லே. அவர்கள் வர்த்தகம் புரிவது மெய்தான், ஆனுல் பண்பாடுடைய வர்த்தகர்களாய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந்தூரம். இப்பொழுது அவர்கள் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகின்றனர், ஆனுல் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டுமாயின் ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்டும். அந்த நிலே யிலிருந்து அவர்கள் ஒரு முழுச் சகாப்தம் பின்தங்கி யோராய் இருக்கின்றனர்.

முடிவுரையாய்க் கூற வேண்டியது: சோஷலிச அரசு கூட்டுறவுகளுக்குப் பலவும் பொருளாதார, நிதித் துறை, வங்கித் துறை சலுகைகள் வழங்க வேண்டும்—மக்களே ஒன்று திரட்டுவதற்குரிய புதிய கோட்பாட்டுக்கு ஆதர வளிக்க இதுவே வழி. ஆனுல் இது இப்பணியின் பொது உருவரையே தவிர, நடைமுறைப் பணியின் முழு உள் ளடக்கத்தையும் வரையறுத்து விவரமாய் எடுத்துரைக்க வில்லே. அதாவது கூட்டுறவுகளில் சேருவதற்காகத் தர வேண்டிய ''போனசின்'' வடிவம் என்ன (இதை நாம் எந்த நிபந்தனேகளின் பேரில் தருவது), கூட்டுறவுகளுக்கு நாம் போதுமான அளவில் உதவுவதற்கு வேண்டிய போன சின் வடிவம் என்ன, பண்பாடுடைய கூட்டுறவாளரை உருவாக்கக் கூடிய போனசின் வடிவம் என்ன என்பதை நாம் கண்டறிந்து கொண்டாக வேண்டும். உற்பத்தி சாத னங்களில் சமூக உடைமை இருக்குமாயின், பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வர்க்க வெற்றி பெற்று விடுமாயின், பண்பாடுடைய கூட்டுற வாளர்களது அமைப்பு தான் சோஷலிச அமைப்பு.

*1923 ஜனவரி 4*

## 2

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நான் எழுதிய போதெல்லாம், 1918ல் அரசு முதலாளித்துவத்

தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை எப்பொழுதுமே மேற்கோளாய்க் குறிப்பிட்டேன். பன்முறை இது சில இளந் தோழர்களது மனதில் சந்தேகங்களை எழுப்பி யிருக்கிறது. ஆனுல் இவர்களுடைய சந்தேகங்கள் பிர தானமாய்க் கருத்தியலான அரசியல் விவகாரங்களைப் பற்றியவையே.

அரசு முதலாளித்துவம் என்னும் தொடரை உற் பத்தி சாதனங்கள் தொழிலாளி வர்க்கத்தின், அரசியல் ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதற்கு உபயோகிக்கக் கூடாதென இவர்கள் நினைத்தனர். ஆனுல் ''அரசு முதலாளித்துவம்'' என்னும் தொடரை நான் **முதலாவதாக,** நமது தற்போதைய நிலையை இடதுசாரி கம்யூனிஸ்டுகள்[46] என்போருடன் நடைபெற்ற எனது வாக்குவாதத்தில் ஏற்கப்பட்ட நிலையுடன் வரலாற்று வழி யில் இணைத்துக் காட்டுவதற்காக உபயோகித்தேன் என் பதை இவர்கள் கவனிக்கவில்லை. தவிரவும் அப்பொழுது நான் அரசு முதலாளித்துவம் தற்போதுள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டிலும் மேம்பட்டதாய் இருக் கும் என்று வாதாடினேன். சாதாரண அரசு முதலாளித் துவத்துக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையை வாச கருக்கு அறிமுகம் செய்கையில் நான் குறிப்பிட்ட அசா தாரணமான — மிகமிக அசாதாரணமான என்றுகூட சொல்ல வேண்டும் — அரசு முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்டுவது எனக்கு முக் கியமானதாய் இருந்தது. **இரண்டாவதாக,** நடைமுறைக் குறிக்கோள் எப்பொழுதுமே எனக்கு முக்கியமானதாய் இருந்தது. சலுகை உரிமைக் குத்தகைகள் தருவதே நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைக் குறிக்கோள். நடப்பிலுள்ள சூழ்நிலையில் நமது நாட்டில் சலுகை உரிமைகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரசு முதலாளித்துவத்தின் கலப்பற்ற சுத்தமான ஒரு வடிவ மாகவே இருக்கும். அரசு முதலாளித்துவம் குறித்து இப்படித்தான் நான் வாதாடினேன்.

ஆனுல் இந்த விவகாரத்தின் மற்ருேர் அம்சமும் இருக்கிறது. இதற்கு அரசு முதலாளித்துவம் தேவைப்

படலாம்; அல்லது குறைந்தது அதனுடனுன ஒப்பிடலா வது தேவைப்படலாம். கூட்டுறவுகள் பற்றிய பிரச்சினேயே இந்த அம்சம்.

முதலாளித்துவ அரசில், கூட்டுறவுகள் கூட்டு முதலாளித்துவ நிலேயங்களாகும் என்பதில் ஐயமில்லே. நமது தற்போதைய பொருளாதார நிலேமைகளில், தனியார் முதலாளித்துவத் தொழில் நிலேயங்களே—தேசவுடைமையாக்கப்பட்ட நிலத்தில் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல், தொழிலாளி வர்க்க அரசின் கண்காணிப்பின் கீழ் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல்— முழுக்க முழுக்க சோஷலிச வகையிலான தொழில் நிலேயங்களுடன் (உற்பத்தி சாதனங்களும் இந்நிலேயங்கள் அமைந்திருக்கும் நிலமும் மற்றும் இந்நிலேயங்கள் பூராவும் அரசின் உடைமையாய் இருப்பவை) இணேத்திடும் மூன்ருவது வகையிலான நிலேயங்களேப் பற்றிய பிரச்சினே, அதாவது கூட்டுறவுகளேப் பற்றிய பிரச்சினே எழுவதிலும் ஐயமில்லே. முன்பெல்லாம் கூட்டுறவுகள் ஏனேய நிலேயங்களிலிருந்து அடிப்படையாகவே மாறுபடும் சுயேச்சையான ஒரு தனி வகை நிலேயங்களாய்க் கருதப்படவில்லே. கூட்டுத்தொழில் நிலேயங்கள் எப்படித் தனியார் தொழில் நிலேயங்களிலிருந்து மாறுபடுகின்றனவோ அதே போல தனியார் முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலேயங்கள் முதலாளித்துவ நிலேயங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலேயங்கள் அரசு முதலாளித்துவ நிலேயங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில் முதலாவதாக, அவை தனியார் நிலேயங்கள், இரண்டாவதாக, அவை கூட்டு நிலேயங்கள். நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலேயங்கள் தனியார் முதலாளித்துவ நிலேயங்களிலிருந்து மாறுபடுகின்றன, ஏனெனில் அவை கூட்டு நிலேயங்கள்; ஆனுல் அவை அமைந்துள்ள நிலமும் அவற்றின் உற்பத்தி சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலேயங்களிலிருந்து மாறுபடுகிறவை அல்ல.

கூட்டுறவுகள் குறித்து விவாதிக்கையில் இந்த நிலேமை போதிய அளவுக்குக் கவனிக்கப்படுவதில்லே. நமது அரசி

யல் அமைப்பினுடைய தனி இயல்புகளின் காரணமாய் நமது கூட்டுறவுகள் முற்றிலும் தனிவகைப்பட்ட முக்கியத்துவம் பெறுவது மறக்கப்பட்டுவிடுகிறது. சலுகை உரிமைகளை நாம் ஒதுக்கிவிடுவோமாயின் — எவ்விதத்திலும் இவை கணிச அளவில் வளர்ந்துவிடவில்லை என்பதை இடைக் குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்—நமது நிலைமைகளில் கூட்டுறவானது அனேகமாய் எப்பொழுதும் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகிவிடுகிறது.

நான் நினைப்பதை விளக்கமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். ராபர்ட் ஓவன் போன்ற பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக் ''கூட்டுறவு'' சோஷலிசத்தை முற்றிலும் கற்பனை மயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப் போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றிவிடலாம் என்ற கனவை புத்தார்வ மனப்பாங்காகவும் கொச்சையானதாகவும்கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத்தின்படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே. ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போராட்டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாறியதால், சுரண்டலாளர்களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால், உற்பத்தி சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசு தானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின்

பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டலாளர்களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால், நிலைமை எப்படி மாறிவிட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் வளர்ச்சியே முற்றிலும் சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகிவிட்டது (மேற்கூறிய ''சிறிய'' விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத்தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலியுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட ''கலாசாரப்'' பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும், உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாசாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூற வேண்டியிருக்கும். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கிவிட்டு, உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில் வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாசாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்குகின்றன. இந்தச் சகாப்தமே இவ்விரு பணிகளாலுமானது தான். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தியமைத்தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்றதாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ்வியந்திரத்தை நாம் பெற்றுக் கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிரமாய்த் திருத்தியமைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரளச் செய்

வதே, விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டப்பட்டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரியான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாசார நிலையை உயர்த்தியாக வேண்டும். கலாசாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாசார வளர்ச்சி பெறாத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்சலான காரியமாகுமென நமது எதிராளிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப்பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கியதால், அவர்களுக்கு இந்தத் தவறான எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் நமது நாட்டில் அரசியல், சமுதாயப் புரட்சி கலாசாரப் புரட்சிக்கு முன்னதாகவே நடைபெற்றது. இப்பொழுது நம்மை இதே கலாசாரப் புரட்சி எதிர்நோக்குகிறது.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனால் இப்புரட்சி முற்றிலும் கலாசாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்), முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்தி சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றாக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

*1923 ஜனவரி 6*

**பிராவ்தா,** இதழ்கள் *115, 116;*
*1923 மே 26, 27*

## சொற்பமாயினும் சிறந்ததே நன்று

நமது அரசுப் பொறியமைவை மேம்படச் செய்யும் பிரச்சினையில், தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையானது எனது அபிப்பிராயத்தில், அளவை அதிகமாக்குவதில் முனைந்துவிடக் கூடாது, அவசரப்படவும் கூடாது. நமது அரசுப் பொறியமைவின் தரத்தில் இதுகாறும் நாம் மிகச் சொற்ப சிந்தனையும் கவனமுமே செலுத்த முடிந்திருக்கிறது. ஆகவே இப்போது நாம் முழு அளவுக்கு இந்தப் பொறியமைவை ஒழுங்கு செய்வதிலும், தொழிலாளர்கள், விவசாயிகளது மேற்பார்வைத் துறையில் மெய்யாகவே தற்காலத் தரத்துக்கு உகந்த ஊழியர்களை, அதாவது சிறந்த மேற்கு ஐரோப்பியத் தரங்களுக்குக் குறைவில்லாத ஊழியர்களை ஒரு சேரத் திரட்டுவதிலும் விசேஷ கவனம் செலுத்துவது முற்றிலும் நியாயமே. சோஷலிசக் குடியரசுக்கு இந்த நிலைமை கொஞ்சம் தன்னடக்கமானது தான். ஆனல் முதல் ஐந்து ஆண்டுகளிலான நமது அனுபவம் நம் தலையில் அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் அப்படி நிரம்பச் செய்துவிட்டது. உதாரணமாக, ''பாட்டாளி வர்க்கக்'' கலாசாரம் குறித்து மிதமிஞ்சிய அளவிலும் மிதமிஞ்சிய அலட்சிய மனேபாவத்துடனும் வாய்வீச்சடிப்பதைக் கேட்கும் போது நம்மையும் மீறி இந்த அவநம்பிக்கையும் சந்தேகமும்தான் நம்மை ஆட்கொள்கின்றன. ஆரம்ப நிலையாய், மெய்யான முதலாளித்துவக் கலாசாரமே போதும், நாம் மனநிறைவு அடைவோம்; ஆரம்ப நிலையாய், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட கலாசாரத்

தின் நயமற்ற வகைகளிலிருந்து, அதாவது அதிகார வர்க்கக் கலாசாரம் அல்லது பண்ணையடிமைக் கலாசாரம் போன்றவற்றைக் கைவிடுவோமாயின் நாம் மகிழ்ச்சியுறு வோம். கலாசார விவகாரங்களில் அவசரமும் மட்டு மீறிய நடவடிக்கைகளும் பெருங் கேடு விளைவிக்கிறவை. நமது இளம் எழுத்தாளர்களிலும் கம்யூனிஸ்டுகளிலும் பலரும் இதனை மனதில் நன்கு பதியச் செய்து கொண் டாக வேண்டும்.

இவ்வாறு, நமது அரசுப் பொறியமைவு பற்றிய பிரச் சினையில், மேலும் மெதுவாகச் செல்வதே நல்லது என்கிற முடிவினை நமது கடந்த ஆண்டுகளது அனுபவத்திலிருந்து இப்போது நாம் வந்தடைந்தாக வேண்டும்.

நமது அரசுப் பொறியமைவு படுமோசமாய் இருப் பதாகச் சொல்லக் கூடாதெனில், எப்படியும் பரிதாபகர மானதாகவே இருக்கிறது. இதனால் முதலில் நாம் இதன் குறைபாடுகளை எதிர்த்து எப்படிப் போராடுவதென்று ஆழ்ந்த ஆலோசனை செய்தாக வேண்டும். இந்தக் குறை பாடுகள் கடந்த காலத்தில் வேர் கொண்டவை என் பதை நாம் மனதிற் கொண்டாக வேண்டும். இந்தக் கடந்த காலம் வீழ்த்தப்பட்டிருக்கிறது என்ற போதி லும், இன்னும் இது வெற்றி கொள்ளப்பட்டு விடவில்லை, இன்னும் இது தொன்மைக் காலத்துக்கு உரிய ஒரு கலா சாரத்துக்கான கட்டத்தை அடையும்படி பழங்கதையாகி விடவில்லை. வேண்டுமென்றேதான் கலாசாரம் என்கிறேன், ஏனெனில் இந்த விவகாரங்களில் நமது கலாசாரத்தின், நமது சமுதாய வாழ்வின், நமது பழக்கவழக்கங்களின் இன்றியமையாக்கூறு ஆகிவிட்டதை மட்டுமே சாதிக்கப் பட்டுவிட்ட ஒன்றாய் நாம் கருத முடியும். நமது சமூகக் கட்டமைப்பின் நல்ல அம்சங்கள் சரிவர ஆராய்ந்து அறியப்படவில்லை, புரிந்து கொள்ளப்படவில்லை, உணர்ந்து கிரகிக்கப்படவில்லை எனலாம். அவை அவசரமாகப் பற்றிக் கொள்ளப்பட்டிருக்கின்றன, சரிபார்க்கப்படவோ, சோதிக்கப்படவோ இல்லை என்றும், அனுபவத்தால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், நீடித்து நிலவும்படி ஆக்கப்படவில்லை என்றும் இன்ன பலவாறாகவும் கூறலாம். மெய்தான், புரட்சிகரமான சகாப்தத்தில், வளர்ச்சியா

னது தலை தெரிக்கும் வேகத்தில் நடந்தேறி, ஐந்தே ஆண்டுகளில் நாம் ஜாரிசத்திலிருந்து சோவியத் அமைப்புக்கு வந்துவிட்ட ஒரு காலத்தில் இவ்வாறன்றி வேறு எவ்வாறும் இருக்க முடியாதுதான்.

நிதான நிலையை அடைய வேண்டிய நேரம் வந்து விட்டது. மிதமிஞ்சிய வேகத்தில் முன்னேறிச் செல்வது குறித்தும், எல்லா விதமான வீம்புப் பேச்சு குறித்தும், இன்ன பலவும் குறித்தும் நாம் பாதுகாப்புக்குரிய அவநம்பிக்கை கொண்டாக வேண்டும். முன்னால் நாம் அடி எடுத்து வைத்துச் செல்வதாய் மணி தோறும் பறை சாற்றி, நிமிடம் தோறும் எடுத்து வைத்து, பிறகு வினாடி தோறும் அந்த அடிகள் நிலையற்றவை என்றும் உறுதியில்லாதவை என்றும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவை என்றும் நிரூபிக்கிறோமே, அவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டியது குறித்து நாம் சிந்தனை செய்தாக வேண்டும். அவசரப்படுவதுதான் இங்கு யாவற்றிலும் அதிக தீமை பயப்பதாய் இருக்கிறது. நாம் ஏதோ சிலவற்றையேனும் அறிவோம், அல்லது மெய்யாகவே புதியதான அரசுப் பொறியமைவு ஒன்றை, சோஷலிஸ்டு என்றும் சோவியத் என்றும் இன்ன பலவாறும் அழைக்கப்படுவதற்கு மெய்யாகவே தகுதி வாய்ந்ததான ஒன்றைக் கட்டியமைப்பதற்கு அவசியமானவற்றுள் கணிசமான பலவும் நம்மிடம் இருக்கின்றன என்பதாகக் கற்பித்துக் கொண்டு அதை ஆதாரமாகக் கொள்வது மிகவும் அதிகக் கேடு பயப்பதாகும்.

இல்லை, இம்மாதிரியான பொறியமைவும், இதற்குரிய கூறுகளுங்கூட நகைக்கத்தக்கவாறு மிக சொற்ப அளவில் தான் நம்மிடம் உள்ளன. இதைக் கட்டியமைத்திட காலச்செலவு ஆவது குறித்துக் கவலைப்படலாகாது என்பதையும், பல, மிகப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தப் பொறியமைவை அமைத்திட நம்மிடம் இருக்கும் கூறுகள் யாவை? இரண்டே இரண்டு மட்டுமே இருக்கின்றன. முதலாவதாக, தொழிலாளர்கள்—சோஷலிசத்துக்கான போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கூறுகள் போதிய அளவுக்குக் கல்வியறிவு பெற்

றிருக்கவில்லை. அவர்கள் நமக்குச் சிறந்த பொறியமைவை அமைத்துத் தர விரும்புகிறார்கள். ஆனால் இதை எப்படிச் செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களால் இந்தப் பொறியமைவை அமைத்திட இயலாது. இதற்குத் தேவையான கலாசாரத்தை இன்னும் அவர்கள் வளர்த்துக் கொண்டாகவில்லை. இதற்குத் தேவையானது கலாசாரமேதான். இங்கே பரபரத்துக் கொண்டு செயல்படுவதாலோ, தாக்குதல் தொடுப்பதாலோ, ஊக்கத்தாலோ, விறுவிறுப்பாலோ, அல்லது பொதுவாக மனிதகுலத்தின் மிகச் சிறந்த பண்புகளில் எதனாலுமோ எதையும் சாதித்துவிட முடியாது. இரண்டாவதாக, அறிவு, கல்வி, பயிற்சி இவற்றின் கூறுகள்—ஏனைய எல்லா அரசுகளுடன் ஒப்பிடுகையில் நம்மிடம் இவை நகைக்கத்தக்கவாறு சொற்ப அளவுக்கே இருக்கின்றன.

இங்கே அறிவின் பற்றாக்குறையை ஆர்வத்தாலும் அவசரத்தாலும் பிறவற்றாலும் ஈடு செய்து கொள்ளும் (அல்லது ஈடு செய்து கொண்டுவிடலாமென கற்பனை செய்து கொள்ளும்) போக்கு நம்மிடம் மிகுதியாகவே இருப்பதை நாம் மறக்கலாகாது.

நமது அரசுப் பொறியமைவைப் புத்தமைக்கும் பொருட்டு, எப்பாடுபட்டேனும் நாம் மேற்கொண்டாக வேண்டிய பணி என்னவெனில்: முதலாவதாக—கற்றறிதல், இரண்டாவதாக—கற்றறிதல், மூன்றாவதாக—கற்றறிதல்; கற்றபின் அந்த விஞ்ஞான அறிவு பயனில்லாப் பண்டமாகவோ, ஆடம்பரமான வாய்ப்பேச்சாகவோ அமைந்து விடாதபடி (அடிக்கடி நம்மிடையே இப்படி நேர்ந்துவிடுவதை மறைக்காமல் ஒப்புக்கொள்ளவே வேண்டும்), விஞ்ஞான அறிவு மெய்யாகவே நமது ஊனும் இரத்தமும் ஆகிவிடும்படி, முழுமையாகவும் மெய்யாகவும் நமது அன்றாட வாழ்க்கையின் உள்ளடக்கக் கூறாகி விடும்படி உறுதி செய்து கொள்ளுதல். சுருங்கக் கூறுமிடத்து, முதலாளித்துவ மேற்கு ஐரோப்பா எழுப்பும் கோரிக்கைகளை நாம் எழுப்பலாகாது, சோஷலிச நாடாக வளர முற்பட்டிருக்கும் ஒரு நாட்டுக்கு ஏற்புடைத்த பொருத்தமான கோரிக்கைகளையே நாம் அதனிடம் கோர வேண்டும்.

மேற் கூறியவற்றிலிருந்து பெறப்படும் முடிவு என்ன வெனில்: தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையை நாம் மெய்யாகவே முன்மாதிரியான அமைப் பாக, நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய் வதற்குரிய கருவியாக ஆக்க வேண்டும்.

அது தேவையான உயர் நிலையை அடையும் பொருட்டு நாம் பின்பற்ற வேண்டிய விதி வருமாறு: ''மூன்று முறை அள; ஒரு தரம் வெட்டு''.

நமது சமுதாய அமைப்பில் இருப்பவற்றுள் மிகச் சிறந்தவற்றை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண் டும், அவற்றை மிகுந்த எச்சரிக்கையோடும் ஆலோசனை யோடும் விவர அறிவோடும் பயன்படுத்திப் புதிய மக்கள் கமிசாரகத்தைக் கட்டியமைத்தாக வேண்டும்.

இதன் பொருட்டு, நமது சமுதாய அமைப்பில் இருக் கும் சிறந்த கூறினர்—முதலாவதாக, முன்னேறியத் தொழிலாளர்களையும், இரண்டாவதாக, சொன்ன சொல் தவறுதவர்கள் என்றும் உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசாதவர்கள் என்றும் சொல்லத் தக்கவர் களாய் அமைந்து மெய்யாகவே அறிவொளி பெற்றவர் களாய் இருப்போரையும் போன்ற கூறினர்—முழு மனத் துடன் தாம் வகுத்துக் கொண்ட குறிக்கோளை அடையும் பொருட்டு, எந்த இன்னலையும் ஏற்கத் தயங்கவோ, எந்தப் போராட்டத்தையும் கண்டு அஞ்சவோ கூடாது.

ஓடியாடிச் சந்தடி செய்து ஐந்து ஆண்டுகளாய் நாம் நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்ய முயன்றுள்ளோம். ஆனால் இது வெறும் சந்தடியாகவே இருந்துள்ளது. இந்த ஐந்து ஆண்டுகளில் இது பலன் ஏதும் அளித்ததாகத் தெரியவில்லை, அல்லது தகாததாகவுங் கூட, அல்லது தீமை பயப்பதாகவுங்கூட இருந்திருக்கிறது. இந்தச் சந்தடி நாம் ஏதோ செய்து வந்தோமென்ற தோற்றத்தை உண்டாக்கியது, ஆனால் நடைமுறையில் இச்சந்தடி நமது அலுவலகங்களையும் மூளையையும் திணறடித்து வந்தது.

முடிவில் இப்போது இவை எல்லாம் மாற்றப்படு வதற்குரிய நேரம் வந்துவிட்டது.

எண்ணிக்கையில் சொற்பமாயினும் தரத்தில் உயர்ந்

ததே நன்று என்னும் விதியை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு நம்பகமான ஆட் செல்வம் கொஞ்சமும் இல்லாமற் போவதைவிட, இரண்டு ஆண்டோ, மூன்று ஆண்டோகூட ஆவதாயினும் இச்செல்வத்தைப் பெறுவதே நன்று என்கிற விதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த விதியைக் கடைப்பிடிப்பதும் நமது நிலைமைகளில் இதனைச் செயல்படுத்துவதும் கடினமாகவே இருக்கும், நான் இதை அறிவேன். இதற்கு நேர் எதிரான விதி ஆயிரம் இடுக்குகள் வழியே பலவந்தமாய் உள்ளே நுழைந்து விடும் என்பதை அறிவேன். இதற்கு நாம் பிரம்மாண்ட அளவிலான எதிர்ப்பு காட்ட வேண்டியிருக்கும் என்பதையும், விடாப்பிடியான அசுரப் பிரயத்தனம் தேவையாய் இருக்கும் என்பதையும், எப்படியும் முதற் சில ஆண்டுகளுக்கு இத்துறையில் செய்தாக வேண்டிய வேலை மெத்தக் கடினமாகவே இருக்கும் என்பதையும் நான் அறிவேன். ஆனாலும் இம்மாதிரியான பிரயத்தனத்தால் மட்டும்தான் நாம் நமது குறிக்கோளை அடைய முடியும் என்பதிலும், இந்தக் குறிக்கோளை அடையும் போது மட்டும்தான் சோவியத் குடியரசு என்றும் சோஷலிசக் குடியரசு என்றும் பெயர் சூட்டிக்கொள்வதற்கு மெய்யாகவே தகுதி வாய்ந்த ஒரு குடியரசை நாம் தோற்றுவிக்க முடியும் என்பதிலும் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

எனது முதற் கட்டுரையில் எடுத்துக்காட்டாய் நான் தந்த புள்ளி விவரங்கள் பெரிதும் குறைத்துக் காட்டுவதாகப் பல வாசகர்களும் நினைத்திருப்பார்கள். அந்தப் புள்ளி விவரங்கள் குறைத்துக் கூறுகிறவையே என்பதை நிரூபிப்பதற்குப் பல கணக்கீடுகளும் செய்து காட்டலாம் என்றே நம்புகிறேன். ஆனால் இம்மாதிரியான கணக்கீடுகளுக்கும் பிறவற்றுக்கும் மேலானதாய் ஒன்றை, அதாவது மெய்யாகவே முன்மாதிரியாக இருக்கும்படியான தரநிலையை அடைவதில் நமக்குள்ள ஆர்வத்தை, நாம் அமர்த்திட வேண்டுமென நினைக்கிறேன்.

நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்காக முழு முனைப்புடன் வேலை செய்ய வேண்டிய

தருணம் முடிவில் இப்பொழுது வந்து விட்டது என்று கருதுகிறேன். இந்த வேலையில் அவசரத்தைக் காட்டிலும் அதிக தீமைபயப்பது எதுவும் இருக்க முடியாது எனலாம். எனவே தான் புள்ளி விவரங்களை ஊதிப் பருக்க வைப் பதை எதிர்த்து எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இதற்கு மாருய், எனது கருத்துப்படி புள்ளி விவரங்கள் குறித்து இங்கே நாம் குறிப்பிடத்தக்க அளவுக்குச் செட் டாய் இருத்தல் வேண்டும். ஒளிவு மறைவின்றி நாம் இதனைச் சொல்லியாக வேண்டும்: தொழிலாளர், விவ சாயிகளது மேற்பார்வைத் துறை மக்கள் கமிசாரகம் தற்போது கொஞ்சமும் செல்வாக்கற்றதாய் இருக்கிறது. நமது தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறை யின் அலுவலகங்களைக் காட்டிலும் மோசமாய் அமைந்த அலுவலகங்கள் எவையும் இல்லை, தற்போதுள்ள நிலைமை களில் இந்த மக்கள் கமிசாரகத்திடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதை யாவரும் அறிவர். முத லாவதாக, முன்மாதிரியான அலுவலகமாய் இருக்கக் கூடியதும், இரண்டாவதாக, எல்லாரது முழு நம்பிக்கைக் கும் உரியதாகக் கூடியதும், மூன்ருவதாக, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனைப் போல் உயர்நிலைக்கு உரியதான ஓர் அமைப்பு ஆற்றும் பணியின் பயனுடைமையை நாம் மெய்ப்பித்துள்ளதை எல்லாருக்கும் நிரூபித்துக் காட்டக் கூடியதுமாகிய ஓர் அலுவலகத்தை ஒருசில ஆண்டுகளுக் குள் தோற்றுவிப்பதற்கு மெய்யாகவே விரும்புவோமா யின், மேற்கூறிய உண்மையை நாம் உறுதியாக நினைவில் இருத்திக் கொண்டாக வேண்டும். என் அபிப்பிராயத்தில் அலுவலகங்களது ஊழியர்களின் எண்ணிக்கை பற்றிய பொதுவான எல்லா நியமங்களும் உடனடியாகவும் இறுதி யாகவும் நிராகரிக்கப்பட வேண்டும். தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறைக்குரிய ஊழியர்களை நாம் முழுக் கவனம் செலுத்தி மிகக் கண்டிப்பான சோதனையின் அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும், வேறு எவ்விதத்திலும் தேர்வு செய்யலாகாது. ஏனோதானோ வென செயல்படுவதும், கிஞ்சித்தும் நம்பிக்கை ஊட்டாத தும், தன் சொல்லுக்கு அதிக மதிப்பில்லாததுமான மக்கள் கமிசாரகம் ஒன்றை அமைத்து என்ன பயன்? இவற்றை

எல்லாம் தவிர்க்க வேண்டுமென்பதே, தற்போது நாம் மனதிற் கொண்டுள்ள புத்தமைப்புப் பணியின் பிரதான குறிக்கோள் என்று நினைக்கிறேன்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களாக நாம் சேர்த்து வரும் தொழிலாளர்கள் குற்றங்குறை இல்லாக் கம்யூனிஸ்டுகளாய் இருக்க வேண்டும். அவர்களது வேலைகளுக்குரிய வழிமுறைகளையும் இவ்வேலைகளின் நோக்கங்களையும் அவர்களுக்குக் கற்று தருவதற்கான பணியில் மிகப் பெரும் பகுதி இனிமேல்தான் செய்யப்பட வேண்டுமென நினைக்கிறேன். மேலும், இந்த வேலைகளில் துணை புரிவதற்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான செயலாளர்கள் இருந்தாக வேண்டும், இந்தப் பதவிகளில் அமர்த்தப்படும் முன் இவர்கள் மும்மடங்கான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். முடிவில், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் நேரடியாகத் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையின் சிப்பந்திகளாக நாம் அமர்த்திக் கொள்ளத் தீர்மானிக்கும் பிரமுகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோராய் இருக்க வேண்டும்:

முதலாவதாக, இவர்கள் கம்யூனிஸ்டுகள் சிலரால் சிபார்சு செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும்;

இரண்டாவதாக, நமது அரசுப் பொறியமைவு குறித்து அறிந்தவர்கள்தாஞ் என்பதற்கான பரீட்சையில் தேர்வு பெற்றாக வேண்டும்;

மூன்றாவதாக, நமது அரசுப் பொறியமைவுத் தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள், நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகள், அலுவலக நடைமுறை முதலானவற்றிலான பரீட்சையில் தேர்வு பெற்றாக வேண்டும்;

நான்காவதாக, இந்தப் பொறியமைவு அனைத்தின் செயற்பாட்டுக்கும் ஒட்டுமொத்தமாய் நாம் உறுதிமொழி அளிக்க முடியும்படியான விதத்தில் இவர்கள் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களோடும், தமது துறையின் செயலாளர்களோடும் இசைவாய் வேலை செய்ய வேண்டும்.

இந்த நிபந்தனைகள் மிதமிஞ்சிய அளவுக்குக் கண்டிப்பானவை என்பது எனக்குத் தெரிந்ததுதான். தொழிலாளர்

கள், விவசாயிகளது மேற்பார்வைத் துறையின் பெருவாரி யான ''காரிய சாத்தியக் கண்ணேட்டம் கொண்ட'' ஊழி யர்கள் இந்த நிபந்தனைகள் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்பார்கள், அல்லது இவற்றை எள்ளி நகையாடுவார் கள் என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையைப் போன்றதொரு மக்கள் கமிசாரகத்தின் நடைமுறை நோக்கம் என்னவென் பதை இந்த மேற்பார்வைத் துறையின் தற்போதைய தலை வர்களில் யாரேனும், அல்லது இத்துறையுடன் இணைவு கொண்டோரில் யாரேனும் நேர்மையுடன் எனக்குச் சொல்வார்களா என்று கேட்கிறேன். பொருத்தமானது தானா என்பதை உணரும் ஆற்றலைத் திரும்பவும் பெறு வதற்கு, இவர்களுக்கு இந்தக் கேள்வி துணை புரியுமென நினைக்கிறேன். நம்பிக்கைக்கு இடமில்லாததாகி விட்ட இந்த தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறை சம்பந்தமாக எத்தனையோ தரம் நாம் செய்திருக் கும் திருத்தமைவுகளில் மேலும் ஒன்றைச் செய்து பயனில்லையென விட வேண்டும், அல்லது மெள்ளச் செயல்படும்படியான, கடினமான, வழக்கத்துக்கு மாறான வழிகளில் சென்று, சரிதானா என்று திரும்பத் திரும்பச் சோதித்துப் பார்த்துக் கொண்டு, மெய்யாகவே முன் மாதிரியாகத் திகழக் கூடியதான ஒன்றை, தனது பட்டத் தாலும் பதவியாலும் மட்டுமின்றி தனது செயல்திறனா லும் எல்லோரது மதிப்புக்கும் உரியதாகக் கூடியதான ஒன்றைத் தோற்றுவிக்க மெய்யாகவே நாம் வேலை தொடங்கியாக வேண்டும்.

நாம் பொறுமையுடன் செயல்படத் தயாராயில்லை எனில், இப்பணிக்குச் சில ஆண்டுகளைச் செலவிட விரும்ப வில்லை எனில், இதில் நாம் இறங்காமல் இருப்பதே உத் தமம்.

அவசர அவசரமாய் ஏற்கெனவே நாம் அமைத்திருக் கும் நிலையங்களில்—அதாவது உழைப்பு ஆராய்ச்சி உயர் கழகங்களிலும் பிறவற்றிலும்—குறைந்தபட்சமாகச் சில வற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இவை முழு அள வுக்குத் தக்கவாறு அமைந்தவைதானா என்று சரிபார்த் திட வேண்டும், நவீன விஞ்ஞானத்தின் உயர் தரங்களுக்கு

மெய்யாகவே உகந்தவாறு அமைந்து நமக்கு இவ்விஞ் ஞானத்தின் அனுகூலங்கள் அனைத்தும் கிடைக்கச் செய் யும் விதத்தில் மட்டுமே இவை தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எனது அபிப்பிரா யம். இதை நாம் செய்வோமாயின், தனக்குரிய பணிகளைச் செவ்வனே செய்து, நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்காக ஒழுங்காகவும் இடைவிடாமலும் செயலாற்ற வல்லதாகிய ஒரு நிலையத்தை—தொழிலாளி வர்க்கத்தின், ருஷ்யாவினது கம்யூனிஸ்டுக் கட்சியின், நமது குடியரசின் பெருந்திரள் மக்கள் அனைவரின் முழு நம்பிக்கைக்கும் உரித்தான ஒரு நிலையத்தை—ஒருசில ஆண்டுகளில் பெற்று விடலாமென எதிர்பார்ப்பது கற் பனுவாதமாய் இராது.

இந்தப் பணிக்கான தயாரிப்பு வேலையை இப்போதே ஆரம்பிக்கலாம். திருத்தியமைப்பதற்கான தற்போதைய திட்டத்தைத் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார் வைத் துறை மக்கள் கமிசாரகம் ஏற்றுக் கொள்ளுமா யின், இப்போதே அது தயாரிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்; பணி முழுமையாக நிறைவேற்றப்படும் பொருட்டு அவசரப்படாமலும், ஏற்கெனவே செய்யப் பட்டதை மாற்றுவதற்குத் தயங்காமலும் இடையறாது ஒழுங்காய் வேலை செய்யலாம்.

இந்த விவகாரத்தில் அரைமனதான தீர்வு எதுவும் பெருந் தீங்கிழைப்பதாகவே இருக்கும். தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையின் ஊழியர்களது எண் அளவுக்கான எந்தவொரு நடவடிக்கையும் வேறு எந்தக் கருத்தின் அடிப்படையிலும் அமையுமாயின், உண் மையில் அது பழைய அதிகாரவர்க்கக் கருத்துக்களின், பழைய தப்பெண்ணங்களின் அடிப்படையில்தான், ஏற் கெனவே நிந்திக்கப்பட்டவையும் பொதுவாக எல்லோரா லும் ஏளனம் செய்யப்பட்டவையும் இன்ன பிறவும் ஆகியவற்றின் அடிப்படையில்தான் அமைந்திருக்கும்.

சாராம்சத்தில், இங்குள்ள பிரச்சினை பின்வருமாறே இருக்கிறது:

அரசுக் கட்டுமானப் பணியில் மெய்யாகவே ஏதே னும் ஓரளவுக்கு நாம் கற்றுக் கொண்டுவிட்டோம் (ஐந்து

ஆண்டுகளில் ஏதேனும் ஓரளவுக்கு நாம் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்) என்று இப்போது நிரூபித்துக் காட்ட வேண்டும்; இல்லையேல், இதற்கு இன்னும் நாம் போதிய முதிர்ச்சி அடைந்தாகவில்லை என்று நிரூபிப்போர் ஆவோம். பின் கூறியதே உண்மையெனில், இப்பணியில் நாம் இறங்காமல் இருப்பதே நல்லது.

நம்மிடம் இருக்கும் ஆட் செல்வத்தைக் கொண்டு பார்க்கையில், குறைந்தது ஒரேயொரு மக்கள் கமிசாரகத்தையாவது முறைப்படித் திருத்தியமைக்கப் போதுமான அளவுக்குக் கற்றுக் கொண்டு விட்டோமெனக் கொள்வது வீண் பெருமையாகாதெனநினைக்கிறேன். மெய்தான், இந்த ஒரு மக்கள் கமிசாரகம், நமது அரசுப் பொறியமைவு அனைத்துக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தாக வேண்டும்.

பொதுவாக உழைப்பின் ஒழுங்கமைப்பு குறித்தும், குறிப்பாக நிர்வாகம் குறித்தும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்படுவதற்காக உடனே நாம் போட்டியை அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே எர்மான்ஸ்கி வெளியிட்டிருக்கும் புத்தகத்தை நாம் ஓர் அடிப்படையாகக் கொள்ளலாம், எனினும் இவர் மென்ஷிவிசத்திடம் அனுதாபம் கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிவதையும், சோவியத் அமைப்புக்குப் பாடப் புத்தகம் தயாரிப்பதற்கு இவர் தகுதியுடையவரல்ல என்பதையும் இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிட வேண்டும். அண்மையில் கேர்ழென்த்ஸெவ் எழுதியிருக்கும் புத்தகத்தையும் நாம் அடிப்படையாகக் கொள்ளலாம், பகுதியளவில் பாடப் புத்தகமாய் இருக்கும்படியான ஏனைய புத்தகங்களிலும் சில நமக்கு உபயோகமாய் இருக்கலாம்.

தகுதியும் கடமை உணர்ச்சியும் கொண்டவர்கள் சிலரை இலக்கியங்களைச் சேகரிப்பதற்காகவும், இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அறிவதற்காகவும் நாம் ஜெர்மனிக்கோ, பிரிட்டனுக்கோ அனுப்பி வைக்கலாம். அமெரிக்காவுக்கோ கானடாவுக்கோ அனுப்ப முடியாமற் போகலாம் என்பதால் பிரிட்டனைக் குறிப்பிடுகிறேன்.

தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறை

யில் வேலை ஏற்கக் கூடிய ஊழியர்களுக்கான பரீட்சை களுக்காகப் பூர்வாங்கப் பாடத்திட்டத்தை வகுத்திடு வதற்காக நாம் ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுக்கான வேட்பாளர் களுக்கும் இவ்வாறே செய்ய வேண்டும்.

இவற்றையும் இவற்றையொத்த பிற நடவடிக்கை களையும் எடுப்பதில் மக்கள் கமிசாருக்கோ, தொழிலாளர், விவசாயிகள் மேற்பார்வைத் துறையின் குழும உறுப் பினர்களுக்கோ, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவுக்கோ எந்தச் சள்ளையும் ஏற்பட்டுவிடாது என்பது தெளிவு.

இவற்றுடன் கூடவே, மத்தியக் கண்காணிப்புக் கமிஷ னின் உறுப்பினர்களுக்கான வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்காகத் தயாரிப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். இந்தப் பதவிக்குப் போதுமான அளவிற்கும் அதிகமாகவே இப்போது நாம் எல்லாத் துறைகளிலு மான அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களிடமிருந்தும், மற்றும் நமது சோவியத் மேற்கல்விக் கூடங்களின் மாண வர்களிடமிருந்தும் தேர்வு செய்ய முடியுமென நம்பு கிறேன். எந்தவொரு வகையினரையும் முன்கூட்டியே வேண்டாமென ஒதுக்குவது சரியல்ல. பல இயல்புகளும் வேறுபாடான சிறப்புத் தகுதிகளும் ஒருசேர இணையும் படிக் கண்காணிப்புக் கமிஷன் கலப்பான இயைபுடைய தாய் அமைவதற்கு உசிதமான சலுகை காட்ட வேண்டி யிருக்கலாம். ஆகவே வேட்பாளர் பட்டியலை வகுத்திடு வதற்குக் கணிச அளவிலான வேலை தேவையாய் இருக் கும். உதாரணமாய், புதிய மக்கள் கமிசாரகத்தின் ஊழி யர்கள் ஒரே ரகத்தினராய் இருப்பது, எடுத்துக்காட் டாய் முற்றிலும் அதிகாரிகளாகவே இருப்பது, அல்லது கிளர்ச்சிப் பிரசார ரகத்தினரையோ, எல்லாரோடும் நெருங்கிச் சுமுகமாகப் பழகும் தன்மையையோ, இத்துறையிலான ஊழியர்கள் அதிகம் பழக்கப்படாத வட்டாரங்களுக்குள் ஊடுருவிச் செல்லும் திறனையோ தமது முக்கிய பண்பாகக் கொண்டவர்களையோ விலக்கி ஒதுக்குவது விரும்பத் தக்கதல்ல.

* * *

எனது திட்டத்தைக் கல்வி நிலையங்களது திட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் எனது கருத்தைச் சிறந்த முறையில் தெளிவுபடுத்த முடியுமென நினைக்கிறேன். மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் அவர்களது தலைமைக் குழுவின் வழிகாட்டலில் அரசியல் குழுவின் எல்லாக் கோப்புகளையும் ஆவணங்களையும் முறையாய்ப் பரிசீலித்து வர வேண்டும். மிகச் சிறியவற்றிலிருந்தும் தனியார் உடைமையில் இருப்பவற்றிலிருந்தும் மிக உயர்ந்த அரசு அலுவலகங்கள் வரையிலான நமது அலுவலகங்களின் வேலை ஒழுங்கை புலனாய்வு செய்வது சம்பந்தமான பல்வேறு வேலைகளிடையிலும் இவர்கள் தமது நேரத்தைச் சரிவர பங்கீடு செய்து கொண்டாக வேண்டும். முடிவில், இவர்களது பணி தத்துவார்த்த ஆய்வும், அதாவது தாம் ஈடுபடத் திட்டமிடும் வேலைகளின் ஒழுங்கமைப்புத் தத்துவத்தைப் பற்றிய ஆய்வும், பழைய தோழர்களின் வழிகாட்டலிலோ, உழைப்பின் ஒழுங்கமைப்புக்கான உயர்நிலைக் கல்விக் கூடங்களது ஆசிரியர்களின் வழிகாட்டலிலோ அமைந்த நடைமுறை வேலைகளும் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும்.

ஆனால் இவ்விதமான கல்வித் துறைப் பணியுடன் மட்டும் இவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட முடியுமென நான் நினைக்கவில்லை. இதனுடன் கூட, போக்கிரிகளெனச் சொல்ல மாட்டேன், ஆனால் ஓரளவுக்கு அவர்களை ஒத்த ஆட்களைப் பிடிப்பதற்கான பயிற்சி என்றும், தமது நடமாட்டத்தையும் அணுகு வழிகளையும் பிறவற்றையும் மறைப்பதற்கான தனி வகை உத்திகளை வகுத்திடுதல் என்றும் தயங்காது கூற வேண்டியிருக்கும் ஒரு வேலைக்கும் இவர்கள் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

மேற்கு ஐரோப்பிய அரசாங்க அலுவலகங்களில் இத்தகைய பிரேரணைகள் முன்வைக்கப்படுமானால், அவை பயங்கரக் கோபக் கனலையும் ஒழுக்க நெறியின் பாற்பட்ட ஆத்திர உணர்ச்சியையும் பிறவற்றையும் கிளர்ந்தெழச் செய்யும். ஆனால் நம்மிடையிலும் இப்படி எழத்தக்க வாறு அந்த அளவுக்கு நாம் அதிகாரவர்க்கப் பாங்கினராய்

ஆகிவிடவில்லை என்றே நான் நம்புகிறேன். யாரேனும் பிடிக்கப்பட்டு விடலாம் என்கிற கருத்து நம்மில் எவரை யும் அதிர்ச்சியடையச் செய்யும்படியான அளவுக்குப் புதிய பொருளாதாரக் கொள்கை மதிப்பும் மரியாதை யும் பெறுவதில் இன்னமும் வெற்றி பெற்றுவிடவில்லை. நமது சோவியத் குடியரசு மிகவும் அண்மையிலேதான் அமைக்கப்பட்டது, பழைய குப்பைக் கூளம் இன்னமும் குவியல்களாய்ச் சுற்றிலும் குவிந்து கிடக்கிறது, தந்திர உத்திகள் மூலமும் சில நேரம் தொலைவிடங்களிலுள்ள ஆதாரங்களை நோக்கிச் செல்லும் படியான அல்லது சுற்றி வளைத்துச் செல்லும் படியான புலன் விசாரணைகள் மூல மும் நாம் இந்தக் குப்பைகளைக் கிளற வேண்டி வருவது குறித்து அதிர்ச்சியடைய வேண்டுமென யாரும் நினைக்க மாட்டார். ஆனால் அப்படி அதிர்ச்சியடைய வேண்டு மென யாராவது நினைப்பாராயின், அம்மாதிரியான ஆள் நிச்சயம் தம்மைக் கேலிக்குரியவராகவே ஆக்கிக் கொள் வார் என்பதில் ஐயமில்லை.

நமது புதிய தொழிலாளர், விவசாயிகளது மேற்பார் வைத் துறையானது, பிரெஞ்சுக்காரர்கள் pruderie என் கிறார்களே, அதாவது பகட்டான நாணம், அதனை விட் டொழித்துவிடுமென நம்புவோமாக. இதை நாம் நகைக் கத்தக்க ஆசாரப் பற்று என்றோ, நகைக்கத்தக்க பித்தலாட்டம் என்றோ சொல்லலாம். முற்றிலும் நமது சோவியத்துகளையும் நமது கட்சியையும் சேர்ந்த அதி காரவர்க்கத்துக்குத்தான் இது ஆதாயமானது. நமது சோவியத் அலுவலகங்களில் மட்டுமின்றி நமது கட்சி அலுவலகங்களிலும் அதிகாரவர்க்கத்தினர் இருக்கவே செய்கிறார்கள் என்பதை இடைக்குறிப்பாய் இங்கு கூறு வோமாக.

நாம் கற்க வேண்டுமென்றும், உழைப்பின் உயர்நிலை ஒழுங்கமைப்புக் கல்விக்கூடங்களிலும் பிறவற்றிலும் கற்க வேண்டுமென்றும் நான் மேலே கூறிய போது, எவ்விதத் திலும் நான் வகுப்பறை மூலமான ''கற்றறிதலைக்'' குறிப்பிடவோ, வகுப்பறை மூலமாய் மட்டுமே கற்றறிய வேண்டும் என்ற கருத்துடன் என்னை கட்டுப்படுத்திக் கொள்ளவோ இல்லை. இந்த விவகாரத்தில் ''கற்றறிதல்''

என்பது ஓரளவு தமாஷான சூழ்ச்சியும் தந்திரமும் ஏமாற்று வித்தையும் இவ்வகைப்பட்ட பிறவும் உள்ளடங்கியதே என்பதை நான் ஒத்துக் கொள்ள மறுப்பதாக மெய்யான புரட்சியாளர் யாரும் சந்தேகிக்க மாட்டாரென நம்புகிறேன். பகட்டான ஒழுங்கும் காரிய தோரணையும் மிகுந்த மேற்கு ஐரோப்பிய அரசுகளில் இம்மாதிரியான ஒரு கருத்து எவரையும் மிரளச் செய்வதாய் இருக்கும், மதிப்புக்குரிய எந்த அதிகாரியும் இது குறித்து நினைத்துப் பார்க்கவுங்கூட சம்மதிக்க மாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நாம் அந்த அளவுக்கு அதிகாரவர்க்க மனப்பாங்கு கொண்டோராகிவிடவில்லை, நம்மிடையே இந்தக் கருத்து பற்றிய விவாதம் வேடிக்கையான சிரிப்பையே தவிர வேறு எந்த விளைவையும் உண்டாக்கி விடாது என்று நான் நம்புகிறேன்.

பயனுடைமையையும் கேளிக்கையையும் ஒன்றுசேரச் செய்தால் என்னவாம்? எள்ளி நகையாடத்தக்கதான ஒன்றை, தீமையான ஒன்றை, ஓரளவு நகைக்கத்தக்கதும் ஓரளவு தீமையானதுமான ஒன்றை, இன்ன பிறவற்றை அம்பலப்படுத்துவதற்காக வேடிக்கையான, அல்லது ஓரளவு வேடிக்கையான தந்திரத்தைக் கையாண்டால் என்னவாம்?

நமது தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைக் கமிஷன் இந்தக் கருத்துக்களைப் பரிசீலிக்க முற்படுமாயின், அது பெருமளவில் நன்மையடையும் என்பதாய் எனக்குத் தோன்றுகிறது. நமது மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களும் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையைச் சேர்ந்த அவர்களது கூட்டாளிகளும் மிகச் சிறந்த வெற்றிகள் சிலவற்றைக் கண்டிருக்கிறார்கள். இவ்வெற்றிகளின் பட்டியலானது, நமது வருங்காலத் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையினராலும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களாலும், பகட்டான நாணமும் ஆசாரப் பற்றும் மிகுந்த பாடப் புத்தகங்களில் குறிக்கப்படத் தகாத பல இடங்களிலும் நிகழ்த்தும் மிகப் பல தீரச் செயல்களாலும் வளம் பெறுமென நினைக்கிறேன்.

* * *

கட்சி அலுவலகத்தை சோவியத் அலுவலகத்துடன் இணைப்பதாவது, எப்படி அது? அனுமதிக்கத் தகாதது அல்லவா அது?

நான் இந்தக் கேள்வியை எழுப்புவது என் சார்பில் அல்ல; சோவியத் அலுவலகங்களில் மட்டுமின்றி கட்சி அலுவலகங்களிலும் அதிகாரவர்க்கத்தினர் இருப்பதாய் மேலே கூறினேனே, அவர்களது சார்பில் இதை எழுப்பு கிறேன்.

இந்த இணைவு நமது பணியின் நலன்களுக்கு உகந்த தாய் இருக்குமாயின், ஒன்றை மற்றொன்றுடன் ஏன் இணைக்கக் கூடாதாம்? அயல்துறை மக்கள் கமிசார கத்தைப் போன்ற ஒன்றில் ஆரம்ப நாட்களிலேயே இம் மாதிரியான இணைவு நடைமுறைக்கு வந்து, பயன் அளித் திருக்கக் காண்கிறோமா, இல்லையா? அயல் அரசுகளது தந்திரத்தை எனலாம்—இதனிலும் கண்ணியக் குறை வான பதத்தை உபயோகிக்க வேண்டாமெனில்—முன் னறிந்து தடுக்கும் பொருட்டு, அவற்றின் ''ஆட்டத் துக்குப்'' பதிலளிக்கும் முறையில் நாம் மேற்கொள்ளும் ''ஆட்டத்தைப்'' பற்றிய சிறிதும் பெரிதுமான பல பிரச் சினைகள் குறித்தும் கட்சியின் கண்ணோட்டத்திலிருந்து போலிட் பியூரோ விவாதிக்கவில்லையா? கட்சி உறுப்பு ஒன்றுடன் சோவியத் உறுப்பு ஒன்று கொண்டுள்ள நெகிழ் வான இந்த இணைவு பெரும் பலத்துக்குரிய ஆதாரமாய் நமது அரசியலில் இருக்கவில்லையா? தனது பயனுடை மையை நிரூபித்துக் காட்டியிருக்கும் ஒன்று, நமது அயல் துறை அரசியலில் திட்டவட்டமாய் ஏற்கப்பட்டு இனி இத்துறையில் இது குறித்து ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்னும்படி அந்த அளவுக்குப் பழக்கமானதாகி விட்ட ஒன்று, நமது அரசுப் பொறியமைவு அனைத்தையும் பொறுத்தவரை குறைந்தது அதே அளவுக்குப் பொருத்த மானதாகவே இருக்குமென நினைக்கிறேன் (உண்மையில் மேலும் அதிக அளவுக்குப் பொருத்தமானதாய் இருக்கு மென நினைக்கிறேன்). தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையின் பணிகள் நமது அரசுப் பொறி யமைவு அனைத்தும் அடங்கும்படி வியாபகமானவை. இத்துறையின் செயற்பாடானது, அரசு அலுவலகங்களில்

ஒன்று விடாமல் யாவற்றையும்—ஊராட்சியைச் சேர்ந் தவை, மத்திய அமைப்புகளைச் சேர்ந்தவை, வாணிபத் துறையிலானவை, முற்றிலும் நிர்வாகத் துறையிலானவை, கல்வி சம்பந்தமானவை, ஆவணக் காப்புக்கானவை, நாடகத் துறையிலானவை முதலான பலவற்றையும்— சுருக்கமாய், விதிவிலக்கின்றி எல்லாவற்றையும்— கட்டுப்படுத்துவதாய் இருக்க வேண்டும்.

ஆகவே, இத்தகைய விரிவும் வீச்சும் வாய்ந்த செயற் பாட்டுக்குரிய ஓர் அலுவலகம், தவிரவும் செயற்பாட்டின் வடிவங்களில் இப்படி அதிவிசேஷ நெகிழ்வு தேவைப்படும் அலுவலகம், கட்சிக் கண்காணிப்பு அலுவலகத்துக்கும் சோவியத் கண்காணிப்பு அலுவலகத்துக்கும் இடையிலான இந்தத் தனி வகை இணைவைக் கொள்வதற்கு ஏன் அனு மதிக்கலாகாது?

இப்படி இணைவு கொள்வதற்கு எந்தத் தடங்கலும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, இம்மாதிரியான இணைவு நமது பணியின் வெற்றிக்கான ஒரே உத்தரவாதமாகும் என்றும் நான் கருதுகிறேன். இது சம்பந்தமான எல்லா ஐயங்களும் நமது அரசுப் பொறியமைவைச் சேர்ந்த படுமோசமாய் அழுக்கேறி நல மிழந்த முடுக்குகளிலிருந்து எழுகிறவை என்றும், ஏளனச் சிரிப்பு ஒன்றே இவற்றுக்கு ஏற்ற பதில் என்றும் நினைக் கிறேன்.

* * *

மற்றொரு சந்தேகம்: கல்வித் துறைச் செயற்பாட்டை அதிகாரச் செயற்பாட்டுடன் இணைப்பது உகந்ததுதானா? உகந்தது மட்டுமல்ல, அவசியமானதுங்கூட — என் பதாகவே எனக்குத் தோன்றுகிறது. பொதுவாகப் பேசு மிடத்து, மேற்கு ஐரோப்பிய அரசு வடிவம் குறித்து நாம் புரட்சிகரமான போக்குடையவர்கள்தான் என்றாலும், பெருந்தீங்கிழைக்கும் அதனுடைய நகைக்கத்தக்கத் தப்பெண்ணங்களால் நாமும் பீடிக்கப்படுவதற்கு நாம் இடமளித்துவிட்டோம். நமது அருமை அதிகாரவர்க்கத் தினர் வேண்டுமென்றே நாம் இவற்றால் பீடிக்கப்படும் படி ஓரளவுக்குச் செய்திருக்கிறார்கள். இந்தத் தப்பெண்

ணங்களால் குழம்பிய நீரில் அடிக்கடி மீன் பிடித்துத் தமது சொந்த நலன்களை ஈடேற்றிக் கொள்ள வேண்டுமென்று செயல்பட்டவர்கள் இந்த அதிகாரவர்க்கத்தினர். இந்தக் குழம்பிய நீரில் அவர்கள் நிறையவே மீன் பிடித்தார்கள், எவ்வளவு விரிவான அளவுக்கு அவர்கள் இப்படி மீன் பிடித்தார்கள் என்பதை நம்மிடையே உள்ள குருடர்களால் மட்டும்தான் கவனியாது இருக்க முடிந்தது.

சமுதாய, பொருளாதார, அரசியல் உறவு நிலைகளின் எல்லாத் துறைகளிலும் நாம் ''பயங்கரமான'' அளவுக்குப் புரட்சி மனப்பாங்கு உடையவர்கள்தாம். ஆனால் பதவிப் படிநிலைகளுக்கு அளிக்க வேண்டிய மதிப்பு குறித்தும், அலுவலக வேலைகளுக்குரிய வடிவங்கள், சடங்குகள் குறித்தும் நமது ''புரட்சி மனப்பாங்கு'', ஊசிப்போன மாமூல் முறைகளுக்கு அடிக்கடி அடிபணிந்து விடுகிறது. சமுதாய வாழ்வில் முன்னேக்கிப் பெரும் பாய்ச்சல் நடந்தேறும் அதே நேரத்தில், கடுகளவே ஆன மாற்றங்களைச் செய்வதற்கும் வியக்கத்தக்கவாறு அச்சம் தெரிவிக்கப்படும் இந்த சுவையான நிகழ்வை நாம் பல தரம் பார்த்திருக்கிறோம்.

இது புரிந்து கொள்ளக் கூடியதே. ஏனென்றால் மிகவும் துணிச்சல் வாய்ந்த முன்னேற்றப் பாய்ச்சல்கள் யாவும், நெடுங்காலமாகத் தத்துவார்த்த ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு துறையில்தான், பிரதானமாகத் தத்துவ அளவிலும் இதன்றி அனேகமாய் வேறு எதற்கும் இடமில்லாத நிலைமையிலும் வளர்க்கப்பட்டு வந்த ஒரு துறையில்தான் நடந்தேறின. ருஷ்யர்கள் வேலை நேரம் முடிந்த பின், அசாதாரணத் துணிச்சல் வாய்ந்த தத்துவார்த்தக் கட்டமைவுகளில் ஈடுபட்டு, வெட்ககரமான அதிகாரவர்க்க அலுவலக எதார்த்த உண்மைகளிலிருந்து மனச் சாந்தி கண்டனர். எனவேதான் நமது நாட்டில் இந்த அசாதாரண துணிச்சல் வாய்ந்த தத்துவார்த்தக் கட்டமைவுகள் அசாதாரண ஏறுமாறுத் தன்மை பெறலாயின. பொதுவான கட்டமைவுகளில் வெளியான தத்துவார்த்தத் துணிகரப் போக்குடன் கூடவே, அலுவலக மாமூலில் சின்னஞ்சிறு சீர்திருத்தங்கள் சம்பந்தமான வியக்கத்தக்க பதற்றமும் வெளிப்பட்டு வந்தது.

நிலவுடைமையில் உலக அளவிலான ஒரு மாபெரும் புரட்சிக்கு வேறு எந்நாட்டிலும் கண்டிருக்க முடியாத துணிவுடன் திட்டம் வகுக்கப்பட்டது, அதே போது அலுவலக மாமூல் முறைகளில் அற்பத்தனமான சீர்திருத்தம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்றதும் கற்பனையானது இல்லா தொழிந்து விட்டது. பொதுப் பிரச்சினைகளில் அப்படி ''அற்புத'' பலன்கள் கிடைக்கும்படி கையாளப்பட்ட அந்தப் பொதுவான விதிகளை, இந்தச் சீர்திருத்தத்துக் காகக் கையாளுவதற்கு வேண்டிய கற்பனை அல்லது பொறுமை இல்லாமற் போய்விட்டது.

ஆதலால்தான், நமது இன்றைய வாழ்வில், ஒரு புறத்தில் எதற்கும் கலங்காத துணிச்சல், மறு புறத்தில் சின்னஞ் சிறு மாற்றங்களே என்றாலும் சிந்தனையானது மிரண்டுவிடும் அந்தக் கலவரம் ஆகிய இரண்டும் இப்படி வியக்கத்தக்க விதத்தில் கைகோத்துச் செல்கின்றன.

மெய்யாகவே மகத்தான எல்லாப் புரட்சிகளிலும் இவ்வாறே நிகழ்ந்திருப்பதாய் நினைக்கிறேன். ஏனென்றால், மெய்யாகவே மகத்தான புரட்சிகள் யாவும், பழையனவற்றுக்கும் — அதாவது பழையனவற்றை வளர்த்திடும் போக்குடையவற்றுக்கும் — புதியனவற்றுக்காகிய— அதாவது பழையனவற்றில் இம்மியளவும் இல்லாத அளவுக்குப் புதியனவாய் இருக்க வேண்டிய இவற்றுக் காகிய—கருத்தியலான பிரயத்தனத்துக்கும் இடையிலான முரண்பாடுகளிலிருந்து எழுகின்றவை.

புரட்சி எவ்வளவுக்கு எவ்வளவு திடுதிப்பென எழுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான காலத்துக்கு இந்த முரண்பாடுகள் பலவும் நீடிக்கின்றன.

* * *

நமது தற்போதைய வாழ்வின் பொதுவான இயல்பு வருமாறு: முதலாளித்துவத் தொழில் துறையை நாம் ஒழித்திருக்கிறோம், மத்திய காலத்திய அமைப்புகளையும் நிலப்பிரபுக்களுடைய நிலவுடைமையையும் தகர்த்துத் தரை மட்டமாக்குவதற்காக இயன்றது அனைத்தும் செய் திருக்கிறோம். இவ்விதம் நாம் சிறிய, மிகச் சிறிய விவசாயிகளைத் தோன்றச் செய்திருக்கிறோம். இந்த விவசாயிகள்

பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்று அதைப் பின் தொடர்கின்றனர். ஏனெனில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பணியால் விளைந்திருக்கும் பலன்களில் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால், அதிக வளர்ச்சி பெற்ற நாடுகளில் சோஷலிசப் புரட்சி வெற்றியடையும் வரையில், நாம் இந்தத் திட நம்பிக்கையை மட்டும் துணையாகக் கொண்டு தொடர்ந்து இயங்கி வருவது நமக்கு எளிதான காரியமன்று. ஏனெனில் பொருளாதார இன்றியமையாமை, முக்கியமாய் புதிய பொருளாதாரக் கொள்கைக்குரிய நிலைமைகளில், சிறிய, மிகச் சிறிய விவசாயிகளது உழைப்பின் உற்பத்தித் திறனை மிதமிஞ்சிய அளவுக்குக் கீழ்நிலையில் இருத்தி வைக்கின்றது. தவிரவும், சர்வதேசச் சூழ்நிலையுங்கூட ருஷ்யாவைப் பின்னுக்கித் தள்ளியது, மொத்தத்தில் மக்களது உழைப்பின் உற்பத்தித் திறனைக் குறையச் செய்து யுத்த முற்கால நிலைக்கும் கீழே செல்லும்படிச் செய்தது. நம்மைப் பின்னுக்கித் தள்ளிவிடுவதற்கும், கூடுமான அளவுக்கு நாட்டில் அழிவையும் சிதைவையும் பரவச் செய்யும் பொருட்டு உள்நாட்டு யுத்தத்துக்கான கூறுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ அரசுகள் ஓரளவுக்கு வேண்டுமென்றும், ஓரளவுக்கு உணர்வின்றியும், தம்மால் இயன்றது அனைத்தும் செய்தன. ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து இவ்வழியில் வெளி வருவதுதான் பல அனுகூலங்களையும் உடைய ஒன்றாய் அவற்றுக்குத் தோன்றியது. அவை ஏறத்தாழ இவ்வாறு வாதாடின: ''ருஷ்யாவில் புரட்சிகர அமைப்பை நாம் வீழ்த்தத் தவறினாலும், எப்படியும் சோஷலிசத்தை நோக்கி அது முன்னேறாதபடி தடுப்போம்''. அவற்றின் நோக்கு நிலையிலிருந்து அவை இதன்றி வேறு எவ்விதத்திலும் வாதாடுவதற்கில்லை. முடிவில் அவற்றின் பிரச்சினை பாதியளவுக்குத் தீர்வு பெற்றது. புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட புதிய அமைப்பை அவை வீழ்த்த முடியவில்லை. ஆனால் சோஷலிஸ்டுகள் முன்னறிந்து கூறியவை முற்றும் சரியே என்று நிரூபித்துக் காட்டியிருக்கக் கூடிய முன்னேற்ற அடியினை இந்த அமைப்பு உடனே எடுத்து வைக்காதபடி அவற்றால் தடுத்திட முடிந்தது. அந்த முன்னேற்ற அடி எடுத்து வைக்கப்

பட்டிருந்தால், இந்த அமைப்பு தனது உற்பத்திச் சக்திகளைப் பிரமாதமான வேகத்தில் வளர்த்துச் செல்ல முடிந்திருக்கும்; தனது உள்ளாற்றல்கள் யாவற்றையும் வளர்க்க முடிந்திருக்கும்; இந்த உள்ளாற்றல்கள் எல்லா மாகச் சேர்ந்து சோஷலிசத்தை மலரச் செய்திருக்கும்; சோஷலிசமானது பிரம்மாண்டமான சக்திகளைத் தன் அகத்தே கொண்டதாகும் என்றும் அளவு கடந்த ஒளி படைத்த வளர்ச்சி வாய்ப்புகளுக்குரிய ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்துள் மனிதகுலம் தற்போது பிரவே சித்து விட்டது என்றும் எல்லார்க்கும் சோஷலிஸ்டுகள் இவ்விதம் நிரூபித்துக் காட்டியிருப்பார்கள்.

தற்போது உருவாகியிருக்கும் சர்வதேச உறவுநிலை களது அமைப்பானது, ஓர் ஐரோப்பிய அரசு—ஜெர்மனி யானது—வெற்றி நாடுகளால் அடிமை செய்யப்பட்டிருக் கும் அமைப்பாகும். தவிரவும், மேற்குலகின் மிகப் பழைய அரசுகளான பலவும் யுத்தத்தில் தமது வெற்றியின் காரணமாய், மிகச் சொற்ப அளவிலான சில சலுகைகளைத் தமது ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கு அளிக்க முடியும்படி யான நிலையில் இருக்கின்றன. மிகச் சொற்ப அளவிலான சலுகைகளே என்ருலுங்கூட இவை அந்த நாடுகளின் புரட்சி இயக்கத்தின் வேகத்தை மட்டுப்படுத்தி, ஓரள வுக்கு ‘‘வர்க்கப் போர் நிறுத்தம்’’ ஏற்பட்டிருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்குகின்றன.

அதே நேரத்தில், கடந்த ஏகாதிபத்திய யுத்தத்தின் விளைவாய், கிழக்குலக நாடுகள் பலவும்—இந்தியாவும் சீனவும் பிறவும்—அவற்றின் பழைய தடத்திலிருந்து புரண்டு விடும்படி குலுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் வளர்ச்சியானது பொதுவான ஐரோப்பிய முதலாளித் துவ வழிகளை நோக்கித் திட்டவட்டமாகப் பெயர்ந்திருக் கிறது. பொதுவான ஐரோப்பிய கொந்தளிப்பு அவற்றின் மீது பாதிப்பு செலுத்த முற்பட்டிருக்கிறது. உலக முத லாளித்துவம் அனைத்திலுமான நெருக்கடிக்கே இட்டுச் செல்ல வேண்டிய வளர்ச்சிப் போக்கினுள் அவை ஈர்க்கப் பட்டிருப்பது இப்பொழுது தெளிவாகவே தெரிகிறது.

இவ்வாறு, தற்போது நம் எதிரே பின்வரும் கேள்வி எழுகிறது: நமது சிறிய, மிகச் சிறிய விவசாயிகள் வழி

யிலான உற்பத்தியையும், தகர்ந்து கிடக்கும் நமது தற் போதைய நிலைமையையும் கொண்டு நம்மால்—மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் சோஷலிசத்தை நோக்கியமைந்த அவற்றின் வளர்ச்சியை நிறைவு பெறச் செய்யும் வரை—அழியாது நீடித்திருக்க முடியுமா? ஆனால் இந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் அவற்றின் வளர்ச் சியை, முன்பெல்லாம் நாம் எதிர்பார்த்த விதத்தில் நிறைவு பெறச் செய்யவில்லை. படிப்படியாக சோஷலிசம் உள்ளூர "முதிர்ச்சி" பெறுவதன் மூலம் அல்லாமல், சில நாடுகளை ஏனையவை சுரண்டுவதன் மூலம், ஏகாதிபத் திய யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் முதன்மை யான தன் மீதான சுரண்டல் மூலமும், அதனுடன் சேர்ந்து கிழக்குலகம் அனைத்தின் மீதான சுரண்டல் மூலமும் அவை இவ்வளர்ச்சியை நிறைவு பெறச் செய் கின்றன. மறு புறத்தில், முதலாவது ஏகாதிபத்திய யுத்தத் தின் விளைவாய், கிழக்குலகு திட்டவட்டமான முறையில் புரட்சி இயக்கத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கிறது, உலகப் புரட்சி இயக்கத்தின் பொதுவான சூறுவளியினுள் திட்டவட்டமான முறையில் ஈர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலைமை நமது நாட்டுக்கு வரையறுக்கும் போர்த்தந்திரம் என்ன? பின்வருவதே என்பது வெளிப் படையாகத் தெரிகிறது: நமது தொழிலாளர் ஆட்சியதி காரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், நமது சிறிய, மிகச் சிறிய விவசாயிகளைத் தொடர்ந்து அதன் தலைமையிலும் செல்வாக்கிலும் இருக்கச் செய்வதற்காக வும் நாம் அளவு கடந்த எச்சரிக்கை உணர்வு வெளிப் படுத்தியாக வேண்டும். அனைத்து உலக சோஷலிசப் புரட்சியை எழவே செய்தாக வேண்டிய ஓர் இயக்கத்துள் உலகம் முழுமையும் இப்போது சென்று கொண்டிருக் கும் அனுகூலத்தை நமது நாடு பெற்றிருக்கிறது. ஆனால் உலகை இருமுகாம்களாகப் பிளப்பதில் ஏகாதிபத்திய வாதிகள் வெற்றி கண்டிருக்கும் பிரதிகூலத்தையும் நமது நாடு எதிர்நோக்குகிறது. கலாசார வளர்ச்சியும் முதலாளித்துவ வளர்ச்சியும் பெற்ற, மெய்யாகவே முன் னேறிய நாடான ஜெர்மனி காலூன்றி எழுந்து நிற்பது மிகவும் கடினமாகியிருக்கும் நிலைமையால் இந்தப் பிளவு

மேலும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது. மேற்குலகு எனப் படுவதன் முதலாளித்துவ அரசுகள் எல்லாம் அதைக் கொத்திக் கொண்டிருக்கின்றன, எழுந்து நிற்க முடியாத படி அதைத் தடுத்து வருகின்றன. மறு புறத்தில் கிழக் குலகு அனைத்தும், சுரண்டப்படும் உழைப்பாளர்களாகிய அதன் கோடானு கோடியானோர் மனிதகுலத் துன்பத்தின் கொடிய வரம்புக்குத் தள்ளப்பட்டு, அதன் உடல் வலிவும் பொருளாயத வலிவும் அதனிலும் மிகச் சிறியவையான மேற்கு ஐரோப்பிய அரசுகளில் எதனுடைய உடல் வலிவோடும் பொருளாயத, இராணுவ வலிவோடும் எவ் விதத்திலும் ஒப்பிடத் தகாத ஒரு நிலையில் பலவந்தமாய் இருத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

வருங்காலத்தில் இந்த ஏகாதிபத்திய அரசுகளுடனான மோதலிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமா? வெற்றி பெற்ற மேற்றிசை ஏகாதிபத்திய அரசுகளுக்கும் வெற்றி பெற்ற கீழ்த்திசை ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இடையிலான உள் முரண்பாடுகளும் மோதல்களும் நமக்கு இரண்டாம் முறையும் ஓய்வு இடை நேரம் தருமென—முன்பு ருஷ்ய எதிர்ப்புரட்சிக்கு ஆதர வாக மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி நடத்திய படை யெடுப்பு, மேற்கையும் கிழக்கையும் சேர்ந்த எதிர்ப்புரட்சி யாளர்களது முகாமினுள், கிழக்கத்திய, மேற்கத்தியச் சுரண்டலாளர்களது முகாமினுள், ஜப்பான்-அமெரிக்கா முகாமினுள் எழுந்த முரண்பாடுகளின் விளைவாகத் தகர்ந்த போது முதல் முறை நமக்குக் கிடைத்தது போல் திரும்பவும் ஓய்வு இடைநேரம் கிடைக்குமென— நாம் நம்பலாமா?

இந்தக் கேள்விக்குப் பின்வரும் விதத்தில் பதிலளிக்க வேண்டுமென நினைக்கிறேன்: இங்கு பிரச்சினையானது மிகப் பல காரணக் கூறுகளைப் பொறுத்திருக்கிறது; பொதுவாகவும் ஒட்டுமொத்தமாகவும் போராட்டத்தின் இறுதி முடிவை முன்னறிந்து கூற முடிகிறதென்றால், உல கில் வாழ்வோரில் மிதமிஞ்சிய பெருவாரியானோருக்குப் போராட்டத்துக்கான பயிற்சியையும் கல்வியையும் முடிவில் முதலாளித்துவமே அளித்திடுகிறது என்பதே காரணம்.

இறுதியாகப் பார்க்கும் போது போராட்டத்தின் முடிவானது, உலகோரில் மிதமிஞ்சிய பெருவாரியானேர் ருஷ்யா, இந்தியா, சீன முதலானவற்றில் இருப்பவர்கள் என்பதால் தீர்மானிக்கப்படும். உலகோரில் பெருவாரியானேராய் இருக்கும் இவர்கள் கடந்த சில ஆண்டுகளில் அசாதாரண வேகத்தில் விடுதலைப் போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கிறுர்கள். ஆகவே இந்த விதத்தில், உலகப் போராட்டத்தின் இறுதி முடிவு எப்படி இருக்கும் என்பது குறித்து இம்மியளவும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. இந்த அர்த்தத்தில் சோஷலிசத்தின் இறுதி வெற்றி எந்த நிபந்தனையும் இன்றி முற்றும் உறுதியானது.

ஆனல் நமது அக்கறைக்குரியது சோஷலிசத்தின் இந்தத் தவிர்க்கவொண்ணுத இறுதி வெற்றி அல்ல; நாம் கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரமே நமது அக்கறைக்குரியது. மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி அரசுகளால் நாம் நசுக்கப்படுவதைத் தடுப்பதற்காக, ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியாகிய நாம், ருஷ்யாவின் சோவியத் ஆட்சியதிகாரமாகிய நாம், கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரம்தான் நமது அக்கறைக்குரியது. எதிர்ப்புரட்சி ஏகாதிபத்திய மேற்குக்கும், புரட்சிகர தேசியவாதக் கிழக்குக்கும் இடையே—உலகிலே நாகரிக வளர்ச்சி மிகுந்த அரசுகளுக்கும், கிழக்கத்திய பாணியிலான பிற்பட்ட அரசுகளாயினும் உலகோரில் பெருவாரியானேரைக் கொண்டவைகளுக்கும் இடையே—எழும் அடுத்த இராணுவ மோதல் வரை நாம் அழியாமல் நிலைத்திருப்பது உறுதி செய்யப்பட வேண்டுமாயின், இந்தப் பெருவாரியானேர் நாகரிக வளர்ச்சி பெற்ருக வேண்டும். உடனே சோஷலிசத்தை அடைவதற்கு நம்மிடமும் போதிய நாகரிக வளர்ச்சி இருக்கவில்லை, ஆனல் அதற்கு வேண்டிய அரசியல் முன் தேவைகள் நம்மிடம் இருக்கின்றன. நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் கீழ்க்கண்ட போர்த்தந்திரத்தை அல்லது கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

தொழிலாளர்கள் தொடர்ந்து விவசாயிகளுக்குத் தலைமை தாங்கும்படியாகவும், தொடர்ந்து அவர்கள் விவசாயிகளது நம்பிக்கைக்கு உரியோராய் இருக்கும்படி

யாகவும், அவர்கள் மிகுந்த அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடித்து நமது சமூக உறவுகளில் ஊதாரித்தனத்தின் சாயல் என்பதே இல்லாதவாறு அகற்றும்படியாகவும் அமைந்த ஓர் அரசை நாம் கட்டியமைத்திட வேண்டும்.

அதிகபட்ச சிக்கனம் கைகூடும் அளவுக்கு நாம் நமது அரசுப் பொறியமைவைச் சிறிதாக்கிக் கொள்ள வேண்டும். ஜாரிஸ்டு ருஷ்யாவால், அதன் அதிகாரவர்க்க முதலாளித்துவப் பொறியமைவால் அவ்வளவு பெரிய அளவில் விட்டுச் செல்லப்பட்டிருக்கும் ஊதாரித்தனத்தில் இம்மியளவும் எஞ்சாதவாறு அறவே ஒழித்தாக வேண்டும்.

இது விவசாயிகளது குறுகிய வரம்புகளுக்குள் அமைந்த ஆட்சியாகி விடாதா?

இல்லை. விவசாயிகள் மீதான தலைமை தொடர்ந்து தொழிலாளி வர்க்கத்திடமே இருக்கும்படி நாம் பாதுகாத்துக் கொண்டோமாயின், நமது அரசின் பொருளாதாரத்தில் சாத்தியமான முழு அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் மிச்சப்படுத்துவதை எல்லாம் நமது பெருவீத இயந்திரத் தொழிலை வளர்த்திடவும், மின்மயமாக்குதலையும் நீரியல் முறையிலான புல்கரி உற்பத்தியையும் வளர்த்திடவும், வோல்ஹவ் நீர்மின் விசைத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்கவும், இன்ன பலவும் செய்யவும் உபயோகிப்போம்.

இது தான், இது மட்டுமேதான் நமது நம்பிக்கைக்குரிய ஆதாரமாகும். இதை நாம் செய்திடும் போதுதான், உருவகமாகப் பேசுமிடத்து நாம் குதிரையை மாற்றிக் கொள்ள முடியும், விவசாயினுடைய, குடியானவனுடைய ஏழ்மைக் குதிரையிலிருந்து, நாசமாகிவிட்ட விவசாயி நாட்டுக்காக அமைந்த பொருளாதாரத்துக்கான குதிரையிலிருந்து, பாட்டாளி வர்க்கம் தேடிவரும், அவசியம் தேடவே வேண்டிய, குதிரைக்கு—பெருவீத இயந்திரத் தொழிலுக்கும் மின்மயமாக்கலுக்கும் வோல்ஹவ் மின்விசை நிலையத்துக்கும் பிறவற்றுக்குமான குதிரைக்கு—மாறிச் செல்ல முடியும்.

இப்படித்தான் நான் என் மனத்துள் நமது பணிக்கு, நமது கொள்கைக்கு, நமது போர்த்தந்திரத்துக்கு, நமது

ஆதார நெறிக்கு உரிய பொதுத் திட்டத்தைத் திருத்தியமைக்கப் பெற்ற தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையின் செயற்பாடுகளுடன் இணைத்திடுகிறேன். தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையைத் தனிச்சிறப்பு வாய்ந்த உயர் நிலைக்கு உயர்த்தியும், மத்தியக் கமிட்டியின் உரிமைகளுடன் கூடிய முதன்மையை அதற்கு அளித்தும், இப்படி இன்னும் பலவும் செய்தும் நாம் இத்துறையில் தனிக் கருத்தும் கவனமும் செலுத்த வேண்டும் என்பதற்கான நியாய விளக்கம், என் அபிப்பிராயத்தில், இதில்தான் காணக் கிடக்கிறது.

நமது பொறியமைவை முழு அளவுக்குக் களையெடுத்துச் சுத்தம் செய்வதன் மூலமும், அதற்கு இன்றியமையாத் தேவையாய் இல்லாதவை யாவற்றையும் கூடுமான அளவுக்குக் கழித்துக் கட்டுவதன் மூலமும் தான் நாம் சமாளிக்க முடியுமென உறுதியாய் இருக்கலாம் என்பதே இந்த நியாயவிளக்கம். அதோடு, சிறு விவசாயிகளது நாட்டுக்குரிய நிலையில் அல்ல, சகலமும் குறுகிய வரம்புகளுக்குள் இருக்கும்படியான நிலையில் அல்ல, மாறாக பெருவீத இயந்திரத் தொழிலை நோக்கி இடையறாது முன்னேறும்படியான நிலையில் நாம் சமாளிக்க முடியும்.

நமது தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைத் துறையானது இத்தகைய மகோன்னத பணிகளைக் கொண்டதாக வேண்டுமென நான் கனவு காண்கிறேன். எனவே தான் இதற்காக மிக உயர்ந்த அதிகாரம் வகிக்கும் கட்சி உறுப்பைச் ''சாதாரண'' மக்கள் கமிசாரகத்துடன் இணைத்திடுவதற்கு நான் திட்டமிடுகிறேன்.

*1923 மார்ச் 2*

**பிராவ்தா,** *இதழ் 49,*
*1923 மார்ச் 4*

## குறிப்புகள்

1 பொருள்முதல்வாதம்—தத்துவஞானத்திலுள்ள இரண்டு பிரதான போக்குகளில் ஒன்று. உலகம் பொருண்மையானது, பொருள், இயற்கை, இருத்தல் ஆகியவை முதன்மையானவை, உணர்வு, சிந்தனை, உணர்ச்சி ஆகியவை இரண்டாம் நிலையுடையவை என்ற உண்மையிலிருந்து வளர்ச்சியடையும் பொருள் முதல்வாதம் கருத்துமுதல்வாதத்துக்கு எதிரானது. தத்துவஞான வரலாறு முழுவதுமே தத்துவஞானத்தின் இரண்டு முக்கிய மரபுகளான பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற போராட்டத்தின் வரலாறுதான். இங்கே மார்க்சும் எங்கெல்சும் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த டித்ரோ, ஹோல்பஹ், ஹெல்வெஷியஸ் போன்ற பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளைக் குறிப்பிடுகிறார்கள். இவர்களுடைய கருத்துக்களிலிருந்துதான் சான் சிமோன், ஃபூரியே, காபே இன்னும் இதர கற்பனாவாத பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின் கருத்துக்கள் வளர்ச்சியடைந்தன.—9.

2 1789—1794ம் வருடங்களில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் சாதனைகளை அழிக்கும் நோக்கத்தில் ஒன்று சேர்ந்த பிற்போக்கான ஐரோப்பிய அரசாங்கங்களின் கூட்டணிக்கு எதிராக புரட்சிகரமான பிரான்ஸ் நடத்திய போர்களைக் குறிப்பிடுகிறார்.—19.

3 1789—1794ம் வருடங்களில் நடைபெற்ற புரட்சி

நிலப்பிரபுத்துவ நிலவுடைமையை ஒழித்தது. பெரிய நிலப்பிரபுக்களால் பறித்துக் கொள்ளப்பட்ட பொது நிலங்களை விவசாயிகளிடம் திரும்பக் கொடுத்தது. எல்லாவிதமான நிலப்பிரபுத்துவப் பணிகளையும் ஒழித்தது.—31.

4 18ம் நூற்றாண்டிலிருந்த பிரெஞ்சு அறிவியக்கத்தின் மாபெரும் சிந்தனையாளர்களான வால்தேர், ரூஸோ, டித்ரோ, ஹெல்வெஷியஸ், ஹோல்பஹ் ஆகியோருடைய கருத்துக்கள்.—41.

5 1875ம் வருடத்தில் கோத்தா என்ற நகரத்தில் கூட்டப்பட்ட ஜெர்மன் சோஷலிஸ்டுகளின் காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் திட்டத்தை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார். இந்த காங்கிரசில் ஔ. பெபெல், கா. லீப்க்னெஹ்ட் ஆகியோரைப் பின்பற்றியவர்கள் (ஐஸனாஹ் வழியினர்) ஃபெ. லஸ்ஸாலைப் பின்பற்றியவர்களோடு சேர்ந்து ஜெர்மனியின் ஐக்கிய சமூக-ஜனநாயகக் கட்சியை அமைத்தார்கள்.—46.

6 **லஸ்ஸால், ஃபெர்டினாண்டு** (1825—1864) — ஜெர்மனியைச் சேர்ந்த பொது வாழ்வுப் பிரமுகர், சோஷலிஸ்டு. ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தத்துவம் மற்றும் நடைமுறை பற்றி அவர் கொண்டிருந்த தவறான கருத்துக்களை மார்க்சும் எங்கெல்சும் விமர்சித்தனர்.—46.

7 **மக்கள் கட்சி**—ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தின் ஜனநாயகப் பகுதி மற்றும் குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தின் கட்சி. இக்கட்சி எல்லோருக்கும் வாக்குரிமையளித்தல், ஜெர்மன் கூட்டரசை நிறுவுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தது.—57.

8 **சமாதானம் மற்றும் சுதந்திரக் கழகம்**—1867ம் வருடத்தில் ஸ்விட்சர்லாந்தில் குடியரசுவாதிகளும் மிதவாதிகளும் தோற்றுவித்த முதலாளித்துவ-சமாதானவாத அமைப்பு.—57.

9 அதாவது பிரான்சின் முடியாட்சியின் கீழ். **லுயீ பிலீப்** (1773—1850)—பிரெஞ்சு அரசராக (1830—1848) இருந்தார்; **லுயீ நெப்போலியன்** (1808—1873)—பிரெஞ்சு சக்கரவர்த்தியாக (1852—1870) இருந்தார்.—58.

10 இங்கிலாந்தைச் சேர்ந்த வணிகரும் பரோபகாரியுமான ராபர்ட் **கிளாட்ஸ்தன்** *(1811—1872)* இங்கே குறிப்பிடப்படுகிறார். அவர் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த மிதவாதக் கட்சித் தலைவர் வில்லியம் கிளாட்ஸ்தனுடைய சகோதரர்.—59.

11 **''சுதந்திர மக்கள் அரசு''**—சென்ற நூற்றாண்டின் எழுபதுக்களில் லஸ்ஸாலேப் பின்பற்றிய ஜெர்மன் சோஷலிஸ்டுகள் இந்த கோஷத்தை முன்வைத்த பொழுது மார்க்சும் எங்கெல்சும் அவர்களைக் கூர்மையாக விமர்சனம் செய்தனர். மார்க்ஸ் எழுதிய ''கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்'' என்ற நூலைப் படிக்கவும்.—63.

12 19ம் நூற்றாண்டின் முதற் பாதியிலிருந்த கற்பனாவாத சோஷலிஸ்டுகள் இங்கே குறிப்பிடப்படுகிறார்கள். ஷார்ல் ஃபூரியே *(1772—1837)*, அன்ரீ சான் சிமோன் *(1760—1825)*, ராபர்ட் ஓவன் *(1771—1858)* இன்னும் மற்றவர்கள் முதலாளித்துவத்தை விமர்சனம் செய்தனர்; அந்த சமூகத்தில் உழைக்கும் மக்கள் எவ்வளவு பயங்கரமான துன்பத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்பதை விளக்கினர். சமூகத்தை சோஷலிஸ்டு ரீதியான புனரமைப்பதற்குரிய திட்டங்களையும் தயாரித்தனர். ஆனால் சமூக வளர்ச்சியின் விதிகளை அவர்களால் எடுத்துக் காட்ட முடியவில்லை; முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற வழிகளை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை; சமூகத்தை சோஷலிஸ்டு ரீதியில் புனரமைக்கக் கூடிய சமூக சக்தி எது என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே இந்த சோஷலிஸ்டுகள் கற்பனாவாதிகளாகவே இருந்தனர். முதலாளித்துவ அமைப்பில் ஆட்சியிலிருக்கின்ற கோஷ்டியினரிடம் சோஷலிசத்தின் அவசியத்தைச் சரியான வகையில் எடுத்துக் கூறினால் அவர்களே சோஷலிசத்தை அமுலாக்குவார்கள் என்று இவர்கள் தவறாகக் கருதினார்கள்.—71.

13 **டூரிங், ஓய்கென்** *(1833—1921)*—ஜெர்மன் பேராசிரியர், கதம்பத் தத்துவஞானி, கொச்சையான பொருளியலாளர்.—72.

14 **பிஸ்மார்க், ஒட்டோ***(1815—1890)*—பிற்போக்கான கருத்

துக்களைக் கொண்ட ஜெர்மன் ராஜதந்திரி. பிரஷ்யா வில் அமைச்சர்-அதிபராகவும் (1862—1871) ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் சான்சலராகவும் (1871—1890) இருந்தவர்.

பெரிய நகரங்கள் புரட்சி இயக்கங்களின் மையங் களாக இருப்பதை வெறுத்த பிஸ்மார்க் பிரஷ்ய நாடாளுமன்றத்தில் 1852 மார்ச் 20ந் தேதியன்று பேசும் பொழுது, புரட்சிகரமான எழுச்சி ஏற்படு மானால் இந்த நகரங்களை ஒழிக்க வேண்டும் என்று கூறினார்.—78.

15 டார்வின், சார்லஸ் (1809—1882)—இங்கிலாந்தைச் சேர்ந்தவர்; பரிணமக் கொள்கையை உருவாக்கிய மாபெரும் இயற்கை விஞ்ஞானி; விஞ்ஞான உயிரிய லின் ஸ்தாபகர்.—82.

16 பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின் விவசாயத் திட்டம் இங்கே குறிப்பிடப்படுகிறது. 1892ல் மார்ஸேல்ஸ் காங்கிரசில் விவாதிக்கப்பட்டு 1894ல் நான்ட் காங் கிரசில் முழுமையாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டது.—84.

17 லஃபார்க், போல் (1894—1911)—பிரெஞ்சு சோஷ லிஸ்டுக் கட்சியை ஸ்தாபித்தவர்களில் ஒருவர். அதன் முக்கியத் தலைவராகவும் இருந்தார். தத்துவ ஞானி, பொருளியலாளர், மார்க்சியத்தின் சிறந்த பிரச்சாரகர்.—89.

18 கத்தேடெர் சோஷலிஸ்டுகள் — சில ஜெர்மன் பேரா சிரியர்கள் சோஷலிசத்தை ஆதரிப்பதாகக் கூறிய போதிலும் உண்மையில் பல்கலைக்கழக மேடைகளி லிருந்து (ஜெர்மன் மொழியில் Katheder என்று சொல்லப்படுவது)முதலாளித்துவ மிதவாதக் கருத்துக் களையே பிரச்சாரம் செய்தார்கள். எனவே அவர் கள் கத்தேடெர் சோஷலிஸ்டுகள் என்று அழைக்கப் பட்டனர்.—99.

19 ஷாப்லே, ஆல்பர்ட் (1831—1903) — ஜெர்மன் சமூக வியலாளர்; கொச்சையான பொருளியல்வாதி. ‘‘வர்க்க சமாதானத்தை’’ நிலைப்படுத்துவதை, பாட் டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு மிடையே ‘‘ஒத்துழைப்பைப்’’ பிரச்சாரம் செய்த வர்.—99.

20 **மால்தஸ், தாமஸ்** *(1766—1834)—ஆங்கில மதகுரு, பொருளியலாளர். பிற்போக்கான மக்கள் தொகைத் தத்துவத்தை முன்வைத்தவர். தொழிலாளி வர்க்கத்தின் வறுமை முதலாளித்துவச் சுரண்டலினுல் ஏற்படவில்லை, நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியைக் காட்டிலும் மக்கள் தொகை மிக அதிகமாகப் பெருகி விடுவதனுல்தான் வறுமை ஏற்படுகிறது என்று கூறினுர். மால்தசின் கொள்கை தவருன புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டவை; முதலாளித்துவம் நிலையானது, தொழிலாளி வர்க்கம் சுரண்டப்படுவது தவிர்க்க முடியாதது என்று ''நிரூபிப்பது'' அதன் நோக்கம் என்று மார்க்ஸ் ''மூலதனத்தில்'' அக்கொள்கையை விமர்சனம் செய்து எழுதியிருக்கிருர்.—101.*

21 *1890 ஆகஸ்டு 16ந் தேதியன்று பெனிக் எங்கெல்சுக்கு எழுதிய கடிதத்தில் சமூகத்தின் பல வர்க்கங்களுக்குமிடையே கல்வியிலும் உணர்வுநிலையிலும் வேறுபாடுகள் நிலவுகின்ற இன்றைய நிலையில் சோஷலிச ரீதியில் சமூகத்தைப் புனரமைக்கக் கூடிய சாத்தியத்தையும் அதன் உசிதத்தையும் பற்றி விளக்கமளிக்குமாறு கேட்டிருந்தார்.—103.*

22 *பிஸ்மார்க் அரசாங்கம் ஜெர்மனியில் 1878ம் வருடத்தில்* **சோஷலிஸ்டு-எதிர்ப்பு விசேஷச் சட்டத்தைக் கொண்டு** *வந்தது. இந்தச் சட்டம் சமூக-ஜனநாயகக் கட்சிக்கும், எல்லாவிதமான வெகுஜன தொழிலாளர் ஸ்தாபனங்களுக்கும், தொழிலாளர்கள் பத்திரிகைகளுக்கும் தடை விதித்தது. ஔகுஸ்ட் பெபெல்,வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் ஆகியோருடைய தலைமையில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மிகச் சிறந்த பிரதிநிதிகள் மிகவும் விரிந்த அளவில் இரகசிய சட்ட விரோத நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். இதனுல் தொழிலாளர்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கு குறைந்து விடாததோடு, கணிசமான அளவுக்கு அதிகரிக்கவும் செய்தது. 1890ம் வருடத்தில் ஜெர்மன் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தல்களில் சமூக-ஜனநாயகவாதிகள் ஒன்றரைக் கோடி வாக்குகளைப் பெற்றுர்கள். அரசாங்கம் அந்த வருடத்திலேயே சோஷலிஸ்டு-எதிர்ப்பு விசேஷச் சட்டத்தைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டது.—104.*

23 **ஹெகல், கியோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக்** *(1770—1831)*

—புகழ்மிக்க ஜெர்மன் தத்துவஞானி, புறநிலைக் கருத்துமுதல்வாதத்தைப் பின்பற்றியவர். வளர்ச்சி யின் தத்துவமாகிய இயக்கவியல் கொள்கையை ஆழமான முறையிலும் பன்முகத்தன்மையோடும் வளர்த்தவர்.—*111.*

24 **ஃபாயர்பாஹ், லூத்விக்** *(1804—1872)—ஜெர்மன் தத்துவஞானி, பொருள்முதல்வாதி, நாத்திகத்தைப் பின்பற்றியவர். ஹெகலின் தத்துவஞானத்தைப் பொருள்முதல்வாத நிலையிலிருந்து விமர்சனம் செய் தவர்.—111.*

25 **ஸ்மித், ஆதாம்** *(1723—1790)* — *ஆங்கில நாட்டுப் பொருளியலாளர். மூலச்சிறப்புடைய அரசியல் பொருளாதாரத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவர்.—113.*

26 **ரிக்கார்டோ, டேவிட்** *(1772—1823)—ஆங்கில நாட்டுப் பொருளியலாளர். மூலச்சிறப்புடைய அரசியல் பொரு ளாதாரத்தின் மாபெரும் பிரதிநிதிகளில் ஒருவர். —113.*

27 **அக்டோபரிஸ்டுகள் (“அக்டோபர் 17ந் தேதிச் சங்கம்”)** *—1905ம் வருடம் அக்டோபர் மாதம் 17ந் தேதி யன்று வெளியிடப்பட்ட ஜார் அறிக்கைக்குப் பிறகு, பெருவீத தொழில் முதலாளிகளும் பெரிய நில வுடைமையாளர்களும் ஏற்படுத்திய எதிர்ப்புரட்சிக் கட்சி. புரட்சியைக் கண்டு பயமடைந்த ஜார் அரசியலமைப்பையும் ‘‘சிவில் உரிமைகளையும்’’ மக் களுக்குக் கொடுப்பதாக உறுதியளித்தார். ஜாரின் அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை களுக்கு அக்டோபரிஸ்டுகள் நிபந்தனையற்ற வகையில் ஆதரவு கொடுத்தார்கள். பெரிய தொழிலதிபரான அ. குச்கோவ், பெரிய பண்ணைகள் பலவற்றைக் கொண்டிருந்த மி. ரத்ஸியான்கோ இக்கட்சியின் தலை வர்களாவர்.—127.*

28 **இரண்டாம் வில்ஹெல்ம்** *(1859—1941)—ஜெர்மனியின் சக்கரவர்த்தி; பிரஷ்யாவின் மன்னர் (1888—1918). —127.*

29 **பொருளாதாரவாதம்**—இது பத்தொன்பதாம் நூற்றாண் டின் கடைசியிலும் இருபதாம் நூற்றாண்டின்

தொடக்கத்திலும் ருஷ்யாவில் சமூக-ஜனநாயக இயக்கத்திலிருந்த சந்தர்ப்பவாதப் போக்கு. இவர்கள் ஜாராட்சியை எதிர்த்து அரசியல் போராட்டத்தை நடத்தக் கூடிய பிரதான சக்தியாக மிதவாத முதலாளிகளைக் கருதினுர்கள்; தொழிலாளர்கள் தங்களுடைய வேலை நிலைமைகளில் அபிவிருத்தி, கூலி உயர்வு முதலிய பொருளாதாரப் போராட்டங்களில் மட்டுமே ஈடுபட வேண்டும் என்று கருதினுர்கள். பொருளாதாரவாதிகள் கட்சியின் முன்னணிப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் புரட்சிகரமான தத்துவத்தின் முக்கியத்துவத்தையும் மறுத்தார்கள்; அந்த இயக்கம் தாளுகவே தோன்றி பிரத்யேகமான வகையில் வளரக் கூடியது என்ருர்கள். லெனின் தம்முடைய ''என்ன செய்ய வெண்டும்?'' என்ற புத்தகத்தில் பொருளாதாரவாதத்தைத் தீவிரமான விமர்சனத்துக்கு உட்படுத்தினுர்.—128.

30 ''கலாசார-தேசீய சுயாட்சி''—ஆஸ்திரியாவின் சமூக-ஜனநாயகவாதிகளான ஒட்டோ பௌவரும் கார்ல் ரென்னரும் தேசீயப் பிரச்சினையில் ஒரு சந்தர்ப்பவாத வேலைத்திட்டத்தை 1890களில் முன்வைத்தனர். ஒரே தேசீய இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்கள் சுயாட்சியுடைய தேசீய யூனியனை அமைத்துக்கொள்கிருர்கள்; அரசாங்கம் பள்ளிக்கூடங்கள் (வெவ்வேறு தேசீய இனங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தனித்தனியான பள்ளிக்கூடங்கள்) மற்றும் கல்வி, கலாசார ஸ்தாபனங்களையும் இதன் பொறுப்பில் ஒப்படைக்கும் என்பது அதன் அடிப்படையாகும். இந்த வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஒவ்வொரு தேசீய இனக் குழுவிற்குள்ளும் மதவாதிகளின் செல்வாக்கும் பிற்போக்கான தேசீயவாத சித்தாந்தத்தின் செல்வாக்கும் அதிகமாகி வலுவடைந்திருக்கும்; மேலும் தொழிலாளர்கள் மத்தியில் தேசீய வேறுபாடுகளை அதிகமாக்கி உழைப்பாளி வர்க்கத்தை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதில் சிரமங்களை ஏற்படுத்தியிருக்கும். கலாசார-தேசீய சுயாட்சி என்ற கோஷத்தைத் தீவிரமாக விமர்சனம் செய்து லெனின் பல கட்டுரைகள் எழுதினுர்.—131.

31 ஷெய்லக்—ஷேக்ஸ்பியர் எழுதிய ''வெனிஸ் வர்த்தகன்'' என்ற நாடகத்தின் கதாபாத்திரம். ஈவிரக்க

மற்ற வகையில் வட்டி வாங்குபவர். கடனைத் திருப்பித் தர முடியவில்லை என்றால் உடலில் ஒரு பவுண்ட் சதையை அறுத்துக் கொடு என்று கேட்டவர்.—*153*.

32 ருஷ்யாவிலிருந்த குருமார் சமயக் கல்வி நிலையங்களில் மிகவும் முரட்டுத்தனமான பழக்கங்களும் மோசமான நிலைமைகளும் இருந்தன. ருஷ்ய எழுத்தாளரான நி. கே. பொமியலோவ்ஸ்கி இத்தகைய சமயக் கல்வி நிலையங்களைப் பற்றி ''சமயக் கல்வி நிலையக் காட்சிகள்'' என்ற நூலில் வர்ணிக்கிறார். —*154*.

33 **த்ஸெரெத்தேலி, இ. கி.** *(1882—1959)—1917* நவம்பரில் முதலாளித்துவத் தற்காலிக அரசாங்கத்தை ஆதரித்த மென்ஷிவிக் தலைவர்.

**செர்னேவ், வி. மி.** *(1876—1952)—1917* நவம்பரில் முதலாளித்துவத் தற்காலிக அரசாங்கத்தை ஆதரித்த சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கட்சித் தலைவர்.—*154*.

34 **''நோவயா ஷீஸ்ன்''** (''புதிய வாழ்க்கை'')—*1917—1918*ல் பெத்ரோகிராதில் ''சர்வதேசீயவாதிகள்'' என்று சொல்லப்பட்ட சமூக-ஜனநாயகவாதிகள் கோஷ்டியினர் நடத்திய செய்தித்தாள். இந்த கோஷ்டியில் இடதுசாரி மென்ஷிவிக்குகளும் பாதி-மென்ஷிவிக்கான அறிவுஜீவிகளும் இருந்தனர். *1917* அக்டோபர் வரை இந்தப் பத்திரிகை சில சமயங்களில் தற்காலிக அரசாங்கத்தை எதிர்த்தது; சில சமயங்களில் போல்ஷிவிக்குகளை எதிர்த்தது. அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு சோவியத் ஆட்சிக்கு விரோதமான அணுகுமுறையைப் பின்பற்றியது.—*167*.

35 **பெலின்ஸ்கி, வி. கி.** *(1811—1848)*—ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமரிசகர், கட்டுரையாளர். ருஷ்யாவிலிருந்த பண்ணையடிமை முறையைக் கடுமையாக எதிர்த்தார். *1861*ம் வருடத்தில் பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டது.—*169*.

36 மாபெரும் ஜெர்மன் நாடக ஆசிரியரான கேதே எழுதிய ''ஃபாவுஸ்ட்'' என்ற நாடகத்தில் மெஃபிஸ்டோபிலின் வார்த்தைகள் இங்கே மேற்கோளாகத் தரப்பட்டிருக்கின்றன.—*177*.

37 மனிதகுலத்தின் வரலாற்றில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யப் பட்ட முதல் முயற்சி 1871ம் வருடத்தில் நடைபெற்ற **பாரிஸ் கம்யூன்** எனலாம். 1871 மார்ச் 18 முதல் மே 28 வரை அது நீடித்தது. **பாரிஸ் கம்யூன்** அரசைத் திருச்சபையிலிருந்து பிரித்தது; கல்வி அமைப் பையும் திருச்சபையிலிருந்து பிரித்தது. நிரந் தரமான இராணுவத்துக்கு பதிலாக மக்களுக்கு ஆயுதங்களை வழங்கியது. நீதிபதிகளையும் மற்ற அதிகாரிகளையும் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவந்தது. அதே சமயத்தில் ஒரு அதிகாரி யின் சம்பளம் தொழிலாளிக்குக் கிடைக்கும் கூலியைக் காட்டிலும் அதிகமாக இருக்கக் கூடாதென்று விதித் தது. தொழிலாளர்கள் மற்றும் நகரத்திலுள்ள ஏழை மக்களின் நிலையை அபிவிருத்தி செய்வதற்குத் தொடர்ச்சியாகப் பல நடவடிக்கைகளை எடுத்தது.
1871 மே 21ந் தேதியன்று தியேரின் எதிர்ப் புரட்சி அரசாங்கம் பாரிஸ் நகரத்தைக் கைப்பற்றி தொழிலாளர்களைக் குரூரமாக ஒடுக்கியது. சுமார் 30,000 மக்கள் கொல்லப்பட்டார்கள், 50,000 மக் கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் பலர் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.—177.

38 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற் றிக்குப் பிறகு தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்து கள் அரசு அதிகாரத்தின் உறுப்புகளாக மாறின. —177.

39 ‘‘**கூட்டில் அடைந்த மனிதன்**’’ என்ற தலைப்பில் அன் தோன் சேகவ், ஒரு சிறு கதை எழுதினார். அந்தக் கதையில் புதிய முன்முயற்சிகளை விரும்பாத குறுகிய மனம் படைத்த பிலிஸ்தினை முக்கிய பாத்திரமாகச் சித்தரித்தார்.—189.

40 1861 பிப்ரவரி 19ந் தேதியன்று ருஷ்யாவில் பண்ணை யடிமை முறை ஒழிக்கப்பட்டது.—190.

41 1914ல் உலக ஏகாதிபத்தியப் போர் தொடங்கி யதும் இரண்டாவது அகிலம் கலைந்தது. 1919 பிப்ர வரியில் சமூக-இனவெறி மற்றும் மத்தியத்துவத்தைப் பின்பற்றும் கட்சிகள் பெர்ன் என்ற இடத்தில்

நடத்திய மாநாட்டில் அந்த அகிலத்தை மறுபடியும் ஏற்படுத்தின. இதை "பேர்ன்" அகிலம் அல்லது மஞ்சள் அகிலம் என்று லெனின் குறிப்பிட்டார்.—196.

42 **காவுத்ஸ்கி, கார்ல்** *(1854—1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி மற்றும் இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்சியவாதி, பிற்காலத்தில் மார்க்சியத்தைக் கைவிட்டு மிகவும் அபாயகரமான கேடுவிளைக்கும் சந்தர்ப்பவாத வகைப்பட்ட மத்தியத்துவத்தின் சித்தாந்தியானார்.—203.

43 **மென்ஷிவிசம்** — இது சர்வதேச சந்தர்ப்பவாதப் போக்குகளில் ஒன்றாகிய ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு; 1903ல் நடைபெற்ற ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் லெனினிஸ்டு "இஸ்க்ராவை" எதிர்த்தவர்களால் இது ஏற்படுத்தப்பட்டது. காங்கிரசில் மத்திய கட்சி உறுப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது லெனினிஸ்டுகள் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றபடியால் போல்ஷிவிக்குகள் (போல்ஷின்ஸ்ட்வோ என்ற ருஷ்யச் சொல்லுக்குப் பெரும்பான்மை என்று பொருள்) என்று அழைக்கப்பட்டனர். சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையாக இருந்தபடியால் அவர்கள் மென்ஷிவிக்குகள் (மென்ஷின்ஸ்ட்வோ என்ற ருஷ்யச் சொல்லுக்குச் சிறுபான்மை என்று பொருள்) என்று அழைக்கப்பட்டனர்.

1917ல் முதலாளித்துவத் தற்காலிக அரசாங்கத்தில் மென்ஷிவிக்குகள் பங்கெடுத்தனர். மகத்தான அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அவர்கள் மற்ற எதிர்ப்புரட்சிக் கட்சிகளோடு சேர்ந்து சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடினார்கள்.—203.

44 **சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்** — ருஷ்ய குட்டி-முதலாளித்துவக் கட்சி. 1901—1902ல் பல நரோட்னிக் குழுக்கள் ஒன்றுசேர்ந்து இக்கட்சியை உருவாக்கின. 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மென்ஷிவிக்குகளோடு சேர்ந்து முதலாளித்துவத்

*தற்காலிக அரசாங்கத்தில் பங்கெடுத்தனர்; அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர். ருஷ்யா வில் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சோவியத் மக்களுக்கு எதிராக ருஷ்ய எதிர்ப்புரட்சிச் சக்திகள் நடத்திய ஆயுதந் தாங்கிய போராட்டத் தில் அவர்களும் பங்கு கொண்டனர்.—203.*

45 **புதிய பொருளாதாரக் கொள்கை** — *சோவியத் மக்கள் ருஷ்ய எதிர்ப்புரட்சிச் சக்திகளையும் அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவத் தலையீட்டை யும் முறியடித்த பிறகு 1921ல் சோவியத் யூனிய னில் இக்கொள்கை அமுலாக்கப்பட்டது. உள்நாட்டுப் போரின் போது (1918—1921) பின்பற்றப்பட்ட இராணுவக் கம்யூனிசக் கொள்கையின்படி விவசாயி கள் தமது உபரி உற்பத்தி எல்லாவற்றையும் அர சிடம் ஒப்படைக்க வேண்டும் (உபரியைக் கட்டாயக் கொள்முதல் செய்தல்). ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கை அரசாங்க வரிகளுக்காகப் பொருள்களைக் கொடுப்பதையும் வரிகளைக் கட்டிய பிறகு எஞ்சி யுள்ள பொருள்களைச் சந்தையில் விற்பனை செய் வதையும் அனுமதித்தது. குறைவான காலத்துக்கு முதலாளித்துவக் கூறுகள் இருப்பதை அனுமதித்தது. இக்கொள்கை உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதையும் விவசாய வளர்ச்சியையும் நாட்டைத் தொழில் மயமாக்கத் தேவையான மூலதனக் குவித்தலையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.—226.*

46 **''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள்**—*1918ல் ஜெர்மனியோடு செய்யப்பட்ட பிரெஸ்ட் சமாதான உடன்பாட்டை யும் உள்நாட்டில் கட்சியின் பொருளாதாரக் கொள்கை யையும் எதிர்த்த ருஷ்யக் கம்யூனிஸ்டுகள் கோஷ்டி யின் பெயர். அவர்களுடைய நிலைக்குக் கட்சியில் விரிவான ஆதரவு கிடைக்கவில்லையாதலால், 1918ம் வருடத்தின் இறுதியில் இந்த கோஷ்டி கலைக்கப் பட்டது.—233.*

### வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்
3—22—75 D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.